T. 2272
TO
2274

# சைவ சித்தாந்த சங்கிரகம்

22272.
Acc. 12724

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை

உ

சிவமயம்

T. 2272

# சைவ சித்தாந்த சங்கிரகம்

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

வ. கார்த்திகேய பிள்ளை

இயற்றியது

T. 2272

தெல்லிப்பழை

Dr. மு. சுப்பிரமணியம் அவர்கள் H.M.D., F.M. H.C.

*(Astrologer and Palmist)*

பொருளுதவி கொண்டு

சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை

வெளிப்படுத்தியது

1933

விலை அணா பத்து

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

# உள்ளுறை

பக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை .... .... .... | v |
| சிறப்புப்பாயிரம் .... .... .... | vii |
| சிறப்புரை .... .... .... | ix |
| கடவுள் வணக்கம் .... .... .... | உ |
| அவையடக்கம் .... .... .... | ௩ |
| பதார்த்த நிச்சயம் .... .... .... | ரு |
| பதி இலக்கணம் .... .... .... | உ௩ |
| ஆன்ம இலக்கணம் .... .... .... | ருகூ |
| மல இலக்கணம் .... .... .... | எரு |
| கன்ம இலக்கணம் .... .... .... | அக |
| மாமாயை இலக்கணம் .... .... .... | அரு |
| அசுத்தமாயா இலக்கணம் .... .... | அகூ |
| சிவஞான சாதன இலக்கணம் .... .... | கஉரு |
| முத்தி இலக்கணம் .... .... .... | க௩எ |
| முடிப்புரை .... .... .... | கருஎ |
| அரும்பொருளகராதி .... .... .... | கசுக் |
| சந்தாநுசாரியர் முதலியோர் வணக்கம் .... | கசுஎ |

சிவமயம்

# பதிப்புரை

சைவசித்தாந்த சாத்திர சம்பந்தமாகத் தமிழில் விளங்கும் வசன நூல்கள் சித்தாந்தப் பிரகாசிகை, பதிபசுபாச விளக்கம், சித்தாந்த வசனபூஷணம் முதலியவையாகும். இவை மிகச் சுருங்கியவையும் கட்டளைகளைப் போன்றவையுமாம். சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சாத்திரங் களின் கருத்துகளை விளக்கமாகவும் மிக விரிவின்றியும் எடுத் துரைக்கும் வசனநூல் இல்லாத குறையை நீக்கவந்த இச்சங்கிர கம், முதன்முதல் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளை யவர்களால் 1903-ம் வருடத் தில் அச்சிடப்பட்டது. இது, அவர் மாதுலராய் விளங்கி யிருந்த வ. கார்த்திகேய பிள்ளையால் இயற்றப்பட்டது. அக்காலத்துச் சித் தாந்த சிகாமணிகளால் உவந்தேற்கப்பட்ட சிறப்பினை உடையது. இவ்வசன நூலின்கண் ஆங்காங்கே சிவஞானபோத உரைச்சொற் களும் தொடர்களும் வாக்கியங்களும் விரவப் பெற்றிருப்பது, ஆசிரியருக்குள்ள சமய நூற்பயிற்சிக்குப் போதிய சான்றாகும். ஆனால், வசனநடை மாத்திரம், இக்காலத்திற்கு இயைபின்றி, நீண்டு முடியுந் தரத்ததாய் அமைந்துள்ளது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு, ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் இறந்த பின்னர் 1908-ம்வருடத்தில், ஆசிரியரா லேயே சிதம்பரத்தில்அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. அப்பதிப்போ மிகச் சுருங்கியது ; முதற் பதிப்பின் அளவில் பாதிகொண்ட தென்னலாம். சைவசித்தாந்த சாத்திரம் பயிலும் மாணவர்க ளுக்கு ஏற்புடைத்தான வசனநூல் இதைத்தவிர வேறின்மை யால், இதனை மீட்டும் அச்சிட்டு நிலைநிற்கச்செய்யவேண்டுமென் பது எனது வேணவா. இதை நிறைவேற்றும் வண்ணம் ஒரு சைவ மடாதிபதியையும் வேண்டியதுண்டு. அவர் சாக்குப்போக் குச்சொல்லிக் காலங்கழித்து வருவாராயினர். அதனால் 1927ஆம் டிசம்பர்மீ-ல் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை **டாக்டர் மு. சுப்பிரமணியம் அவர்கள், H. M. D., F. M. H. C. (Astro-loger & Palmist)** சென்னைக்கு வந்தபோது அவரிடம் இச்

நூலைப்பற்றி விண்ணப்பித்துக்கொள்ள நேரிட்டது. அவர் தாம் உத்தியோகத் தமர்ந்திருக்கும் சிங்கப்பூர்ப்பகுதிக்குத் திரும்பிய பின் அவகாசத்தில் கவனிப்பதாகக் கூறிச் சென்றனர். பிறகு எம்மிருவருக்கும் நண்பரும், அறிவுக் களஞ்சியமாய் விளங்கும் "திராவிடப் பிரகாசிகை" என்னும் அரியநூற் பதிப்பாளரும், மலேய சைவசித்தாந்த சங்கத்தின் காரியதரிசியுமான குவாலாலம்பூர் அ. **சிவகுருநாத பிள்ளை**யைக்கொண்டு அவரை ஞாபகப்படுத்தியதில் போதிய செலவை 1929ஆ டிசம்பர்மீ 19உ எனக்கு முன்பணமாக அனுப்பி யுபகரித்தார்கள். அதுமுதல் இந்நாள்காறும் சித்தாந்த போதகாசிரியர்கள் பலரை இதற்கோர் அரும்பதக் குறிப்புரை எழுதித்தரும்படி வேண்டினேன். ஒருவரும் முன்வாராமையால் இன்னும் காலம் நீட்டித்தல் தகுதியன்றெனஎண்ணி, நூலை முதற் பதிப்பை யொட்டித் தற்காலத்திற்கேற்பக் கடின சந்திநீக்கிப் புதிதாக எழுதுவித்த அரும்பொருளகராதியோடு அச்சிற் பதிப்பிக்கலானேன்.

ஆசிரியர் சரித்திரக் குறிப்பொன்று எழுதி இந்நூற்கு அணிகலனாக அமைக்க வேண்டுமென்பது எனது கருத்து. ஆனால் அவரைப்பற்றி விசாரித்தமட்டில் அதிகமாகப் புலப்படவில்லை. அவர் முதற்பதிப்பின் பதிப்பாசிரியராகிய சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களுக்கு மாதுலர் என்பதும், விநாயக தாசர் என்பதும், வல்லிபுரம் பிள்ளையின் மைந்தர் என்பதும், அவ்வூரிலுள்ள பலருக்குச் சித்தாந்த நூற்போதகாசிரியராயிருந்தனர் என்பதும், மேலைப்புலோலியில் வாழ்ந்தவர் என்பதும், அவ்வூர் வழக்கறிஞர் மு. சுப்பிரமணியபிள்ளை வேண்டுகோளின்படி இந்நூல் இயற்றினார் என்பதுமே அறியக் கிடக்கின்றன.

இந்நூற்கு அரும்பொருளகராதியும் சிறப்புரையும் எழுதி யுதவிய எனது நண்பர் **ஸ்ரீமத் - சு. சிவபாதசுந்தரம் பிள்ளை**யவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையேன். இந்நூற் பதிப்பு முட்டின்றி இனிது நிறைவேறச் செய்த சிவபரஞ்சுடரைப் போற்றுகின்றேன்.

திருமயிலை,<br>ஸ்ரீமுக, வைகாசி

**சே. வே. ஜம்புலிங்கம்.**

**நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!!**

# சிறப்புப்பாயிரம்

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் இயற்றியது

திருவளர் நந்தி செகநன் கனமுறை
உருவளர் நந்திக் குபதே சித்தருள்
பத்து மெட்டுமாப் பகர்புரா ணத்துள்
வைத்துச் சைவ மாபுரா ணத்தின்
ஆயிரத் தெட்டா வறையுந் தலத்தில்
ஏயிரு முப்ப தெட்டு மாதலம்
என்றெடுத் தியம்பு மிவற்றுள் வைத்திங்
கொன்றெனக் கூறு முயரிலங் கையினின்
மன்ற வாணன் மலரடி வழுத்தும்
நன்றறி புலவர் நயனுறக் குழீஇய
யாழ்ப்பா ணத்திற் சூழ்ச்சியில் புலோலிக்
காட்சிப் பதியின் மாட்சியி னுதித்த
கார்த்தி கேயக் கனம்பெறு புலவன்
பார்த்துல குய்ய யாத்தநூ லாகும்
சைவசித் தாந்த சங்கிர கத்தை
உய்வகை கருதி யொப்பில் சிறப்பாய்
எழுதா வெழுத்தி னியைவித் தென்றும்
வழுவாப் புண்ணிய மதிப்புறு புகழொடும்
பெற்றனன் மற்றவன் பெற்றோன் றுயர்த்தோன்
சிற்றம் பலவன் திருக்கூத் தாடி
கற்றவர் பற்றுங் கழலடைந் துய்யும்
நற்றவ னற்றவர் நலமுறு குழாத்தை
உற்றவ னாத்தி னுயர்ந்தவ னுழுவலின்
உற்றவர் தரும மோங்கிட வுதவும்

கொடைக்குண மொருவாக் குளிர்மிகு கொண்டல்
படைப்பவன் றந்தை பயமுறப் பன்னூல்
படைத்தவை காக்கும் பண்பிற் பெரியோன்
விடைக்கொடி யவன்மத மிளிர்தரச் செய்வோன்
பூதி கண்டிகை புனைந்திடு மடியவர்
வீதியிற் செலினும் விரைந்தெதிர் கொண்டு
மாண்டகு தனதில் வரவழைத் திட்டுப்
பூண்டகு பொருள்கள் பொரிக்கறி யன்னம்
வேண்டிய வீசி விளங்குறு மன்பன்
பல்காப் பியமுந் தொல்காப் பியமும்
அல்கா முறையி னரிறபத் தன்பிதா
வெள்ளி யம்பல வாண வித்துவான்
தெள்ளிதி னுணர்த்தத் தெளிந்திடு மொள்ளியோன்
சமய பேதஞ் சற்றுஞ் செய்யா
தமைவுறு நந்த மாசின ரிடத்துத்
தரம்பெறு தபலா பீசிற் றனக்குமன்
னூரம்பெறு முத்தி யோகம்பெற் றுயர்ந்தோன்
என்செய லுணர்ந்தே யென்செய லென்றே
தன்செய லாகத் தாங்குறு முரவோன்
சம்பு லிங்க தயா நிதி
அம்புவி வாழிய அவனரு ளாலே.

யாழ்ப்பாணத்துப் புலோலி

ஸ்ரீமத் - சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்கள் B. A.

எழுதிய

# சிறப்புரை

இந்நூலாசிரியர் சைவ சித்தாந்தக் கல்வியில் மிக்க ஆர்வமுடையவராய், அக்காலத்திலே வழங்கிய சித்தாந்த நூல்கள் யாவையும் நல்லாசிரியரிடங் கற்றுச் சைவசித்தாந்தத்தைப் போதித்தலையும் பிரசங்கித்தலையும் பொழுது போக்காகக் கொண்டு வந்தமையால் இவர்களுக்கு **"சித்தாந்தக் கார்த்திகேய பிள்ளை"** என்ற பெயர் வழங்கலாயது. அவர் சைவசித்தாந்த வாய்மைகளைத் தமக்குக் காலத்தாலும் இடத்தாலும் சேய்மைக்கணுள்ளாரும் பெறவேண்டுமென்ற ஆசையால் அவைகளைத் திரட்டி வகுத்துச் **"சைவசித்தாந்த சங்கிரகம்"** என்னும் இந்நூலை இனிய வசனநடையில் எழுதி அச்சிடுவித்தனர்.

இந்நூல், திரிபதார்த்த உண்மையை ஓரதிகாரத்திலும், பதி ஆன்மா ஆணவம் கன்மம் மாமாயை அசுத்தமாயை ஆகிய ஆறுபொருள்களின் இலக்கணத்தை ஒவ்வோர் அதிகாரத்திலும், சிவஞான சாதனத்தையும் முத்தியையும் எட்டாம் ஒன்பதாம் அதிகாரங்களிலும் கூறுகின்றது. சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சாத்திரங்களிலிருந்தும், கந்தபுராணம் சூதசங்கிதை முதலிய நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

பதியிலக்கணத்திலே நவபேதங்களின் வேற்றுமையும் சத்திகளின் இலக்கணங்களும் விளக்கப்படுகின்றன. ஆன்ம இலக்கணத்திலே ஆன்மாவைப்பற்றிய பலதிறப்பட்ட கொள்கைகள் காட்டப்பட்டுப் புறமதங் களையப்பட்டு சுவமதம் ஸ்தாபிக்கப்படுகின்றது. மாயை யிலக்கணத்திலே தத்துவங்களின் தோற்றமும் தன்மையும் பயனும் சொல்லப்படுகின்றன.

அறுவகைப் பொருள்களுள் அசுத்தமாயை ஆணவத்தினின்றும் தோன்றியதென்பதும், ஆன்மா தானுகவே ஆணவ மலத்தைப் பற்றியதென்பதும் இந்நூலிற் காட்டப்படுகின்றன.

சைவசித்தாந்த வாய்மைகளை விளக்க எழுந்த இப்புராதன வசனநூற் பிரதிகள் அச்சிலில்லாமையால் இந்நூல் அழிவடையுமென்றஞ்சி இதை அச்சிடுவித்த பெருந்தகையாராகிய **ஸ்ரீமத் - சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை** யவர்களது சித்தாந்த சாத்திர பரிபாலன சிரத்தை சைவர்கள் யாவராலும் பாராட்டப் படத்தக்கது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவசித்தாந்த சங்கிரகம்

## காப்பு

மெய்கண்டப் பெருந்தகைக்குச் சிவஞான
மவன்றலக்கண் மிளிரத் தேற்றிப்
பொய்கண்ட சமயமெலாம் போயொழியப்
போதமது புரிவித் தாற்போல்
செய்கண்ட பொதும்பர்செறி யடியனேன்
அகத்தலத்துஞ் சிறக்க மேவிக்
கைகண்ட சித்தாந்த முணர்த்தியருள்
மாயாக்கைக் களிற்றை வைப்பாம்.

# கடவுள் வணக்கம்

## சைவசித்தாந்த பரமஞாநாசாரியர்

வடதருக்க ணெழுந்தருளிக் கடந்தசைவ
சித்தாந்த வண்மை காட்டித்
திடமுறுக்கு பெருந்தலைமைப் பரங்குருவாய்
வேதமதிற் சிறக்கு மொன்றாய்
மடமுருக்கிப் பதிஞானத் துயிர்தனது
திருவடியின் மன்னி வாழத்
தடமுறைகை யுறையவைத்த தக்கிணா
மூர்த்திசரண் தலைமேற் கொள்வாம்.

## சுப்பிரமணியப் பெருமான்

யாவ னொருவ னென்றேயத்
திலங்கும்புதுச்சந் நிதியுறைவான்
யாவ னொருவன் சிவகுருவின்
இலங்கித் தோன் றுங் குகன்யாவன்
யாவ னொருவன் கலைப்புலவன்
யாவன் சைவ முதலாகுந்
தேவ னவன்தன் பதமலர்க்குச்
சிறியேன் வணக்கஞ் செய்கின்றேன்.

## சந்தாநாசாரியர்

வேத நால்வர் விரித்திடன் மானவே
நாத வாகம நற்பொருள் நால்வராய்
ஓத வந்தரு ளுண்மைகண் டான்முதல்
நீத நால்வர் நிழற்பதஞ் சார்குவாம்.

# அவை யடக்கம்

பாவானு முறையானுந் திருவருள்பெற்
றிடும்புலவர் பகர்ந்த வித்தைத்
தேவாதி தேவனுமோர் குறியிற்காட்
டிடுமிதனைச் சிறியேன் கல்லா
ஓவாத போதத்தா லுரைக்கவரல்
என்னென்னே யொன்றோ நாண
ஆவாவோ என்செய்கேன் என்தனக்கே
பெருநகையை யாக்கு மாதோ. க

ஆயினுமொர் பெருவிருப்பெ னுள்ளகலா
தலைத்தலைத்துப் பிடரி னுட்டப்
பேயனிவன் தெரிந்தவற்றைச் சுருக்கியிளை
யவருணரப் பெட்பிற் செய்தேன்
தாயைநேர் புலவரனம் பால்பிரித்துண் டகைமை
யெனத் தகுதி கொண்டு
சேயைநே ரிதைமதித்துத் தேர்வர்சைவ
சித்தாந்தத் தீம்பா லென்றே. உ

T. 2272

# சைவ சித்தாந்த சங்கிரகம்

## க. பதார்த்த நிச்சயம்

அநாதிமலமுத்த பரமபதியாகிய சிவபெருமானாலே அநாதியே அருளிச்செய்யப்பட்ட வேதாகமமென்னும் முதல்நூல்களும், அவற்றின் வழிநூல் சார்புநூல்களாகிய யாவும் வஸ்துநிச்சயம் பேசுமிடத்து, சிவம், ஆன்மா, மலம் என அநாதி பதார்த்தங்கள் மூன்றுள வெனவும், அவைகளை யுணர்ந்து நிச்சயிக்குந் திறமான அனுமான முதலிய பிரமாணங்களையும், அவைகளுட் சாதன கருத்தனாகிய ஆன்மாவின் சாதன முறைகளையும், அவற்றின் பயனாகிய சிவப்பேற்றையுங் கூறி முடிக்கக் காண்கின்றோம்.

இவைகளுள், சிவம் தன் சார்பினதாகிய ஆன்மாவைத் தனக்கு அடிமையாகவும், அதனறியாமையை உடைமையாகவுங் கொண்டருளும். இவை மூன்றுமே அநாதி நித்திய பதார்த்தங்களாகக் காணப்பட்டன. அந்நிலைப்படியே அம்முப்பொருள்களும் முத்திக்காலத்தும் அழியாது நித்தியமாயிருக்கும். இனி அநாதியென்னும் பதம் நித்தியமேயாக, ஆதியென்னும் பதம் தோன்றி யழிதலை யுடையதாம். இவ்வாறாகலால் மலம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களுடன் அவைகளைக் காரியப்படுத்தும் மாமாயை, திரோதாயி யென்னும் இருமலமுஞ் சேர்ந்த ஐம்மலங்களும் அவைகளைப் பிரேரிக்கும் பஞ்சகிருத்தியங்களும் மூவகை ஆன்மாக்களுமாகிய இவைகளை யெல்லாஞ் சிவாகம

சித்தாந்த நூல்களில், அநாதி நித்திய வஸ்துக்களெனக் கூறியதாக வுணர்ந்து,

"வல்லி மலகன்ம மன்றுளவாம்"

என்னும் மெய்கண்ட சுருதி (சிவ. போத. உ-ம் சூத். வெண். எ) வாக்கையும்,

"ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறு தியில்"

என்னுந் திருவருட்பயன் (செய். ருஉ) வாக்கையுங் கொண்டு சித்தாந்த நூல்களிற் பயிலும், ஏகதேச வுணர்வைக்கொண்ட நம்போலிய சீவர்களிற்சிலர், அநாதி ஆதியாகிய காரண காரியங்களைப் பகுத்துணர்தற்கு ஐயவிபரீத மயக்கங்கள் இருத்தலாற்றெளியாது மயக்கமுறுகின்றனர். அவற்றை யாராய்ந்து சமாதானத் தெளிவடைதல் அவசியமாகும்.

இம்மலங்களுள் ஒன்றாய் முன்வந்த கன்மம் அநாதியே கேவல மூடத்திற் கிடந்த சீவர்கள் தம்முயிர்த் துணையாகிய சிவத்தை மறந்து மலத்தைப் பற்றிய குற்ற மென்னும் ஓர் சம்பாத்திய முண்மை பற்றி, அம்முறையினால் இக்கன்மம் காரிய மெனப் படும். இதன் காரியமான நல்வினை தீவினை யென்னும் இருவினைகளை நோக்கும்போது அவற்றிற்குக் காரணமாகவும் நிற்கும். அவ்வாறு நிற்பினும் அவ்விரு வினைகளும் துலையொத்து மலபரிபாக மடைந்த ஆன்மாக்களிடத்துப் பக்குவமறிந்து உணர்த்தும் ஆசிரியன் எழுந்தருளித் தன்னருள் பதித்து அவற்றின் மூல மலம் முதிர்வித்தற் பொருட்டு எஞ்சிக்கிடந்த கன்ம வினைகளையும், அவற்றிற்குத் தாபரமாய் நிற்கும் மாயே

யத்தையும் தனது கிரியாசத்தியால் நீக்கி, மூலமல சத்தியை ஞானசத்தியால் நீக்கி, வினையின் பிரிவாகிய ஆகாமிய சஞ்சிதங்களை இல்லையா யழித்து, பிராரத்த சேடத்தை அதற்காகக் கொடுத்த உடலினெல்லைவரையும் அனுபவித்துத் தொலைத்துத் தனது திருவடியடைதலாகிய சுகாதீத பரமுத்தியைக் கொடுப்பான். ஆதலால், அவ்விரு வினைகட்குங் காரணமாகிய மூல கன்மமும் அம்முத்திக் காலத்தில் வேரோடில்லையாய் அழிந்துபோயிற்றென்பதே துணிபாகும். ஆகவே, அம்மூலகன்மம் முன்னும் பின்னுமின்றி இடையிலே தேடி இடையிலே யழித்துக் கொண்ட பிரபஞ்ச காரியமென்பதே சற்காரியமாகும். இதற்குப் பிரமாணம்:-

"அடர்மலமே யநாதியுள வவ்வறியாமையதா மதுகன்மம்"

என்பது தத்துவப்பிரகாசம் (செய். ௩௫). ஆணவமலமே ஆன்மாவுக்கு அநாதியேயுள்ள தென்பதில், ஏகாரம் தேற்றமாய் வேறின்மையை யுணர்த்தி நின்றது.

இன்னும் இவ்வான்மாவின் பஞ்சகேவலங் கூறுமிடத்து அநாதி கேவலத்திற் சூக்கும கிருத்தியம் இலதாகவும், சகல கேவலத்திலுள தாகவும் மாதவப் பெருந்தகைச் சிவஞான முனிவரர் விருத்தியிற் கூறுதலால், இன்னகன்மம் உடையவருக்கு இன்ன உடலிற்போக்கூட்டுதல் வேண்டுமென்பதை யுணர்தலாகிய சூக்கும கிருத்தியம் கன்ம தேட்ட மில்லாத சீவர்களிடத்து வேண்டாமையால், இக்கன்மம் அநாதி கேவலத்தில் இல்லாததும், உயிரோடு சகச மல்லாததுமாய் அவ்வுயிர் மலசகித மூடத்தின் பின்னர்த் தேடிய அழி பொருளே யாகுமென நிச்சயித்துணரலாம். எல்லா

அநர்த்தங்கட்கும் மூலமாகிய ஆணவத்தை நீக்கவென வும், அவ்வாணவத்தால் ஆகாமிய கன்மம் உண்டாமென வும் கூறிய வாக்குகளாலும், இன்னும்,

"வெறுத்துநெறி யறுவகையு மேலோடுகீ ழடங்க
வெறும் பொய்யென நினைந்திருக்க"

(சித். சுப. ௬-ம் சூத். செய். ௬).

என்பது ஆறத்துவாவுட்பட்ட மூவகைப் பிரபஞ்சங் களும் பித்திகை வடிவங் காண்பார்க்கு அதன் கண் மறைந்த சித்திர வடிவம்போல, காரண ரூபத்திற் சிறி துங் காணப்படாமையால்,

"ஆசைதரு முலகமெலா மலகைத்தே ராமென் றறிந்தகல"

(ஷை செய். க).

எனவுங் கூறிய குறிப்பு வசனங்களாலும், மூல மலத்தினாலே விளைந்த காரியமே கன்மம் எனப்படும். அவ்வாறு தேட்ட காரியமான அன்று முதல் முத்தி பரியந்தம் சனனங்கடோறும் புனருற்பத்திக்கு ஏது வாய்ப் பிரவாக நீரோட்டம்போல இருவினைகட்கும் காரணமாய் நிற்றலைக் கொண்டு மெய்கண்ட வள்ளலார்

"வல்லி மலகன்ம மன்றுளவாம்"

(சிவ. போத. உ-ம் சூத். வெண். எ).

என மும்மலங்களையும் ஒரு சேரவைத்துக் கூறிய தென்னையோ வெனில், மாயையினின்றுந் தோற்றிய முதற் காரியமான கலையினின்றுந் தோன்றிய பிர கிருதியை, சுத்த அசுத்தப் பிரபஞ்ச காரணமான பெருமாயை மாயையொடு முதற் காரணத்தின் ஒன் றாகக் கொண்டது, ஆன்ம வித்தியா சிவதத்துவ மென மூவகைப் பிரிவு கூறும் அவதரத்தில், மாயை

யின் காரியப் பொருளாயிருப்பினும், சற்காரியம் பிழை படாது அவ்வான்ம தத்துவம் அளவிற்கு முதற் காரணமாகக் கூறியதுபோல, இக்கன்ம மலமும் மல காரியமாயிருப்பினும் அவ்விரு வினைகட்கு மாத்திரங் காரணமாயிருத்தலினால் பிரவாக அநாதி யென்பதே சற்காரியம் உணர்ந்த மெய்கண்டப் பெருமானின் திரு வுள்ளக் கருத்திற் கிடந்த சித்தாந்தமாகும். ஆதலால், கன்மம் அநாதி நித்தியமன் றென்பது திடசிந்தையாற் றெளிந்த நிச்சயமாகும்.

இது நிற்க. மலகன்மங்களோடு விரவிய மாயை யாவது, சிவாகம சித்தாந்தங்கள் மூலமலத்தின் சொரூப தடத்தங்களாகிய ஆவாரக அதோ நியாமிகா சத்தி களின் குணலக்கணங்கள் கூறியவுண்மையை நுனித் துப் பார்க்குமிடத்தில், ஆன்மாக்களின் ஞானக்கிரியை களை முழுவதும் இல்லையாக மறைக்கும் சொரூப நிலையி லுள்ள ஆவாரக சத்தியை நீக்கித் தடத்த லக்கணத் துக்குரிய அதோ நியாமிகா சத்தியின் காரியத்தால் அம்மறைப்பை ஒதுக்கி ஏகதேச விபரீத வுணர்வைக் கொடுக்கும் சகல நிலைக்குக் காரணமாய்ச் சிவனால் எடுத் துக் கொள்ளப்பட்ட பரிக்கிரக சத்தியே இம்மாயை யாகும்.

இவ்வாறாக, இதனையும்

"நித்தமா யருவா யேக நிலையதாய்"

(சித். சுப. உ-ம் சூத். செய். ருங).

எனவும்,

"வல்லி மலகன்ம மன்றுளவாம்"

(சிவ. போத. உ-ம் சூத். வெண். எ).

எனவும் ஆசிரியர்கள் கூறினமையால், அநாதி நித்திய

காரணமாமெனக் கொள்ளுவார். ஆனால், நூல்களிற் பொது சிறப்பாகப் பேசப்பட்டிருக்கும் விடயங்களை யுணருஞ் சீவர்களும் பொது சிறப்பென இருவகைக் காட்சியாலுணருவார். அவைகளிற் பொது, நிருவிகற்ப சமட்டியாய் நோக்குமிடத்து அநாதி காரணப் பொருளாகத் தோன்றினும், சவிகற்ப வியட்டிச் சிறப்புக் காட்சியாற் பார்க்குமிடத்துக் காரிய அழிபொருளாகவே தோன்றும். அஃதெவ்வாறெனில், இயற்கையிலே வெண்ணிறமுடைய பருத்திப் பஞ்சினின்றுந் திரித்த நூலாலியற்றிய புடைவை, நெய்கிறவன் கையில் வேர்வையோடு சேர்ந்த புழுதியினாலும், பசையிடுதலினாலும், அதனை உடுத்தவரின் வேர்வையோடு சேர்ந்த புழுதி, சாணி முதலியவைகளினாலுமே அழுக்குப் பற்றியதால் அச்செயற்கையால் வந்த அழுக்கை நீக்கித் தன்னியற்கையாகிய வெண்மையைக் கொடுக்க வல்லனாகிய ஓர் ஏகாலியானவன், அவ்வழுக்கைக் கழற்றுங் கருவியான உவர்மண் சாணி யென்னும் அழுக்குப் பொருள்களோடு அப்புடைவையைச் செறியச் சேர்த்து வைத்து அதிற்பற்றிய அழுக்கு முழுவதையுங் கழற்றி, இயற்கையிற் சுத்த வெண்மையதாக்கினாற்போல, அநாதியே சீவர்களைப்பற்றிய ஆணவமலத்தை அகற்றவல்ல மல வைத்தியனாகிய சிவன் அந்நோயைத் தீர்த்தற்கு அம்மலதடத்த நிலையின் திரிபாய் வைப்புச் சரக்காக எடுத்துக்கொண்ட இம்மாயையை முதற் காரணமாக வைத்து, அதன் காரியமாகிய தனுகரண புவன போகங்களாய ஔடதமான மாயேய மலத்தால் மூலமல வழுக்கைக் கழுவி, அப்பக்குவான்மாக்கட்குச் சனன

மரண ஏதுவான கன்ம சேடமின்மையால் அம்மாயை மாயேயங்கள் அந்நோய் நீங்கியவழி ஔடதமும் உடன் சமித்தழிதல் போல வேரோடு இல்லையா யழிதலால், அவரை அருளவத்தையாகிய சுத்த நிலையில் வைத்துப் பக்குவமாக்கிச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வைக் கொடுப்பன். ஆதலால், இம்மாயையும் கன்மபோக ஏதுவாய் இடையிலே சிவனாற் கொடுக்கப்பட்டு, அப் போக முடிவின் இடையிலே அழிக்கப்படும் காரியப் பிர பஞ்சமேயாகுமென்பது சந்தேக விபரீதமின்றித் தெளிந்தறியத்தக்க சற்காரிய சித்தாந்தமே யாகும். இதற்குப் பிரமாணம் :

“ எழுமுடல் கரண மாதி யிவைமல மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற்
செழுநவ வறுவை சாணி யுவர்செறி வித்த ழுக்கை
முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் முன்னே”

(சித். சுப. உம் சூத். செய். ருஉ).

எனவும்,

“ ...அநாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும்”

(ஷை செய். ருக).

எனவும்,

“......எல்லாஞ் சாலவின் றாகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்தபோது”

(ஷை செய். ருo).

எனவுங் கூறியபடி இவ்விருவகைப் பிரபஞ்சங் களும் ஆன்மாச் சிவத்தினைச் சார்தற்கு ஏதுவாகிய பக்குவகாலஞ் சாலுதற் பொருட்டு இப்பெத்த காலத் துளவாவன என்பதாம். அத் தனுகரணாதிகள் மல கன்மங்களாகிய நோய்க்கு மருந்தாக அவனால் அமைக்கப்

பட்டன எனவும், தூலம், மான், மோகினி, விந்து முதலிய இவைகளெல்லாம் பாசத்தை அரிக்கும் அரனுக்குப் பரிக்கிரக விபூதியாதல் கூறப்பட்டதெனவும்,

"தன்னைமல மன்றணைத ருன்"

(சிவ. போத. ௪-ம் சூத். வெண். ரு).

என்பது மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணைதல் என்றாரெனவும், ஆகந்துக மலங்களின் நீக்குதற்கு சகசமலமென விசேடிக்கப்பட்டது எனவுங் கூறிய ஆசிரிய திருவாக்குப் பிரமாணங்களால் ஆணவமலமொன்றே அநாதி நித்திய வஸ்துவாயும், மாயை கன்மங்கள் இடையிலே பற்றி இடையிலே நீங்குவனவாயும் வேறு பிரித்துக் கூறியிருக்கின்றார். ஆதலால் சிவன் பஞ்சகிருத்திய ஆரம்ப ஆதிகாலத்திற் பிரபஞ்ச காரணமாய் எடுத்துக்கொண்ட பரிக்கிரக சத்தியாதலில், அக்கிருத்திய விடுதலைப்பட்ட சீவர்களில் இல்லையாய் அழிபொருளாகு மென்பது திடசித்தமாய்த் தெளிந்து உணரத்தக்க சித்தாந்தமாகும்.

இனி ஒருவாறு ஆசிரியர்,

"நித்தமா யருவா யேக நிலையதாய்"

(சித். சுப. ௨-ம் சூத். செய். ருரு).

எனக் கூறினமையால், இம்மாயை தோன்றியழியுங் காரியப் பொருளாகாதெனச் சந்தேகம் நிகழின், அதனை யுற்றுச் சிந்தித்து நோக்குமிடத்து, மலவைத்திய பஞ்சகிருத்திய உற்பத்தி சங்காரம் எப்போதும் வேண்டப்படுதலினால் நித்தியமென்னும் உபசாரத்தைப் பெற்றதேயாயினும் ஒவ்வோர் ஆன்மாவை

யும் பற்றுதற்கும் விடுதற்கும் முதலையும் முடிவையும் பெற்ற காரிய அழிபொருளேயாய், உற்பத்தி காலத்திற் றேன்றிச் சங்கார காலத்தில் அழிதலால் சொரூப நிலைக் காரணப் பொருளாகாது, எவ்வாற்றானும் காரிய அழிபொருளாகவே நிச்சயித்து உணரலாம். இதுவுமன்றி இப்பிரபஞ்ச காரியங்களை ஒவ்வோர் காரியத்துக்கு உவமையாகக் கூறிய இந்திரசாலம், கனவு, பேய்த்தேர் முதலியவைகளில், இந்திரசாலம் முன்னில்லாத ஒன்றை வருவித்தற்கும், கனவு இடையே நிகழ்ந்து மறைந்து போதற்கும், பேய்த்தேர் கடும்பகலில் வெய்யிற் கடுமை பற்றித் தோன்றி, அவ்வெய்யில் மேகபடலத்தால் மறையுண்ண அழிந்து போதற்கு உவமையாக இம்மாயை மலபரிபாகம் வந்த சமயமே அருளாகிய மேகபடலத்தால் அழிந்துபோனதாக உவமித்திருப்பதாலும், இன்னும் விவர்த்த மாயாவாத சமயிகள் கிளிஞ்சிலை வெள்ளியென ஆரோபிக்குமவர் போல இப்பிரபஞ்சத்தை மெய்யெனக் கருதுவாரென்னும் உவமையாலும், காரியப்பொருளாகிய இப்பிரபஞ்சம் காரண மெய்ப் பொருளாகிய அநாதிப் பொருள்களின் நித்திய காரணத்தின் ஒன்றாகா தென்பது தருக்க நியாய முகத்தா னுணர்ந்து, உமாபதி சிவாசாரியர்

"ஏக னநேக னிருள்கரும மாயை யிரண்டு"

(திருவருட். செய். ௬உ).

என்னும் ஆறு பொருள்களும் சிருட்டி யாரம்ப ஆதி காலத்திலேயுள்ளன என்பதை நம்போலிய சீவர்களுக்கு அறிவித்தலே தமதுள்ளக் கருத்தாகக் கூறிய அச்செய்யுளின் பொருளை, சிவன் தன்வாக்கினாற் கூறிய வேத

மொன்றே சித்தாந்த சற்காரியப் பொருளா யிருக்கவும், அவ்வுண்மைப் பொருளை உணர்ந்தெடுக்க அறியாது வேறுவேறு பூருவபக்க சமயங்களாய்ப் பொருள்கொள் ளுதல்போல, இந்த ஆறு பொருளையும் அநாதி நித்திய மாகப் பொருள் கொள்ளுவாராயின், அவ்வாசிரியர் வேறுவேறு தனித்தனி ஆதியெனவும், அநாதியென வுங் கூறிய வசனங்களிற் சமாதானப் பொருள் எடுத்தல் அருமை யாதலால், சிவன் பஞ்சகிருத்திய ஆதியில் எடுத்துக்கொண்ட பரிக்கிரகமான இம்மாயை, இச்சீவர்களின் கன்மானுபவம் முடிந்து பக்குவப்படும் வரையில், எடுக்குஞ் சனனங்டோறும் நீரோட்டம் போல விடாது தொடர்ந்து தனுகரண புவன முதற் காரணமாக நிற்கும் உரிமை யொன்றளவில் பிரவாகா நாதியாகுமென உள்ளக்கிடையில் வைத்துக் கூறினு ரெனப் பொருள் கொள்ளுதலே சற்காரியார்த்த மாகு மென என் சிற்றறிவிற் படுகின்றது. அதனைச் சிவ ஞான வுணர்வுடையோர் சிந்தித் துணருவார். அவரே எனக்கும் உணர்த்துவார்.

இனி, மாமாயையாவது பரமானந்த சொரூப நிலையி னின்ற சிவம் அநாதி ஆன்மாவின் கேவல மூடத்தை நீக்கித் தன்னியற்கை வியாபகத்தோடு தாமாந் தன் மைப் பெருவாழ்வைக் கொடுக்குங் கருணையால் பஞ்ச கிருத்தியத் திருவுளங்கொண்ட அவதரம். தன்னருளின் சடசத்தியான சிதாகாசப்பிரபஞ்ச மூலதாரக பரிக்கிரக சத்தியைத் தனதருளாற் கற்பித்து, அதன் மூலமாக உருவாதி தொழில்களை இயற்றுதலால் அவ்வுயிர்களைத் தூய்மைப்படுத்திக் கன்மானுபவ முடிவில் மலசங்கார

மான முத்திக் காலத்திலே பிணமெரிந்து சாம்பரான முடிவிலே அப்பிணஞ் சுடுகோலையும் அதனோடுகூட நீக்கி விடுதல்போல, அம்மல காரிய மாயா பிரேரகமான இம் மாமாயையும் சிவனது தடத்த நிலைக்குரித்தாய், படங் குடிலாற் போல விரிந்தொடுங்கும் பொருளாதலால் இதனையும் உற்பத்தி காலத்தில் விரித்துச் சங்கார காலத்து ஒடுக்கி விடுவார். ஆதலால், மாமாயையானது காரண வஸ்துக்கள் மூன்றனுள் ஒன்றாய சிவத்தின் அபேதமான சிற்சத்தியின் காரியப் பொருளாகக்கொள் வதே சித்தாந்தமாகும்.

இனி, **திரோதாயியாவது** அச்சிவபெருமானது திருவருளே. அது தடத்த நிலையிற் பிரிந்த பஞ்ச சத் தியி னொன்றாய், ஆன்மாவின் ஞானக் கிரியைகளை மறைத்த ஆணவத்தை ஒருபுடை யொதுக்கி அறிவு செயல்களை விளக்கிக் கன்மத்தை நுகர்வித்து மலபரி பாகம் பண்ணும் பஞ்ச கிருத்திய சிவசத்தியேயாம். அக்கன்ம போகத்தில் ருசிப்பித்து மலமறைப்போடு தானும் மயக்குதலால் இதுவும் ஓர்மலமாக உபசரித் துப் பேசப்பட்டது. அக்கன்மபோகம் முடிந்து இரு வினை யொத்த மலபரிபாக சமயத்தில் தனது மறைப்பை விடுத்து அவ்வப் பொருள்களின் உண்மையை உள்ள படிகாட்டும் ஒளியினை யுடைய அருளாகி உணரக் காட் டுதலால் உற்பத்திகாலத்திற் றோன்றிச் சங்காரகாலத் தொடுங்குங் காரியப் பொருளாகக் கொள்வதே சித் தாந்த மாகும்.

இனி, **பஞ்சகிருத்தியமாவது** சிவன் தனது சொரூப நிலையினின்று தடத்த நிலையாகிய உருவ நாமங்

கொண்டு செய்யுங் கிருத்திய மாதலால் காரியமா மென்பதிற் சந்தேகம் வேண்டுவதின்ரும். அது சிருட்டிகால ஆதியினுள்ளதாய் ஆன்மாக்களைப் பற்றியதன்றி, அநாதியில் உளதாய்ப்பற்றியது ஆகாது. இதனை இயற்றுங் கிரியாசத்தி ஆன்மாவின் கன்ம சமத்துவ மலபரிபாக காலத்தில் ஆகாமிய சஞ்சிதங்களை இல்லையாயழித்து அருள் நிலையில் நிறுத்தி, தனது கிருத்தியத்தையும் விட்டு நீங்காதிருக்கு மாதலால், என்றுமுள்ளதாய், ஆன்மாவிற்கு எங்ஙனம் மலம் அநாதியோ அங்ஙனமே சிவபெருமானுக்கும் இவை சகசமாகவும் இருப்பதாகலின், இப்பஞ்ச கிருத்தியங்களும் அநாதியே உள்ளனவென்பதே சித்தாந்தமாகும்.

இனி, மூவகை ஆன்மாக்களாந் தன்மை ஆன்ம வர்க்கத்தின் பக்குவ பேதமேயாகும். அஃதாவது ஆன்ம வியற்கை சார்ந்ததன் வண்ணமாந் தன்மையடங்கிய சதசத்தென்னும் நாமத்தையுடையவாய், வியஞ்சகமின்றித் தானே யுணருந் திறமடையாத தூல சித்தாகி அசத்தோடு கூடி அசத்தாதலும் சத்தோடு கூடிச் சத்தாதலுமாகிய ஈரிடத்தன்றித் தனித்து வேருய்க் காணப்படாத இயல்பு தனக்கே சுபாவமாக உடையதேயாம். ஆன்ம சத்தம் உள்ளனயாவும் அநாதியே ஞானக்கிரியை விளங்காது மூடமாய்க் கிடந்தன வென்பது ஒருதலையாக, அவ்வாறு பாதந்திர உணர்வினவாய அவைகள் சுதந்தர வுணர்வின்றி மலத்தோடு பிரிபடாது கிடத்தலால் அநாதியே சிவமென்னும் வஸ்து ஒன்றே மலரகிதம் உடைத்தென்க. அங்ஙனஞ் சிவம் தனது கருணையால் மலசகசமாக் கிடந்த

சீவர்களின் அறிவு, செயலை விளக்கும் பொருட்டுப் பஞ்சகிருத்திய முறையினுலே மாயா காரிய தனுகரண புவனாதிகளை யாக்கி அக்கரணங்களின் வழியாய் அறிவு வெளிவர, ஐந்தக்கரஞ் சேர்ந்த சமட்டிப் பிரணவ சுத்த மாயா சபையிலே பஞ்சகர்த்தவ்விய பிரேரகத்தால், ஒருபுடை ஒதுங்கித்தோன்றும்படி செய்யுஞ் சகல நிலையைக் கொடுத்து, ஆன்மாவாகிய வஸ்துவை வேருகப் பிரித்துக் காட்டும் அந்நிலையில் ஒரு மலத்தினராய் மூடத்திற்கிடந்த அறியாமையாற் றேடிய கன்ம இரு மலத்தினராய், அதனைப் புசிப்பிக்கும் வைத்திய சிவனுற் கொடுக்கப்பட்ட மாயாகாரியமாயுள்ள முப்பத்தொரு கருவிகளோடுகூடிய மும்மல சகலரெனப் படுவார். அதனுற் சீவசத்தம் உளதாம். ஆதலால் இறந்த உயிரை எழுப்பும் அமிர்த சஞ்சீவிபோலச் சடத்துவமாய்க் கிடந்த சீவர்களை எழுப்பிக் கன்ம பலன்களையூட்டி மலபரிபாகப் படுத்தும் ஔடதமாகிய இச்சகல நிலையே அம்மருந்தின் பத்திய வேதாகமக் கட்டளைகளை உணர்ந்து சாதனஞ் செய்து பக்குவமடையவும், அப் பக்குவ பேதங்களுக்குத் தக்க போகமுத்தி, அதிகார முத்தி, பதமுத்தி, சீவன்முத்தி, பரமுத்தி யென்னும் ஐவகை முத்திகட்கும் முக்கிய காரண ஏதுவாயிருப்பது அவ்வொன்றேயாம்.

ஆன்மாத் தன்னுடன் கூடிச் சகலனென்று பெயர் அடைதற்கு ஏதுவாய கலையுடனே, வித்தை ராகம் என்னும் வித்தியா தத்துவங்களால் விளங்கிய இச்சா ஞானக் கிரியைகள் விரிந்த விஞ்ஞானத்தால் கலை முதல் முப்பத்தொரு தத்துவங்களையும் வேருய்க்

கண்டு விடுதலைப்பட்ட விஞ்ஞானகல பிரளயாகலர், அம்மாயாகலை நீங்கியபோதும் ஆன்ம சத்த மின்றிக் கேவல உள்ளுணர்வினராய்க் கிடந்தாரேயாக இவர்களிற் சிலர் பக்குவ முதிர்வினாற் சுத்தகாரியக் கலை முதல் முப்பது கருவிகளோடு கூடி அதிகார பத முத்தி அடைந்திருப்பாரென ஆப்த வாக்கியங்களிற் பேசப்படுதலால், இவர் கேவல சகலமென்னும் ஈரவத்தையுங் கடந்து, சுத்தாவத்தையின் கீழ்நிலையான கலையோடு கூடினாரென்பது காணப்படுதலால், கலைசேராது சீவர்கள் ஞானக்கிரியைகள் விளங்கிப் பாகமடைய மாட்டாரென்பது கல்லெழுத்துப்போல மாறாது நிச்சயமாய் யாவரும் விளங்கத்தக்க உறுதிப் பொருளேயாகும். அவ்வாறு காணப்படுதலால் அநேகராகிய சீவர்கள் யாவரும் பொதுவே மலமூடத்திற் கிடந்தவராக, சிவனாற் கொடுக்கப்படுங் கலையோடு கூடிய அறிவினாற் பயின்ற சாதன பக்குவத்தால் முற்கூடிய கலையின் நீங்க, தனதருளாகிய சுத்தகலையோடு கூட்டிப் புடமிட்டு அதிபக்குவராக்கி அச்சுத்த கலையையுங் கழற்றி, சிவஞான அகண்ட நிலையில் வைத்துத் தன்னோடு சேரவணைத்து நித்தியானந்தம் ஊட்டுவதே சற்காரிய சித்தாந்தமாகப் பேசப்படுதலால் இச்சீவர்களின் விஞ்ஞானகல பிரளாயகல சகலமாகிய மூவகைப் பிரிவுங் காரணப் பொருளாகாமே பக்குவபேத காரியப் பொருளேயாமென்பது திடசித்தமாய்த் தெளிந்த நிச்சயமாகும். ஆதலால் வேதாகமங்கள் அறுதியிட்டுக் கூறிய வஸ்துக்கள் மூன்றுமே அநாதி காரணமாகுமன்றி, முற்பேசிய அறுவகைப் பொருள்களும் அநாதி காரணமாகாது பிரவாகாநாதியா மென்பதே சித்தாந்தமாகும்.

இன்னும் வஸ்துக்களென்று பேசப்பட்டன எவையோ அவையின் சொரூப இயற்கை சுபாவகுணங் குறிகளின் இலக்கணங்களை யெல்லாம் பசுபாச ஞானங் களாற் காணாது மெய்யறிவென்னுஞ் சிவஞானத்தால் உள்ளவாறு கண்டு, அநாதி யாதிகளையும், காரண காரியங்களையும் நிச்சயஞ் செய்தல் வேண்டும். அவற்றை ஒருவாறுற்றுச் சிந்தித்து நோக்கும்போது, வேதாகமங்கள் சூக்கும தூல சித்தாகிய சிவம் ஆன்மாவென்னும் இரண்டுமே ஞானக்கிரியையோடு இயைபுறும் வஸ்துக்களாக அறுதியிட்டுக் கூறின. அவற்றுள் தூல சித்தாகிய ஆன்மா என்னுஞ் சொற்பிரிவை உற்றுநோக்கும்போது வியஞ்சகத்தாலுணருந் திறமுடைய தூல உருவம் மறைபட்ட ஞான வியாபக முடையது இவ்வான்மாவும், மறைபடாது திறக்கும் அகண்டஞான வியாபக சூக்கும சித்தாயுடையது சிவமுமெனவே பிரித்துக் காணக் கிடக்கின்றன. இவற்றோடு அவ்வுயிர் ஞானத்தின் சுதந்தர ஈனத்தையும் மலமாகச் சேர்த்து, சடமாகிய சத்தின் நீக்குதற்கு சிவசத்தென்றார் எனவும் அப்பசுபாசம் இரண்டும், அங்ஙனம் அறியப்படும் பொது இயல்பு பற்றி அசத்தெனப்படுமாயினும், அவற்றின் சிறப்பியல்பு நோக்கும்வழி அவை சத்தாதற்கு இழுக்கின்மையும் உணர்க என்னும் ஆப்த வாக்கியத்தின்படி உள்பொருளாக நிறுத்தி வஸ்துக்கள் மூன்றாகச் சேர்த்து நிச்சயிக்கப்பட்டன.

அவ்வஸ்துக்கள் மூன்றுமே அநாதி காரணமாகுமன்றி வேறு நிலை வஸ்துக்கள் யாதுமில்லை யென்பதை நேரே காணுதற்காக அநேகாயிரம் ஏதுப் பிரமாணங்

கள் தேடி அடிதலை தெரியாது அவத்தைப் படுதல் வீணாக முடியும். அதனை ஒரே ஏதுவின் பிரமாணத்தைக் கொண்டு நேராகக் குறித்து நிச்சயம் பண்ணலாம். அது யாதெனை ஆராய்ந்து பார்க்கில் அநாதி நித்திய வஸ்துக்கள் எவையோ அவை யென்றும் ஒரு தன்மையவாய் அழியாது நித்தியமாய் இருத்தல் வேண்டும். அவ்வாறாக இங்கே பேசப்பட்ட வஸ்துக்கள் மூன்றனுள் சாதன அதிகாரியான ஆன்மாதான், அன்றே பற்றிய மலதடத்த நிலையினின்றும் விடுபடுஞ் சாதன வலியினால் இருவினையும் துலையொத்து மலபரிபாகமான சமயத்திற் சத்திபதிதலால் அதனின்றும் விடுபட்டுச் சொரூபநிலை யடைந்தபோதே சிவமெனத் தானென வேறின்றி அத்துவிதானந்த அனுபவம் பெற்ற பரமுத்திக் காலத்தும் தன்னை முன்னமே மூடியிருந்த சுதந்தர ஈனமான மலமும் தன்னுள் ஆனந்தானுபவ காரணமாய் அடங்கியிருப்பத், தன் முதல் கெடாது தானும் சதா நித்தியமாய் இருந்தது. ஆகவே, இவ்வஸ்துக்கள் மூன்றும் கடலும் நீரும் உப்பும் போல அன்றே உள்ளபடி என்றும் உள்பொருளாய் விளங்கா நிற்கும். ஆதலால் இவ்வோர் ஏதுப் பிரமாணத்தைக் கொண்டே வஸ்து ஒன்றோ மூன்றோ ஆறோ எத்தனை என்பதை இலகுவாக நிச்சயித்துக் காணலாம். ஆதலால் இச்சங்கிரகத்தில் முன்னமே எடுத்துக் காட்டிய கன்மம், மாயை, மாமாயை, திரோதாயி, பஞ்ச கிருத்தியம், மூவகை ஆன்மா ஆகிய இவ்வறுவகையும் அநாதி நிலை வஸ்துக்களின் தடத்த காரியப் பகுதியனவாகலால், அவற்றின் சொரூப நிலையான முத்திக்காலத்தில்

இவ்வாறு பொருள்களும் அவ்வான்மாவிற்கு உளவாக எந்த நூலிலாவது பொது சிறப்புகளாந் தொகை வகையாகிய எவ்வாற்றானும் பேசக் காணாமையால் இவ்வாறு வகைப் பொருள்களையும் பிரவாகாநாதிப் பொருள்களெனவும் முத்திக் காலத்திலும் நிலைத்து நின்ற வஸ்துக்கள் மூன்றுமே காரணப் பொருளாய் அநாதியிலுள்ளன எனவும் ஊகித்துணருதல் கடனாகும். இவ் வந்தரங்க இரகசியங் காணுதற்கு இச்சுட்டறிவின் வேறாய் மேலறிவுக் கண்ணொன்று திறக்கப்பட வேண்டும். அதுவே வஸ்துக்களின் சொரூப நிலையைக் காணத் தக்கதாம். அந்நிலையைக் காணாத நாள் எந்நாளோ அந்நாள் வரைக்கும் வஸ்துக்களின் நிச்சயம் காணுதலும் பேசுதலுங் கூடாவாம்.

“ சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
 சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
 பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
 ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
 பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே ”

என்னும் சிவஞான சித்தியார்த் (அ-ம் சூத். செய். உஉ) திருவாக்கைச் சிந்தித்துச் சிவஞானச் செல்வப் பெரும் பேறடைந்து கடைத்தேறுதும். இனிப் பதார்த்தங்களுள் அநாதி நித்தியமாகவுள்ள பதிபசு பாசங்களின் சிறப்பிலக்கணஞ் சொல்லுவாம்.

## உ. பதியிலக்கணம்

### சிவஞானபோதம்

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையில்
தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்"

"சிவம்சகத்குரு சர்வஞ்ஞத்துவ சங்காரமே முதல்" எனச் சிவஞானபோதங் கூறிற்று. அது ஆகு பெயராய் *உருத்திரமூர்த்தி ஒருவரையே உணர்த்தி நிற்கும். சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற உருத்திரன் வசத்ததாய்ச் சுதந்தரமின்றி நிற்கும். அச்சிவன் தனதருட் சத்தியாகிய சுவரிலே பிரபஞ்சமாகிய சித்திரத்தைத் தீட்டுவார். அவரே அதனை அழித்தலும் செய்வார் என்பது துணிபு. அதனால், சகத்கர்த்தா அவர் ஒருவரேயாகும், மற்றொருவரு மில்லை யென்பது முடிபு. இனி அச்சிவசத்தியாகிய சுவரில் எழுதிய சித்திரமென்று கூறவே, அச்சிவமே நிமித்தோபாதானம் என்னும் ஆட்சேபம் உளதாம். ஆயினும் சடமாகிய சித்திரம் சித்தாகிய சிவத்தினின்றுந் தோற்றுதென்பது காரணகாரிய தருக்க முகத்தி

---

* ஈண்டு உருத்திரன் என்றது பிரம விட்டுணுக்களோடு குண தத்துவத்திலிருந்து அழித்தற்றொழில் செய்யும் குணருத்திரர் அன்று. என்னை? அவர் பிருதிவி முதற் பிரகிருதி புவனம் வரையுஞ் சங்கரிப்பரன்றி, அதற்கு மேற்பட்ட புவனங்களுக்குச் சங்காரகாரணர் ஆகாமையின். எனவே, ஈண்டைய உருத்திரர் சுத்த மாயா புவனாந்தம் வரையுஞ் சங்கரிக்கும் மகாருத்திரர் என்றறிக.

ஞற் பெறப்படலான், சித்தாகிய சிவம் நிமித்த காரண மாவதன்றி முதற்காரணம் அன்றெனக். சித்திரகாரனு கிய சிவனும் அச்சித்திரம் அமைதற்கிடமான சுவராகிய சத்தியும், சடமாகிய சித்திரமும் வேருயுளவென்பது பிரத்தியக்ஷத்தாற் காணக்கிடக்கின்றன. இனி, உலக மானது பரபிராகிருதி, பிரகிருதி என்னும் முதற் காரணங்களால் சுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்ச மென இரண்டாகக் காரியப்படும். அவ்விருவகைப் பிர பஞ்சங்களும், பராசத்தியாகிய பெருஞ் சமுத்திரத்தின் நீர்க்குமிழி போல விளங்கும். அது சுத்த காரணத் தினின்றும் அசுத்த காரியம் தோற்ருதென்னுந் தருக்க முகத்தால் பரா பிரகிருதி சுத்தகாரணமும், பிரகிருதி அசுத்த காரணமுமாகும். இவற்றுள் மலசகித கன்ம சீவர்களின் மலநோயைக் கழற்றும் வைத்திய சிவன் தனுகரண புவன போகங்களின் உட்கருவி புறக்கருவி களாகிய தொண்ணூற்ருறினுக்கும் முதற்காரணமாக அம்மலத்தினின்றுந் திரித்தெடுத்துக் கொண்ட பரிக் கிரக சத்தியாகிய அசுத்தமாயையானது மூவகைப்பட்ட சீவர்களினுடைய தூலசூக்கும காரணமாகிய மூவகை வடிவங்களுக்கும் முதற் காரணமாகும்.

இனி, பராபிரகிருதி மல கன்மங்களோடு விரவாது சுத்த அகண்ட வெறு வெளியாதலின் சிதாகாசம் என்று சொல்லப்படும்; இப்பொருளடங்க இன்னும் அநேக நாமங்களுளவாம். இது சத்திகாரிய சுத்தப் பிரபஞ் சங்களின் முதற்காரணமாகும். சிவசத்தியும் அபின்ன சிற்சத்தி, பின்ன சடசத்தியென இருவகைப்படும். அதனல் அச்சடசத்தி சுத்தப்பிரபஞ்ச முதற்காரண

மாகவும், சிற்சத்தி அதற்கு ஆதார சமுத்திரம் அல்லது பித்திகையாகவும், சிவன் அவற்றை ஆக்கிய நிமித்த காரண கருத்தனுகவும் காணப்படும். இதனை "நிச்சக்தி பித்தி நிர்மிதசகத்" என்னும் வியாச சூத்திரத்தால் உணர்ந்து, சிவன் தானே சத்தியாகிய சுவரில் பிரபஞ் சங்களைத் தோற்றுவித்தாரென்பது துணிபொருளாக நிச்சயித்தறியலாம். அதனுல் பிரம விட்டுணு முதலிய காரண கருத்தர் படைத்தல் காத்தலாகிய கிருத்தியங் களைச் செய்யும் சுவதந்திரர் அல்லரென்பது தானே வெளிவரக் கிடக்கின்றது. ஆகவே அவ்விருவரும் தங்கள் தனுகரண புவன போகங்களை அப்பிரமத்தின் பஞ்ச கிருத்தியத்தால் பெற்றுக்கொண்டார் என்பதுங் கருத்தாகும். இனி, தனிமுதலாகிய பிரமத்தைக் காரணரெனக் கூறிய இருக்கு முதலிய வேதங்கள் பரதந்திர சீவர்களாகிய பிரமன், விட்டுணு, இந்திரன், அக்கினி, சூரியன் முதலிய சீவர்களுக்கு முகமனுய், அவரிடத்தும் நின்று அவ்வத்தொழில்களை நடத்தும் பிரமம் ஒருவருக்கே உண்மையாதல் அவ்வேத உள்ளி டையிற் கிடந்த சித்தாந்தமாகும். ஆதலால் இப்பிரமா ஆதியர் சீவர்களாகவும், இவர் முதற் ருவரமீருகிய சீவர் களுக்கெல்லாம் சங்கார காரணராகிய உருத்திர மூர்த்தி தானே ஒருவராய் நின்று கரணத்தானன்றிச் சங்கற்ப மாத்திரையாய்ப் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துவார் என்பதும் பெறப்பட்டது.

இனி அப்பிரமன் முதலியோர் செய்த தவ வரப் பிரசாதத்தால் அம்முத்தொழிற் றலைமையைப் பெற்ரு ரெனில், அத்தொழில்களைச் சிவசத்தி தம்மிடத்தும்

நின்று நடாத்தும் பெருமை ஒன்றையே பெற்றுக் கொண்டதன்றி அக்கிருத்திய அதிகாரம் பெற்றவர் அல்லர். மலத்தோடு கூடி நின்று காமிய தவஞ் செய்தவ ராகலின், இனி அம்மலத்தினின்றும் விடுபட்டு, சிவ மாந் தன்மையைப் பெற்ற சீவன்முத்தரும் தங்கள் சுதந்தர காணியாகிய பேரின்பம் ஒன்றினுக்கே உரித் துடையரன்றிப் பஞ்சகிருத்திய தலைமைக்கு உரியரல் லர். எனவே, இவர் செயலைப் பேசவேண்டியதென்? இருள்நீங்கிய வழியும் கண் காட்சி ஒளியை இன்றியமை யாத வாறுபோல, மலம் நீங்கிய முத்தி நிலையினும் அறிவு முதல்வனது வியஞ்சகத்தை இன்றியமையா தெனவும்,

"விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பது போலடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி"

(கக-ம் சூத். செய். கஉ).

எனவும்,

"எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
அறிந்தியற்றி டாவுயிர்கள்" (ஷை எ).

எனவும் சிவஞான சித்தியார் கூறுமாற்றால் தம்முணர்ச்சி கள் தாமும் சுதந்தரமின்றி வியஞ்சக உணர்வுடைய ராயினோர் பஞ்சகிருத்திய உரிமை உடையராதல் எவ் விதம்? இன்னும் அவ்வரி பிரமன் முதற் சீவர்கள் யாவரும் அநாதியே மலசகிதராக, அப்போதே மலரகி தராகிய பரமபதி ஒருவராலே, சூக்கும தூல அதிசூக் கும பஞ்சகிருத்தியத்தினாலேயே அறிதற் பயன் அடை வார். அன்றேற் சடம்போல் அறிவிலராம். எனவே, அவ்விருவரும் அப்பஞ்ச கிருத்தியத்தால் வந்த அறி வைப் பெற்றுடையார் தாமே. இவர் அம்மலத்தினின்

றும் கழற்றுதலாகிய கிருத்திய கருத்தராவது எவ்வாறு? ஆகவே, மூவர் முத்தொழில் செய்வர். ஐவர் ஐந்தொழில் செய்வர் என முன்பின் அடிதலை தெரியாது மலைவுபடக் கூறுதல் முரணுமென்க. இன்னும் சீவர்கள் அநேகர்; பதி ஏகன்; அப்பதிக்கே பஞ்ச கிருத்தியமுடையது. மலசகித சீவர்கள் அப்பஞ்ச கிருத்தியப்படுதலையுடைய பரதந்திரரே யாகும். அவ்வாறாகவே ஒரு பொருளுக்குரிய பல நாமங்கள் போலன்றி நாமே பிரமம் அவர் தாமே பிரமம் என இருபெயரைக் கொண்ட பிரம விட்டுணுக்கள் தனித் தனி என்ன தொழிலைச் செய்யமாட்டுவர்? குருடன் மற்றொரு குருடனுக்கு வழி காட்டுவதை ஒக்கும். ஆதலால் இவ்விருவருக்கும் பஞ்சகிருத்திய சுதந்தரம் இல்லையாம்.

இனிக் கீழுள்ள பிரகிருதி தூல புவனங்களின் கிருத்திய கருத்தராவரெனில் இச்சீவர்கள் தேடிய கன்மம் நுகருவித்தற் பொருட்டு உடலின் மூன்றும் உயிரின் இரண்டுமாக நடைபெறும் பஞ்ச கிருத்தியத்துள் உயிரோடு சேர்ந்த இரண்டும் நீக்கி, தனு கரண புவனங்களிலேயே முத்தொழிற் படுதலும், அண்ட புவனங்களைப் போலப் பிண்டதனுவும் உட்கருவி புறக்கருவியாகிய தொண்ணூற்றாறினுள் புறக்கருவி அறுபதும் நீக்கி, உட்கருவி முப்பத்தொன்றும், பிரேரக கருவி ஐந்துஞ் சேர, ஆன்ம வித்தியா சிவ தத்துவங்களென மூவகைப் பட்டுக் கீழுள்ள விடயப் பயனாகிய இன்ப துன்ப நுகர்ச்சி ஒன்றினொன்று பற்றுதலாய், ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளின்

அடையப்படுதலும், அவ்வின்ப துன்ப நுகர்ச்சியின் எல்லையாகிய இருவினையொப்பிற் பிரகிருதி முதற் கீழுள்ள கரண இந்திரிய பூத விடயங்களும், மேலுள்ள கலாதிகளும், சிவ தத்துவத்தை அருட்சத்தி பிரேரிக்காதுவிட, அஃதொன்றினாலேயே ஐவகைக் கருவிகளும் ஒருசேர அழிதலும், பேசப்பட்ட இடங்களிலெல்லாம் இவ்விருவருடைய தொழில்கள் யாதுங் காணப்படாமையாலும், ஆன்மாக்களின் எய்ப்பு இளைப்பாற்றும் சர்வ சங்கார காலத்தும் பிரகிருதி, மாயை, மாமாயை ஆகிய மூவகைத் தத்துவ புவனங்களோடு விட்டுணு பிரமனாதி சீவர்கள் யாரையும் முன்னரே ஆக்கிய கருத்தன் ஒருவனே சொற்பொருட் பிரபஞ்ச விரிவையும் ஒடுக்கிச் சர்வ புவன சங்காரஞ் செய்தல் பேசப்படலாலும், இவ்விருவரும் இவைகளுள் ஒன்றையேனும் அறிந்தவருஞ் செய்தவரும் அல்லர். ஒருவன் ஏவல் வழித், தேர் செய்வார் பலரும் அத்தொழிற்குக் கர்த்தர்களாமாறு போல இவர்களும் இயற்றுதற் கருத்தர்களேயாம். ஆகவே, இவைபோன்ற அநேக பொருள்களை யுள்ளடக்கிய பிரபஞ்ச கிருத்தியம் மிகப் பெருந் தொழிலானமை பற்றி இதனை ஆக்கி நிறுத்தி அழிக்கும் கருத்தராகிய சிவன் தொழில் செய்யும் தவமுடையராகிய இவரைக் கொண்டு தனது ஏவலின்படி சில தொழில்களைச் செய்விப்பார். அதனால் இவர் முத்தொழிற் கருத்தராகார். ஆதலால் இவர் கீழ்நிலையிற் பிரகிருதி புவனங்களிற்றானும் கிருத்திய கருத்தராகார் என்பதே சற்காரிய சித்தாந்தமாகத் தெளிந்து கொள்ளத் தக்கது. இது

"விரைக்க மலத்தோன் மாலு மேவலால் மேவி னூர்கள்
புரைத்ததி கார சத்தி புண்ணிய நண்ண லாலே."
(சித். சூத். க. செய். நச).

என்னும் பிரமாணத்தால் நிச்சயித்து உணரக் கிடக்கின்றது. இனி, இச்செய்யுளின் உண்மைப் பொருள் கண்டுணரார் ஓர் சிலர், பிரம விட்டுணு ருத்திரர் ஆகிய மூவரையும் ஒருங்குவைத்துச் சீவ பக்குவபேத மூவகையரில் ஒரு மலத்தராய விஞ்ஞானகலரில் மலபரிபாக பக்குவராய், அபர முத்த சிவங்களாம் நிலையைப் பெற்ற அணு சதாசிவ அட்டவித்தியேசுரரிற் றலைமை பெற்றவரான அனந்தேசுரர் அப்பிரமத்தின் ஏவுதலைக் கொண்டு அசுத்த மாயையைக் கலக்கி, வித்தியாதத்துவ புவன பஞ்சகிருத்தியம் இயற்றுதற் கருத்தாவாய் இருப்பரெனவும், அவரினும் கீழ்நிலையரான பிரளயாகலரின் மலபரிபாக பக்குவராய் அபரமுத்த உருத்திரரிற் றலைமை பெற்ற சீகண்ட ருத்திரர் அவ்வனந்தேசுரரது ஏவலைக்கொண்டு, பிரகிருதியின் கீழுள்ள தூல அண்ட புவனங்களாகிய சுவர்க்க மத்திய பாதலமென்னும் முச்சகத்துள் அடங்கிய பதினன்கு உலகங்களில் வசிக்கும் சகலராகிய தேவர் மனிதர் முதலிய சீவர்கட்கெல்லாம் சகலானுக்கிரகஞ் செய்யும்படி திருக்கைலாச பருப்பதத்தில் வீற்றிருப்பாரெனவும், தமிழ்வேத கருத்தான மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மாரும், மற்றைய பக்குவ சீவர்களும் அவராணையினுட் சகலரிற் பக்குவரும் பரசாயுச்சியம் பெறுதற்கு உரித்துடையரல்லாதலின் இப்பிரகிருதிப் பதமுத்தியையே இப்பிரளயாகல ருத்திரர் கொடுக்கப் பெற்றுக்

கொண்டாரெனவும், இன்னும் பலபடக் கூறி மயங்குவர். அவரறிவுக்கு யாம் என்சொல்லி விளக்குவேம்! ஆயினும், இனிமேல் முத்தி வேறில்லாது முடிந்த பரசாயுச்சிய முத்தியைப் பெற்ற சிவஞானிகள் தாமும் அம்முத்திக்காலத்தும் சுதந்தரவீனராய்இருப்பாராயின் இப்பிரளயாகல சீகண்ட ருத்திரர் மற்றைய சீவருக்கு முத்தி கொடுத்தாரென்பது மிகவும் அதிசயம்!! அது நிற்க.

அரிபிரமாதி கிருத்திய கருத்தராலும் அடிமுடி தேடி அறிதற்கரிய சச்சிதானந்த சொரூப நிலையில் நின்ற சிவன், தனது திருவருளை ஓர் பெண் உருவாக்கித் தானும் சத்தி காரிய திருவுருவங்கொண்டு, பதிபாரதந்திரீய சாமானிய சீவர்களுக்கும், அவர்களுள் தம்மை உள்ளபடி உணர்ந்துபற்றிய சிவசுவதந்திரீய தன்னடியவர்களுக்கும் அவரவர்க்கேற்ற அருள்புரிதல் காரணமாக அருள் நிலைத்தானமாகிய சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டினும் முக்கிய ஸ்தானமாகிய * திருக்கைலாச பருப்பதத்தில் அவ்வருட் பெண்ணாகிய உமா சமேதராய்த் தாமாகவே எழுந்தருளி வீற்றிருந்தருளுவர் என்பதையும், அக்கைலாசம் தத்துவாதீத அருள் நிலைத்தானம் என்பதையும், நம் போலிய அறிவீன சீவர்கள் உணர்ந்து

---

*கயிலாயம் இருவகைப்படும். ஈண்டுக் கூறப்பட்ட கயிலை பூகயிலை அல்லாத மற்றையது. ஆண்டுத் தான் இறைவன் யோகிருப்பதும், திருவோலக்கங் கொண்டிருப்பதும் ஆமர்த்தகம் முதலிய ஆதிசைவத் திருமடங்களும், சிந்தாமணி, பாதுகாஞ்சனம் முதலிய பிரபல சித்திப்பொருள்கள் இருப்பதும் ஆகுமென்று **மதங்காகமம்** கூறுகின்றது.

உய்யும் பொருட்டு மூவர் முதல்வரான அப்பர் சுவாமிகள் நேரே கைலாச தரிசனம் செய்ய விரும்பி நடந்ததனால், கால்தேய்ந்து உருண்டு புரண்டு அங்கம் தேய்ந்தவராகியும் அங்குச்செல்லற்கு அருமையாய்த் திரும்பித் திருவையாற்றில் வந்து அக்கைலாச தரிசனத்தைப் பெற்ற செயலால் உணர்த்தினர். ஆனால் இருவினையொத்து மலபரிபாக சத்திநிபாதம் பெற்றுச் சிவஞானக் கடலில் முழுகிய அப்பர் சுவாமிகள் தாமும் அவ்வுடலோடு பொருந்திய கண்களால் தத்துவாதீத அருள் நிலைத்தானமாகிய அக்கைலாச தரிசனஞ் செய்தல் கூடாதெனச் சரித்திரங்களிற் கூறப்பட்டபடி, அக்கைலாசம் சிவ தடத்தநிலை வடிவங்களைக் கொண்டு செய்யும் பஞ்ச கிருத்திய விடுதலை உடையராய்த் தற்போத மின்றி, தம் ஞானக்கிரியை சிவஞானக் கிரியையின் உள்ளடங்கி ஏகிபவித்து நிற்கும் சீவன் முத்தநிலை முழுதாக் கைவரப்பெற்ற வாகீசப் பெருமானுங் கிட்டுதற்கு அரியதாய் இருத்தலால் சிவசொரூப நிலையிலுள்ள அத்தானம் எல்லைக்கு அடங்காத மேல்நிலையிலுள்ள தென்பதைச் சிவஞான நெறியாகிய சித்தாந்தங்களிற் பயின்ற பெரியோர்களே சிந்தித்து உணர்வார்கள்.

இன்னும் முன்னரே பேசப்பட்ட பிரளயாகல சீகண்டர் இருபத்துநான்காந்தத்துவமாகிய குணநிலையர். இவர் ஒருவாறு பரிபாகப்பட்டாராயினும் இதன் மேலுள்ள வித்தியா தத்துவங்களுக்கு அடுத்தபடியாம் பிரகிருதி தத்துவ நிலையரானர் எனவும் வைத்து ஆராயினும், இருபத்து மூன்றும் இருபத்து நான்காம்

தத்துவ நிலையான்றே? அவ்வாறு மேற்புவன வாசியா யிருந்து முன்னரேயுள்ள மாயை கன்மங்களோடு கூடிய இருவினைத்தொடக்கு இல்லாராயினும் மலபரிபாகமாகிய அக்கன்மானுபவம் உடையராய் நெடுங்காலம் அதிகார மலத்தோடுகூடி அனுபவித்திருந்த பின்னர்ப் பெரும் பாலும் பூமியிற் சென்மித்துத் தீட்சா வல்லபத்தால் நால்வகைச் சத்திநிபாதம் பெறும் உரிமை யுடையராத லின் இப்பிரளயாகலருடைய பரிபாக நிலையையும், அவ் வப்பர் சுவாமியுடைய பக்குவ நிலையையும், அதனால் அத்துவிதானந்த அனுபவத்தை அளிக்கும் பரமசிவ சொரூப நிலையையும், அப்பேறு கொடுக்கத் தக்கார் யாரென்பதையும் சித்தாந்தங்களிற் பயின்ற அனு பவரே நன்றாய் ஊகித்துணர்வர். இது நிற்க.

அப்பரம்பொருளாகிய சிவம் தம்மிடப் பாகத்தில் வைத்திருந்த உமாதேவியை மலையரசனுக்குப் புத்திரி யாய் வளரச் செய்து தனித்திருந்த சமயம் வந்த சன காதியர்க்கு மௌனநிலை போதிக்குஞ் சமயத்தில், எல் லாப் புவனங்களிலுமுள்ள ஆண் பெண்ணாகிய இரு வகைச் சீவர்கள் யாவரும் ஒருவரோடொருவர் கூடும் சிற்றின்பானுபவத்தை இழந்து வருந்தினராய்,

ஈருடன் முயங்கு மார்வ மின்றியே யிருந்த யார்க்குங்
காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றோ

(மேருப்படலம். செய். கஅ).

என்று கந்தபுராணத்திற் கூறியபடி மௌனத்திருக்க, தேவர்கள் ஏவலைக் கொண்ட மன்மதன், அம்மௌன நிலையை மாற்றும்படி பஞ்ச பாணங்களையும் ஒருங்கே யேவ, அம்மௌன நிலையின்கண் விழித்து அவனுடலைச்

சாம்பராக்கி மீட்டும் மௌனத்தோடு இருந்து, பின் அத் தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி, அவ்வுமாதேவி யைப் பாகத்து இருத்தி இறந்த மன்மதனை யெழுப்பி, எல்லாப் புவனங்களினுமுள்ள ஆண் பெண்ணாகிய இருவகைச் சீவர்கள் யாவரும் ஒருவரோ டொருவர் கூடிச் சிற்றின்பானுபவம் பெறும்படி அருள்செய்து இருந்தாரெனவும், அந்நிலையிற்றானே ஏக மூர்த்தியா யிருந்து அகம் கொண்ட சீவர்களின் வினைகளை வீட்டினா ரெனவும், நேரே ஒன்றுக்கொன்று மறுதலைப்பட்ட உருவையும் தொழிலையும் தாம் ஒருவரே ஓரே சமயத்தில் ஓரிடத்திலிருந்து ஒருங்கு நடத்தினாரென வும், இன்னும் தம்பாகத்திருந்த உமாதேவி ஓர் திரு விளையாட்டாகத் தேவரீரது பெருமையைச் சொல்லி யருளவேண்டு மென்னக் கேட்ட சிவம் நாம் கொண்ட வடிவங்களெல்லாம் நமது அருளேயெனக் கூறக்கேட்ட அம்மையார் அருளாய தன்னையன்றி உலகம் உண்டாகா தெனத் தன்னில் வியப்படைய, அதனைக் கண்ட பரம சிவம் அவரின் உயிரியக்கத்தை யொழிந்து நிற்ப, ஆன் மாக்கள் யாவும் அறிவு செயலிழந்து இருள் மூடத்திற் கிடந்தழுந்த, அவருக்கு அருள்புரியக் குயித்த சிவம் முன்னரே தம் சார்பின் உருத்திரருக்கு அறிவைக் கொடுத்து மத்தியார்ச்சுனத்தில் அவரால் அருச்சனை செய்த புண்ணியபலத்தால் காட்சி கொடுத்து அவர் களின் வேண்டுதற்படி முன் மூடமாய்க் கிடந்த சீவர்களின் அறிவு விளங்க அருள்செய்து, அவர் தேடிய கன்மத்தை உமையிடத்திற் சேர்த்தாரென வும், இன்னும் இந்திரன் சலந்தரன் முதலான

அகம் உடையவரை யெல்லாந் தண்டித்தாரெனவும் கூறப்படுகின்ற அநேக அற்புதத் திருவிளையாடல்களைச் செய்து திருக்கைலாசத்து எழுந்தருளியிருப்பாரென உப வேதாங்கங்களால் பேசப்பட்ட சர்வஞான சர்வஞ்ஞத்துவ சர்வானுக்கிரக ஆன்ம நாயக பரம சிவப்பொருளை, சீவ தேவராகிய பிரம விட்டுணு முதலிய மூவரில் ஒருவராய், அவ்வனந்தேசுரர் ஏவலின் இயற்றுதற் கருத்தாவாய், பிரகிருதியின் கீழ்ச் சங்கார கிருத்தியஞ் செய்யும் பிரளயாகல சீகண்ட ருத்திரர் எனக் கூறுதல் சிறிதேனும் பொருந்தாத அவசித்தாந்தமாகும். இதன் மேலும் அதனை ஆராய்ந்து பார்க்கின் அவ்வியத்தமான பிரகிருதி வியத்ததூல உருவமாய்க் காரியப்படுதல் அதன் சூக்கும பரங்களின் மேலாய நிமித்த மகா காரண சத்தி பிரேரகத்தால் ஆக்கப்பட வேண்டுதலின் அவ்வுற்பத்திக் கிரமமாகவே அச்சத்தி பிரேரக விடுதலையினாலேயே அப்பிரகிருதி காரிய உருவங்களும் சங்காரப்பட வேண்டுமாதலின் என்க.

இன்னும் ஐவகைச் சங்காரம் என்னுஞ் சொல்லைச் செவி விடயம் கேட்குமளவேயன்றி அச்சொல்லின் உட்பொருளை இவ்விடய உணர்வு அறிய மாட்டாது. அதனைத் தத்துவ சாஸ்திரங்களை நன்றாய்க் கேட்டுச் சிந்தித் துணர்ந்து பரிபக்குவமடைந்த தத்துவ ஞானிகளே உணரப் பெறுவர். ஆயினும் நம் புல்லறிவுக்கு எட்டிய அளவு யோசித்துப் பார்க்குமிடத்து மூவகை முதற் காரணப் பிரபஞ்சங்கள் முழுவதும் ஒருங்கே தோற்றுவித்த ஒருவனாலேயே சங்கரிக்கப்பட வேண்டு

மென்பதை உய்த்துணரலாம். அது எவ்வாறெனில் நின்மலராகிய சிவன் சமலராகிய சீவர்களது கர்த்திருத்துவ கன்மானுபவங்களை யூட்டி அவர் மலத்தைக் கழற்றிச் சிவமாந்தன்மை கொடுத்தல் காரணமாக சுத்த அசுத்த இருவகைப் பிரபஞ்சங்களையும் தன் சத்தியாகிய சுவரிற்றீட்டிய சித்திரம் போலவும் அல்லது சமுத்திரத்திற் குமிழி போலவும், தானே தோற்றுவித்தாரெனவும், அவ்வாறு கூறவே நிமித்தம் உபாதனம் ஆகிய இரண்டும் அப்பிரமம் ஒன்றேயாகும் என்னும் ஆசங்கையை நீக்குமுகத்தால் ஓர் தாய்வயின் உதிக்கும் புதல்வனது மாமிசாதிகளுக்கு அம்மாதாவின் சோணிதமும் எலும்புக்கு அக்கரு உற்பத்திசெய்யும் நிமித்தனாகிய பிதாவின் சுக்கிலமும் உபாதானமாதலும், இவ்வுபாதானங்களில் சித்தமிசம் அசித்தமிசம் இரண்டும் காணப்படுதலும்போல, நிமித்த காரணனாகிய அப்பிரமத்தின் சத்தி, பின்னம் அபின்னமென இருவகைப்பட்டு, அபின்ன சத்தியாகிய சமுத்திரத்தின் நீர்க் குமிழியாய் நிமித்த காரண பிதாவின் சுக்கிலமாய் உவமிக்கப்பட்டதெனவும், அந்தப் பின்ன சட சத்தியாகிய சித்தம்ச சிதாகாச பரபிந்து காரண காரியப்படும் சுத்தபுவன சிருட்டியாகிய ஆதார சத்திமுதல் அநந்தசத்தி காரியங்களாய் நின்று விரிந்த இச்சா ஞானக் கிரியைகளாகிய இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் நரம்புகளாய் நின்று, சித்காரியம் முதல் அசித்காரிய பிருதுவியந்தமாயுள்ள பிரபஞ்ச காரியங்கள் சுத்த காரண காரியங்களாலன்றி நிலைபெற நிற்கமாட்டா எனவும், அவ்விருவகைப் பிரபஞ்சங்களையும்

ஒருசேர வைத்து அங்கீரின் காரிய குமிழியாக உவ மித்தாரெனவும், இன்னும் சமலராய் மலவயிற்றிற் கிடந்த சீவர்களின் தனுகரணாதி புவன அசித்காரண மலகாரிய மாயா பிரகிருதியை அம்மலமாகிய மாதாவின் சோணிதமாய் உவமித்திருப்பதால் சுத்தாசுத்த காரண காரியங்கள் முறை பிறழாது நேர்மைபட்ட சமாதானமா மெனவும் கூறப்பட்டவாற்றாலும் இக்காரணங்களில் சிதாகாச பரவிந்து காரியமாய் வாமை, ஜியேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரம தனி, சர்வபூததமனி, மனோன்மனி என்னும் நவசத்தி கள் மூர்த்தமாக, பஞ்சபூத சந்திர சூரிய இயமான னாகிய அட்ட மூர்த்தங்களைக் காரியப்படுத்தும் வாம தேவர், ஜியேட்டர், உருத்திரர், காலர், கலவிகரணர், பலவிகரணர், பலப்பிரமதனர், சர்வபூததமனர் என்னும் அட்ட மூர்த்தங்களால் பிரபஞ்ச சிருட்டியைப் பிரவர்த் திக்கச்செய்யும் மனோன்மனி மூர்த்தியாகிய சதாசிவன் தானாகவே முற்கூறிய நவபேத விசுவரூப தடத்த கருத்தாவாய், பிரபஞ்சங்களோடு கூடிநின்றும், அவற் றைப்பிரிந்து தாமே தனிமுதலாகநின்றும், அச்சீவர்கள் பக்குவமாம் பொருட்டுக் கர்த்திருத்துவ போகங்களை ஊட்டிக் காருண்யத்தோடு சுய பரப்பிரகாசமாய், எங்கும் பரிபூரண வியாபகராய்நின்று அச்சீவர்கள் பாகமடைந்த காலத்து அவரை முன்கூடி நின்ற அவ்வசத்தாகிய மலத்தினின்றும் பிரித்து, சத்தாகிய சிற்பதப் பொரு ளான சிவமாந்தன்மை கொடுக்கும்பொருட்டுப் பஞ்ச கலைகளின் உட்பட்ட ஐவகைச் சங்கார முறையாய், தத் துவ காரண காரியங்கள் முழுவதையும் வேரோடு களைந்

தெடுக்கும் அத்துவசோதனமுத்தி அந்த இறுதிச் சங்கார தீட்சாகாலத்தில், மண்டலம் மூன்று, ஆதாரம் ஆறு, பூதம் ஐந்து, தத்துவம் முப்பத்தாறு, அவத்தை ஐந்து, மலம் ஐந்து, அக்கரம் ஐந்து, அத்துவா ஐந்து, கலை ஐந்தாக இவைகளை யெல்லாம் ஐவகைச் சங்கார முறைப்படி இப்பஞ்சகலைகளினும் ஒடுக்கி, இவற்றின் காரணமாகிய சத்தி சமனை கலையில் இப்பஞ்ச கலைகளையும் ஒடுக்கி, அச்சத்தி சமனை கலையை உன்மனை காரணத் தொடுக்கி, துவாதசாந்த துரியாதீத சாந்தியாதீதங் கடந்த சர்வ சங்கார ஏகநடன தடத்தம் நீங்கிய சொரூப நிலையில், இப்பக்குவ சீவர்களைத் தூக்கிவிடுவா ரெனக் கூறப்பட்ட வாற்றாலும், இவ்விறுதிச் சங்கார முறைப்படியே காரண சூக்கும தூலமாய்ப் பிரிந்த மூவகை முதற்காரண பிரபஞ்ச தத்துவ புவனங்களாகிய அண்ட பிண்டங்களையெல்லாம் தானே முற்கூறிய படி தடத்த விசுவரூப கர்த்தாவாய் நின்று, மகா காரண சத்தி பிரேரகத்தால் ஒன்றினொன்று பற்றுதலாய தொடர்போடு சோபான முறைப்படி தோற்றுவித்த அவன் உடைமைப் பொருளாதலினாற்றான் படைத்தல், காத்தற் கருத்தா யாமென இறுமாந்து பிரகிருதி பிரமாண்டத்து இருக்கும் பிரம விட்டுணுவாதி சீவபேதப் பிரிவுகளை யெல்லாம் எய்ப்பிளைப் பாற்றும் நிமித்தமாய் அவாந்தர சர்வ சங்காரஞ் செய்யுங் காலத்தில், சித்தசித் அம்சத் தொடர்போடு பிரியாது தொழிற்பட்டு இருத்தலால் ஒன்றை விட்டொன்று, அழிய மாட்டாமையால் நிமித்த காரணமாகத் தானாகவே தோற்றுவித்த இருவகைப் பிரபஞ்சங்களையும் தனி முதலாகிய தான் ஒரு

வராய் நின்று சங்கரித்தாலே யன்றி அழியப் படாமை யால் அப்பிரபஞ்சங்களாயும் உடனும் நிற்றலே யொழி தலாகிய தன்சத்தி காரிய இலயபோக அதிகார நடத்த நவபேத விசுவரூபங்களை யொடுக்கி, அவையின் வேறு மாயுள்ள ஏகவஸ்துவாய் நின்று சங்கரிக்கப்பட்ட சர்வ தகண சுடலையில் தனது திருவருளே நிருத்த சாட்சி யாக ஏகநடனஞ் செய்வாரெனவும், அவ்வாறு செய்யும் தம்மையே தனிமுதலெனச் சீவர்கள் யாவரும் உணர்ந்து கடைத்தேறும் பொருட்டு அவ்வரி பிரமாதி காரண தேவரின் சிரசு எலும்பு முதலியவைகளை அணிகலன் மாலையாகவும், மற்றைய வடிவங்கள் வெந்த சாம்பரைத் தம்முருவத்து அணியும் பூதியாகவுங்கொண்டு அறியடை யாளங் காட்டினரெனவும் கூறப்பட்ட வாற்றாலும் இன்னும் சூரியன் விகாரமின்றி ஏக சிந்தையோடு நெடுந்தூரத்தே நிற்ப, அவன் சந்நிதியில் தாமரை மலர் கள் வேறுபட்டு ஒன்று முகையாகவும், ஒன்று அலர வும், ஒன்று உலரவுங் காண்டல்போல, கரணத்தானன் றிச் சங்கற்ப மாத்திரத்தாற் செய்யவல்ல சருவஞ்ஞத் துவ பரப்பிரமம் விகாரமின்றி அகண்டமாய்ப் பரமா னந்த ஏகசிந்தையோடு நிற்ப, சிருட்டி திதி சங்கார மாய் வேறுபட்ட மூவகைத் தொழில்களும் தனித்தனி தாமே நடைபெறும்.

ஆகவே அத்தொழிற்கு உரித்துடையரல்லாத மற்றொருவர் மிகையாம். ஆதலால் அவ்வரி பிரமர் பிரளயாகல ருத்திராதி காரணருக்கெல்லாந் தனு கரணாதி புவனங்களைக் கொடுத்தழித்தலாகிய அப் பிரம சங்கற்ப கிருத்தியம் சீவபேதங்கள் யாவருக்கும் கொடுத்தலாய் முடியும். ஆதலால் பிரளயாகல சீகண்ட

ருத்திரர் பிரகிருதியளவிற் சங்காரந்தாமே செய்வா ரென்பது பூர்வபக்க அவசித்தாந்தமாய் ஒழிய, பரப் பிரம பசுபதி ஒருவரே பஞ்சகிருத்திய காரணராய், தம தருளையே பெண்ணுருவாக்கி இடப்பாகத்து இருத்தி, அச்சத்தி காரியத் திருவுருவங்கொண்டு பதிபார தந் திரீய சாமானிய எல்லாச் சீவர்களையும் பரிபாகப்படுத்தி, அதில் ஏகதேசத்தில் பக்குவராய் உண்மை நிலை உணர்ந்து தம்மைப்பற்றிய சிவ சுவாதந்திரீய நால்வகைச் சத்திநிபாதராந் தன்னடியவர்க்குச் சாலோகாதி பத முத்திகள் மூன்றினையுங் கொடுத்து அவையின் பெரும் பேறாகிய பராசாயுச்சிய பேரானந்தச் செல்வத்தையுங் கொடுத்தருளும்படி தத்துவாதீத நிலைக்கண் சத்தி சமேத சகல புவன கர்த்தாவாய் எழுந்தருளி யிருப்பா ரென்பது சற்காரிய சித்தாந்தமாக நிறுத்தப் படுதல் காண்க. இந்நிச்சய உண்மைகளை உணரும்படி காட்டும் பிரமாணங்களின் அநந்தர் ஏவலின் முத்தொழில் கருத் தர் இக்கைலாசநாதர் ஆகாரென்பதை அப்பரமசிவன் மார்க்கண்டேயருக்காய் நமனை உதைத்துக் கொன்றமை யால் பூமியிற் பிறந்த சீவர்கள் இறத்தலில்லாது பெருகப் பூமிதேவி சுமக்கலாற்றாது தன் தலைவனுக்கு உரைக்க, அவ்விட்டுணு மூர்த்தி இறப்பித்தற் கருத்தனான நமனை எழுப்புவித்து அவனால் அத்தொழிலை நடை பெறுவிக்க விரும்பிக் கைலாசத்து எழுந்தருளிய பரமசிவனிடத்திற் செல்ல, அவர் திருவருள் சுரந்து "உங்கள் கிருத்தியங் கள் ஏதுங் குறைவின்றி நடைபெறுகின்றனவா?" என வினவ, அவ்விட்டுணு சொன்னதாய,

"ஆதியி லயன்படைப் பல்ல தென்னருள்
மேதிய னடுதொழி லேனை விண்ணவர்

ஏதமில் செயல்முறை யாவுங் கண்ணுதல்
நாதனின் னருளினு னடந்த நன்றரோ"
(கந்த. பாயிரப்படலம் கக).

என்னுஞ் செய்யுளாலும்,

"மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ணல்" (திருவிளையாடல், பாயிரம் ரு).

என்பதனாலும், இன்னும் சுத்த அசுத்த பிரபஞ்ச காரியங்கள் விருத்தியாகும் பொருட்டுத் தமதருளை ஒரு பெண்ணுரு வாக்கினார் என்பதை,

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியு மாக
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்"
(சித். சூத். க. செய். அக).

என்பதனாலும், இன்னும் அவையேயாய்த் தானேயாய் அவையே தானேயாய் இப்பிரபஞ்சங்களை ஆக்கினாரென்பதை,

"இருமையு மொருமையு மிரண்டு மொன்றிய
ஒருமையு மன்றென வுலகம் யாவையும்
பெருமையி னியற்றிய பெரும நின்செயல்
அருமறை யானவு மறிதற் பாலவோ"
(கந்த. திருவவதாரப்படலம் ருரு).

என்பதனாலும், அவரது பெருமையை வேதங்களும் அவற்றை யுணர்ந்த நம்மறிவும் அறியமாட்டாதென்பதை,

"உன்னிடைப் பிறந்தவேத முன்பெரு நிலைமை தன்னை
இன்னதென் றுணர்ந்த தில்லை யாமுனை யறிவதெங்ஙன்"
(கந்த. கயமுகன் உற்பத்திப்படலம். உருசு).

என்பதனாலும், இன்னும்

"நின்னுன் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னு ளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னுமம் வாசித்து முன்னையறி யேனென்று
சொன்னு லடியனேன் சோதனைத்தோ தின்னியல்பே"
(திருவிளையாடல், கல்லானைக்குக் கரும்பருத்தியது எ).

"எங்களை முன்னரே யியல்பி னீந்தனை
எங்களை யிவ்வர சியற்று வித்தனை
எங்களோ டொருவனென் றிருத்தி நின்செயல்
எங்களி லறிவரி தென்று போற்றினர்"
(கந்த. திருவவதாரப்படலம் ௩அ).

என்பவையாலும், இன்னும் இவ்வகைப்பட்ட பரமசிவம் உருவங்கொள்வாரென்பதை,

"குறித்ததொன் ருக மாட்டாக் குறைவில ஞதை லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுத லிலாமை யானும்
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னலே"
(சித். சூத். க. செய். சுரு).

என்பதனுலும், இனி அவ்வாறு உருவங்கொண்ட பரமபதியே திருக்கைலாசத்து எழுந்தருளியவர் என்பதை,

"கமல வூர்தியுங் கண்ணனுங் காண்கிலா
அமல மேனியை யன்பினர் காணுற
நிமல மாகிய நீள்கயி லாயமேல்
விமல நாயகன் வீற்றிருந் தானரோ"
(கந்த. உமைகயிலை நீங்கு படலம் கக).

என்பதனுலும், அக்கைலாய நாதரே தத்துவாதீதர் என்பதனை,

"அறுவகை யைந்து மாறுமாகியவரப்பின்மேலா
மிறைவனே"

என்பதனாலும், யோகம், போகம், வேகமாகிய ஒன்றுக்கொன்று மறுதலைப்பட்ட மூவகை உருவையுந் தொழிலையும் ஒருவராய், அவர் தாமே பரித்தாரென்பதை,

"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்"

(சித்தி. சூத். க. செய் ரு).

என்பதனாலும், இன்னும் அவரொருவரே தோற்றுவிக்கவும் சங்கரிக்கவும் வல்லவர் என்பதை,

"மூன்றெனு முலகந்தன்னின் முளைத்திடு பொருளையெல்லாம்
ஈன்றருள் புரியுந்தாதை யெனுந்திரி யம்பகனும்"

(கந்த. உபதேசப்படலம் உ0).

"மைந்தராகிய வெங்களால் முடிவுறுமையினால்
எந்தை தன்வயிற் கொண்டனனீறுசெய் யியற்கை"

"அந்தநா ளொருவனாகி யாருயிர்த் தொகையைத் தொன்னாள்
வந்தவா றுருடுங்கச் செய்து" (ஷை க).

"அலகிலா வுயிர் யாவையு மயன்கணின் றளிப்பான்"

(கந்த. ததிசி யுத்தரப்படலம் க).

"மாயவன்கணின் றவையெலாம் போற்றி மற்றவைக்குத்
தூயதுப்புர வருத்தியே மேல்வினை தொலைச்சி
ஆயவற்றிலோர் பற்பல வீடுற வருளி
மேயவாருயி ருலகெலாம் பின்னரே வீட்டும்" (ஷை க0).

"மூன்றென வுளபொருள் யாவு முன்னமே
ஈன்றவன் கண்ணுத லென்னு நான் மறை"

(கந்த. அனந்தன் சாபநீங்கு படலம் உசு).

"விதிமுத லுரைக்கநின்ற வியனுயிர் தொகைகட் கெல்லாம்
பதியென வருளுந் தொன்மைப் பசுபதி தானு மன்னோர்க்

கதிகனென் றெவருந்தேற வாங்கவர் தஞ்சவெந்த
பொதிதரு பலியுமென்பும் புனைபவன் ருனுமென்னும்"
(ஷை உஉ).

என்பவைகளாலும் இன்னும் இவைபோன்ற பலவேறு வகைப்பட்ட பிரமாணங்களாலும், உண்மையதா உணரத் தக்கதாம். இதிற் சந்தேகம் வேண்டுவதின்றாம். இது நிற்க.

இத்துணைப் பெருமைகளை யெல்லாம், சுதந்தரமாக உடைய பரமசிவம் தனக்கென உருவமுடையர் அல்லர். விஞ்ஞானகல பிரளாயகல அபர முத்தர் வடிவத்தையே, தனக்கு உருவமாக அதிட்டித்து நின்று, எவ்வகைச் சீவர்க்கும் அருள் புரிகுவாரெனச் சித்தாந்த நூல்களிற் பயின்ற சிலர், தங்கள் போதக பிரபந்தங்களால், ஏது பிரமாணங்களைக் கொண்டு வற்புறுத்திக் காட்டுவார். அதுவும் சித்தாந்த விரோதமாய்க் காணப்படும். அஃதெவ்வாறெனில், அதனைக் காட்டுதும். அநாதியே மலரகித சிவம் மலசகித சீவனென வஸ்துக்கள் இரண்டே உள்ளன. அவையோடு அநாதியே சகிதமாயுள்ள மலத்தையுஞ் சேர்த்து, வேதாகமங்களிற் பேசப்பட்ட மூன்று வஸ்துக்கள் உள. நடுநின்ற சீவன் சிவசகிதமாம் உரிமை யுடைமையால், அம்மலத்தினின்றும் விடுதலைப்படுத்தும் வைத்திய ஔடத மலகாரிய மாயா வடிவத்தைப் பெறும்.

அவ்வைத்திய நாதசிவம் நீதிச் சொரூபம் உடையதாதலின், தனக்கென உருவ நாமமின்றி, அச்சீவர்கட்கு உருவ நாமங் கொடுத்தலாகிய பஞ்ச கிருத்தியஞ் செய்தல், சற்காரிய விரோதமாமெனக் கொண்டு, தான் மலரகிதமாதலின், உருவ மூலகாரணம் ஏதுமின்றி

நிராலம்ப நிர்அவயவ சூக்கும சித்துப் பொருளாயிருப்பினும், தன்னவராகிய சீவர்களை, மலத்தினின்றும் பிரித்துத் தன்னோடு சேர்த்து, நித்தியானந்த முத்தியைக் கொடுக்குங் கருணையாகிய அருட்சத்தியையே தனக்கு உருவ காரணமாய்க் கொண்டு, அவ்வபின்ன சிற்சத்தி, பிரபஞ்ச காரண சடசத்தி, பரவிந்துவாகிய சுத்த மாயையைப் பிரேரித்து உருவமாக, தன்னை விட்டுப் பிரியாத அச்சத்தி யுருவமே தன்னுருவ நாமமாய்க் கொண்டு, பஞ்சகிருத்திய பதியாய் நிற்கும். அச்சீவர்களுக்கு வைத்திய ஔடத மலகாரிய மாயா வடிவத்தைக் கொடுத்தருளினு ரென்பதே சித்தாந்தங்களிற் பேசப்பட்டன வாதலால் என்க. இன்னும் இச்சிவம் சீவனென்னும்ஞானக்கிரியையுள்ள வஸ்துக்கள் இரண்டினுக்குமே மலரகித மாயா அருள் வடிவமும் மலகாரிய மாயா வடிவமுமே நிச்சயமாமென வேதாகமங்களால் வற்புறுத்திக் கூறப்பட்டன. இவ்வாறு கூறிய வடிவங்களும், அவ்வஸ்துக்கள் இரண்டின் பொய்ந்நிலையாகிய தடத்த வடிவங்களேயாம். அவற்றின் மெய்யாகிய சொரூப நிலை, இவற்றின் வேருயுள்ளதாம். அது பசுஞான பாசஞானங்களால் உணரப்படாது, சிவஞானத்தானுணரும் அந்தரங்க ரகசியமாய் இருக்கும். அதனை மலபரிபாக சத்திநிபாத சிவஞான அனுபவ சீவன் முத்தரே உணரப்பெறுவார். இது நிற்க.

அநாதி முத்தன், ஆதிமுத்தன், அபரமுத்தன், பரமுத்தன் என ஆகமங்களிற் கூறப்பட்ட நான்கு பிரிவினரில், அன்றே மலரகிதரான சிவன் அநாதி முத்தன் எனவும், மலசகித சீவரில் தம்மைப்

பற்றிய கன்மங்களினும் மாயா காரிய தத்துவங்களி
னும் விடுபட்டு மலபாகமாய், ஆன்ம சொரூப நிலை
அடைந்தா ராயினும், சத்திநிபாதம் இன்மையால் தாமே
பிரமமென்று எண்ணும் பசுஞானநிலையில் நிற்பவர்
ஆதி முத்தரெனவும், சாதன சந்நியாச யோக விஞ்
ஞானங்களால் தம்மைப் பற்றிய கன்மங்களினும்,
மாயா காரிய கலைமுதல் முப்பது தத்துவங்களினும்
நீங்கி, மாயையின் மேற் சுத்த தத்துவங்களின் கீழ்
மூட நிலையிற் கிடக்கும், விஞ்ஞானகலரிற் சிலரும்,
பிரளய காலத்திற் கலைமுதல் முப்பது தத்துவரகித
ராய், பிரகிருதியின் மேல் மாயையின் கீழ்க் கிடக்கும்
பிரளயாகலரிற் சிலரும், மலபரிபாகமுடையராய், சுத்த
தத்துவ கலாதி முப்பதில் தனுகரண புவனபோக கன்
மானுபவராய், அதிகார மலத்தோடுங் கூடி இருப்பவர்
சிலரும், அபர முத்தரெனவும், சதா காலம் சிவனை மற
வாத சிந்தையராய் முன்வினைகள் புசிக்குந்தோறும்
ஆகாமியம் ஏறாது தடைப் படலாற், போக முடிவில் இரு
வினையொத்து மலபரிபாகமான சமயத்தில், சத்தி
பதியச் சிவஞானத்தின் முழுகித், தாம் வேறு பிரியாது
சித்சொரூப நிலையிற் கலந்து நிற்கும் சிவஞானிகள் பர
முத்தரெனவும் கூறுமாற்றால், அநாதியே ஞானக்
கிரியை தோற்றாமையால், ஆன்ம சத்தமும் மூவகைப்
பிரிவு தானுமில்லாது மலசகித மூடத்திற் சடமாய்க்
கிடந்த அக்காலத்தில், இவர்களுடைய அறிவு செயலை
விளக்குங் கருவியாய், அகர உகர மகர விந்து நாத
மென்னும் ஐந்தக்கரஞ் சேர்ந்த சூக்கும பஞ்சாக்கர
சுத்த மாயாசபையிலே, பஞ்சகர்த்தாவாய் உருவ நாமங்

களோடுசெய்யும், பஞ்சகிருத்திய நடன பிரேரகத்தால், இம்மூவகைச் சீவர்களின் அறிவை விளக்கும் அக்காலம் இவ்வுருவ கிருத்தியத்தால் விளங்கிய அறிவு செயல் களாற் கன்ம போகங்களைப் புசித்து நீக்கி, அவ்வறி வின் வளர்ச்சியாகிய விஞ்ஞானத்தால், கலை முதல் தத் துவங்கள் கழலப்பெற்ற பிரளயாகல விஞ்ஞாஞகல அபர முத்தர், அப்பிரமத்தின் பஞ்ச கிருத்திய உரு வத்தின் அதிட்டிதராய் நின்ருரென்பது எவ்வாறு பொருந்தும்?

இன்னும் இவ்வபர முத்தர், கன்ம மாயா கருவி கள் முப்பதுங் கழன்ருராயினும், ஆணவ மலத் தோடு அதிகாரமலமுஞ்சேர, சிவதத்துவத்துட்படக் கிடந்த சாமானிய சீவர்களாய், இவர் முறையே தன்மை முன்னிலை என்னும், இருமுறையினும் உபதேசம் பெற வேண்டியவராக, தன்மையிற் பெறவேண்டிய விஞ்ஞானகலரை யொழித்து, பிரளயாகலரே மான் மழு சதுர்ப்புயம் திரிநேத்திரம் காளகண்டம் அபய வரதம் முதலிய அருள்வடிவத்தோடு எதிர்நின்று உபதேசம் பெற வேண்டியவராதலால், அச்சிவம் பிரளயாகலர் வடிவத்தில் அதிட்டித்து நின்று, உப தேசித்தாரெனச் சொல்வாரேல், விஞ்ஞானகலருக் குத் தன்மையில் உபதேசமென்னுஞ் சித்தாந்த சற்காரி யம் பிழைபட, முன்னிலையாகிய பிரளயாகலருக்கே தன்மையின் உபதேசமென மாறுபடுமாதலால், சிவ பெருமான் கொண்ட திருவடிவம் இப்பிரளயாகலர் வடி வம் அன்றென்பது தெளிந்து கொள்ளக் கிடக்கின் றது. இதுவுமன்றி மலவயித்தியனுகிய சிவம், சீவர்கட்

காய்ப் பஞ்சபூத பஞ்சீகரணமாக ஆக்கிய ஐயாயிர கோடி அண்டங்களினும், மேலான புத்தி தத்துவ; அகங்கார தத்துவ, வித்தியா தத்துவ, சிவதத்துவ அண்டங் களினு முள்ள, இருநூற்றிருபத்து நான்கு புவனங் களினும் மிகச்சிறப்புடைத்தாய், வேதாகம புராண கலை ஞானக் கட்டளை தவறாது அனுசரிக்கப் பட்டுவரும் பரதகண்ட குமரிதேசத்திற் சாதன முதிர்வினால் வந்து உற்பவித்த சீவர்கள், சத்திநிபாத சோபானச் சரியை கிரியையோகாதி தவ நிலையினின்று, சிவஞான பரசாயுச் சியம் பெறுதல் காரணமாக, தீர்த்த விசேட தானங் களில் அருவ சிவ சோபான பஞ்சகன்ம சாதாக்கிய சத்தி காரிய அருவுருவ சிவலிங்கத் திருமேனியும், வைந்தவங்களை நடத்தும் மகேசுர திருவுருவமுங் கொண்டு, அவ்வருட் சத்தி வடிவில் வீற்றிருக்கும் ஆல யங்களே, அச்சரியை யாளர்செய்யுந் தவநிலைக்களமாக வும், அங்கு எழுந்தருளிய சிவலிங்கத் திருமேனியே, கிரியையாளர் செய்யுந் தவநிலையாகவும், அருவமே அக் கிரியா விதியின் மேல்நிலையாகிய அந்தரியாக பூசா சாத னம் முதிர்ந்த அட்டாங்க சிவயோக நிலையருக்கு அருள் புரியும் திருமேனி யாகவும் நின்று, அவரவர்க்கு ஏற்ற பத முத்திகளைக் கொடுத்தருளுவா ராதலால், அருவ அருவுருவ உருவ இலயபோக அதிகார மூ அவத்தை வடிவுகளும், மூவகைச் சத்திநிபாதர்க்கும் முக்கியமாக வேண்டப் படுவதால், தனக்கன்றி மற்றொருவருக்கும் இலதாகிய அருள் வடிவம் உடையாரென்பதையும், நாலாஞ் சத்திநிபாத ஜீவன் முத்தருக்கு, தனது மெய்ந் நிலைச் சொரூப சிவஞான வடிவத்தோடு நித்தியானந்த

முத்தியைக் கொடுத்தருளுவார் ஆதலால், தடத்த மூவகை உருவங்களும், மூவகைச் சத்திநிபாத ஜீவர்களின் பக்குவ பேதத்தால் மலபரிகாரஞ் செய்து முத்தி கொடுக்கும் பொருட்டுத், தன் சத்தியையே உருவமாகக் கொண்டாரென்பதையும் உணராது, ஆன்மாக்களே சிவனுக்கு அங்கமெனவும் அனந்த சீகண்டாதி கிருத்திய கருத்தரின் வடிவமே அவன் வடிவம் எனவும், பிரம விட்டுணுவாதி கருத்தரின் வடிவமே அவன் வடிவம் எனவும், பஞ்சபூத சந்திர சூரிய இயமான அட்ட மூர்த்தங்களே அவன் உருவமெனவும், சத்த அர்த்த சர்வப் பிரபஞ்சங்களுமே அவனுடைய விசுவரூபமெனவும், ஒவ்வோர் ஏதுக்கொண்டு பொது விதியாகப் பேசிய நூல்களின் உண்மைப் பொருளையும், இன்னும் இப்பிரபஞ்ச உற்பத்தியில் தாமாகவே எடுத்துக் கொண்ட அருள் வடிவின் திருவாக்கிற் பிறந்த வேத பாடியமான இரௌரவாகம தத்துவ படலத்தில், மல சகித ரகித வஸ்துக்களாகிய சீவர்கட்கும் தமக்கும் பர சூக்கும தூல உருவகாரணமாகிய முப்பது முப்பது தத்துவங்களும், அவயவம் முப்பத்தெட்டுங் குறையாத அங்க லக்கணங்களும், வேறு வேறாகக் கூறிய சிறப்பு விதியின் உண்மை நிலையையும் உணரமாட்டாது, அப் பரமசிவன் தனக்கென உருவமில்லாது, மல சீவர்களின் உருவத்தில் ஒட்டி நின்று அவருக்கு அருள்புரிவாரெனக் கூறுதல் அறியாமையின் பாலதேயாம். இன்னும் மல ரகித சிவனுக்கு உருவங் கூறுதல், குற்றமாமெனக் கூறுமவர், அம்மலரகிதமென்னும் சொல்லின் அருத்தம் உணர்ந்திலார் போலும். அது

"எந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி
வந்திடா னென் றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே"
(சித்தி. சூத். க. செய். சச)

என்பதனால் உணரக் கிடக்கின்றது. ஆதலாற் சிவம் தஞ்சத்தி உருவமொன்றே சொந்தமாவுடையர் என்பது, சற்காரிய சித்தாந்தமாக நிறுத்தப்படும். அவ்வுருவம் வரும் முறைமையை மேற்கூறும் வகையினால் உணரலாம்.

சத்சித் ஆனந்த வாக்கு மனாதீத கோசரமாகிய பரமசிவம், முன்னர்க் கூறிய பிரகாரம் சீவர்களின் மல பாகமாம்படி, பஞ்ச கிருத்தியஞ் செய்யுந் திருவுளம் உடையராய்த், தமது அருட்சத்தியின் ஒரு கூற்றைச் சடாதாரக பரிக்கிரக சத்தியாகக்கொண்டு, தன்னியற்கையாய சொரூப நிலையினின்றுந் திரிந்து நிட்கள நின்மல சிவமாகி, தன் சத்தியைப் பரையென்னும் நாமங் கொடுத்து, அதன் பிரிவில் ஆதி இச்சை ஞானம் கிரியை எனவேறுபட்ட ஐங்குண நிட்களசத்திகளாகஅமைத்து, அப்பரை முதல் ஐந்துசத்திகளையும் இடமாகக்கொண்டு, நிட்கள இலய தானத்தில் நின்ற தாம் போக சகளமாதற்குரிய சோபான முறைப்படி, பரைக்குப் பரமாயிருக்குஞ் சிவசாதாக்கியமும், பரையுடன் கூடிக் கிருத்திய உன்முக பிரபஞ்சத் தோற்ற ஒடுக்க நிமித்தமாய்க், கலைகளுக்கு அப்பாற்பட்டுக் காணப்படாத வடிவைத் தன்னுள்ளே கோலி, மூலஸ்தம்பமாயிருக்கும் அமூர்த்தி சாதாக்கியமும், சூக்குமமான இச்சாஞானக் கிரியைகளின் மேற் கலையோடு கூடித் திருமுகம் திரி நயனங்களாதி அங்கங்கள் பிரியாது, சமட்டியாய்க் காணத் தக்க

வடிவை உடைத்தாயிருக்கும் மூர்த்தி சாதாக்கியமும், சூக்குமமான இச்சையிலே தூலமாகிய ஞானக் கிரியைகள் கூடி உருவ சாங்கோ உபாங்கங்களோடு, மயிலின் அண்டத்துள்ளே தோற்றும் உருவம் போல அவ்வடிவம் பிரிந்து காணப்படும் கர்த்திரு சாதாக்கியமும், தூலமான விந்து நாதங்களோடு கூடி, கிரியா பீடலிங்க சதாசிவ வடிவமாயுள்ள கன்ம சாதாக்கியமுமாகிய பஞ்ச சாதாக்கிய முறையில் ஞானங் கிரியையாகிய நாதவிந்துக்களில், சிவசாதாக்கியம் முதல் கர்த்திரு சாதாக்கியம் ஈறுன நான்கும், தொழில்அறுதியான நாதமாயும், கன்ம சாதாக்கியம் தொழிலான விந்துவாயும், நிவிர்த்தி முதல் சாந்தி ஈறுன கலைகள் நான்கும் விந்துவின் தொழிலாயும், சாந்தியாதீதகலை தொழில் அறுதியான நாத அருவமாயும், அமைந்த ஞானமுங் கிரியையும் ஒத்த கன்ம சாதாக்கியமும், சாந்தியாதீதமான பீடமும் தம்மில் ஒத்து ஒருங்கு கூடிப் பீடலிங்க வடிவான சதாசிவனுய், ஆன்மாக்களின் பக்குவா பக்குவத்தை அறிதலாகிய ஞானமே மகேசுரனுய், அவைக்கு ஏற்கச் செய்யுங் கிருத்தியமே சுத்தவித்தையாய், அவ்வைவகைத் தொழிலாகிய சுத்தவித்தை யென்னும் சத்திக்கு, சத்திமானுகிய பரம சிவானுக்கிரக இச்சையான அத்தொழிலை நடத்தும் தன்னிச்சையால் சப்தகோடி மந்திரங்களைத் தோற்றுவித்து, அம்மந்திரானுக்கிரக புண்ணிய பலத்தால், எல்லாப் புவனங்களிலுமுள்ள சீவர்களை யெல்லாம் பாகப்படுத்தி, அத்தொழிலாகிய சுத்த வித்தை யென்னுஞ் சத்தியால், நால்வகைச் சத்தி நிபாத முறையாற் சிவஞான ஏதுவாக்கி, தான் வெளிப்

படக் காட்சி கொடுத்து, அப்பக்குவத்துக்கு ஏற்ற பத முத்திகளை அருளுதலும், அதன்மேற் கன்ம போகங் களை ஊட்டிக் கழிக்கும் பஞ்சகிருத்திய தலைவரான அந்தச் சதாசிவ நாயனாரே, அப்போகங்களை உருசிப் பித்து மறைத்து நின்று ஊட்டும் திரோதான சத்தியின் மறைத்தலை, அப்போகானுபவ முடிவிலே தமது அருளா கிய கிரணத்தால் மாற்றி, தம்மைக் கொடுப்பதெனும் அனுக்கிரகத்தைச் செய்தலும், அதன்மேற் பரசிவ சத்தியாகிய பரை சிவபரிபூரண சொரூபங்களை உள்ள படி அறியும் சிவஞானத்தை ஊட்டுதலும், அப்பர சிவ மாகிய தாமே, அப்பராசத்தியின் மேலாகச் சிவானந் தத்தைக் காட்டுதலுமான இவ்வகைகளாற் பாகப் படுத்தி, சிவஞான நிலையில் வைத்து நித்தியானந்தம் ஊட்டுதலமைய, சர்வஞான சர்வஞ்ஞத்துவ சர்வானுக் கிரகமென்னும் மூன்று குணங்களும் முக்கியமாய் உடையராதலின், தாம் இலய போகாதி அவத்தைபடப் பஞ்ச கிருத்திய குணமான, பஞ்சப் பிரம மந்திரங் களாய தன்னுருவத் திருமுகங்களால், பரசமயங்களை நிராகரிக்கும் விதி விலக்குகளை உணர்த்தும், சைவ சித் தாந்த வேதாகமங்களை அருளிக் குருபரம்பரையில் விடுத்து, அவ்விதி விலக்குகளை உணர்ந்து அவற்றின் வழி யொழுகி உய்யும் பொருட்டு, சர்வ சாமர்த்திய சம் பிரதாய சங்கற்ப பஞ்சகிருத்தியத்தால் அச்சீவர்களைப் பாகப்படுத்தும்படி, தமது அருளினாற்கொண்ட திருவடி வங்களில், அணுசதாசிவாதி சத்தி வித்தியாதேகம் உடையவரென்பதின் உண்மைப் பொருளையும் உண ராது, ஒருமல இருமல விஞ்ஞானகல பிரளயாகல

சீவரின் வடிவத்தையே தமக்கு உருவமாக அதிட்டித்து நிற்பாரெனக் கூறுதல் அறியாமையேயாம்.

இன்னும் சீவர்களின் கன்ம பேதத்தை அறிந்து இரட்சிக்கும் குணமான, மந்திரமே சத்தி வித்தியா தேகமாயுடைய சிவம், அவ்வாறு அறிதலையே நேத்திரமாகவும், பக்குவ சீவர்கட்கு உணர்த்தும் அருளையே இருதயமாகவும், பஞ்ச கிருத்திய குணமான ஈசாஞதி ஐந்தும் இச்சா ஞானங் கிரியை என்னும் மூன்றுமாகிய எட்டையுமே, ஐசுவரிய தலைமைக் குணமாதலிற் சிரசாகவும், இவ்வைசுவரிய தற்சுதந்தரமாயுடைய சிவகாரணத்தையே சிகையாகவும், உருவங் காட்டி நிற்கும் ஞானக்கிரியைகளே கவசமாகவும், சீவர்களை அநாதியே பற்றிய மலத்தைச் சங்கரிக்கும் பெருமையே அத்திரமாகவும் பொருந்த, இவ்வாறு மந்திராணு சதாசிவர் பதினொருவரையும் முதல் ஆவரணத்தமைய, பீட லிங்க வடிவான அருவுருவ சதாசிவ தேவராய் பஞ்ச கிருத்திய அதிகார நிலையில், ஈசானர் தற்புருடர் அகோரர் வாம தேவர் சத்தியோசாத ரென்னும் அணுசதாசிவரை வைந்தவமே தனுவாகக் கொண்டு ஈசானி பூரணி பூர்த்தி வாமை மூர்த்தி யென்னும் பஞ்ச சத்திகளையும், முப்பத்தெண் கலாசத்தி சொரூபமான முப்பத்தெட்டு உறுப்புக்களையும், தனக்கே உருவமாயுடைய பராசத்தி, தம்மை விட்டுப் பிரியாமையால் அவ்வுருவமே தன்னுருவமாய், அம்மகேசுர வடிவமாஞரென்னும் உண்மை நிலையையும் உணராது, அணுபக்ஷ சம்பு பக்கத்து அதி தெய்வங்களெனக் கூறும் ஆகம வசனங்களின் பொருளைப்

பொதுவிலே மலையிலக்காகச் சீவபேதம் சிவபேதம் எனக்கொண்டு, விஞ்ஞானகல பிரளயாகல் சீவபேதங் களையே அணுபக்கமெனக் கூறி, உற்பத்தி சங்கார மாகிய ஆதியந்தம் தெரியாது வீணேகுழறி மயங்கு வார். அஃது அவர் அறிவின் அளவேயாம். அவர் தாம் என் செய்வார் !

ஆயினும், கேவலம் தன்னுண்மை யென்றபடி, அநாதியே ஞானக்கிரியை தோன்றாது மூடமாய்க் கிடந்த சீவர்களின் அறிவு செயலை விளக்கும் ஆன்ம பதியாகிய சிவம், பிரணவ தானத்தினின்று சுத்த தத்துவங்கள் ஐந்தினாலுங் காரியப்பட்ட, சிரச்சய மந்திர பதவன்ன புவன தத்துவ, மந்திரேசுர பதேசுர வன்னேசுர புவனேசுர தத்துவேசுர கருத்தாக்க ளாலும், தனுகரண புவன போகங்களைத் தோற்று விக்கும் ஆதி உற்பத்திக் காலத்து, மல சகித அபர முத்த ஜீவர்கள் சுத்தபுவன வாசிகளாய், அதிகார கிருத்திய கருத்தராணாரெனக் கொள்ளுதல் எவ்வளவு அறியாமையாகும். இனி, ஏகதேச புனருற்பத்திக் காலங்களில், அரி பிரமாதியரைப்போல விஞ்ஞான கலர் பிரளயாகலர் ஆகிய இருவரும், சிறு தொழில் அதிகார நிலையராக இருந்தாராயின், ஆகமங்களிற் கூறிய சம்புபக்க அணுபக்க நிலை அவரை யடைதல் சற்காரியம் ஆகுமோ? ஆகாது. பின்னர் அதன் உண்மை நம்போலிய ஜீவர்களின் வாக்குமனாதி ஞானங்களால் உணரப் பெறாத அதி இரகசியப் பொருளாய், அனுபவ ஞானி களால் உணரப்படுவதாயினும், சத்திகாரிய சிவதத்துவ விருத்தியாகிய இவைகளைச் சத்திபேத சிவபேத அணு

பக்க சம்பு பக்கமெனக் கொண்டு, அவ்வனுபவ ஞானி களால் தெளிவுறக் காண்டலே முறைமையாம்.

இன்னும், இவ்விலய போக அதிகார முதற்காரண தாரக பிரணவ சத்தி சாமர்த்திய பிரபஞ்ச கிருத்திய உற்பத்தி உணராத சிருட்டி கருத்தனுன பிரமன், தன் அகங்காரத்தினுல், அப்பிரணவார்த்தம் தெரியாது மயங்க, இதன் பொருள் உணராது, சிருட்டி செய்வது எவ்வாறெனக் குட்டிச் சிறையில் வைத்துத், தானே உலக சிருட்டி செய்த குமாரமூர்த்தி, பிரமனது சிறை மீட்கும்படி வந்த சிவபிரான், உனக்கு அதன் பொருள் போமோ என்ன, உமையம்மைக்கு உபதேசிக்கத் தாம் கேட்ட அதன் உண்மைப் பொருளை அவர் மடிமீதிருந்து பிறரறியாது திருச்செவியிற் சொல்லும் பெருமையுடை யதும், அக்கைலாச நாதரான பரமசிவம் ஒரு திருவிளை யாடலை யெண்ணித், தம் பாகத்திருந்த உமாதேவி யைப் பூஞ்சோலையின் அழைத்துக் கொண்டு போம் பொழுது, ஒரு மண்டபத்திற் பதிந்த பிரணவ சித்திர மொன்று, ஆண் பெண்ணுகிய இருயானையின் வடிவங் கொண்டு ஒன்ருேடொன்று புணர, அதனைக் கண்ட உமாதேவி, சடமாய்ச் சித்திரிக்கப்பட்டுக் கிடந்த பிரண வம், உயிரோடு சேர்ந்த உருவமாய்ப் புணர்தற்குக் கார ணம் யாதென்று வினவ, அதைக்கேட்ட சிவபிரான் அவ்வுமையைப் பார்த்து,

"நின்பெருந் தகவினை நினைகிலாய் நீயுமே"

(கந்த. கயமுகன் உற்பத்திப் படலம் கசரு)

எனக் கூறிய குறிப்பிற் பெருமை யுடையதும்,

"முகத்தி லொன்றதா வவ்வெழுத்துடைய தோர்முருகன்"

(ஷை அயனைச் சிறைபுரி படலம் கo)

எனவும்,

"மூலோங்காரப் பொருளா யிருந்தாள் முன்னம் மொழிந்தருள்
சாபந் தொலைத்த முதல்வ வென்றான்"

(ஷ அனந்தன் சாப நீங்கு படலம் உ)

எனவும் வருங் குறிப்பிற் பெருமை யுடையதுமான அதிரகசிய பிரணவார்த்த சற்காரிய சித்தாந்த உண்மையை, சிவஞானமாகிய கண்கொண்டு காண்பதேயன்றி மலஞானக் கண்ணினாற் காணுதல் கூடாதாம். இது நிற்க.

இவ்வாறு திருவுருவங்கொண்ட மெய்ந்நிலையின் ஏதுவும் பிரமாணங்களும் வருமாறு இலய, போக, அதிகார, அருவ, அருவுருவ உருவங்களானதற்குப் பிரமாணம்:—

உயர்மறை புகழ்சிவ னேங்கு சதாசிவன்
இயலு மகேச னெனமூன் றா மவை
அருவே யருவுரு வுருவா யடைவே
பரிதுண ரொன்றைந் தையைந் தாகி
ஒருதொகை முப்பத் தொன்றா கும்மே. (சூத். க)

என்பதனாலும், இவ்வுருவமாகும் சோபான முறையிற் பஞ்ச சாதாக்கிய நெறியாகவே இலிங்க வடிவமானார் என்பதற்குப் பிரமாணம்:—

"பராபரமே பரம் சூக்குமாச் சூக்குமம்
சூக்குமந் தூலந் தூலஞ் சிவசா
தாக்கிய முதலிவ் வைந்தின் றன்மை" (சூத். அ)

எனவும், பஞ்ச கிருத்தியமே சுத்த வித்தை யென்பதற்கு

"ஐவகைத் தொழிலா யமைவுறு சத்தி
மெய்வரு சுத்த வித்தை யாகும்" (சூத். ருரு)

"இத்தகை வைத்திடு சுத்த வித்தை
தத்துவ மலசிவ சத்தியெனத் தகும்" (சூத். ருச)

"உற்றிடு மதுதான் உபாதா னமதாம்
மற்றதன் கருத்தா மகேசுர ராகும்" (சூத். ருரு)

"இவர்கள் வடிவா கியதிரு மேனியைத்
தவறகல் சுத்த வித்தியா தத்துவம்
மகேச தத்துவஞ் சதாசிவ தத்துவந்
தவாத விந்து நாதத் துவமெனப்
பகர் தருமறைகள் பகுத்துரைத் தனவே" (சூத். சுஉ)

என்னுஞ் சூத்திரங்களின் ஆதியில்,

சிவ சாதாக்கிய மென்ற திருப் பெயர்
உவமையில் சுத்தமாயை யினுண்டாய்
அதிசூக் குமமா யளவறு மொளியாய்
விதமிகுமம்பர மின்னின் விளங்கி
விதமுறவெங்கும் வியாபித் திடுமே. (சூத். கஉ)

எனவும், இவ்விறுதியிலே

"சுத்தமாயை தொகுத்துரைத் தனமினி
வைத்துணரசுத்த மாயையி னிலக்கணம்
ஒத்துரைசெய்வ னுயர் மறை முறையே" (சூத். சுச)

எனவுங் கூறப்பட்ட, ரௌரவாகம தத்துவபடல மொழி பெயர்ப்பாகிய சதாசிவ ரூபம் என்னும் நூற் பிரமாணங் களால், அவ்வான்ம நாயக பரமசிவம் தன்னுருவத் திற்கு முதற்றுணை நிமித்தமாகிய மூவகைக் காரணங் களுமின்றி, தன்னைத் தனக்குத் தானே உருவ மாகக் கொண்டாரென்பது, சற்காரிய சித்தாந்தமாகத் தெளிந்து நிச்சயிக்கத் தக்கதேயாகும். இவைகளை உள்ள வாறு பேசிய ஆகம சற்காரியப் பொருள்களை உய்த் துணரச் சத்தி யில்லாது, தங்கள் கலைஞான வெள் ளறிவினால் மெய்யைப் பொய்யாகவும் ஒரு பொருளை

மற்றொரு பொருளாகவுஞ் சாதித்து, அவ்வறிவு தானும் இல்லாத நம்மவர்களாகிய சீவர்களை யெல்லாம் தங்கள் போதனு வரைவுகளாற் கெடுத்தல் மாத்திரையின் ஒழியாது, தாமும் இலக்கண வித்துவ சாமர்த்திய ரென்னுந் தற்போத முனைவால், மீளாத நரகப் படுகுழியில் விழுந்து அயர்வார். ஐயையோ! இஃதென்ன பரிதாபம்!! இவரெல்லாம் ஆகம சைவசித்தாந்த நூல்களின் அவாவுடையராய், அவற்றை ஆசிரிய முறையிற் கேட்டுச் சிந்தித்துணர்ந்த தெளிவினால் புறம் அகம் சைவம் என்னும் முத்திறங்களால் விரிந்த முந்நூற்றறுபத்து மூன்று சமயங்களையும் உள்ளடக்கிய ஐம்பத்தாறு சமயங்களையும், கீழெனக் கழித்து நீக்கிச் சற்காரிய சித்தாந்த சிவஞான நிலையராய், நித்தியானந்த அநுபவராகும்படி சற்குரு கிருபை செய்வாராக.

# ௩. ஆன்ம இலக்கணம்

அநாதி நித்திய வஸ்துக்கள் மூன்றனுள், சிவம் ஆன்மா என்னும் இரு பொருளும், நித்த வியாபக சித்தாதற் பொதுமையான் ஒன்ருயினும், சிவம் மல ரகித மாதலிற், சர்வ ஞானம், ஆன்ம பிரேரக பஞ்ச கிருத்திய சர்வஞ்ஞத்துவம், அவற்றைக் கடைத் தேற்றும் சர்வானுக்கிரகமாகிய இம்முக்குண சுதந்திர முடையராதலிற் சூக்கும சித்தாகவும், ஆன்மா அச்சிவத்துக்கு ஆளாந்திறமும், சதசத்தாகிய சார்போத நிலையும், வியஞ்சகமின்றி உணர்வு பெருத சுதந்திர வீனமும் உடைமையால் தூலசித்தாகவும் சொல்லப்படும். இங்கே சித்தென்னும் பதம் ஞானமேயாக, அவ்வியாபக அறிதல், சூக்கும தூலமென இருபகுதியாகப் பிரிக்கப்பட்டன. அவ்விரு பிரிவினுள், சூக்கும சித்தாவது அணுவோர் அண்டமாம்படி நேரியணுதலும் அண்டமோர் அணுவாம்படி பெரியணுதலுமாம். அஃதாவது உருவம் நிறங் குணம் நீளம் அகலம் முதலிய எவற்றையும், மனவாக்குக் காயங்களால் அளவையிட்டு மதிக்கப்படாது, மிக நுண்பொருளாகிய ஓரணுவை, மிகப் பெரியதொரு அண்டமோ என்று காணத்தக்க அதிநுட்பப் பொருளாய், தன்னை ஒரு வகையாலும் அளவிடுதற்கு அரியதாக நிற்கும் நிலையாகும். இனி, அந்நிலைக்கு எதிராக, இருளுலகம் சொர்ண பூமி, சக்கிரவாளம், புறவாழி, சத்தகடல், சத்த தீவு, சத்த மலை, கீழ் மேல் பதினுன்கு உலகங்களாகிய சுவர்க்க மத்-

திய பாதலம் என்னும் மூவுலங்களையும், தூல உருவ மாகப் பிரேரிக்குஞ் சுத்த மாயாபுவனம் முதலிய இரு நூற்றிருபத்து நான்கு புவனங்களுஞ் சேரத் தன்னால் ஆதியிற் சிருட்டிக்கப்பட்ட எண்ணுக்கடங்காது மிகப் பெரிதாக ஒன்றுயுள்ள அண்டத்தை, ஓர் அணுவள வாகக் காணத்தக்க, அவ்வளவு மிகப் பெரிய பொரு ளாகி, தன்னை மறைக்கும் பொருள் வேறின்மையால் மலரகித அகண்ட வியாபக சர்வஞான அதிசூக்கும சித்தாயிருப்பது சிவசொரூபமானதால்; அதனை அச்சீவர்கள் தாமும், தங்கள் ஞானத்தால் ஊர்ந்தறி தல் கூடாதாம். ஆகவே, அப்பெரும் பொருளுக்கு உரிய சித்தென்னும் பதத்தையே தனக்கும் இயற்கையி லுடையது இவ்வான்மா ஆகும். அந்த உண்மையை விளக்கவே, ஆசிரியர் தூல சித்தெனக் கூறினர்.

அவ்வாறு சித்தென்னும் சாதியொருமையாற் பெருமை வாய்ந்த, இவ்வான்ம சொரூப நிலையில், அரு வம் உருவம் நிறம் தொழில் முதலிய எதுமின்றி, மன வாக்குகளால் உணரப்படாது, அகண்ட ஞான வெறு வெளியாயிருத்தலால், அவ்வான்ம நிலையை உற் றுணர வன்மை யின்றிய பூருவபக்க சமயிகள் யாவ ரும், சூனியமெனவும், தூல தேகமெனவும், இந்திரி யம் எனவும், கரணமெனவும், சூக்குமமெனவும், பிராண வாயு வெனவும் சமூகமெனவும் தம்மறிவிற்கு எட்டிய வளவில், தனித்தனி வேறு வேறு கூறி இடருறுவர். ஆனால் வேதாகம சற்காரியமாக, அவைகளை உற்றுச் சிந்துத்து நோக்கு மிடத்தில், அவ்வான்மா சார்போத னதலின் தானென வேறு பிரிந்து காணப்படாது, சத

சத்தென்னும் அவ்விரண்டனோடும், அத்துவிதமாகக் கலந்து நிற்றலினாலே, சூனியமே ஆன்மா எனவும், இவ்வுடம்பெனத் தானென வேறு பிரிக்கப் படாத ஒன்றாக நிற்றலின், அத்தேகமே ஆன்மா எனவும், இந்திரியங்களைக் கருவியாகக் கொண்டு, பஞ்ச விடயங் களின் பயனைக் கவர்தலால் அவ்விந்திரியமே ஆன்மா எனவும், அந்தக் கரணங்களைக் கொண்டு, அவ்விடயப் பயனைப் பற்றுதலால், அந்தக்கரணமே ஆன்மா எனவும் அக்கருவிகளைக் கழன்று நின்ற கனாநிலையிலே உள தாதலில், சூக்கும தேகமே ஆன்மா எனவும் இவ்வாறு கரண இந்திரிய கருவிகளோடு உயிர்த்தொழிலைப் பிராண வாயுவினாற் காரியப்படுதலால், அப் பிரா ணனே ஆன்மா எனவும், இங்கே பேசப்பட்ட பல பொருட் கூட்டங்களோடு சேர்ந்து வியாபித்து நிற்ற லின், சமூகமே ஆன்மா எனவும், அவ்வச் சமயிகள் பேசிய உயிர்நிலை யெல்லாம், அவ்வவ் வான்மாவின் ஏகதேச சஞ்சாரங்களுள் ஒவ்வொன்றே அமையு மன்றி, அதன் உண்மைநிலை அல்லவாகும். இதுவு மன்றி, இவ்வான்மா சிவமென்னும் இரு பொருளும், சித்தாதல் பொதுமையான் ஒன்றாகு மென்னும் வேத வாக்கிய உண்மையை உணராப் பரிணாமவாத வேதாந்தி, கிரீடாப் பிரமவாதி, ஏகான்மவாதி, சிவசமவாதி முதற் சில சமயிகள், பிரமமாகிய வஸ்து ஒன்றேயன்றி வேறு வஸ்துக்கள் ஒன்றும் இல்லை யெனவும், அவ் வொன்றாய பிரமமே தன்மாயையினாலே பல அண்ட புவனங்களில் வசிக்கும், வேறுவேறு பலவாகிய யாக்கை களையும், தானே தோற்றுவித்து ஒன்றாகிய ஆகாயம்,

நீர் நிறைந்த பல குடங்களிலே தனித்தனி வேருய்த் தோற்றுவதுபோல, அவ்வவ் வுடல்கள் தோறும் நின்று நடனஞ் செய்வானெனவும், அக்குடம் உடைந்தபோதே அவற்றிற் ருேன்றிய ஆகாயம் ஒன்ருனவாறு போலத், தனித்தனியே தான் அடங்கியிருந்த உருவ காரியமான கருவிகளெல்லாங் கழன்று உடைய, அவ்வவ்வுடல் களிற் றங்கிய ஒவ்வொரு பிரமமும், தனித்தனி தானே பிரமம் தானே பிரமமெனை இறுமாந்திருத்தலே முத்தி யெனவுங் கூறி, ஒன்றே பிரமமெனக் கூறிய உண்மையை உணராதவராய், அநேக பிரமங்கள் அங் கங்கே வேருயுள்ளனவென்று, தாமுணராது தம் வாக்கே சொல்ல நிற்பர். ஆதலால், அவரின் மலத்தைக் கழற்றும் வைத்தியசிவனுர் கொடுத்த, மாயா கருவி களால் வந்த அறிவினுல், அத்தத்துவ கருவிகளைக் கழன்று தம்மை வேறுபிரித்துக் கண்ட ஆன்மசொரூப நிலையடைந்த அப்பக்குவ தருண சந்தியிலும், மல பக் குவ சத்திநிபாதம் இன்மையால், பின்னும் அவ்வாணவ மூடத்தால், தாமே பிரமமெனக் கொண்ட கொள்கை யும் சித்தாதல் பொதுமையான் ஒன்ருகு மென்னும் வேத வாக்கியத்தின் ஏக தேசத்திற் சில பொருந்து மாயினும், அவ்வான்மாவின் உண்மைநிலை அன்ருகும்.

"எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி"

(சித். சூத். க. செய். ௬உ)

என்னும் ஆசிரிய வாக்கின்படி, எங்கே ஞானமுள் ளதோ, அங்கே இச்சை கிரியையும் உள்ளனவாம்; ஆத லால், சித்தாதற் பொதுமையினுள்ள ஆன்ம ஞானமும், அதன் இச்சை கிரியைகளால் மலத்தை அவாவிப் பற் றுதலும், பின்பு தன் அறிவை விளக்கும் சிவத்தின்

மேல் இச்சையால், அவரைப் பற்றுதலுமான கிரியையும் உள்ளனவாம்.

ஆகவே, முன்னமே பேசிய அகண்ட ஞான சித்தாகிய சிவமும் தன்னவர்களாகிய சீவர்களின்மேல் இச்சையும் அவரைத் தம் வசப்படுத்தும் கிரியையும் உடையதாதலினாற்றான் அவ்விரு வஸ்துக்களின் ஞானக் கிரியைகளும் ஒன்றினுளொன்று அடங்குந் திறமும், அடக்குந் திறமுமாய் வேறு பிரிக்கப்பட்டு அத்துவிதமாக நித்தியமாயிருந்த இவ்விரகசியப் பொருளை உணர்ந்தெடுக்க மாட்டாமையாலே ஒன்றே பிரமமெனவும், அப்பிரமந் தாமே யெனவுங் கூறி உளறுவாராயினர். இனி அப்பிரமத்தோடு கூடிப் பிரமமாகும் பெருஞ் செல்வத்தை அடையத்தக்க பெருமையினை யுடைய இவ்வான்மாவையும் அப்பிரமத்தையும் வேறாகக் கண்டு இருபொருளாகக் கொள்ளும் சிவாகம நெறி யொழுகுஞ் சித்தாந்திகள் அவ்வாசிரிய வசனங்களில் இவ்வான்மா அநாதி மலசகிதனெனக் கூறிய சொற்கிடையினால், அநாதி அழுக்குடைமை பற்றி அசுத்தனெனக் கூறுவார். ஆனால் அவ்வாசிரிய வாக்கின் சொற்கிடையினாலே மலம் வேற்றுப் பொருளாகவும், தம்முடையது அல்லாத அம்மலத்தை இவர் பற்றிக்கொண்டாரெனவும் வேறு பிரித்துக் காணப்படுகின்றதனால், இம்மல சகிதம் அநாதி * சகசத்துள் ஒன்றாதல் பெறப்படுகின்றது.

* சகசம்—சக=கூட, சம்=தோன்றுதல். அங்ஙனாயின் தீயிற்கு வெம்மையும் நீரிற்குத் தண்மையும்போற் குணமாகி, குணம் அழியிற் குணியும் அழியுமன்றேயெனின், அற்றன்று. சகசம் குணம் குற்றம் என இருவகைத்து என்னலானும், அவற்றுள் இது செம்பிற்குக் களிம்பும், அரிசிக்குத் தவிடும் போல்வதாய குற்றமே என்க.

அப்படியாகிய அம்மலம் சடப்பொருளாதலின் தானே இவ்வுயிரைப் பற்ற மாட்டாது. பின்னை அநாதியிலே வேறு பொருள் இன்மையாற் சிவம் தாமே சேர்த்து விடவேண்டுமெனில் அவரோ சர்வ சீவ தயாபர சங்கர மூர்த்தி யாதலால் அம்மலத்தை இச்சீவர்களோடு சேர்த்து விட்டார். பின்னை இவ்வான்மா தன்குற்ற மாகத் தானே அம்மலத்தைப் பற்றியதென்பதே தெளிந்தெடுத்த சித்தாந்தமாகக் காணப்படும்.

இன்னும் வேதாகமங்கள் அநாதியே மலத்தின் நீங்குதல் முதல்வன் வினையாகவும், அம்மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாகவும் பேசிய உட்கிடக்கை, தூல சித்து வகையின் உணர்த்த உணர்தலாகிய சோபான முறையில் உணர்த்த வேண்டுதலால் சுதந்திர உணர்வின்றிய இவ்வான்மா, அச்சோபான கிருத்தியங்களின் இடையே அநாதியே மலத்தைப் பற்றி அயர்ந்ததென்பதே கருத்தாக நிச்சயிக்கப்படும். இனி அவ்வாறு மல மூடத்திற் சடமாய்க் கிடந்த போதும் கண்ணொளி சூரியனால் விளங்குவது போல், சிவசந்நிதியில் உணருந் திறமுடைமையால் சேற்றுக்குள் மறைந்து கிடந்த மாணிக்கம் போலவும், இராகு கேதுக்களால் மறைபட்ட சந்திர ஆதித்திய கிரணங்களைப் போலவும் அவ்வான்ம ஞானம் மலத்தால் மறைபுண்ணலன்றி அழிக்கப் படுவது அன்றாதலால் அவ்வியாபக ஞானம் முதல் கெடாது அன்றும் இன்றும் என்றும் அழியாது நித்தியமாய் இருந்தது. அப்படி இருந்ததாயினும் இயற்கையிலே வியாபக பூரண வெண்கலைகளையுடைய சந்திரன் தன் குற்றத்தால் வந்த சாபங் காரணமாகத்

தன்கலைகள் நாடோறும் ஒவ்வொன்றாகத் தேய்ந்து ஒருகலை இருக்கும் சமயத்தில் அச்சமுடையனாய், தன்னைக் காப்பவரான சிவனையடைந்து வேண்டி நிற்க, அவர் முன் தேயாது தங்கியிருந்த ஒரு கலையைத் தம் முடியின் மேல் வைத்த பெருமையால் அச்சாபக் குற்றம் நீங்கி அக்கலையின் விளைவாகத் தேய்ந்துபோன கலைகளை யும் பூரணமாகப் பெற்று நித்தியமாய் இருக்கும்படி இரட்சிக்கப் பெற்றவாறு போல, இவ்வான்மாவும் தன் வியாபக ஞானம் தன் குற்றத்தால் அநாதியே அம் மலத்தின் மறைந்து அணுப்படச் சுருங்கப் பெறினும் சிவம் அதன்மேற் கொண்ட கருணையினாலே ஆதியிற் சூக்கும தூல அதிசூக்கும சோபான முறைப்படி, பதிப் பஞ்ச கிருத்தியங்களால் அந்த ஞானமல மறைப்பை ஒருபுடை ஒதுக்கி வெளிவரச் செய்து அவ்வறிவைச் சிறிது சிறிதாக வளர்த்துப் பூரண வியா பகமாக நிரப்பிய போதும் அம்மல தற்போதத் தோடு நிற்குமாயின், முன் பழக்க வாசனையாற் பின் னும் அவ்வறிவு சுருங்குமெனக் கருதி முன்னமே அம்மலம் தன்னுள் மறைத்துச் சடமாக்கி வைத்திருந் தாற் போல, இவ்வான்மபோதம் வேறுபிரிந்து சிறி தும் காணப்படாது தம்முள்ளடக்கி நித்தியானந்த சுகங் கொடுப்பாராதலால், ஆன்மாவை அசுத்தனெனக் கொள்ளுதல் சற்காரியம் ஆகாதவாறு காண்க.

இனி, சித்தென்னும் பதத்தைத் தானும் பெற்றுக் கொண்ட பெருமை தங்கிய இவ்வான்மாவின் உண்மை நிலை, அவ்வான்ம ஞானத்தால் உணர்ந்து வாக்கினாற் சொல்ல எட்டாதாயினும் அப்பதம் அறிதற் பொருளின்

ஒன்றாய காரண காரிய சம்பந்த சூக்கும தூலமென இரு வகைப் படுத்திக் கூறப்படுதலால் அவ்வறிதல் ஒன்றே யாகுமெனில் ஆகாது. எங்ஙனமெனில், ஒளியெனும் பொதுமையின் ஒன்றாய பேரொளி சிற்றொளி யாகிய சூக்கும தூல சூரிய கண்ணொளிகள் ஒன்றோடொன்று பேதமறக் கலக்கும் உரிமை யுடைமையால் அவ்விரண் டினையும் வேறு பிரித்துக் கண்ணொளியாகக் காணுங் கால் சூரியவொளி இல்லையாகும். சூரிய ஒளியாய்க் காணுமிடத்துக் கண்ணொளி இல்லையாம். கண்ணொளி யும் சூரியவொளியுமென இரண்டாய்ப் பகுத்துக்காணப் புகினும் அச்சூரியவொளியும் கண்ணொளியினாற் காணப் படுதலால் அது திரிவு காட்சியாமே யன்றித் தெளிவுக் காட்சி ஆகாததனாற், பேரொளியாகிய சூரிய ஒளியாய்க் காணுதலே தெளிவுக் காட்சியாம்.

ஆகவே, கண்ணொளி இல்லையாமோவெனில், மற் றொரு வஸ்துக்களுக்குமின்றி, ஆகாயம் ஒன்றற்கே வியஞ்சகத்தாற் பிறந்த எதிரொலி வடிவமாகிய சத்த குணம் வியஞ்சகமின்றி இல்லாதபோதும், அவ்வாகா யத்தின் குணம் அன்றென்றல் கூடாதவாறுபோல, கண் ணொளியும் வியஞ்சகத்தால் விளங்கி, அல்லுழி விளங் காமையாற் காணுதல் கண்ணின் குணம் அன்றென்றல் கூடாதாம். இனிக் கண்ணொளியும் விளக்கொளியும், ஒன்றேடென்று காணுதலுங் காட்டுதலுமாகிய, சம் பந்த முடைமைபோல, சூக்கும தூல சித்தாகிய சிவம் உயிர் என்னும் இரண்டும், உணர்த்தலும் உணர்தலு மாகிய சம்பந்தம் உடைமையால், ஒன்றோடொன்று பிரி படாதுஅத்துவிதமாய்இருக்கும். சூக்குமமானபேரொளி

யும் அப்பேரொளியின் வியஞ்சகமாய், அவ்வொளியைப் பெறும் உரிமைக் குணத்தையும் உடையது தூலசித்தாதலினாலே, தூலத்தின் காரணம் சூக்குமமென்னும் சற்காரியந் தவறாது, பேரொளியாகிய சூக்கும அம்சையே, சிற்றொளிக் குணமாகிய தூலமாய், உயிருஞ் சிவமும் ஒற்றுமைப்பட அத்துவிதமாய் இருத்தலால், அவ்வொளியும் ஒளிக்குணமுமாகிய இருபிரிவினுள்ளும் ஒளியே பொருளாதலன்றி, குணம் வேறு பொருளாதல் பெறப்படாமையால், அத்தூல சித்தாகிய ஆன்மாவும், தான் வேறு சூக்குமம் வேறெனக் கருதியிருந்த அறியாமை அறிவை நீக்கி, அகண்ட அறிவினால், ஒளிக்குணம் அளவிலிருந்த தன்னை வேறு பிரியாது, பேரொளியாகிய அச் சூக்குமப் பொருளேயே ஐயந்திரிதலின்றித் தெளிவு காட்சியாய்க் கண்டு, அதனுள் அடங்கும் அனுபவமே ஒருகாலும் நீங்காது நித்தியமாகப் பெற்றுக் கொண்டமையால், அதனையே ஆன்ம சொரூபமென, தம் அனுபவ சிவஞானத்தாற் பெரியோர் காண்பராதலின் என்க.

இனி இவ்வாறு, சாதி ஒருமையால் நித்த வியாபக சித்தாய் இருந்த ஆன்மா, அசத்துச் சத்தாகிய இரண்டையும் பற்றும் இயற்கை ஞானமுடையது ஆதலால், மேற்சாதியான் ஒருவன் தன் கிருத்திய குற்றத்தாற் கீழோன் ஆனாற்போல, ஒன்றுக் கொன்று எதிராகிய சத்து அசத்து என்பவற்றில், முன்னமே அசத்தைப் பற்றுதலினால் அசுத்தனெனக் கொள்ளுவோமாயின், ஒன்றுக்கொன்று எதிராகிய இரண்டு குணம் ஒரு பொருளுக்கு உளதாகலின், வேதாகம தருக்க முறைப்படி சற்காரியமாகாது. ஆதலால், சத்

தாதல் ஆன்ம நித்திய இயற்கைச் சொருப குணமாக வும், அசத்தாதல் அதன் அநித்திய தடத்த செயற் கைக் குற்றமாகவுங் கொளல் வேண்டும்.

அதனாற்றான், அநாதி செயற்கையாய்த் தேடிய குற்றத்தை இடையிலே கழற்றி, தன்னியற்கைச் சுத்த நிலையாகிய சத்தைப்பற்றிச் சத்தாய் இருத்தலை நித்திய மாகப் பெற்றுக் கொள்ளுதலையே சாயுச்சிய முத்திப் பேறென வேதாகமங்கள் நிறுத்திக் கூறிய சம்பிர தாயம் யாவரும் அறியும்படி வெளிவரக் கிடக்கும். அசத்துச் சத்தையறியாதெனவும், அசுத்தம் சுத்தத் திற் கலவாதெனவும், இருள் ஒளியோடு கலவாதென வும், சூக்குமத்தின் விரி தூலமெனவும், தூலம் சூக்கு மத்தின் அடங்குமெனவும், அவ்வப் பொருள்கள் அவ் வவ்வியல்பிற் பிறழாது நித்தியமாய் இருக்குமெனவும், இன்னும் இவை போன்ற அநேக சற்காரிய வாக்குகளால் நிச்சயித்து ஆகமங்கள் அநாதி குற்றமாகப் பேசிய மல சகித அசுத்த நிலையினும், மேல் அநாதிக்கநாதி சுத்தன் என்பதே, பிரதிஞ்ஞை செய்யத்தக்க சற்காரிய சித் தாந்தமாகும். இன்னும்

"அநாதி சிவரூப மாகிய வான்மாத்
தனாது மலத்தாற் றடைபட்ட வாறே." **(திருமந்திரம்)**

என்பதால், இவ்வான்மா தன்னியற்கை யாகிய சொரூப நிலையில், அநாதிக்கநாதி சிவ சொரூப சுத்தன் என்பதையும், தன் குற்றத்தால் தடத்தச் செயற் கையில் இயற்கை வியாபகந் தடைபட, அநாதியே மலசகிதனாயினன் என்பதும் பெறப்படும். இன்னும்,

"அணுவினை யடைந்தே யென்று மகன்றிடா ஞானச்செய்தி
நுணிய பேருருவந் தன்னை நோக்காது நோக்கிப் பொல்லாத்

திணிய பேருருவிற் றேன்றுஞ் சிற்றறி வல்லன் யானென்[ன்"
றெணுவ தேயணுவின் காட்சி யென்றன னெவர்க்கும் மேலோ

என்பதால், வியாபக அறிவுடையவனுய்க் காணுதல், ஆன்ம தரிசனமாகலால், அழுக்குடைமை வியாபக விரோதமாதலின், அவ்வழுக்கைப் பற்றிய காரணத்தால், அணுத்தன்மைபடச் சுருங்கிய ஆன்மா, அதனைப் பற்றுதற்கு முன் இயற்கை நிலையில், அநாதிக் கணுதி சுத்தனென்பதையும்,

" ஓங்குணர்வி னுள்ளடங்கி "

என்பதனுலும்,

" அவனே தானே யாகிய வந்நெறி
ஏக னுகி யிறைபணி நிற்க " (சிவ. போ. சூத். ௧௦)

என்பதனுலும் அவ்வுண்மை நிலையே சிவத்தினுள் அடங்கு மென்பதையும் நன்குணர்ந்து, அருவ உருவம் முதலிய யாதுமின்றிய அகண்ட வியாபகமாதலாற் பசு பாச ஞானங்களாலுணர அகப்படாது சிவஞானமொன்றினுலே உணரப்படுஞ் சத்துப் பொருளான தூல சித்தாகிய ஆன்மாவைக் காணும் அறிவாகவும், அதனுக்கு ஆதாரமாய் நின்று அவ்வறிவை விளக்குஞ் சூக்கும சித்தாகிய சிவத்தைக் காட்டறிவாகவும், அவ்வறிவு இரண்டனையும் வேறு பிரியாது ஒன்ருகவுங் காணுதலே சற்காரியமாம். அதினும் தாயும் மகவும் போல ஆனந்தானுபவத்தை ஊட்டுதலும் உண்ணுதலுமாகிய அவ்வளவு பிரிவோடு பெத்தம் முத்தி யென்னும் ஈரிடத்தும் ஒரு படித்தாயிருக்கும் அப்பொருளை,

" அன்றன் றெனநின் றனைத்தும்விட் டைஞ் செழுத்தாய்
நின்ருேன் றுளததுவே நீயனைத்தும்—நின்றின்று

தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி."

(சிவ. போ. சூத். ௩. வேண். க)

என்னும் குறிப்பைக்கொண்டு காணலாம். ஆகவே அநாதிக்கணுதி சிவ சொரூப சுத்தனுகிய ஆன்மா வானது,

"கண்டவிவை யல்லேனு னென்றகன் றுகாணுக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினுெடு முளத்தவன்ரு னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி."

(சித்தி. சூத். ௯. செய். எ)

எனப்பட்ட சூக்கும தூல சிவ ஆன்மாவென்னும் இரு வேறு பொருளும் வியாபக வியாப்பிய பாவத்தாற் கண்ணொளியும் ஆதித்தன் ஒளியும் போல வேறின்றி ஒருங்கியைந்து அத்துவிதமாய் ஒன்றுபட்டு நிற்றற்குரிய தனது அடிமைத் திறத்தையும், சிவனது ஆளுகைத் திறத்தையும் உள்ளபடி கண்டு அதனுள் அடங்கி நிற்கும் சிவயோக நிலையில், அச்சிவனும் இவனில் வேருதலின்றி அத்துவிதமாகத் தோன்றி இவன் மலங்களை நீக்கிச் சுத்தனுகச் செய்வன். ஆதலால், அவ்வாறு பெற்றுக் கொண்ட சிவயோக நிலையில் வேதாந்த மகா வாக்கியமான அது நான் என்னும் பதமும், சித்தாந்த மகாவாக்கியமான நீ அது வானுய் என்னும் பதமும் ஒன்ருேடொன்று முரணுது சர்வஞான சிவன்றிருவாக்கிற் பிறந்த கட்டளைப் பொதுச் சிறப்பாகிய வேதாகமமென இரண்டாய்ப் பிரிக்கப்படினும் பொருள் ஒன்றேயாய்ச் சமாதான சற்காரிய சித்தாந்தமாய்க் காணப்பட்டன.

இவ்வாறு தூல உயிரும் சூக்கும சிவத்துடன் வேறின்றி அபின்னமாய், அத்துவிதானந்தம் நித்தியமாகப் பெற்றுக் கொண்டமையால் இவ்வான்மா அநாதி சிவ சொரூப சுத்தனென்பதைச் சந்தேக விபரீதமின்றித் துணி பொருளாக நிச்சயிக்கலாம். இன்னும்,

"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோல்."

(சித். சூத். அ. செய். க)

என்பது நித்தவியாபக சித்தாயுள்ள பரமானந்த சொரூப சிவசார்பின் வழித்தோன்றலாய் நித்த வியாபக சித்தாகிய ஆன்மா அறிவுப் பொருளேயான சாதியொருமையும் அச்சிவானந்த செல்வம்முழுவதும் தனக்கே சொந்தமாக வுடைய அடிமைத் திறமுமுடைய தாதலால், அவ்வரச குமாரனாக உருவகிக்கப்பட்டதும், அவ்வுரிமை கொண்டே அச்சிவத்தோடு கலந்த அத்துவிதானந்தப் பெருஞ்செல்வ முத்தியை நித்தியானந்தமாகப் பெற்றுக்கொண்டதுங் காண்க. இனி இவ்வான்மா இத்துணைப் பெரும் பொருளாகிய சுத்த வஸ்துவாய் இருப்பினும் தனக்கு நித்திய உபகாரியாயிருந்த சிவத்தை மறந்து மலத்தைப் பற்றிய தன் குற்றமே கன்மமாக, அக்கன்மமே பிராரத்துவ அனுபவ நிலையினும் அச்சிவத்தை மறத்தலாய ஆகாமியமாக வளர்ந்து உடலுடன் மற்ற உடலுக்கு வித்தாகி அத்துவாக்களாகிய சஞ்சிதக் கூட்டினுள் அடங்கி இடையீடின்றி நீரோட்டப் பிரவாகம்

போலத் தொன்றுதொட்டு விடுதலைப்படாது வருதலால், இருவினைச் சக்கரத்திற் சுழன்று இறந்து பிறந்து உழலும்போது அறிந்தும் அறியாமலுஞ் செய்த தருமாதி சிவபுண்ணியங்களால் அச் சிவத்தின்மேல் அன்பு கூர, அதன் பயனாகிய அவ்வருள் பதிதலால் தன்னை மறவாது நிலைநிறுத்தும் அகண்ட அறிவினால் ஆகாமியம் ஏறாது தடையுண்டு நிற்க, அக்கூட்டினுள் அடங்கிய சஞ்சிதம் அனுபவத்தாற் றொலைய, பின் வினையிருப்பு இன்மையால் இருவினையொப்படைய மலபரிபாகம் அடைந்த சமயம் சத்தி பதியப்பெற்று, சரியையாதி மூவகைத் தவமுதிர்வினால் ஞானநிலையடைந்து மல சத்திகள் முழுவதுங் கழன்று போதம் முனையாது சிவத்தினுளடங்கி, நித்தியானந்த செல்வம் அனுபவிக்கின்ற அந்நிலையினும் சிவம் சர்வஞான நீதிச் சொரூப கர்த்தவ்விய மாதலால், அவ்வப் பொருள்களின் சுபாவ இயற்கையின் ஏற்றக்குறைவு செய்யாது அவ்வான்ம சுதந்தரவீன சுபாவ இயற்கையையும் அழியாது நித்தியமாக வைத்ததும் இவ்வான்மாவின் வியாபக ஞான சுபாவ சிவ சொரூபமே அன்றும் இன்றும் என்றும் அழியாது நித்தியமாக இருத்தலையும் நேராக வற்புறுத்திய வாறுங் காண்க.

"வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னாகிப் பசுவென நிற்கு மான்மா"

**(சித். சூத். ௨. செய். உ௦)**

எனவும்,

"அப்பொருளு மான்மாவு மாரண நூல் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றாஞ் சாதியினால்—எப்படியுந்

தேரிற்றுவிதஞ் சிவாகமநூல் சொல்லுநிட்டை
யாருமிடத் தத்து விதமாம்''

(தாயுமானவர்-உடல் பொய்யுறவு கசு)

எனவும்,

"காணு மறிவுநீ காட்டறிவு நாமவற்றைக்
காணக் கழலுங் கழற்சியிலே-நாணி
நமைத் திரும்பிப் பாராதே நான்றனென்னுதே
யமிழ்த்துகர கம்போல்நிற் பாய்''

(ஒழிவிலொடுக்கம் கருசு)

எனவும்,

"அறிவுக் கறிவென்னு மாகமங்கள் சுத்த
அறிவென்னும் வேதத்தி னந்தம்—பிறியா
நிலைக்குச் சரியாகு நீயென்று னென்
றலைக்கும் மரி பிரமரை''

(ஷ கூக)

எனவுங் கூறிய மற்றைய பல பிரமாணங்களாலும் நிச்சயித்து உணர்தல் சற்காரியமாம். இன்னும் இப்பொருளைக் காணத் தலைப்படுவோமாயின் அசத்துச் சத்தாகிய ஈரிடத்தன்றி வேருய்த் தனிநிலையிற் காணப்படாதெனக் கூறிய சற்காரியப் பொருளினுல் இவ்வான்மா அநாதியே கூடிப் பற்றிக்கொண்ட அசத்தினுள் தான் தோன்றுது மறைந்து கிடந்தமையால் அதன் சொரூபம் இதுவென யாரானும் அறியப்படாது சூனியமாய்ச் சடப்பொருளாகவே கிடத்தலால் அதனை ஒருவாற்றுனும் அறிதல் கூடாது. இனி அச்சிவகிருத்திய கடைதலினுலே அம்மலத்தினின்றும் ஒருபுடை யொதுக்கித் தோற்றுவித்த ஏகதேச சிற்றுணர்வால் அதனைக் காணுதலும் அரிது. இனி அவ்வறிவைக் கொண்டு வேதசிவாகம விதி வழுவாது ஒழுகும் சாதன வலியினுல் அவ்வறிவு விரிந்து அகண்ட வியாபக தன் நிலையடைந்த

அவ்வருள் பதிதலால், தத்துவ ரூபம் முதலிய பத்தவத்தையின் வழிச் சென்று, தத்துவ தரிசன ஆன்மரூப சிவரூபத்திற் காணப்படுவது ஆன்ம தரிசனம் ஆதலால், இந்நிலையிற் சிவஞானிகள் கண்ட காட்சியினாற்றான் அநாதியினும் சுபாவ இயற்கையிற் சிவசொரூப நித்திய வஸ்துவாயுள்ளது என்பது தெரியவரும். இன்னும் சித்தென்னும் பதமாகிய ஞானம் எந்தப்படியும் அகண்டமாய் இருக்குமன்றிக் கண்டிக்கப்படுதலாய் இருப்பது சற்காரியம் ஆகாது. அவ்வதிசூக்கும வியாபக அறிவு, மிக நுண்ணிதாய் இருப்பினும் தூலகாரியமாம்பொழுது தடித்து ஏகதேசத்தில் மறைக்கப்படுதலால், அச்சூக்கும நுண்மையே அம்மறைப்பை ஒதுக்கி அறிவை விளக்கவேண்டிய உரிமையால் அவ்விரண்டும் வியாபக வியாப்பிய பாவமாய் ஒன்றோடொன்று இயைவுபடக் கிடந்த உண்மை நிலையை அறிவுக் கண்ணினால் பிரத்தியக்கக் காட்சியிற் கண்ட சீவன் முத்தரே அவ்வான்ம நிலையை உள்ளபடி கண்டவர் ஆகும். அவர் அடித் தொண்டின் வழி நின்று அறிதலே நம்மவர் கடமையாம்.

# ச. மல இலக்கணம்

மலமாவது வஸ்து மூன்றனுள் ஒன்று. அது காட்டம் அக்கினியைத் தன்னுள் மறைத்து வைத்திருந் தாற்போல ஆன்மாவின் ஞானக்கிரியைகளைத் தன்னுள் மறைத்து அப்பொருளை வேறுகாணாது தானாகச் செய்து நிற்கும். அம்மலம் தன் சொரூப நிலையில் ஆவாரக சத்தியால் அவ்வறிவை மறைத்தலும், தடத்த நிலையில் அதோநியாமிகா சத்தியால், அவ்வறிவை விளக்குதலுமாகிய இவ்விருவகைச் சத்திகள் பிரதான மாக அவற்றின் வகையால் அநேக சத்திகளை யுடை யதாய் இருக்கும். இதுவே அசத்தெனவும் மூல மல மெனவும் படும். இம்மலம் சதசத்தாகிய ஆன்மாவின் ஞானக்கிரியையின் வியாபகத்தைச் சுருக்கி, அணுத் தன்மைப் படுத்துதலின் ஆணவம் எனப்படும். இதற்கு இன்னும் அநேக நாமங்கள் உள்ளனவாம். இதன் சொரூப நிலையில் அருவ உருவ வடிவங்கள் யாதும் இன் மையாற் பசுபாச ஞானங்களால் அளவிட்டறிதல் கூடா தாம். இனி அம்மலமோ சுதந்திரவீனமே இயற்கையா யுள்ள ஆன்மாவுக்கு அதன் குணமாகிய ஞான கிரி யையை விளக்குஞ் சிருட்டிகாலத்தில் அநந்தராற் கலக் குண்ட அம்மலகாரிய மாயையினின்றுந் தோற்றிய கலையிற் பிரிந்த அவ்வியத்த பிரகிருதியில் வியத்த மாய்த் தோற்றிய முக்குணங்களில் ஆன்ம ஞானக் கிரியையின் குணமான அறிவையுந் தொழிலையும் சாத்து விக ராசத குணமாக அமைத்து இவ்வான்மா பற்றிக் கொண்ட மூலமல குண தாமதமாக நிறுத்தி, அவ்வறிவு

அறியாமையாற் செய்யுந் தொழில்கள் நல்வினை தீவினை யாகவும், அவற்றின் பயன் இன்ப துன்பமாகவும், அவற்றை யனுபவிக்குந் தானம் சுவர்க்க நரகங்களாக வும் அவற்றிற்குச் செல்லும் வழி இறத்தல் பிறத்தலாக வும் அமைத்து முன்னரே தோற்றிய குணத்தினின் றும் புத்தியை வருவித்து, அதனின்றும் மூவகை அகங் காரங்களையும் உண்டாக்கி, அவற்றின் ஒரு பிரிவாகிய பௌதிக அகங்காரத்தில் தன் மாத்திரையின் சூக்கும தூல பேதமாய் விடய பூதங்களையும் உண்டாக்கி, மற் றையதை சதவைகாரிக அகங்காரங்களில் ஞானக்கிரியை கள் விளங்குதற்கு இடமான ஞானேந்திரிய கன்மேந்திரி யங்களையும் உண்டாக்கி, பின்னும் புத்தியினின்றும் பிரிந்த தன்ம ஞானதி எண் குணங்களில் முன்னைய நான்கும் சித்தாகிய ஞானக் கிரியையின் சார்பாகவும், பின்னைய நான்கும் அசத்தாகிய மலத்தின் வசமாகவும், சதசத்தாகிய இயற்கை பிழை படாதுபோக ஏது வாக்கி, அப்புத்தி குணங்களால் விரிந்த ஆயிரத்தெட்டுக் குணங்களையும் நிலையாகவுங் கலப்பாகவுமுள்ள எண் பத்துநான்கு நூறுயிரம் யோனி பேதங்களுள்ளும் இவைகளை யெல்லாம் உள்ளடக்கிய முந்நூற்றைம்பத் தெட்டுக் குண பேதங்களைக் கொண்ட மனுவடிவில் விடுத்து இவைகளின் மூலமாகிய தன்மம் அதன்மம் என்னும் இருகுணத்தோடு நிறுத்தி, சத்திநிபாதம் வரு விக்கும் எல்லைவரையும்,

"எஃகார் குயத்தினு மீர்க்க லொல்லா
வரம்பறு மிருளின் கற்றைக் கணங்களும்"

என்றாற்போலத், தன்வலி கெடாது இரும்புபோன்ற

கடுமையும் தன்னையும் பிறரையுந்தெரியாது மறைக்கின்ற அந்தகாரமான இருள் மயமாயிருக்கும் அம்மல கூறுகிய அதன்ம குண நெறியினால் நரகத் துன்பத்தை அநுபவித்தாராயினும் ஆன்மஞானத்தின் கூறுகிய பசு புண்ணிய தருமங்களால் பெற்ற லௌகிக ஐசுவரிய சுகாநுபவங்களைப் பெற்ற அந்த நிலையினும் இந்தமல மறைப்பால் அதனையே முத்தியெனக் கொள்ளும் உலோகாயதர், புத்தர், அமணர், நிரீச்சுர சாங்கியர், கன்ம யோகிகள் ஆகிய சமயிகளுக்கும் அவ்வுலோகாயத விரிவாகிய குணவாதம், மாயாவாதம், பாட்டம், பிரபாகரம், பாஞ்சராத்திரம், சாங்கியவாதம், நியோகவாதம், சுபாவவாதம், கன்மவாதம், சஞ்சயவாதம், சைனவாதம், பூதவாதம், உலகவாதம், சடபதார்த்தவாதம், நியாயவாதம், அநேக வாதம் என்னுஞ் சமயங்களினின்று அநுசரிப்பவர்களுக்குஞ் சென்ற அறிவு இம்மலத்தோடு சேர்ந்த இருகலப்பாதலால் இவைக்கெல்லாங் காரணமாயிருந்தது இம்மூலமலம் ஒன்றேயாகும்.

இன்னும் சிவமாந்தன்மை அடைதற்குரிய யோக்கியதையுள்ள சீவர்களையெல்லாம் அநாதி தொடங்கித் தாங்கற்கரிதாகிய கொடுந் துயரங்களைச்செய்து வருத்தியதுமேயன்றி, எண்ணில்லாத பிறவிகளையுங் கொடுத்துத் தானும் பிரியாது நின்று,

> "அல்லற் பிறவியலமலம் விண்ணுடுறையுந்
> தொல்லைத் திருநுகருந் துன்பு மலமலமாம்"

என்றபடி இன்ப துன்பமாய ஈரனுபவங்களிலும் பெருந்துயரத்தையே கொடுக்கின்ற இம்மலத்தின் செய்கையை ஒரு சிறிது சிவஞானத்தினாற் றெரிந்த அடியவர்கள்

பதைபதைப்புற்று அலறுகின்ற வாக்குகளால் உணர லாம். இம்மலம் கொடுங்கோல் செலுத்திச் சகல அண்டங்களிலுமுள்ள இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலும் வசிக்கின்ற எல்லாச் சீவர்களையுந் தன்னுள் அடக்கியாளுஞ் சத்துரு வாதலை யுணர்ந்த சிவம், அம்மல சக்தியைக் கெடுத்து அச்சீவர்களின் ஞானத்தை விரித்துத் தாமாகச் செய்து இரட்சை பண்ணுதல் காரணமாக மலரகித பரமானந்த சொரூப ஏகானந்த நிலையினின்றும் பிரிந்து மூவவத்தைப்பட உருவங்கொண்டு, இம்மல சத்துருவைச் செயித்தலாகிய ஆன்ம பஞ்ச கிருத்திய யுத்தத்தைச் சதாகாலம் நடத்தி வருதலால் இம்மலம் தத்துவ தாத்விக புவன போகங்களாகிய அசுத்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் முதற்காரணமாகவும் அவைகளைப் பிரேரிக்கும் சுத்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் ஏதுவாகவும் இருக்குமேயானல்,இதன் வல்லமையை எவ்வளவென அளவையிட்டு மதிக்கலாம்? சத்தின் இயல்பை உணர்தார்க்கன்றி அசத்தின் இயல்பையறிய வாராதென்பார் மெய்கண்டானுயின் அறிவறிந்த தெல்லாம் அசத்தாகுமென்றபடி, தத்துவஞான அனுபவ சீவன் முக்தர்களால் உணரலாமே யன்றி, நம்மவரால் உணருதல் கூடாவாம். இத்துணைப் பெருங் கொடுமையுள்ள மலவிக்கினத்தால் வருந்துயரங்களைநீக்குதலினுல் வயித்தியனுகவும், தம்பிள்ளைகளின் உடலை வளர்த்தற் காயபருவத்திற்கு இயைந்தபாலன்னம்முதலியவைகளை ஊட்டி வளர்த்தும் அவர் அறிவு பாலிய தசையிற் சிறிதாக இருத்தலால், அவ்வுடலோடு அறிவையும் வளர்க்கக் கருதிக்கல்விக்கழகத்து இருத்தி,பலவகை வித்தைகளிற்

பயிற்றி அறிவை வளர்த்து அரங்கத்திற் பேரறிவுடையூர் என்பதைக் கண்ட பெற்றாராயினோர் முன்னிருந்த அன்பின் எண்மடங்கு ஏற்றமாய்த் தம்மோடு சேரத் தழுவி அவருக்குத் தம்முரிமை முழுவதையுங் கொடுத்தல்போல, தம் வியாபகச் சார்பினராகிய சீவர்கள் மலத்தின் அழிழ்ந்திச் சிற்றறிவராய்க் கிடத்தலைக் கண்டு, அவ்வறிவைச்சிறிது சிறிதாக வளர்த்து, பூரணநிலையில் தாமாகச் செய்து, நித்தியானந்த செல்வம் நிலைமையாகக் கொடுத்தருளுதலினாற் பிதாவாகவும் சிவத்தை உருவகித்துப் பெரியோர்கள் கூறிய சற்காரிய வாக்குகளால் எடுத்துக் கொள்ளும் பிரயோசனம் யாதெனில், நம் சுதந்திரகாணியாகிய நித்திய செல்வம் நிலைமையாகத் தருகின்ற நம் பரம பிதாவான சிவபிரான் நம்பொருட்டுச் செய்தகட்டளையில் ஒருசிறிதுந் தவறாது ஒழுகி, நமக்கு அந்நியமான மலகாரியப் பிரபஞ்சச் சிறுசெல்வங்களிற் பற்றிய அவாவைவிட்டு,பரபுருட கமனமின்றிய பதிவிரதையைப்போல், அவரே நமக்குத் தஞ்சமென அவர் அடித்தொண்டின் வழி நின்று அன்பு செய்வோமாயின் அம்மலம் நம்மேற் பற்றாத வண்ணம் திருவடி ஞானத்தைப்பதித்து நம்மை ஆட்கொண்டருளுவார் என்பதே சற்காரிய சித்தாந்தமாகும்.

# ரு. கன்ம இலக்கணம்

ஆன்மாக்கள் தம்முயிர்த் துணையாய சிவத்தை மறந்து மலத்தைப்பற்றிய குற்றமே கன்மம் எனப் படும். இக்கன்மம் நாசோற்பத்திக்குக் காரணமாத லால் மூலகன்மமாகிப் பிரவாகாநாதியாய் நின்று இரு வினைக்குங் காரணபரமாகி மனவாக்குக் காயங்களாலே காரியப்படச் செய்யும் தூலகன்ம ஆகாமியமாய் ஆறத்து வாவினுள் அடங்கிப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் சூக்கும கன்மமாய்க் கிடந்து, பிராரத்து வானுபவத்தாற் கழிவதாம். "நிலத்தின்கட்கிடந்த வித்துமுளையைத் தோற்றுவித்தற்கு அந்நிலக் குளிர்ச்சி துணைக் காரணமாதல்போல, தனுகரணபுவன போகப் பிரபஞ்சங்கட் கெல்லாம் சிவசத்தி துணைக்காரணம். இருவினைப்பட்ட ஆகாமிய கன்மமும் அதன் வழித் தாய துணைக்காரணம்" என்ற சித்தாந்தப்படி அம் மூல கன்மத்தை நுகருவிக்குஞ் சமயத்தில் அவ் வான்மாக்கள் இருவேறு அறிவாலுஞ் செய்த இரு வினைப் பயனாகிய இன்ப துன்பங்களைப் பிராரத்து வானுபவமாய் ஊட்டுந் தலைவனை மறந்து தாமேதேடித் தாமே உண்பதாக எண்ணுந் தற்போதமே ஆகா மியமாய் வளர்ந்து சஞ்சிதமாய்க் கட்டுண்டு கிடந்து, மறு சனனத்திற் பிராரத்துவமாய் ஊட்டப்படு தலையும் மறந்தவழி, உண்டாகின்ற தற்போதமே மீட்டும் மீட்டும் ஆகாமியமாக வளர, இவ்விதமே அளவிறந்த சனனங்கடோறும் பிறந்திறந்து உழல்வர்.

ராதலால், இம்மூல கன்மம் பிரபஞ்சங்கட் கெல்லாம் ஒருபுடை துணைக்காரணம் என்பது சித்தித்தது. ஆயினும் இக்கன்மம் ஆன்மாவாகிய ஒருகருத்தனாற் றேடிக் கொள்ளப்பட்ட குற்றமாகிய பொருளாதலாற் காரணமாகாது காரியப் பொருளேயாம்.

இன்னும் ஒருவனுக்குப் போசன பதார்த்த விக்கினத்தால் விளைந்த நோயைத் தீர்க்கவந்த வைத்தியன், முன்னர் விரோசன ஔடதத்தால் அப்பதார்த்த விக்கினம் ஒரு சிறிதும் அவன் உடலிற் றங்காது போக்கிப் பின்னர் மற்றோர் ஔடதத்தால் அந்நோயைத் தீர்க்குமாறுபோல, மலபரிகாரர் ஆகிய சிவன் மலநோயினரான ஆன்மாக்கட்கு அம்மலமூட தற்போதத்தால் விளைந்த இருவினைப் பயன்களையும் புசிப்பித்துக் கழித்து, அதனால் இருவினை யொப்படைந்த சமயத்தில் சத்திநிபாத முறையிற் செய்யுந் திருவடி தீட்சையினாலே தத்துவ நாச சர்வசங்காரஞ் செய்து எஞ்சிய சஞ்சித வினைகளையும் மறுசனனத்திற் செல்லாது கிரியா சத்தியால் நீக்கி, மூலமல சத்தியை ஞானசத்தியாற் றகித்து, சுத்த நிலையில் நின்மல சாக்கிராதி அவத்தையிற் றூய்மைப் படுத்தி, அவ்வான்ம சொரூபத்துடன் நிற்கிற் பின்னரும் பழக்க வாசனையால் அவ்வசத்தைப் பற்றுமாதலிற் பொருள் வகையாற் சித்துரூபனாய அநாதி இயற்கைச் சொரூப நிலையில் நிறுத்தி அந்நிலை தம்மோடு பின்னமற அத்துவிதப்படும் பெருமைபுடைய சிவரூபமாதலிற் றமது அகண்ட ஞானக் கிரியையினுள் ஆன்ம ஞானக் கிரியைகளை அடக்கி மூலமல சத்தியை வேரோடு களைந்து, ஆன்

மாச் சிவமெனஇருபகுப்பின்றி ஏகீபவித்து நிற்கும் சிவயோக நிலையில், அவ்வருளே பரையாக அப்பாரா தீத பரமானந்த சிவசொரூப நிலையிலே ஆன்ம போதம் அடங்குதலாற் சீவ சத்தமுமின்றி, சிவசத்தமும் நிகழாமல் அப்பொருள் ஒன்றனையே உணருதலாகிய அகண்ட சிவஞானத்தோடும் அன்று முதல் என்றும் ஒரு படித்தாம் ஒருங்கியைய நிறுத்திக் காணுதல் காட்டுதலாய இருவகை உபகாரங்களையும் பெத்தம் முத்தி இரண்டினும் உபகரித்து வருகின்ற சிவத்தின் மேல் அடங்காத இச்சை மீதூர்தலாய ஆனந்தாநுபவம் ஆக்குகின்ற நித்தியானந்த நிலையிலே இக்கன்மம் மூல வேர் தானுமின்றி அழிந்துபோவதாலும், அநாதிகாரண வஸ்துக்களின் ஒன்ருகாது காரிய அழிபொருளேயாம் என்பது சற்காரிய சித்தாந்தமாதல் காண்க.

ஆகவே, ஆன்மாக்கள் சுதந்திரவீனத் தாழ் விஞலே தமக்கு நித்திய உபகாரச் சார்பினையுடைய சுதந்திர கருத்தனுகிய சிவனை எண்ணுது அயர்ந்த குற் றமே மூலகன்மமெனவும் இருவினைப் பயன்களை அனுபவித்தற்கும் அவ்வனுபவத்திற்குக் கருவியாகிய பலவேறு வகைப்பட்ட உருவங்களுடன் எண்ணிறந்த சனனங்கடோறும் பிறந்திறந்து உழலுதற்கும் காரணம் இம்மூல கன்மமே யெனவும், இக்கன்ம மூலமான அறியாமையை யகற்றி நல்லறிவிஞல் வந்த விசார முடையவராகி, சடசேதனப் பிரபஞ்சங்களின் இயக்கம் முற்றும் அப்பெருமானது திருவருட் செயலேயெனக் கண்டு "சர்வம் சிவசமயம் சகத்" என்பதை இடையீடு படாத சிந்தையினராய்க் கொண்டொழுகி, அச்சாதன

வலியினலே ஆகாமிய கன்மமேருது தடைபடவந்த இரு வினை யொப்பினலே அக்கன்மத்தினின்றும் விடுதலைப் படுவாரென்பதும், அறியாமையை யகற்றி நல்லறிவின் விசார முடையராதற்கு ஏது சித்த சுத்தியே யென் பதும், சித்த சுத்தியும் அப்பெருமான் அருளிய கட்டளை யாகிய வேதசிவாகம விதி விலக்குகளை நன்குணர்ந்து நூலேணி மயிர்ப்பாலங்களின் வழி நடப்பவர் சீலமாய் நேர்நின் ரெழுகலாகிய வருண சம்ஸ்கார சமய சம்ஸ் காரங்களின் வழுவுரு அனுட்டிப்பாற் புண்ணிய விசேடத்தால் வருவதென்பதும், இவ்வகைகள் வாய்த்த வழியே முற்கூறியபடி கன்ம விடுதலைப் படுவாரென் பதும் இங்கே உய்த்து உணரற்பாலனவாகிய சற்காரி சித்தாந்தமாகும்.

# கூ. மாமாயை இலக்கணம்

மாமாயையாவது சிவபெருமானது பெருங்கருணையான சிற்சத்தியிற் பிரிந்த சுத்தப் பிரபஞ்ச மூலகாரணமாய், பின்ன சடசத்தியான தாரகப் பிரம சிதாகாசமென்று சொல்லப்படும். அது ஓமென்னும் பிரணவ ஓரக்கரமாயும், ஐந்தக் கரஞ்சேர்ந்த சமட்டியிற் பிரணவ சூக்கும பஞ்சாக்கரமாகவும், பிறவாகவும் விளங்கி குண்டலி அமலை விந்து சிவம் சுத்த வித்தை சுத்தமாயையென்னும் பல உபசார நாமங்களைப் பெறுவதாகவும் உளதாயினும் சடப்பொருளே யாகும். இவ்வாறாகச் சிவசார்பின் வியாபகசித்தாம் ஆன்மா, அநாதிபற்றிய மலமறைப்பால் ஞானக் கிரியைகள் தோன்றாது மூடமாய்க் கிடத்தலால் அவ்வான்மாவை மலத்தினின்றுங் கழற்றித் தானாகச் செய்யும் வல்லப உரிமைகள் தனக்கேயன்றி மற்றொருவருக்கு இன்மையால் அவர் அறிவைத் திறக்கும் பஞ்சகிருத்திய திருவுளங்கொண்ட சிவன், அநாதியே மலரகித தற்சுதந்திர அகண்ட ஞான சூக்கும சித்தாதலினால் தனக்கென உருவம் நாமம் தொழில் முதலிய யாதுமின்றிப் பசுபாச மனவாக்கு அதீத சிற்சத் பொருளான பரமானந்த சிவ சொரூப நிலையில் நின்றாராயினும், இச்சீவர்கள் பொருட்டுச் செய்யும் பஞ்சகிருத்தியம் உருவ நாமமின்றிச் செய்தல் சற்காரியம் ஆகாமையால் சர்வப் பிரபஞ்சங்களுக்கும் முதல் துணை நிமித்தமான மூவகைக் காரணங்களும் தானேயாய் நின்றும், தனக்கென மூலகாரணம் ஏதுமின்றி நிர்மல நிரா

லம்ப நிர்க்குண நிர் அவயவ பரிபூரண வஸ்துவாய், தன்னருளிற் பின்ன சத்தியாகிய சுத்தப் பிரபஞ்ச காரண சிதாகாச தாரகப் பிரமத்தைத் தன் சிற்சத்தியினுல் க்ஷோபித்து நடத்துஞ் செயற்கையால், அச்சத்தியே இலயபோக அதிகாரமான மூவகை உருவமாக அச்சிற் சத்தியை அபின்னமாய் உடையராவர்.

அச்சத்தி உருவமே தன்னுருவமாகச் சிவசத்தி சதாசிவ மகேசுர ருத்திர சிருட்ட சிவதத்துவேசனுய் அமர்ந்த பஞ்சகிருத்திய பதியாக நின்று முன்னம் தானுகவே செய்யும் பஞ்சகிருத்தியத்தால் பரையாதி பஞ்ச சத்திகளும் உன்மனு சமனைகளும் அவற்றின் காரிய பரநாத அபரநாத பரவிந்து அபரவிந்து கலாதத்துவ புவனங்களும், அணுசிருதர் அணுதர் அனந்தர் வியோம ரூபர் வியாபகர் ஆகிய ஐவரும், அவர் பிரிவாம் அனந்தேசுரர் ஆதார சிற்சத்தி காலாக்னேய கூர்மாண்டேய ஆடகேசுர உருத்திர பேதங்களும் சதாசிவன் ஈசன் பிரமன் ஈசுரன் ஈசானன் ஆகிய மூர்த்த வஸ்துக்களும், இன்னும் ஈசானி பூரணி பூர்த்தி வாமை மூர்த்தி யென்னும் அணுசதாசிவாதி சத்திபேதங்களும் உபாங்க வஸ்துக்களாகிய சூலம் மான் மழு வாள் வச்சிரம் நாகம் நீலோற்பலம் அங்குசம் நாதமணி அக்கினி முதலியவைகளும், லௌகிகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மந்திரம் என்னும் ஐவகை ஞானங்களும், நான்கு வேதமும் இருபத்தெட்டு ஆகமங்களும் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி யென்னும் நான்கு வாக்குகளும், நிவிர்த்தியாதி பஞ்சகலைகளும், பஞ்சபூத நிமித்த பிரமவிட்டுணு உருத்திர மகேசுர சதாசிவ

அபர கருத்தாக்களும், இடைகலை பிங்கலை சுழுமுனை நாடிகளும், சிருட்டகாரிய சிருச்சிய தத்துவமான மந்திர பதவன்ன புவன தத்துவ மந்திரேச்சுர பதேச்சுர வன்னேசுர புவனேசுர தத்துவேசுரர்களும், ஆதார தாங்கு குண்டலினி சர்ப்ப சோம சூரியாக்கினி சத்தி மண்டலங்களும், அணு சதாசிவ அட்டவித்தியேசுர மந்திரேசுர உருத்திர அணுபேதங்கட்குத் தனுகரண புவன போக காரணமாகச் சுத்தகால முதற் பிருதிவி ஈறுன முப்பது கருவிகளும் ஆகிய இவைகளை யெல்லாம் பரிணமித்து அழியாது படங்குடிலானுற் போல விரித்து ஒடுக்குவதான பரவிந்து சிதாகாச மகாமாயையும் சிவசத்தியின் விரிந்து ஒடுங்கும் பொருளேயாம்.

இச்சிவ சைதன்னியக் கலப்பான மகாமாயையைக் கொண்டு தானுகை இயற்றுஞ் சங்கற்ப காரியமாய் முன் விரிந்த உன்மனு கலையினுல் இயங்குவதாய சமனு கலா சத்தி காரிய ஞானக்கிரியா சத்தி பிரேகத்தால் இயங்கும் சிவ தத்துவங்களால் அசுத்த மாயையின் முதல் தோன்றிய கலை காலம் நியதி வித்தை ராகாதி வித்தியா தத்துவங்களையும் முன் மலத்தை ஒதுக்கிய கலையினுல் விளங்கிய ஞானக் கிரியைகளின் உயிர்ப்பு அறிவைக் கொண்டு சூக்குமையாதி வாக்குகளால் ஆன்ம தத்துவ ஞான கன்மேந்திரிய வாக்கு வசனித்தலாதிகளையும், மற்றும் மந்திரேசுர பதேசுரர்களால் மற்றைய தனுவாதி விரிவுகளையெல்லாம் காரியப்படுத்தியும் இவ்வண்ட பிண்ட மூலாதார தாபரமாய் ஆதார சத்தி அனந்த குண்டலி சர்ப்ப ஆதிகூர்ம ஆதிசேட காலாக்கினியாதி ருத்திரரால் தாங்கியும் மேல் சுழுமுனை நாடியான

மகாமேருவாதி மலைகளால் நிறுத்தியும் அவ்வத்தானங்களில் நின்று தரித்தும் இன்னும் பஞ்சபூத சந்திர சூரிய இயமானனுகிய அட்டமூர்த்தமான விசுவரூபமாய் நின்று ஆக்கி நிறுத்தி அழித்தலாதி பஞ்சகிருத்திய முறையினுல் சுத்தமாயா கிருத்தியத்தைச் செய்த பின், அநந்த ஸ்ரீகண்டாதி கருத்தரில் அதிட்டித்து நின்று மாயா பிரகிருதி காரியங்களைச் செய்தும் அயன் அரி யமன் என்னும் மூவரினும் அதிட்டித்து முத்தொழில்களைச் செய்தும் சுத்தப் பிரபஞ்ச கிருத்திய பிரேரக தாபரமான சத்திப் பிரிவிற்ருரக பிரணவ மகாமாயையால் அசுத்தப் பிரபஞ்ச காரியங்களை ஆக்கி நிறுத்திஞரெனவும், மலரகித உருவ நாம கிருத்திய காரணம் மலசகித உருவ நாம கிருத்திய காரணமாகச் சிவம் மலம் என்னும் இரண்டினுமே இருபிரிவினவாகச் சுத்த அசுத்தப் பிரபஞ்ச காரணமாகப் பரிக்கிரகித்து எடுத்துக் கொண்ட காரியப் பொருள்களாதலால் இவ்விருவகைக் காரண காரியங்களும் இல்லையாய் அழியவே முத்திபெற வேண்டுதலால் இம்மாயையும் விரிந்து ஒடுங்கும் காரிய அழிபொருளேயாம் எனவும் நிச்சயித்து உணருதலே சற்காரிய சித்தாந்தமாகும்.

"யாதுபா தானத் தென்று மிறைவன்ரு னிலய மாதி
பேத மூன் றுண்டா யாரும் பேசுதற் குரியனுஞன்
ஆதுமா மாயை மாயை குண்டலி யமலை விந்து
தீதிலா வாசி வித்தை சிவ மிவை பரியா யப்பேர்"

"ஆதியாங் காலந் தன்னி லனந்தகா ரியமுள் ளாக்கித்
தீதிலாக் குடிலை நாப்பட் சிறந்த தோர் ஞானந் தோன்றுஞ்
சோதியா யருவமாகி யுலகெலாஞ் சூழ்ந்து மேலாய்ப்
பேதியா வதற்கு நாம நாதமாம் பேசுங் காலே"

## எ. அசுத்தமாயா இலக்கணம்

சிவம் மலம் ஆன்மாவென்னும் வஸ்துக்கள் மூன்றுமே அநாதிகாரண நித்திய வஸ்துக்களாயும், அவைகளின் தம்மியற்கைச் சொரூப நிலையே நித்திய சத்தாயுளதாயும், தம் செயற்கைத் தடத்த நிலையே பொய்யாய்த் தோன்றி அழிவதாயும் உள்ளனவாம். இவற்றில் மலம் ஆன்மா என்னும் இரண்டும் தம்மியற்கைச் சொரூப நிலையுடையவாயினும் சட சேதனப் பிரபஞ்சங்களாதலாற் செயற்கைத் தடத்த நிலையைத் தாமே இயற்ற மாட்டாவாய்,சிவத்தால் ஆக்கப்படுதலை வேண்டுவனவாம். இனி மலரகித பரமானந்த சொரூப நிலையே அநாதி நித்தியாமாயிருத்தல் சிவசொரூப லக்கணமும் சத்தும் அசத்துமாகிய இருதிறனையும் அறிவதாய், சுதந்திர அறிவின்றி வியஞ்சக அறிவுடையதாய், அவ்விரண்டன் கண்ணும் நிலைபெற்ற அனுபவமுடையதாய் இருத்தல் ஆன்ம சொரூப லக்கணமும், அவ்வான்மாவின் ஞானக்கிரியைகளை இல்லையாகத் தன்னுளடக்கித் தானே மூட கேவலமாக்குதல் மலசொரூப இலக்கணமுமாம்.

இனி, தன்னவராகிய சீவர்களின் மலத்தைக் கழற்றி ஞானத்தை விளக்கித் தானாகச்செய்யும் கடமை மற்றொருவருக்கும் இன்றித் தனக்கே யுடைமையால் தடத்த நிலை பெறுவதற்கான ஏது மூலங்கள் ஒன்றுமின்றி நிர்மல நிராலம்ப நிர் அவயவமா யிருப்பினும் அவர் மேற்கொண்ட இச்சா பாசத்தால் தமது பின்ன

சடசத்தியாகிய சிதாகாசத்தையே பரிக்கிரகமாகக் கொண்டு அருட்சத்தி உருவதாரகமாய், இலயபோக அதிகார அருவ அருவுருவ உருவ நாமமுடையராய், பசு பாசங்களைத் தடத்த நிலையாக்கிப் பஞ்சகிருத்திய நடனுக்கிரகஞ் செய்யும் நிலை சிவதடத்த நிலையாகும். இவை பரிணமித்து அழியாது படங்குடிலானுற்போல விரிந்து ஒடுங்கும் தாரகப்பிரம காரண காரிய சுத்தப் பிரபஞ்சமென்று சொல்லப்படும். இனி ஆன்மா, தற் சுதந்திர ஞானமின்றி மலத்தின் அமிழ்ந்திச் சிவத்தை மறந்து தேடிய கன்ம மலத்தோடு பஞ்ச கிருத்திய பதியினுற் கொடுக்கும் மும்மலங்களுஞ் சேரப் பஞ்ச மலங்களோடுங்கூடிக் கன்மம் நுகருஞ் சகலநிலை ஆன்ம தடத்த நிலையாகும்.

அப்பதியின் சர்வஞ்ஞத்துவ வல்லபத்தால் திரிந்து தடத்த நிலையாகி மூடத்திற் கிடந்த சீவர்களின் அறிவை விளக்குங் கருவியாகிய தனு கரண புவன போக தத்துவ தாத்துவிகங்களுக்கு முதற் காரணமாக மாயையெனப் பெயருடையதாய், அப்பதியின் ஒளடத பரிக்கிரகமாய், அதன் காரிய கருவிகளால் அறிவை விளக்கி வினைகளை நுகருவித்துப் பாகப்படுத்தும் நிலை மலதடத்த நிலையாகும். இவை தோன்றி நின்று அழிதலை உடையனவாகும். ஆகவே, இம்மூன்றுமே நித்திய வத்துக்களாக வேதாகமங்களில் நிச்சயித்துக் கூறப்பட்டுள்ளனவாம். இவற்றிற் சூக்கும தூலமாகிய இருவகைச் சித்துக்களுமே காணப்பட்ட வஸ்துக்களாகவும், தூல சித்தாகிய ஆன்மாவின் சுதந்திர வீனத்தையும் ஒன்முகச்சேர்த்து, வஸ்துக்கள் மூன்முகச் சேர்க்கப்

பட்டன. இவை சொரூப நிலையிற் சிவம், ஆன்மா, மலம் எனவும், தடத்த நிலையிற் பதி பசு பாசமென வும் பேசப்படும். இவ்வாறு அநாதி காரண வஸ்துக் கள் மூன்றே உளவாகப் பேசப்பட்டிருப்பினும், அவற்றை ஒருவாறு நுணுகிப் பார்க்குமிடத்து, சூக்கும தூலமாகிய இருவகைச் சித்துக்களும் ஒன்றோ டொன்று நித்திய சம்பந்த முடையவாய் இருப்பினும், அத்தூல சித்தின் சுதந்திரவீனமே மலமாதலால், தூல பார்வையில் வஸ்துக்கள் இரண்டே உளவெனக் காணப் படவும், இத்தூல சித்தாகிய ஆன்மா, அநாதியே தன் ஞானக் கிரியை சடமலமாய்க் கிடப்ப, சூக்கும சித் தாகிய சிவம் ஒருவரே அநாதி ஏகநடன நிலையில் நின்ற வராய், பஞ்ச கிருத்திய திருவுளங் கொண்டு, தன் சர்வஞ்ஞத்துவ வல்லபத்தால் அம்மல மூடத்தை ஒரு புடை ஒதுக்கி, ஞானக் கிரியையை ஏகதேசத்தில் வெளி வரச் செய்து, ஆன்ம சத்தம் நிகழச் செய்தனர்.

அநாதியிலே நித்தியமாயிருந்த வஸ்து ஒன்றே உளதெனக் காணப்படவும், புறம், அகம், சைவ மாகிய முத்திறத்தால் விரிந்த, ஐம்பத்தாறு சமயங் களும், ஒன்றோடொன்று பிரிதலையாய் வேறுபட்டு உலையத் தாமே தனி முதலாகி, தமது பஞ்ச கிருத்திய பிரேரகத்தால் வெளிவரக் காட்டிய ஆன்மாவிற்கு, முற் சுதந்திர வீனமாகிய மல சம்பந்த உரிமை தவறாது, மலகாரிய பிரபஞ்ச புவன போகங்களை ஆக்கி, அவற் றோடு முன் பழகிய பழக்க வாசனை ருசியினால், அப்பிர பஞ்ச போகத்திற் கிடந்தழுந்தி, ஒருவாறு பாகம் வர. வினையின் நீங்கி, சத்தி பதிந்த, சிவஞான சீவன் முத்த

பரசாயுச்சிய நித்தியானந்த அனுபவம் பெற்ற சுகாதீத நிலையினும், மலசத்தம் நிகழாது உள்ளடக்கி, ஆன்மா சிவமென இருபொருளாய் நின்று, அவ்வான்ம சத்தமும் நிகழாது உள்ளடக்கி யிருந்தே சுகாதீதத்தில் அமிழ்ந்திக் கிடக்க, அநாதி ஏகானந்த நடன நிலையராய் நின்றபடி, அம்முத்திக் காலத்தும் தாம் ஒருவரே ஏக நடனராய் நின்று நித்தியானந்தம் ஊட்டுவாராதலால், வேதாகம புராண ஸ்மிருதி கலைஞானங்களாகிய சாத்திரங்கள் எல்லாவற்றாலும் அறுதி யிட்டுக் கூறப்பட்ட நித்திய காரண வஸ்துக்கள் இம்மூன்றுமேயாக, மற்றையவைகளை யெல்லாம் காரிய அழிபொருளாகவே துணிந்து நிச்சயித்துணர்தல் சற்காரியமாகும். இது இவ்வாறு நிற்க.

இனி, மலகன்மங்களோடு விரவிய அசுத்த மாயையாவது, முன் பேசிய வஸ்து மூன்றனுள் ஒன்றாகிய மலத்தின் காரியமேயாகும். இனி மாயை அநாதியே அறிவசைதலின்றி மல மூடத்திற் சடமெனக் கிடந்த சீவர்களின், மல வைத்திய ஔடத பஞ்ச கிருத்திய அனுக்கிரக காரண கருவியான பரிக்கிரக சத்தியாயிருத்தலினாலும், அதன் மூலமாகிய மலசொரூப நிலை, அழியாது நித்திய வஸ்துவின் ஒன்றாயிருத்தலினாலும், இன்னும் அநேகராகிய சீவர்கள் யாவரும், தங்கள் இருதிறன் அறிவில் ஒன்றாகிய சத்தை யறியும் ஒளியறிவு, அதனையின்றிப் பெறுதல் கூடாமையானும், அவ்வைத்திய சிவபிரானாற் கொடுக்கப்பட்ட அன்று முதல், எண்ணடங்காத ஊழிக்காலச் சர்வ சங்காரம் எத்தனை நடந்தாலும் தானழியாது நீரோட்டம்போலப் பிரவாகா

நாதியாய், முத்தி பரியந்தம் நிலைபேறாக நின்று, தன் காரிய தத்துவ தனுகரண புவன போகங்களை யெல்லாம் தோற்றுவித்து நிற்குந் தகுதியுடைமையாலும், கன்ம வினைப் போகங்களைப் புசித்துக் கழற்றிய இருவினை யொப்பின், மலபாக சத்திநிபாத சிவ தீட்சையினால் வருஞ் சிவஞானப் பெருங்கடலிற் காட்டுவான், காண்பான், காட்சி, காட்சிப்பொருளாகிய சதுட்டய சாதன கருவிகளின், கைவல்லிய மூலகாரண சிரோமணி விளக்கொளி போன்று விளங்கும் பெருமையுடைமையாலும், எங்கள் அருணந்திசிவாசாரிய குருசுவாமிகள் இவ்வசுத்தமாயா இலக்கணங் கூறிய இடத்தில்,

"நித்தமா யருவாயேக நிலையதாய்"

(சித். சூத். ௨. செய். ௫௨)

எனக்கூறிய பிரமாணத்தாலும், மாயையும் நித்திய காரண வஸ்துக்களுள் ஒன்றென்று சில சித்தாந்திகள் கூறுவார். அது பொருந்தாதவாறு மேற் காட்டுதும்.

மூலமல வைத்திய சிவபிரான் அம்மலத்தினின்றுந் திரித்து ஔடத பஞ்ச கிருத்திய ஆகந்துக பிரபஞ்ச காரண பரிக்கிரகமாக எடுத்துக்கொண்ட இம்மாயையை, சிவசத்தி பிரேரக அநந்தர் கலக்குழி, முதலிலே கலை தோன்றி அவ்வாணவத்தை யொதுக்கி அறிவை விளக்குதலாகிய அருளை அலர்த்தும் நியதியும் அந்தக் காலமும் அக்கலையோடு உடன் தோன்றிய அவதர நாமங்களாய் விளங்க, அக்கலையினால் மலமூடம் நீங்கி இயங்கியபோது ஞானசத்தி அறிவை விளக்க, அவ்வான்ம அறிவு ஏகதேசமாய் விளங்குதலால் அக்கலையினின்றும் வித்தை தோன்ற, அவ்வாறு தோன்றிய கலையும் வித்

தையும் அறிவையுந் தொழிலையும் விளக்க, போக சுகங்களின் இச்சை அவ்வறிவின் விளைவாதலால் அவ்வித்தையினின்றும் அராகதத்துவந் தோன்ற, இவ்வாறுன பஞ்ச தத்துவங்களாலாகிய கஞ்சுக சரீரதைப் பொருந்திப் போக ஏதுவானபோதும் புசிப்புக்கு இடமான தனு கரணாதி புவன போகங்களின்றி அவ்வியத்தமாயிருந்த மூலஸ்தானமாய் நின்ற இடம் பிரகிருதியாகையால், அவ்வித்தையினின்றும் மூலப் பிரகிருதி தோன்ற, அதன்மேற் கலை வித்தை அராகம் என்னுந் தத்துவங்களால் காரியப்படும் இச்சா ஞானக்கிரியை மூன்றும் ஒத்த இடம் பிரகிருதியாகையாலும், அதிலிருந்தே தனுகரணாதி தோன்ற வேண்டுமாகையாலும் இவையின் விகாரமே குணமாகும்.

இப்பிரகிருதியிலிருந்து குணதத்துவந் தோன்றிக் குண சரீரமாய், இக்குண விகாரமாய ஞான வேதுவே பிரதானமான சாத்துவிகமும் போக உன்முகத் தொழில் முயற்சியே இராசதமும், போக மோட்சத்திற்கு விக்கினமாய மல மூட அந்தகாரமே தாமதமுமாக இம்மூன்று குணங்களும் மலசகித தூல சித்தின் அம்சையாய் வேறுபட்டு விளங்க, அம்மூலப் பிரகிருதியின் அவ்வியத்த அவதாரத்தில் சித்தமும் அந்நினைவிலே நிச்சயம் வரும்போது அக்குண தத்துவத்திலிருந்தே புத்தி தத்துவமும், அப்புத்தியிலிருந்து தைசத வைகாரிக பூதாதி யென்னும் மூவகை அகங்காரமும், அவைகளில் சத்துவ குணத் தைசத அகங்காரத்தில் மன தத்துவமும், சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்நுவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்

தும், இராசதகுண வைகாரிக அகங்காரத்தில் வாக்குப் பாதம் பாணி பாயு உபஸ்தம் என்னுங் கன்மேந்திரியம் ஐந்தும், தாமதகுண பூதாதி அகங்காரத்தில் சத்த பரிச ரூப ரச கந்தமென்னும் விடய சூக்கும தன்மாத் திரை ஐந்தும், அப்பஞ்ச தன்மாத்திரையினின்றும் வெளியாதி பஞ்ச பூதங்களுந் தோன்ற, இவ்வாறு கூடிய தத்துவங்கள் முப்பதோடுஞ் சேரப் புருடனையுங் கூட்டி அப்போக உன்முகமான புருடன் அதனை உண்ணுந் தனுவிற்கும் அத்தனுக்கள் வசித்தற்கு இடமான அண்ட புவன மாட கூட தானங் கட்கும், அப்போக காரியமான போக்கியப் பொருள்கட்கும் ஏதுவாய்க் காரியப்படும்.

இப்பஞ்ச பூதங்களின், புற விரிவுகளாகிய கருவி கள் அறுபதும் மற்றைய புறப்பொருள் விரிவுகளு மெல்லாம் அப்பூத பஞ்சீகரணத்தால் விளையவேண்டு மாதலால், மயிர் முதல் தசையீறான பிருதிவியின் குணங் கள் ஐந்தும், நீர் முதல் சளியீறான அப்புவின் குணங்கள் ஐந்தும், போக்கு முதல் பரிசமீறான வாயுவின் காரியங் கள் ஐந்தும், ஆகாரம் முதல் சோம்பலீறான தேயுவின் காரியம் ஐந்தும், குரோதம் முதல் மார்ச்சரியமீறான ஆகாயத்தின் காரியங்கள் ஐந்துமாகிய இருபத்தைந்து குணங்களும், அண்ட பிண்டம் எவ்விடங்களினுஞ் செறிந்து பரத்தலின் பஞ்ச பூதங்களுக்கும் ஒன்றுக்கு ஆயிர கோடியாய் ஐயாயிர கோடியும், மீட்டும் இருபத் தையாயிர கோடியுமான அண்டங்களாய் விரிந்தன எனவும் இன்னும் பஞ்ச தன்மாத்திரையின் தூல மாகிய விண்முதற் பிருதிவியீறான பூதங்களின் குணங்

கள் ஒன்று முதல் ஐந்தீறாக விரியினும் ஒரு பூதத்துக்கு ஒவ்வோர் குணம் நிலைபேறாக உளவெனவும், இப்பூதங்கட்குப் புலன்கள் காரணமும் காரியமுமாய் விளங்கும். விண் முதற் றோன்றிய நான்கு பூதங்களின் கீழ் நிலையினின்ற பிருதிவி தன்னின் மேலாய அப்புவின் காரியங்களைத் தன்னுள்ளடக்கி மேல் வியத்தமாய் நிற்றலால் நீர் உயர்ந்ததல்லவாம் எனவும், இனி இவ்வாறு கூடிய அகக் கருவிகளான தத்துவங்கள் முப்பதினோடும் புருடனைக் கூடச் செறித்து இந்தத் தத்துவங்களைக் காரியப்படுத்தும் பிரேரக கருவிகளான சத்தி காரிய சுத்தசிவ தத்துவங்களுக்குங் காரணமாய், இம்மாயை காரியமான மாமாயையும் தன் காரியமான சூக்குமையாதி நான்கு வாக்குகளுநஞ் சிருட்ட சிவதத்துவங்களும் அச்சிவதத்துவ காரியமாகச் சத்த கோடி மகா மந்திரங்களும், பராசத்தி சூக்கும வடிவாகிய அகர ஆகார உகர ஊகாரமீறாகிய விந்து நாதங்களிற் பிறந்த அக்கரங்கள் பதினாறும், இன்னும் அச்சத்தியின் தூல தேகமாகிய ககர முதல் க்ஷகரமீறான முப்பத்தைந்துஞ் சேர்ந்த வன்னம் ஐம்பத்தொன்றும், பிரணவம் முதல் இரண்டக்கரந் தொடங்கி எட்டக்கரம் வரையுந் தொடரும் பதம் எண்பத்தொன்றும் இப்பத நாயகருக்கு முதலாக விளங்கும் பதினொரு மந்திரங்களும் இப்பதங்களின் மேற்பொருந்திய இருநூற்றிருபத்து நான்கு புவனங்களும் அப்புவன கர்த்தாக்களுமாகிய உருத்திர தலைவருமாய்ச் சேர்ந்த சிருச்சிய சிவ தத்துவம் ஐந்தையுந் தன்னுளடக்கும் நிவிர்த்தியாதி பஞ்சகலைகளுந் தோன்றும்.

அவ்விந்துவினின்றுந் தோற்றி முற்கூறிய அசுத்த தத்துவங்கள் முப்பதினுக்கும் பிரேரக கருவியான சிவ தத்துவம் ஐந்தனோடுஞ் சேர்ந்த தத்துவங்கள் முப்பத்தைந்தினும் வியாத்தமாய், சட் அத்துவாக்களாகி நின்று சஞ்சித வினைகளைக் கட்டி யூட்டுவிக்க முன்னைய சிருட்ட சிவ தத்துவங்கள் ஐந்தும் கலையாதி வித்தியா தத்துவங்களைக் காரியப்படுத்த, வாக்கு நான்கும் வசனாதிகளை விரிக்க, சூக்கும பஞ்சாக்கரங்கள் அந்தக் கரணங்களினின்றும் அறிதலைச் செய்ய, பஞ்சப் பொறிகளையும் பஞ்ச பூதங்களையும் மற்றைய ஐந்தக்கரங்களும் இயக்க, பூதபஞ்சீகரண புறவிரிவுகளை யெல்லாம் பத புவன நாயகர்களாலும் நடத்திய பிரபஞ்ச காரியங்களுக்கெல்லாம் முதற்காரணமாகவே யுள்ளது எனவும், இனி இவ்வாறு காரியப்பட்ட அசுத்த தத்துவங்கள் முப்பதும் இவையோடு சேர்ந்த புருடனும் இவற்றைக் காரியப்படுத்தும் பிரேரக கருவியான சுத்த சிவதத்துவம் ஐந்தோடுஞ் சேர்ந்த தத்துவம் முப்பத்தாறும் இவ்வாறு சகலாவத்தை அடைந்த சீவர்களுக்குச் சுத்தா சுத்தானுபவ போகதானமாய் இருக்குமென்க.

இப்படிச் சகலாவத்தையில் அறிவு விளங்கிப்போக உன்முக புத்தி பண்ணும் பருவம் அப்புத்தி தத்துவத்திலிருந்து தன்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் என்பவும், அதன்ம குணம் நாலும் ஆகிய இவ்வெண் குணங்களினின்றும் கரண காரிய இந்திரியமான மூவகையான பாவம் ஐம்பதுந் தோன்றும். அவற்றில் அந்தக்கரண ஞானேந்திரிய கன்மேந்திரியங்களான கரணங்கள் பதின்மூன்றும் பஞ்ச தன்மாத்திரை பஞ்ச

பூதமென்னுங் காரியங்கள் பத்தும், ஞானேந்திரிய கன்மேந்திரியம் மனமென்னும் பதினொன்றும், அகங்காரம் எட்டு, புத்தி எட்டாகிய பதினாறுமாய்க் கூடிய அந்தப் பாவம் ஐம்பதில் புத்தி குணங்களாய் விரிந்த தன்ம அதன்ம எண் குணங்களுள் தன்ம குணமான ஞானம் சாத்துவிக குணத்தாலும், மற்றைய தன்ம குணம் மூன்றும் இராசத குணத்தாலும், இவைக்கு எதிராகிய அதன்ம குணம் நான்கும் தாமத குணத்தாலும் விரிய, இவ்வெண் குணங்களில் தன்மம் பத்து, அஞ்ஞானம் எட்டு, வைராக்கியம் ஒன்பது, ஐசுவரியம் எட்டு, அதன்மம் பத்து, அஞ்ஞானம் எட்டு, அவைராக்கியம் ஒன்பது, அனைசுவரியம் எட்டு ஆகக்கூடிய புத்தி குணம் எழுபதும், இன்னும் பிசாசம் முதல் பிராமணீறாகிய தெய்வ யோனி பேதங்கள் எண் வகைக்கும் இவ்வெண் குணங்களால் ஒவ்வொன்றுக்கு எட்டு முதல் அறுபத்து நான்குவரையும் விரிய வந்த ஐசுவரிய குணங்கள் இருநூற்றெண்பத்தெட்டும், பின்னும் இக்குணங்களில் ஒன்று முதல் ஏழு வரையும் எண்வகையால் விரிந்த முப்பத்தாறு எழுபத்திரண்டு நூற்றெட்டு நூற்றுநாற்பத்துநாலு இருநூற்றுப் பதினைந்து இருநூற்றறுபது ஐம்பத்திரண்டு ஆகக்கூடிய குணபேதங்கள் ஆயிரத்தெட்டினையும், பசாசம் முதல் எண் வகை யோனிபேதங்கட்கும் கூறிய ஐசுவரிய குணபேதங்களே இருநூற்றெண்பத்தெட்டுங் கற்பித்து இருக்கையால் பிரதான குணங்களாகிய இந்த உஅஅ-ம் தன்மாத்திரைகளாய் விரிந்த குணம் எழுபதுங் கூடிய முந்நூற்று ஐம்பத்தெட்டு குணங்களே இம்மனுடரிடத்திற்

குறையாது நிறைந்துள்ளவாயினும், இவைகளின் மூல மாகிய புத்தி குணங்கள் எட்டினுள்ளும் இவ்வெட்டை யும் உள்ளடக்கிய நற்குணந் தீக்குணமாகிய இரண்டுமே பிரதானமாகப் பிரியாது இவ்வுயிர்கள் தேடிய கன் மானுபவங்களைப் புசித்துக் கழற்றிய இருவினையொப் பில் விளையும் சத்திநிபாதம் வரையும் ஒழியாது நிலை பேறுக நிற்குமெனவும், இவைகளில் தேவ நிந்தனை முதலிய அதன்ம குணங்களையே விசேடமாகப் பொருந் திய சீவர்கள் யாவராயினும் யாதனு சரீரத்தோடு நரகத் துன்பத்திற் கிடந்து அழுவார்.

அவற்றிற்கு எதிராகிய தன்ம குணங்களில், தன்ம வைராக்கியத்தால் உலோகாயத புத்த சமண ஞானமும் உண்டாகும். அவ்வுலோகாயத சமயத்தில் மாயாவாத வேதாந்தம் முதலாக விரிந்த அநேக வாத சமயங்களில் அனுசரித்தவர், நெடுங்காலம் சனன மரண விடுதலை யின்றிச் சக்கரத்திற் சுழன்று பின் கரையேறுவார். ஞான வைராக்கியத்தோடு சிறிது அருளுஞ் சேரு மாயின் கன்மயோக சமய சாதனம் உடையராவார். இவ் வாறு புத்தியினின்றும் பிரிந்த குணபேதங்களால் விரிந்த புறம் அகம் சைவமென்னும் முத்திறங்களால் வேறுபட்ட முந்நூற்றறுபத்துமூன்று சமயங்களையும் தன்னுளடக்கிய ஐம்பத்தாறு சமயங்களினின்றும் அனுசரித்தவராவர்.

அவைகளினின்றுந் தப்பிய சாதன விசேடத்தால் புண்ணிய பாவந் துலையொத்து, சத்திநிபாதம் பெற்ற சிவஞான உணர்வினால் பஞ்சபூதப் பழிப்பு பொறியற வுணர்தல், அந்தக்கரண சுத்தி, கலாதி நிராகரணம்,

சுத்த தத்துவ தூஷணம் என்னும் பஞ்ச சுத்தியின் முறையினால் இப்பஞ்ச பூதங்களின் சொரூபம்-சதுரம், பிறை, திரிகோணம், அறுகோணம் வட்டமாகவும், சுபாவம்-கிடத்தல், பரத்தல், வளர்தல், நிறைதல், தரித்தலாகவும், நிறம் - பொன்மை நீலாதியாகவும், குணம் - தரித்துப் பதஞ்செய்து ஒன்றுவித்துத் திரட்டி இடங்கொடுத்தலாகவும், விசேடம்-நவரத்தினாதி, நீராதி, உதராக்கினியாதி நாடிகளிற் செல்லும் வாயுவாதி குரோதாதியாகவும், வியாபக வியாப்தி - அண்டம் பிரகிருதி மாயை சதாசிவம் சத்தி அளவாகவும், காட்சி - இவை பிரபஞ்சமெனக் காண்டலாகவும், தரிசனம் - இவை சடமென உணருதலாகவும், சுத்தி-இப்பூத பஞ்சீகரண புறக் கருவிகளாலாகிய அண்ட பிண்டங்களை யெல்லாம் பொய்யெனக் கண்டு கழித்தலாகவும், இவ்வாறு பிரபஞ்ச பஞ்சபூதப் பழிப்பு நீங்கிய அவதாரம், நான்கு வாக்குகளால் இயங்கும் கன்மஞான பஞ்சப் பொறிகளையும் முற்கூறியபடி சொரூப சுபாவ சுத்தியினால் தசகாரியங்களையும் உணர்ந்து இவையுஞ் சடமாமெனக் கண்டு கழித்து அதன்மேல் அந்தக் கரணங்களையும் தானே இயங்கமாட்டாத சடமெனக் கண்டு நீக்கி, மேல் அகக்கரண கலாதிகளும் சத்திகாரிய சிவதத்துவ பிரேரகத்தால் காரியப்படும் சடப்பொருளேயாம் என்பதைத் திடமாக உணர்ந்து, இவ்வசுத்த காரிய கருவிகளை யெல்லாம் கழித்து நீக்கிய பின்னரும் இவைகளை யெல்லாங் காரியப்படுத்தும் காரண சைதன்னிய சிவ தத்துவங்களே பெரும் பொருளெனக் கண்டபோதும், அச்சுத்த தத்துவங்களின் சொரூபம் - நின்மலமாய், சுபாவம் - நித்தியமாய், உருவம் - வித்தைகள் வித்தை

யீசர் சதாசிவாதி பத மூர்த்திகட்குந் தனுகரணாதி ஆவதுமன்றி விஞ்ஞானகல பிரளயாகல் அபர முத்தர்க்கும் தனுகரணாதி கொடுப்பதாய், விசேஷ சிவ அதிட்டான தானமாய், குணம் - அசுத்த மாயா காரியங்களை நடத்தலாய், வியாப்தி - விந்து சத்தியளவாய், வியாபகம் - சிவ வடிவளவுமாய், நிறம்-படிகமாய், தரிசனம் - இவையும் சிவசத்தியின் இயக்கமெனக் காண்டலுமாய், சுத்தி - இதனையுஞ் சடமெனக் கண்டு கழித்து இவற்றையும் நீங்கி நிற்பதாய், இவ்வாறு சுத்த தத்துவங்களையும் தானே இயங்கமாட்டாத சடமெனக் கண்ட சிவஞான பக்குவரின் பாச தத்துவ விடுதலைப் படும் வழியாக முன்னே கூறிய பஞ்சகிருத்திய உற்பத்தி முறைப்படி சிவகிரியாசத்தியின் தொழில் அறுதலாகிய பஞ்சகிருத்திய விடுதலையில், அச்சிவ சத்தியால் இயங்கும் சிருட்ட சிவதத்துவங்களின் பிரேரகம் ஒழிதலால், அக்கலை வித்தை ராகமாதி தத்துவங்களால் காரியப்படுஞ் சீவரின் ஞானக் கிரியைகள் சீவியாது செயலறநிற்க, அந்த ஞானக்கிரியைகளால் விரிந்த அந்தக் கரணங்கள் தொழிற்படா தொழிய, அப்புறக் கரணங்களாற் செல்லும் பொறிகள் ஐந்தும் கவருதலின்மையாற் புலன்கள் ஐந்தின் போக பிரயோசனங்கள் இல்லையாய் ஒழிந்து அழிவனவாக, இந்தப்படி ஐவகைத் தத்துவங்களும் ஒருங்கே ஓரே சமுகத்திற் சிவசத்தி பிரேரகம் அறுதலாகிய ஒன்றினாலேயே அழிந்து நீங்கிவிடுதலாகிய பிரபஞ்சகாரிய தத்துவங்களின் இயற்கை இதுவெனக் காணலே தத்துவ ரூபமுமாம்.

அத்தத்துவங்களையுந் தன்னையும் பிரித்துவேறாகக் காணுதலாகிய தத்துவ தரிசன ஆன்ம ரூபமும்,

அவ்வான்ம தரிசனத்திற் காணப்படும் சிவரூபமும், அத்தத்துவ சுத்தி ஆன்ம சுத்தியாகிய சிவதரிசன சிவயோகமுமான தசகாரிய சாதனவழி ஒழுகிய மோட்ச இச்சுக்களின் சனன ஏதுவான பாசவிடுதலைப் படும் முத்தி பரியந்தம் நீங்காது நின்று, மும்மலங்களை யும் தனது வேகத்தினுற் கழற்றிக் கால தத்துவம் விட்டு நீங்க, அந்தப்படி பாசங்கழன்ற பரிசுத்த ஆன் மாக்களுக்கு மேல்வருஞ் சிவப்பேருகிய சிவானந் தத்தை நித்தியானுபவமாக நியமித்து அப்பால் நியதி தத்துவம் விட்டு நீங்க, மேல் கலை வித்தை ராகமென்னுந் தத்துவங்கள் மூன்றும், அவரின் ஞானக்கிரியை களை விளக்கிக் கரண இந்திரிய விடய போகங்களின் எல்லை முடிந்த இருவினையொப்பளவில் நின்று நீங்க, அதன்மேற் சுத்த கலாதிகளால் இயங்கிய அந்த ஞானக் கிரியைகள் பக்குவ முதிர்ச்சியால் அப்பெருங்கடலாகிய சிவஞானத்தோடு ஏகீபாவமாய்க் கலந்து உள்ளடங்கும் வரையும், அச்சுத்த கலாதிகள் நின்று அப்பால் நீங்க, அவ்வான்ம ஞானக்கிரியைகள் அநன்னியமாய் ஒன்று பட்டு, அச்சிவஞான மயமாகவே விளங்குமாதலால், சத்துப் பொருளாகாது, இந்திரசாலம் கனவு பேய்த் தேர் முதலிய உவமைகளால் இயைக்கப்பட்டு, நிலைப் படாது சடுதியிற் பொய்யாய்த் தோன்றி அழிவதான பொய்ப்பிரபஞ்ச காரியகாரணமானது எனவுங் கூறப் படுதலானும், இன்னும் அவர்தாமே

"வசித்திட வரும்வியா பியெனும்வழக் குடைய ஞகி
நசித்திடா ஞானச் செய்தி யகாதியே மறைத்துநிற்கும்
பசுத்துவ முடைய ஞகிப் பசுவென நிற்கு மான்மா"

(சித். சூத். ௪. செய். ௨௦)

எனவும்,

"அநாதி கேவலந் தன்னுண்மை" (ஷ யுரை)

எனவும், கூறியவாற்றானும் இன்னும் இம்மாயையே மலமன்றி வேறாய் மலமென ஒரு வஸ்து இல்லை யெனக் கூறும் வாதிகளுக்கு உத்தரங்கூறும் அவதாரத் தில், ஆன்ம அறிவை மறைக்குந் தொழில் மலத் துக்கு உளதாகவும், அவ்வறிவை விளக்குந் தொழில் மாயைக்கு உளதாகவும், ஒளியும் இருளும் போல ஒன்றுக்கொன்று எதிராகிய பகைப் பொருள்க ளாகவும் பேசப்பட்டுள்ள இம்மாயை, அவ்வான்மா வோடு அத்துவிதமாய்ப் பிரிபடாது ஒற்றுமைப்படும் பொருளாக அநாதியே உளதாயின், அவ்வான்ம ஞானக் கிரியை மறைபடாது விளங்கியபடியே இருக்கவேண்டிய தால், இவ்வாக்குகள் ஒன்றோடொன்று முரணி, கேவலந் தன்னுண்மையெனக் கூறிய சித்தாந்த சற்காரியம் பிழைபட, அவ்வான்மாவின் உண்மை சகல நிலையே அநாதியெனக் கொள்ளவேண்டி வரும்.

இவ்வான்மா தன்னியற்கையின் வியாபகமுடைய தாயினும் சுதந்திரவீன தூல சித்தாக வியஞ்சகம் இன்மையால், மலத்தின் அமிழ்ந்தி ஞானம் மறைதலால், தன்னுயிர்த்துணையாகிய சிவத்தை மறந்த குற்றமே மூல கன்மமாக, அதன்காரியவினைகளுக்கு அமைத்த போகங் களைப் புசிப்பித்துத் தொலைத்தே அம்மலத்தினின்றுங் கழற்றித் தாமாகச் செய்யவேண்டிய சற்காரிய முறை தவறாது, அம்மல நோயைக் கழற்றும் வைத்தியநாத சிவபிரான், பஞ்ச கிருத்திய ஆதிகாலத்தில் தன்கை ஔடத பரிக்கிரக சத்தியாக எடுத்துக்கொண்டமை யாலும், ஔடத பரிக்கிரகமென்ற சத்தார்த்தங்களா

லும், இம்மாயை அநாதி காரணமாகாது, ஆதிபஞ்ச கிருத்திய காரணமாய் அக்கிருத்திய விடுதலை அந்தத் திற் காரிய அழிபொருளாகவே நிச்சயிக்கப்படுவதாம்.

இன்னும் சீவர்கள் அநேகராதலால் அவரின் மலவைத்திய கிருத்தியம் சதாகாலம் வேண்டப்படுத லின், அவ்வான்ம இளைப்பாற்றும் பொருட்டு அவராற் செய்யப்படும் அவாந்தர சர்வசங்கார காலத்தில் தனு கரண புவன போக்கியப் பொருள்களெல்லாம் ஒருசேர அழியப்பட்டாலும் அவற்றின் காரணமாகத் தான் அழி யாமல் நின்று பின் புனர் உற்பத்திக்கு ஏதுவாக அவை களையெல்லாம் மீட்டும் கொடுத்துச் சனனங்கடோறும் இடைவிடாது நீரோட்டப்பிரவாகம்போலத் தொடர்ந்து நிற்குமுரிமை ஒன்றளவில் ஆசிரியர் நித்தமாயென் னும் உபசார வசனத்தைக் கொடுத்தமையினால் அவாந் தர (இடை) அநாதியெனப் பொருள் கொள்ளுதலே சற் காரியமாகும். அவ்வாறு கொண்டாலும் இவ்வான்மா மலபாகம் அடைந்து இருவினையொத்த சத்திநிபாத முத்தியந்த தத்துவநாச இறுதிச் சர்வ சங்கார காலத் தில், காரணங் கிடக்கிற் காரியந் தோன்றுமென்னும் சற் காரிய முறை தவறாது, தனுகரணாதி தத்துவ காரியங்க ளோடு அவைகளின் காரணமான இம்மாயையும் ஆசிரிய முறை அறுவகைத் தீட்சைகளால் ஒருசேரச் சங் கரித்துப் பின் சுத்தாவத்தையின் நிறுத்துவாராத லால், சீவரின் அநாதி மூல கேவலத்தில் நின்றும் விடு தலைப்படுத்தும் பஞ்ச கிருத்தியபதி, ஆதிகாலத்திலே உண்டாக்கிக் கொடுத்து, முத்தியந்த காலச் சுத்த நிலையில் அழித்துவிடுதலால் ஆதியும் அந்தமுமுடைய

காரிய அழிபொழிளாகும் என்பதை நன்றாய் யூகித் துணர்ந்து அநாதி சகலம் அநாதி கேவலமென ஆன்ம நிலையை இரண்டுபட முரணும் பின்னங்களை யொழித்து நித்தமாயெனக் கூறிய ஆசிரிய திருவாக்கின் அருத்தம் கால நீட்டிப்பைக்கொண்ட அவாந்தர நித்தியமெனச் சித்தாந்த சமாதான சற்காரியப் பொருள் கொள்ளு தலே சிவஞான உணர்வுடையோர் கடமையாகுமென என் சிற்றறிவிற் கொண்ட ஆராய்ச்சித் தெளிவாம் என்க.

இன்னும் சற்காரிய முணர்ந்த மெய்கண்ட சிவா சாரியர்,

> "நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
> சொல்லிற் புதிதன்று தொன்மையே"
>
> (சிவ. போ. சூத். உ வெண். எ)

என்னும் உவமை முகத்தால்,

> "வல்லி மலகன்ம மன்றுளவாம்" (ஷை)

எனக் கூறிய திருவாக்கையே பிரமாணமாகக் கொண்டு சிலர் மும்மலங்களையும் அநாதி காரண நித்திய வஸ்துக் களேயெனப் பொருள் கூறி மலேகுவார். ஆனால் அதனை ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இம்மும்மலங்க ளும் முளையுந் தவிடும் உமியும்போல எனவே, அவ்வா சிரிய திருவாக்கினாற் கூறப்பட்டுள்ள உண்மைப் பொருளை மிக நுணுகிப் பார்க்கும்போது, நவலோகத் தின் ஒன்றாகிய செம்பிற்கும், நவதானியத்தில் ஒன்றாகிய நெல்லுக்கும் தடையாக உள்ளது களிம்பும் உமியுமாகிய ஒவ்வொரு வஸ்துவெனக் காட்டி, அவ்விரண்டனையும் ஒருசேர உவமைப் பொருளாக வைத்து, உவமேய

மாகிய ஆன்மாவுக்குத் தடையாயுள்ளது இதுவெனக் காட்டி இருத்தலாலும், இன்னும் மலம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் உமி முளை தவிடாகிய மூன்றனோடும் இயைத்து, ஆணவமலத்திற்கு உமியையும், கன்மத்துக்கு முளையையும், மாயைக்குத் தவிட்டையும் உவமையாகப் பெரியோர்கள் நிச்சயித்து எடுத்துக் கொண்டாராதலாலும், இச்செய்யுளிலே ஓர் உவமையைக் காட்டியஉவமேயத்தோடு வேறுஇரண்டனையுஞ்சேர்த்து அன்றே யுள்ளனவெனக் கூறிய ஆசிரியர் திருவாக்கின் உள்ளக்கிடக்கையின் அமைந்த சித்தாந்த உண்மைப் பொருளைச் சிவஞானத்தால் மெய்ந்நிலைகண்ட பெரியோர்களே சிந்தித்து உணருவார்; பசுஞான பாசஞானங்களோடு உழலும் நம்மவரால் யூகித்தறிதல் கூடாவாம். ஆயினும் அவ்வுமியோடு சேர்ந்த அரிசியே முளைபெறும் என்பதும், அவ்வுமி தவிடு கழன்ற அரிசி முளைபெறாதென்பதும், அவ்வுமியின் நுண்ணிய ஒரு பகுதியே தவிடென்பதும், அவ்வுமியினால் விளைந்த பிரயோசனமே முளையென்பதும் ஆகிய இவ்வுவமான உவமேயப் பொருள்களை இயைத்துப் பார்த்தால் அவைகளின் உண்மைப் பொருள்களை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

இனி, அவ்வரிசியை மூடியிருந்த உமியைக்கழற்றி அவ்வுமியின் ஒரு பகுதியின் நொறுங்கலாய அவ்வரிசியினின்றும் பிரிபடாது அத்துவிதமாய் ஒன்றுபடச் செறிந்திருந்த தவிட்டையும் அதன் காரியமாய் விளையும் முளையையும் தீட்டி அழிப்பவர்போல, மூலமலவைத்தியநாதன் இவ்வான்ம வியாபகத்தை மூடி

யிருந்த மலத்தைக் கழற்றி அம்மல நொறுங்கலாய ஆன்மாவோடு பின்னி வேறற அத்துவிதமாய்க் கலந்திருந்த இம்மாயா காரண காரிய தத்துவ கருவிகளால் ஈட்டிய கன்ம முளையையும் வேரோடு இல்லையாய்க் கழித்துத் தாமாந் தன்மையைக் கொடுத்தலாலும், அவ்வநாதி மலத்தின் காரியமாய் விளைந்த கன்மமும் அக் கன்ம போகத்தை யூட்டிக் கழிக்கும் ஔடத கருவி யான தனுகரண புவன காரணமான இம்மாயையும் ஆகந்துக மலங்களாய் இடையிலே கொடுத்து இடையிலே அழிக்கப்படும் காரியப் பொருளாகையால் மெய் கண்ட சுவாமிகள் நெல்லிற்கு உமிபோலும் உவமை அணைத்துக் கூறிய உவமேயமான ஆணவமலம் ஒன்றே காரண வஸ்துக்களின் ஒன்ருய், அநாதியிலுள தாகவும், இனி உவமை சேராது அதன் அருகே அணைத்த வல்வி கன்மமென்னும் இரண்டும் அம்மல காரியப் பொருள் களாய் இருப்பினும் மல வைத்திய கிருத்திய ஆதியிற் பரிக்கிரகமாக எடுத்துச் சீவருக்குக் கொடுத்த அன்று முதல் முத்தி பரியந்தம் அழியாது நெடுங்காலம் நீட்டித்து நிற்கும் உரிமையைக் கொண்டு, உபசார வசன மாக அவ்வநாதி சத்தத்தை அணைத்துவைத்துக்காட்டிய உட்சித்திரம் உணர்ந்தவர் அம்மூன்றனுள் ஆணவம் ஒன்றையே அநாதியெனவும், மாயை கன்மம் இரண்டையும் பிரவாகாநாதி யெனவும் பொருள் கொள்ளுதலே சற்காரிய அருத்தமாகுமெனச் சிறியேனுடைய புல்லறிவிற் படுகின்றது.

இன்னும் ஆகந்துக மலமெனக் கூறப்பட்ட இம் மாயை அநாதி வஸ்துக்களின் ஒன்ருயிருந்து ஆன்மாக்

களுக்கு வேண்டிய காலத்திற் பின்வந்து கூடிநின்று கன்மானுபோகம் முடிந்த முத்திக்காலத்தில், அந்த ஆன்மாவினின்றும் விலகி, மற்றைய பெத்தான்மாக்க ளோடு பிரியாது சேர்ந்து கலந்து சதாகாலம் நிற்றலால் ஒருகாலும் அழியாத நித்திய வஸ்துவேயா மெனவும் சிலர் கூறுவர். அது எவ்வாறென ஆராயுமிடத்தில், எங்கள் ஆசாரிய சுவாமிகள் இவ்வுயிருக்கு உவமையாய் அணைத்த நெல்லானது ஒவ்வோர் அரிசியும் தனித்தனி உமியினால் மூடப்பட்ட தவிடு செறிந்த நெல்லாய் இருந் ததே யன்றித் தனித்தனி அரிசியாய் இருந்ததேயில்லை. இனி அதனை ஒருவாறு உமி மூடாது அரிசி தனியே இருந்ததெனத் தாபிப்பாராயினும் ஓர் அரிசியிற் பற்றி யிருந்த உமி தவிடுகளை அதனில் நின்றுங் கழற்றி மற்றொரு அரிசியிற் பொருத்துவார் யாருமில்லை. இனி மேல் துணிந்து பொருத்துகினும் அது பொருந்துவதோ இல்லை. ஒருகாற் பசைவைத்துப் பொருத்தி அமைத் தாலும் அவ்வரிசி முளைப்பதோ இல்லை. அதுபோல வும், ஒருவனுக்குவந்த நோய்க்கு இசையக் கொடுத்த ஒளடதம் அவன் உடலிற்புகுந்து அந்நோயைக் கழற்றி அதனோடு தானும் அவ்வுடலிற் சமித்து அழிந்து போனதேயன்றி மற்றொருவனுக்கு வந்த மறுநோய்க்கு ஒளடதமாக அவ்வைத்தியன் கையில் வந்ததும் இல்லை; இனி வருவதும் இல்லை. அதுபோலவும், சர்வஞ்ஞத்துவ கருத்தனான மூலமல வைத்தியநாத பஞ்சிருத்திய சிவ பிரான் கரணங்களால் இயற்றும் குயவனாதி சீவர்களைப் போலாகாது, சங்கற்ப மாத்திர கிருத்தியத்தால் ஒரு ஆன்மாவின் மலநோய்க்குக் கொடுத்த ஒளடதமான

மாயா காரண காரியங்கள்போல் எவ்வகைப்பட்ட சீவர்கள் யாவருக்கும் அச்சங்கற்ப கிருத்தியமான ஒரே முறையிற்றானே கொடுத்ததாய் முடியுமேயன்றி இம் மாயை மற்றோர் ஆன்மாவுக்கு இசையாது.

வீணே அழிவதென்றே பெறப்படுகின்றது. இதுவுமன்றி அவ்வாறு சீவர்கள் யாவருக்குங் கொடுபட்டமையால் அம்மலநோய் நீங்கி முத்தி யடைந்த ஆன்மாவினின்றும் கழித்த மாயா ஔடதத்தை வாங்கிவைத்தற்கு இடமாக வேறுஆன்மாக்கள் இன்மையாலும் ஆன்மாக்களோடு ஒற்றுமைப்படக் கலவாது தனிப்பொருளாய் நிற்றலுங் கூடாமையாலும், இதனை எடுத்துக் கொடுத்த சிவன் தன்னோடு சேர்த்துக் கொள்ளவுங் கூடாமையாலும், அவ்வவ்வான்மாக்களின் வினையொத்த பக்குவ தீட்சா சத்திநிபாத சர்வ சங்கார காலத்தில் தம்மாற் கொடுக்கப்பட்ட இம்மாயா காரண பிரபஞ்ச காரிய அகம்புறமான தத்துவங்கள் தொண்ணூற்றையும் முதலறத்தாமே தகித்துச் சாம்பராக அழித்து விட்டாரென்றே யாவரும் உணரவுஞ் சொல்லவுந் தக்க துணி பொருளாகின்றது. இன்னும் இப்பூவுலக மானுடருக்குக் கூறிய ஆண்டு ஒன்று மேலுலக வாசிகளான தேவருக்கு நாளொன்றாகவும், அத்தேவ ஆண்டு நூறு கொண்டது பிரமனுக்கு நாளொன்றாகவும், அப்பிரம ஆண்டு நூறு கொண்டது விட்டுணுவுக்கு நாளொன்றாகவும், அவ்விட்டுணு ஆண்டு நூறு கொண்டது ஒரு மகேசுர தினமாகவும், அது நூறு கொண்டது ஒரு சதாசிவ தினமாகவும், அவர். ஆயுள் ஒரு சர்வசங்காரப் பகற்றினமாகவும் தோற்றம்

ஈறின்றி நித்திய தினசங்காரஞ் செய்யும் மகா உருத் திர மூர்த்தியான பிரமத்தையும் நித்திய வஸ்துவெனக் கூறிய வேதம்,

" ஆதலா லீசனல்லா வனைவர்க்கு முயிர்க்கு மைந் தாம்
பூதமா னவைக்கு மேற்றம் புகலுதன் முகம தாகும் "

(கந்த. உபதேசப்படலம் கசு)

என்றபடியும், பிரம விட்டுணுவாதி தேவ சீவரையும் பிரமமெனக் கூறியபோதும்,

" யாரையும் புகழும் வேத மான்றனைத் துதித்த தேபோல்
ஒருரை விளம்பிற் றுண்டோ உரைத்தது முகம தென்றே"

(ஷை உஎ)

என்றபடியும் அழியாத நித்தியரென்னும் அருத்தத் தைக் கொண்ட அமரர் ஆதி நாமங்கள் பேசிய சீவ சிரேட்டரா யிருந்தும் மலசகிதராய், துன்ப இன்பப் பிறப்புடையரான இவரையும் நித்தியரென்று பேசியும், அம்மூவகையாரினும் வேறுபட்ட வயதினால் மேற் பட்ட ஏற்றத் தாழ்வுடையராய் இருக்கவும் ஒரு சேர நித்தியரெனக் கூறிய வாக்குகள், அவர் வயதின் கால நீட்டிப்பைக் குறித்த முகமன் வாக்காதலேயன்றி நித்தியரென்னும் பொருள் அமையாதவாறுபோல, சீவ ரையின்றி வேறு நிற்காத இம்மாயையும் அவரின் கன்ம போகங் கழித்தற் பொருட்டு வைத்திய சிவனால் இடையிலே கொடுபட்ட அன்று முதல், வேற்றுமை யின்றி அத்துவிதமாய்க் கலந்து நின்று, கன்ம போகம் கழிந்து இருவினை யொத்த மலபரிபாகத்தில் தன்சத்தி கெடுதலே மலபாகமென்னுஞ் சற்காரிய முறையினால், அம்மலத்தின் முதற் பிரிந்த இருவகைச் சத்தியின்

ஒன்ருய், தடத்த அதோ நியாமிகா சத்தி காரிய இம் மாயையும், அவ்வுயிரோடு நின்றே அழிந்து கெட்ட பக்குவத்தின் மேல் அதன் சொரூபமான ஆவாரக சத்தி காரியங்களும் அடியோடேயழிய, தன் சத்தி முழுவதுங் கெட்டு அவ்வான்மா உள்ளடங்குதலால் இதன் கால நீட்டிப்பு முதலியவைகளைக் குறித்த முகம னன்றி அநாதி நித்திய காரண வஸ்து ஆகாதென் பதைத் திடசித்தமாய்த் தெளிந்த காட்சியிற் காண லாம்.

இதுவுமன்றி மலகன்ம நோய்க்கு மருந்தாகப் புதிதாய் எடுத்துக் கொண்டதென்னும் பொருளைக் கொண்ட ஆகந்துக பரிக்கிரக சத்தியாய், ஆன்மாவோடு ஒன்றுபடக் கலக்கும் பொருளாதலாலும் அநாதி நித்தியத்துவம் பெறுதல் கூடாது. ஆதலால் அவ்வாறு எடுத்துக்கொண்ட மல வைத்தியநாதன் காரியப்படச் சேர்த்துத் திரட்டியது போல, அவனுடைய மருந்தாய் அடங்கி அந்நோயின் வீருன கன்மமும் தானும் ஒரு சேர அழிந்து மலபாகம் முற்றிய முத்திக் காலத்திற் காரணம் இருப்பிற் காரியந் தோற்றும் என்னும் சற் காரியந் தவருது எல்லாம் ஒருசேரக் கழற்றிய பஞ்ச கிருத்திய விடுதலையில் நடுப்பகலில் வெய்யிற் கடுமை பற்றித் தோற்றுங் கானற்றேர் முகிற்படலத்தால் அக் கிரணம் மறைந்தவழி இல்லையாய் அழிதல் போலவும், கனவிற் கண்ட பொருள் நனவு வந்துழி இடையே அழிந்து போனது போலவும், சாலவித்தை சாமர்த்தி யத்தாற் பல வேறு வகைப்படக் காட்டிய பொருள்கள் யாவும் அச்சாலம் நீங்கியபோது இல்லையாய் அழிந்து

நீங்கியவாறு போலவும், பித்திகை வடிவங் காண்பார்க்கு அதன் கண் மறைந்த சித்திர வடிவம் போலவுங் காரணரூபத்திற் சிறிதுங் காணப்படாமையால் வெறும் பொய்யெனக் கண்டு கழிக்கவேயெனக் கூறிய சிவஞான தேவர் வாக்கின்படி, சிவனால் ஆகந்துகமாய் எடுத்துக் கொடுக்கப்பட்ட இம்மாயாகாரண காரியப் பிரபஞ்சங்கள் முழுவதுங் காட்சி விசேடத்தால் அழியும் பொருளான மலதடத்த பொய்ந்நிலையே யன்றி, சத்தாகிய மெய்ந்நிலைச் சொரூப வஸ்துவின் ஒன்ருகாமையாற் பொது விதிகளாற் காரண வஸ்துவெனக் கூறப்பட்டதாயினும், நிலைப்படாது தோன்றி அழியும் பொருளாகக் கொள்ளுவதே சிந்தாந்த சற்காரியமாகும். இனி அவ்வநாதி மலத்திற்கு எதிர்ப்படையாய்க் கொடுபட்டது மாயை யென்பதை நிறுத்திய,

"மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணுதேல்
ஆயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத [போற்
வன்னிதனைத் தன்னுள் மறைத்தொன்ருங் காட்டம்
தன்னைமல மன்றணைதல் தான்"

(சிவஞானபோதம் சூத். ச. வெண். ரு)

என்னுஞ் சுருதி வாக்கியத்தால் காட்டத்துள் மறைந்துழி அதுவதுவாய் நின்றும், தனக்குக் கெடுதலில்லாத அக்கினியைப்போல அதுவதுவாய் நிற்கும் பளிங்கான ஆன்மாவின் அறிவை மறைக்கும் இருளாகிய மலமொன்றே அநாதியிலுள்ளதாக, அம்மல இருளைத் துறக்கும் வைத்தியன் ஏற்றிய விளக்கொளியான இம்மாயையில் முதற்ருேன்றிய கலையினுற் பின்னரே அம்மலவிருளை ஒதுக்கி அவ்வான்மாவின் ஞானக...

வெளிவரச் செய்தலால், விளக்காய் உவமித்துக் கூறிய இம்மாயை அநாதியில் இல்லாது இடையிலே கொடுத்து அழிக்கும் காரியப் பொருளேயாம் என்பதை யாவரும் மிக எளிதில் அறியுமாறு பசுமரத்தாணியாக நாட்டப் பட்டது. இன்னும்

"நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதி யாயு
நெல்லைவிட்டு நீங்கியவை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின் பாலில்லை
தொக்கிருந்து மற்றொருநெற் றேற்றி டாவாம்
மெல்லவிவை விடுமறவே யிவைபோல வணுவை
மேவுமல முடல்கன்ம மநாதிவிட்டே நீங்கும்
நல்லசிவ முத்தியின்கட் பெத்தான் மாவை
நணுகிநிற்கு மாதலினு ஞசமுமின் றுமே"

(சித். சூத். கக. செய். சூ)

என்னுஞ் செய்யுளிற் கூறிய 'துகளற்ற' என்னும் விசேட அடைமொழி கொடுக்கும் இயல்பினைப் பெற்ற அரிசியினுள்ளே அம்முளை தவிடுமிகள் அடங்கிநிற்றற்கு ஓர் இயைபின்மையின், அவ்வரிசியின் இல்லையென்பதே தேற்றமாதலாலும், துகளற்ற அரிசியை உவமிக்கும் உரிமையால் துகள்படாது பரிசுத்த இயல்புடைய உயி ரோடு அநாதியே சகசமாய் நின்ற மலமும், அதனோடு கூடிய மாயை கன்மங்களுமான மும்மலங்களும், முத்தி நிலையில் விட்டொழியுமெனத் தேற்றங் கூறினமையா லும், அநாதியினும் உடனுகாது அந்நியமாய் இடையிற் பற்றியதேயாகத் துணியப்பட நின்றது. இனி அவ் வாறு முத்திநிலையில் விட்டழியும் அதனை அடையாது ... த்தான்மாக்களோடு செறிந்து நிற்றலால், ஆசிரியர்

ஒருவாறு நித்தியமெனக் கூறிய திருவாக்கும் பிழை படாது சமாதானமாதல் கண்டுகொள்க. இன்னும்

"இருதிற னறிவுள திரண்டலா வான்மா"

(சிவ. போத. சூத். எ)

எனவும், அநாதியே மலத்தின் நீங்குதல் முதல்வன் வினையாதல் போல, அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாகுமெனவும் "ஆகந்துக மலங்களின் நீக்குதற்குச் சகச மலமென விசேடிக்கப் பட்டது" எனவும், இன்னும் "முதல்வன் சந்நிதியில் நிற்பினும் சோபான முறையின் அறிவிக்க அறியுந் தன்மைத்தாய உயிர் அநாதியே அறிவித்தால் அறிய மாட்டாமையால் அவ்வறிவை யிழந்து அறியாமையாய் அழுந்துவதே அவ்வுயிர்க்குப் பந்தமாத லுணர்க" எனவும், இன்னும் "அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தில் நிகழும் இயல்பே மலத்திற்குத் தன்னியல்பு; விபரீத உணர்வைக் கொடுக்கும் சகலத்தின் நிகழும் இயல்பே பொது இயல்பாகலான் அவ்வநாதி மலமாகிய ஆணவத்திற்கு இருவகை இலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன" எனவும், இன்னும் "காட்டாய் நின்று விடயங்களை அறியும் வண்ணம் உயிருக்கு அறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடைசெய்து நிற்றல் மலத்தின் செய்தி; ஆகவே இவ்விரண்டும் ஒளியும் இருளும்போல ஒன்றேடொன்று இகலி நிற்கும்" எனவும், மேலும் "இம்மாயை கன்மங்கள் போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணைதல் என்றார்" எனவுங் கூறிய மெய்கண்ட சுருதிவாக்குகளானும் யாவரும் சிரமேற் றரிக்கத்தக்க பெருந்தகைமை பெற்ற

சிவஞானமுனீந்திர குருசுவாமிகள் திருவாக்கினாற் கூறிய பல பிரமாணங்களாலும், இம்மாயை அநாதி காரண வஸ்துவின் ஒன்றாகாது, ஆதியும் அந்தமுமுடைய ஆகந்துக மலமெனவும், காரிய அழிபொருளாமெனவும் கண்டு கழித்துக்கொள்வதே சற்காரிய சித்தாந்தமாம்.

இன்னும் இவ்வாறு பல ஏதுப் பிரமாணங்களாலும் அநாதியல்லாது ஆதிகாரிய அழிபொருளாக நிச்சயிக்கப்பட்டு, இச்சீவர்களின் மலநோய் அகற்றும் வைத்திய பஞ்சகிருத்திய பரமசிவம் தன்சத்திவகையிற்றாரக பரிக்கிரக சத்தியால் அம்மூல மலத்தினின்றும் காரியப்பட ஔடத காரண பரிக்கிரக சத்தியாய் எடுத்துக்கொண்ட இவ்வசுத்த மாயையின் களங்கமறும்படி புடத்தினாற் சுத்திசெய்து மருந்தாகத் திரட்டி, தன் கைச் சிமிழில் அடைத்து வைத்தாற்போல, பராசத்தித் தானத்தில் சுத்த சடகாரண சிதாகாச குடிலா சிவ சத்தி பிரேரக ஆதாரசக்தி தாபரமான ஆதி கூர்மச் சிலையின் ஆயிரஞ் சிரமுடைய அனந்தனாற் சுமக்கும் அசுத்தப்பிரபஞ்ச கமலபிருதிவி கந்தத்துஇருந்து முளை போற் கிளம்பி அப்புமுதற் கலையீறான நாளமாய் வளர்ந்த தத்துவம் இருபத்தொன்பதில், அப்பு நனைக்க, அக்கினி எரிக்க,வாயு அசைக்க, ஆகாயம் விருத்தி பண்ணும்படி சத்தம் முதற் கந்தம் ஈறான பஞ்ச தன்மாத்திரைகள் முளைகளாகவும், அமரேசன் முதற் சிகேதன் ஈறான புவனம் எழுபத்திரண்டும் அந்நாளத்தின் முட்களாகவும், புத்திகுணங்களால் விளைந்தபாவம் ஐம்பதும் அந்நாள சூத்திர நூலாகவும், ஞான கன்ம இந்திரியங்கள் பத்தும் இரந்திரங்களாகவும்,புத்தி குணம் பிரகிருதி

புருடனென்னும் நான்கினோடுஞ் சேர்ந்த தன்ம ஞான வைராக்கிய ஐசுவரிய சிங்கங்கள் நான்கும் கால்களாவும், அதன்ம அஞ்ஞான அவைராக்கிய அனைசுவரிய சிங்கங்கள் நான்கும் அக்கால்களின் எதிர்ப்புறக் கால்களாவும், கலை வித்தை அராகம் நியதியென்னுந் தத்துவங்கள் நான்கும் அந்நாளத்தின் முடியாகவும், மாயாதத்துவம் அந்நாளத்தின் இதழ் விரியுஞ் சந்தியாகவும், அசுத்த காரியங்கள் அமைந்த அக்கமல முகையின் கீழ்ப்புறத்தின்மேற் சுத்த வித்தைமுதற் சிவதத்துவம் வரையில் அமைந்த அட்ட வித்தியேசுரரும் அட்ட தளங்களாகவும், அகரம் முதல் க்ஷகரமீறான ஐம்பது வர்ணங்களும் பீசமாகவும், சுத்த வித்தியா புவன கலாசத்திகள் அறுபத்து நான்கும் கேசரமாகவும், பீதநிறக் குடிலை கர்ணிகையாகவும், வாமை ஜியேட்டை இரௌத்திரி காளி கலவிகரணி பலவிகரணி பலப்பிரமதனி சர்வபூததமனியான அட்டசத்திகளும் மனோன்மனியுமாகிய நவசத்திகளும் கிழக்கு முதல்எண்டிக்கினும் நடுவினுமுள்ள கேசராக்கிரங்களாகவும், ஞானம் கிரியை இச்சை ஆதியென்னும் நான்கு சத்திகளாலும் வியாபிக்கப்பட்ட சூரிய சோம அக்கினி சத்தி மண்டலங்களின் அதிபர்களான பிரம விட்டுணு ருத்திர ஈசுவரர் நால்வரும், இதழ் கேசரம் கர்ணிகை விதை ஆகிய நால்வகை வட்டங்களாகவும் அமையக்கூடிய காயின் அடியிலே பிருதுவிமுதற் பரையீறாக வியாபித்து நின்று, பிருதுவி முதல் மாயையீறான தத்துவங்கள் முப்பத்தொன்றையும் பிரேரிக்கும் பரநாத அபரநாத பரவிந்து அபர விந்துகளின் காரண சமனை உன்மனை பரசிவ குண மூலமான மேற்புறம்

அமைந்த குடிலாசன கமலத்தின்மேல் ஞானக்கிரியா சத்தியிரண்டும் அருவ உருவமாய் சத்தி காரியப்படும்.

அவ்விரண்டும் பொருந்திய தம்பாகார பீடலிங்க வடிவாய் வீற்றிருக்கும் ஆதி மத்தியாந்த முப்பாகத்தும் சடப்பிரதான இச்சாக் கிரியா ஞான உருத்திர விட்டுணு பிரம பாகமாக ஆதிருத்திர பாகத்தில் அதீத கலையும், மத்திய விட்டுணு பாகத்திற் சாந்திகலையும் அந்தமான பிரம பாகத்தில் மற்றைய மூன்று கலைகளுமாகப் பஞ்சகலைகளையும் நியாசஞ் செய்து, இனி அதீத கலையிற் சிவசத்தி தத்துவம் இரண்டையும் சாந்திகலையில் மற்றைய சுத்த தத்துவம் மூன்றையும் வித்தியாகலையில் மாயை முதலான வித்தியா தத்துவம் ஏழையும் பிரதிட்டாகலையிற் பிரகிருதி அந்தக்கரண ஞான கன்ம இந்திரிய தன்மாத்திர பூதம் நான்கான தத்துவம் இருபத்து மூன்றும் நிவிர்த்தி கலையிற் பிருதிவி தத்துவம் ஒன்றுமாகத் தத்துவம் முப்பத்தாறும் அடங்கத் தத்துவ நியாசமும், பின் பரவிந்து அபரவிந்து அபர நாத கலைகளாகிய புவனம் பதினைந்தும், மனோன்மணி யாதி வாமையீறான ஒன்பதும், சதாசிவன் முதல் அநந்தன் ஈறான ஒன்பதுமாகிய புவனம் பதினெட்டு மாகிய புவனம் முப்பத்து மூன்றும் அதீத சாந்திகலைகளினும், ஈசானம் முதல் வாமம் ஈறான புவனம் இருபத்தேழும் வித்தியா கலையினும், சிகண்டர் முதல் அமரேசர் ஈறான ஐம்பத்தாறு புவனமும் பிரதிட்டா கலையினும், பத்திரகாளி வீரபத்திரன் முதல் காலாக்கினி ஈறான புவனங்கள் நூற்றெட்டும் நிவிர்த்தி கலையினுமாக இருநூற்று இருபத்து நான்கு புவனமும் அடங்கப்

புவன நியாசமும், அதீதையிற் பதினாறு, சாந்தியில் மூன்று, பிரதிட்டையில் இருபத்து மூன்று, வித்தையில் ஏழு, நிவிர்த்தியில் ஒன்றுமாக ஐம்பது வர்ணங்களும் அடங்க வர்ண நியாசமும், அதீதையில் ஒன்று, சாந்தியிற் பதினொன்று, வித்தையில் இருபது, பிரதிட்டையில் இருபத்தொன்று, நிவிர்த்தியில் இருபத்தெட்டுமாக பதங்கள் எண்பத்தொன்றும் அடங்கப் பதநியாசமும், சாந்தியதீதையிற் சிவ ஈசான அத்திர மந்திரம் மூன்றும், சாந்தி கலையில் தற்புருட கவச மந்திரம் இரண்டும், வித்தியா கலையில் சிகா அகோர மந்திரம் இரண்டும், பிரதிட்டாகலையிற் சிரோ வாமதேவ மந்திரம் இரண்டும், நிவிர்த்தி கலையில் சத்தியோசாத இருதய மந்திரம் இரண்டுமாக மந்திரம் பதினொன்றும் அடங்க மந்திரநியாசமும் செய்து அதன்மேல் தானு வடிவ குறியிடத்தே பரசிவ ஆவாகனஞ் செய்யும்படி மலர் தாங்கிய அஞ்சலிக் கரத்தைப் பிரணவ ஸ்தானமாகிய மூலாதாரத்தில் வைத்து மேலே கொணர்ந்து அப்பிரணவ பஞ்சாக்கரத்து ஒன்றான அகராக்கர கருத்தப் பிரமனை, அவ்விருதய ஸ்தானத்தின் தியான முறையால் விடுத்து அதன்மேல் கண்ட ஸ்தானத்தில் உகர கருத்தனான விட்டுணுவைத் தியான முறையாற் கடந்து, மேல் தாலுத்தானத்தில் மகர கருத்தனான உருத்திரனை விடுமுறை தியானத்தாற் கழிந்து, அதன்மேற் புருவ நடுவில் விந்துஸ்தான ஈசுவரனைத் தியானமுறையிற் கடந்து, நாதத்தான பிரமரந்திரத்தில் சதாசிவனைத் தியான முறைப்படி தாண்டி, அதன்மேல் துவனித்தான உன்மனி அந்தத்

திருக்கும் பரமசிவ சோகம்பாவனையினாலே சிவமும் தாமும் வேறறத் தியானத்தால் ஏகீபவித்துப் பின், அம் மலர்க் கரத்தைக் கீழிறக்கிப் புருவ நடுவிற் றங்கிக் கண் டத்துவனிபோல் ஒளியுள்ள சகள வடிவான பர சிவ தேஜஸை இருதய ஸ்தானத்தில் இருக்கும்படி அவ் வஞ்சலிக் கரத்தை அமைத்து, பூசாலட்சிய குறியான லிங்கத்திலே ஆவாகனஞ் செய்து, பகவானே! இவ்வடி வில் எழுந்தருளி அடியேனுக்கு அருள்புரிய வேண்டு மெனத் தாபித்து, தம்முன் நின்று அருள்புரியுஞ் சம்பந்த சாங்நித்திய சங்நிதானமும், தேவரீர் திருவருள் சதாகாலம் நீங்காதிருத்தல் வேண்டுமென்னும் சங்நி ரோதனமும், அப்பரம் பொருளின் இருதயாதி ஸ்தானங் களில் இருதயாதி மந்திரங்களைக் கவசமாகச் சுற்றுத லான அவகுண்டனமும் பகை விக்கினங்கள் நீக்கி பரம திருப்தி கொடுக்கும் முத்திரையும் பாத்திய ஆசமன அர்க்கிய புட்பம் ஆதிய பத்துச் சம்ஸ்காரங்களும் தவ றாது இயற்றித் தம்மனக் களங்கம் அறும்படி திருமஞ்ச னாபிஷேகஞ் செய்து, தமது கன்ம முத்திறமுங் கழற்று வதாய தத்துவத்திரய ஆசமன பிராணாயாமங்கள் செய்து, தம்மறியாமையைக் கழற்றும் கிரியாசத்தியாகிய தூபமும், தம்மறிவை வளர்க்கும் ஞான சத்தியாகிய தீபமுமாகிய இரண்டானும் ஆராதித்து, பரபோதக் கழற்சியே திருப்தியும் முகவாசமுமாகத் தற்போதத்தை நசிக்கும் நைவேத்திய பஞ்சபூத சம்பந்த உபசாரங் களுட் சந்தனம் பத்திரம் புட்பம் பழம் அன்னம் தூபம் முதலிய பிருதிவி உபசாரங்களான நைவேத்தியங்களும், பால் தயிர் தீர்த்தம் பட்டு முதலிய ஆப்பியோபசாரங்

சளும், பொன் இரத்தின பூஷணாதி தீப கர்ப்பூரம் முதலிய தைஜசோபசாரங்களும், தூப சாமர விசிறி முதலான வாய்வியோப சாரங்களும், கண்டநாத துவனி தோத்திராதி முதலான காயேயோப சாரங்களுமாக, அன்பினர் செய்யும் வழிபாட்டை அங்கீகரித்தருளு மாற்றாலும், அண்டபிண்ட புவன ஔடத சிருட்டி செய்யும் பரமசிவத்தால் இக்கமலாசன மூர்த்திநியாச ஆவாகன அபிடேக நைவேத்திய உபசாராதி உபயோக வகைகளாற் பரிசுத்தமாக்கி, அம்மூலமல இருளை அழிக்கும் விளக்கௌடத பரிக்கிரக விபூதியாக எடுத்துக் கொள்ளப்பட்டதும், அங்ஙனம் பிருதிவி உப சார நைவேத்தியங்கள் நிவேதிக்கப்படினும் அப்பரம் பொருளுக்குப் பெற்றது அமையுமென்னும் நிறைவே நைவேத்தியமும், அந்நிறைவு குன்றாமையே முக வாசமுமாய், ஆராதனை முடிந்த பின்பு தாம் நித்தியா னந்தச் செல்வானுபவம் பெறும் பொருட்டு மூலமந்திர சூக்கும பஞ்சாக்கரத்தைச் சங்கார முறைப்படி இலயாந்தமாக உச்சரித்து நீக்கி அவ்வுச்சரிப்பிற் கடந்த பிரபஞ்சாதீத சிவபஞ்சாக்கர தியானமே செப நிவேதனமாய் நிரப்புக.

அதிகார பஞ்சகிருத்திய காரியப்படத் தோன்றிய தற்போத ஞானக் கிரியைகளைச் சிவஞானக் கிரியை யின் உள்ளடக்குதலான நமஸ்காரமுஞ் செய்து, சிவசத்தி உபாதிகளைத் தரிசித்தலே செபமாக அவ்வு பாதிகளை நீக்கித் தனது அநாதி நிட்கள வியாபக தரி சனஞ் செய்வதே செப நிவேதனமும், அச்சிவ பஞ்ச கிருத்திய விடுதலையே அட்ட புட்பமும், அப்பஞ்ச கிருத்

திய அதீத சொரூப நின்மல பரசிவத்தின் அலைவற் றிருப்பதே ஆன்ம நிவேதனமுமாக்கிச் சகலாவத்தை யின் முப்பத்தொரு தத்துவங்களையும் வேறாகக் கண்டு கழித்து நீக்கிய சுத்தாவத்தையின் ஞானக்கிரியா சாத னங்களிற் காரியப்படுத்தி நின்ற நாதவடிவ பரசிவத்தை யும் சொரூப சிவஞானத்தாற் றரிசித்து அப்பரசிவா னுஞ்ஞையின் அப்பாற் சென்று, அநாதி மலரகித பர மானந்த அனுபவமே வடிவாகி ஆதிமத்தியாந்த ரகித ஆன்மாக்களின் அந்தரான்ம பரிபூரண வியாபகமாய் நிற்பினும், மாயாவாதி முதல் ஐக்கியவாத சைவர் ஈறான மூந்நூற்று அறுபத்து மூன்று சமயானுட்டான சீவ பேதங்கட்கும் அளவிடப்படாது அதீதமாய், அவரின் போக தத்துவ காரணவிந்து ஞானபதி ஞானக்கிரியை களுக்கும் அப்பாலாய், வாக்கு மனாதீத கோசரமான பரமசிவத்தைச் சேர்ந்த அனுபவ நிலையை அறிந்து நிற்பதாய பராமுக அருக்கிய நிலை தவறாது நிற்றலாம் ஞானபூசையும், இதன் முன்னரே கழித்து நீக்கிய ஞானக்கிரியைகளோடு கூடியியற்றும் கிரியாபூசையின் விதியின் ஒன்றாயமைந்த அந்தரியாக பூசையுமாகிய அற்புதானந்த அனுபவ சிவஞான பூசை செய்யும் பேற டைந்த சீவன் முத்தராற் பெறப்படும் சிவசாயுச்சியத் திற்கு ஏதுவாகிய சிவஞானத்தை எளிதிற் பெறற்கு ஏதுவாய துவசாரோகண முதற்றினம் சிவம் மலம் ஆன்மாவென்னும் முத்திறப்படும் வஸ்து நிச்சயம் உணர்தலால் தன்னுருவ காரண பிரகிருதி நட்டமாம்.

இரண்டாந்தினம் ஆகாமிய கன்மமேறாது பிராரத் துவ கன்மம் புசித்துக் கழித்தலால் இருவினையொப்பும்,

மூன்றாந்தினம் இவ்விருவினை ஈட்டத்திற்குக் காரண மான முக்குண நாசமும், நாலாந்தினம் அவ்வினைப் போகங்களைக் கவர்ந்து ஞானக்கிரியைகளுக்கு ஊட்டும் அந்தக்கரண நாசமும், ஐந்தாந்தினம் பஞ்சப் புலன் களால் அபகரிக்கும் அவ்வினைப் பயன்களைப் பற்றிக் கரணங்களிற் செலுத்தும் பஞ்சேந்திரிய நட்டமும், ஆறாந்தினம் அவ்விடய பிரயோசனங்கள் யாதும் அவ்வுயிர்க்கு இன்மையால் காமக் குரோதாதி ஆறு பகைகளும் இல்லையாய் நீங்கலும், ஏழாந்தினம் இப் பிரபஞ்ச விடயாபேட்சையினுற் பயின்ற அணிமாவாதி அட்டசித்திகளை விருத்திபடச் செய்யும் சத்தகோடி மகாமந்திர நாசமும், எட்டாந்தினம் அவ்வாணவ தடத்த காரிய சுத்தா சுத்த கலை வித்தை ராகாதி வித்தியாதத்துவ நாசமாகிய அவ்வாணவ நட்டமும், ஒன்பதாந் தினமான திருக்காப்புநாள் இவ்வாணவ பாகம் பண்ணும் திருவருளாகிய திரோதாயியான மறைப்பு நீங்கி ஒளியாக அதனுல் வந்த வாதனை நட்டமும், மற்றைப் பத்தாம் விழாப் பேரின்பா தீதமும், பதினோராம் விழாப் பதிபசுபாச நிருத்தமுமா மெனக் கூறப்பட்ட இவ்வுற்சவாரம்ப அனுஞ்ஞை அங்குரார்ப்பண மூலபிருதிவி அப்புவின் காரண மானதுமாகிய அசுத்தமாயா பரிக்கிரக சத்தியின் பெருந்தகைமையை இத்துணைத்தென நாமா மதித்து உணரவல்லேம்! ஆதலால் இம்மாயையைப் பரமசிவம் இவ்வாறு பல புடசுத்திகளாற் பரிசுத்தமாக்கி எங்கள் மூலமலநோய்க்கு மருந்தாக அம்மலசத்திகள் இரண்டில் தடத்த நிலைக்குரிய அதோநியாமிகா சத்திகாரிய விளக்

காய்ப் பரிக்கிரகித்து, பஞ்ச கிருத்திய திரியின் ஒளி யேற்றி அவ்விருளைத் துரந்து நித்தியானந்த ப்ரசுகம் ஊட்டும் கருவியான அசுத்தப் பிரபஞ்ச முதற்காரண மாயையெனப்பெயரிட்ட மலதடத்தகாரியஅழிபொருள் ஆதலாலும், இம்மல சொரூப ஆவாரக மறைத்தலும் அதோநியாமிகா விளக்கலும், இவ்வுயிரோடு அத்துவித நிலையிற் கிடத்தலும் கெடுதலுமேயன்றி வேறுதனித்து நிற்றலும் வியாபகமாதலும் கூடாமையாலும், இருளும் ஒளியும் நோயும் மருந்தும் ஓரிடத்திருத்தல் கூடா மையாலும்,உயிருக்கு உளதான அவத்தைகளிற் கேவல சகலங்கள் ஓரிடத்திற் பேசப்படாமையினாலும், அம் மூல மலத்தின் தடத்த காரிய அழிபொருளேயாமென வும், இன்னும் தனக்கெனச் சுதந்திர ஞானமின்றிய ஆன்மா சோபான முறையிலுணர்த்த உணரவேண்டு தலின், அதன் இடையிற் பற்றி அயர்ந்ததே அநாதிமல சகிதனென்னுங் காரியப்பட்ட சீவ தடத்த நிலையான பசுத்துவமும், அப்பொய்ந்நிலையிற் றேடுஞ் செயற்கை யால் விளைந்த கன்மமும்,அதனை நுகருவித்து அழித்து மலநோயைத் தீர்க்கும் மருந்தான இம்மாயையும், இந்திர சாலம் கனவு பேய்த்தேர் முதலிய உவமைக ளோடு இயைத்துப் பேசிய பிரபஞ்சப் பொய்ந்நிலையை விடுத்துத் தன்னியற்கைச் சொரூப மெய்ந்நிலையை யடைந்தே முத்தி நித்தியானந்தம் பெறவேண்டுதலால், அநாதி நிச்சயமாகப் பேசப்பட்ட வஸ்து மூன்றின் சொரூப நிலைக்காரணமே நித்தியமாகுமன்றி, தடத்த நிலைக்காரியங்களெல்லாம் அழிபொருளாதலால் இம்மா யையும் தோன்றி அழியும் காரியப் பொருளாகக் கொள் வதே சற்காரிய சித்தாந்தமாகும்.

## அ. சிவஞான சாதன இலக்கணம்

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சிவத்தின் சர்வஞ்ஞுதுவ சர்வஞான சர்வாணுக்கிரக காருண்ணிய சாம்பிராச்சிய குணமே சொரூப சிவசத்தியென்றும், சூரியனுங் கிரணமும் போல ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய், வேற்றுமையின்றி நிற்கும் அச்சிவகுண சத்தியே சிவஞானமெனவுஞ் சொல்லப்படும். அந்தச் சிவஞானம் சிவத்தோடு அபின்னமாய் ஒன்றுபடக் கிடந்த சொரூபநிலைப் பரஞான மெனவும், பின் அனந்தாதி வித்தியேசுரர்க்குச் சமட்டியாய் உபதேசித்து மலசகித சீவர்கள் உணர்ந்து அதனையடையும் பொருட்டுக் கட்டளையாகச் செய்த வாக்கு மூலமாக, அணுசதாசிவர் பதின்மருக்கும் சிவபேதமாகவும், உருத்திரர் பதினெண்மருக்கும் உருத்திர பேதமாகவும் உபதேசித்த இருபத்தெட்டு ஆகமங்களும் அபரஞானமெனவும் படும். இவ்வாறு பிரித்துக் கூறப்பட்ட அபரஞான ஆகம சித்தாந்தங்களே குரு பரம்பரையாக இம்பூமியில் வந்து சுதந்திர ஞானமின்றிய நம்மவருக்கு உபதேசிக்கப் படுவனவாம்.

இன்னும் பரையாதி இச்சை ஞானங் கிரியையென்னும் பஞ்ச சத்திகளாயும், சத்தி விந்து மனோன்மனி மகேசுவரி உமை திரு வாணி என்னும் எழுவகைச் சத்திகளாயும், ஈசானி பூரணி பூர்த்தி வாமை மூர்த்தியென்னும் அணுசதாசிவ ஐவகைச் சத்திகளாயும், ஆரணி செனனி உரோதயித்திரியான மூவகைச் சத்திகளாயும், வாமை ஜியேட்டை ரௌத்திரி காளி கலவி

கரணி பலவிகரணி பலப்பிரமதனி சர்வபூததமனி என்னும் அட்ட சத்திகளாயும், இன்னும் இவைபோன்ற அநேக சத்தி பேதங்களாகவும் விரிந்து நடத்த காரியப் பட வந்தவைகளெல்லாம் இச்சிவஞான சத்தியொன்றே ஆகும்.

சீவர்களை அநாதியேபற்றிய மலசகிதமாகிய பெருங் கடலினின்றுங் கடப்பித்துத் தம்மைக் கொடுத்துத் தாமாகச் செய்யும் சர்வசாமர்த்திய காருண்ணிய சகலா னுக்கிரக சம்பிரதாயமுடைய இத்துணைப் பெரும் பொருளாகிய சிவஞானச் சார்பினதாய அதனையே அநாதி நித்தியானந்த செல்வமாக அனுபவிக்கும் உரிமை சொந்தமாகவுடையதும் அசத்தையும் பற்றும் இயற்கையால் அமைந்த சுதந்திர ஞானம் இன்மையால் அநாதியே மலத்தினுள் மறைந்து தன்வியாபகம் அணுப்படச் சுருங்கியும், அம்முதல் கெடாது சேற் றின் மறைந்து கிடந்த மாணிக்கம்போற் சிறுவியாபகத் தோடு இருந்ததனால் கிஞ்சித் அறிவன் என்றுசொல்லப் படுவதுமாய்ச் சடமாய்க் கிடந்த ஆன்மாக்களின் மலத் தைக் கழற்றிச் சிவமாக்கி நித்திய செல்வத்தைக் கொடுக்குங் கடமை தமக்கே யுடையவராகிய சிவம், அநாதி மலரகித நித்தியானந்த சிவசொரூபராயினும் சித்தென்னுஞ் சாதியொருமையால் தம்மோடு அத்து விதமாய் ஒன்றுபடும் வியாபக வியாப்பிய சம்பந்தம் உடைமையால் புத்திரராம் உரிமை பூண்ட அவ்வான் மாக்கள்மேற் பற்றிய இச்சாபாசத்தால் தம்மோடு அபின்னமாயிருந்த அருட்சத்தியின் ஒரு பிரிவில் தம் முருவ காரண தாரக பிரணவத்தைத் தோற்றுவித்து,

அதன் மூலமாக இலய போக அதிகார அவத்தித பரசிவன் சதாசிவன் மகேசனென, அருவ அருவுருவ உருவ சோபான முறைப்படி உருவ நாமமுடையராய் மலசகித கன்ம தேட்ட சீவர்களாதலால் அம்மல உடலையே அவருக்குக் கொடுத்தல் வேண்டுமென்னும் சற்காரியந் தவறாது, அம்மூலமலத்தின் ஓர் பிரிவில் தனு கரண புவன போக காரணமாக மலகாரியமான மாயை யைத் தன் பரிக்கிரக சத்தியின் ஒன்றாக வைத்து, இன்ன கன்மச் சீவருக்கு இன்ன தனுவில் இன்ன போக மூட்டுதல் வேண்டுமென்பதை உணருதலாகிய சூக்கும பஞ்ச கிருத்தியத்தை முன்னமே செய்து பின் தனுகரண புவனபோகங்களை ஆக்குதலாகிய தூல பஞ்ச கிருத்தியத்தை இயற்றி, அகக்கரண புறக்கரண பொறிபுலன் முதலியவை பொதிந்த பஞ்சபூதக்கூடாகிய உருவத்தினுள் அமைத்து, புறக்கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் உள்ளமென்னும் ஐவகைக் கரணங்களினும், அகர உகர மகர விந்து நாத மென்னும் ஐந்தக்கரஞ் சேர்ந்த சமட்டியிற் பிரணவரூப சிதாகாச சுத்தமாயா சபையிலே சதாசிவ மகேசுர ருத்திர விட்டுணு பிரமா என்னும் ஐவகைக் கிருத்திய கருத்தாக்களை, அவ்வக்கரங்கள் ஐந்தினும் நிறுத்தி, இம்முத்திறத்து ஐந்தனோடும் அம்மல மூட சடமாய்க் கிடந்த அவ்வான்மாவைச் செறியச் சேர்த்துக் கலக்கி, அவ்வறிவைத் திறக்கும் அதிசூக்கும பஞ்சகிருத்தியம் புரிதலான இம்மூவகைப் பஞ்ச கிருத்தியத்தாலன்றி இவ்வான்மாக்கள் அறிதற் பயன் அடையாவெனவும், இவ்வாறறியும் அறிவும் ஏகதேச அறிவேயாமெனவும்,

இதுவே "சோபான முறையில் அறிவிக்க அறியுந் தன்மைத்தாய உயிர் அநாதியே அறிவித்தால் அறியமாட்டாமையால், அம்மாட்டாமையால் அறியாமையில் அழுந்துவதே அவ்வுயிர்க்கு அநாதி பந்தமாதல் உணர்க" என்னும் சற்காரிய வசனத்தின் கருத்தாமெனவுங் கொள்ளப்படும்.

இவ்வாறு கருவி கரணங்களோடும் அறிவை விளக்குஞ் சகல நிலையிலே அநாதியே பற்றிய மூலமலமும் அதனால் விளைந்த கன்மமும் அம்மலத்தை ஒதுக்கி அறிவுசெயல்களைவிளக்கி அக்கன்மத்தை ஊட்டுவிக்கும் காரணமான மாயையும், அதன் காரியமான மாயேயமும், அதனைக் காரியப்படுத்தும் கர்த்தவ்விய திரோதானம் என்னும் ஐம்மல சகிதனுய், போக உன்முகப் படுத்திய மூவகைப் பஞ்சகிருத்திய அருளையே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் "பல்லுயிர்க்கு அருளைப் பூத்து" என்னும் வாக்கினால் இலகுவாக யாவரும் உணரும்படி விளக்கியருளினர். இனி இவர் தேடியகன்மம் அசித்துஅழிதலேயன்றி மற்றொருவகையானும் அழியாதென்னும் சற்காரியமுறை தவறாது அதனைப் புசிப்பித்து நீக்கிய இருவினையொப்பிலே தன்சத்தி பதித்து அவரின் சிற்றறிவுச் சுயநிலையின் வியாபகமாகச் செய்து சிவமாந் தன்மைப்பெருஞ் செல்வம் கொடுத்தற்காகிய சாதனவழி ஒழுகும்படி எண்ணத்தகாதது செய்யத்தகாதது இது எனவும், எண்ணத்தக்கது செய்யத்தக்கது இது எனவும், அறிவிக்குங் கட்டளையாய் தம்முபதேச குருபரம்பரையாக இவர் வசிக்கும் புவனங்களில் வரச்செய்து அதனை

வாசித்து உணருதற்காக அவரின் சிற்றறிவை வளர்க்குஞ் சோபான முறைப்படி முன்னரே மூடியிருந்த அறிவைத் திறக்கும் அருள்முகை அலருதலாற், சீவர்களின் உடல் வளருதல்போல அறிவும் மெல்ல'மெல்ல வளர்ந்த ஐந்தாம் பருவத்தில் கல்விக்கழகத்தில் வைத்து முதல் எழுத்தின் வாய்பாடுகளும் அதன்மேற் சங்கார முறைப்படி வைகரி வாக்காகப் பிறந்த அவ்வெழுத்தின் உருவங்களும் ஓரெழுத்து முதற் பல எழுத்தால் வரும் பதங்களும் அவை ஒன்றோடொன்று புணருதலும் அதன் மாத்திரையை அளவு படுத்துங் கணிதங்களும், அப்பதங்களின் உண்மைப்பொருளை எடுத்தற்காகிய நிகண்டு இலக்கணம் தருக்கமாகிய கருவி நூல்களுமான இவற்றை யெல்லாம் உணர்த்தி அறிவு விரியச் செய்து, அவ்வறிவினாலே அக்கட்டளைகளை யுணர்ந்து அவற்றின் மெய்ப்பொருளாகிய சாதனங்களை அனுட்டித்து அவைகளின் பயனடைதல் காரணமாக முன்னமே தூலகிருத்தியமாகத் தோற்றுவித்த ஐம்பூத பஞ்சீகரண தூல பிருதுவியண்ட மத்தியியில் சுழுமுனை நாடியான மகாமேருவைச் சூழ்ந்த சத்த கடல் வளைந்த சத்ததீவின் உள்ளிடமாய் அமைந்த சம்புத்தீவின் நவவருடத்து ஒன்றான பாரத வருடத்திலும், நவகண்டமாகப் பிரித்து மிலேச்ச கண்டமாய் ஒதுக்கிய எட்டுப் பாகத்தையும் ஒழித்து எஞ்சிய ஆயிர யோசனை அளவினதாகிய குமரிகண்டமான இத்தேசத்திலே கிழங்கு காய் கனி முதலியவைகளும் நெல் முதலிய தானிய வகைகளுமாகிய உணவுவஸ்துக்கள் விளைதற்கான காலபோக மழை வருஷித்தலும் கங்கை பொன்னி

யமுனை நருமதாதி தீர்த்தங்களும் ஆயிரத்தெட்டுக் கணக்கான சிவஸ்தலங்களும் அப்பெருமானுக்கு அன்பராய் நால்வகைச் சத்திநிபாத முறையின் அவர் அடித்தொண்டின் வழிநின்று அனுட்டிக்குஞ் சாதனங் களுக்குத் தக்க பதமுத்தி உயிர்முத்தி பரமுத்திகளை யும் பெற்றுள்ள மெய்யடியார்களும் நிறைந்துள்ள விசேஷங்களைப் பெற்ற முக்கிய ஸ்தானமாகிய இவ் விந்திய தேசத்திலே தேவ பாஷையாகிய சம்ஸ்கிருதம் செந்தமிழ் என்னும் இருவகைப் பாஷைகளாலும் உணரும்படி வேதாகம ஸ்மிருதி புராண கலைகள் காவி யங்கள் சித்தாந்த நூல்களாதிமுதல் வழிபுடைநூலாகிய சாத்திரங்களும், இவைகளின் உண்மைப் பொருளை உணராது யானைகண்ட குருடர்போலக் கீழ்ச்சமயங் களை அநுசரிக்கக் காட்டும் பூர்வபக்க நூல்களுமாகிய இச்சாத்திரங்க ளெல்லாம் நிகழும்படி செய்தும், இம் மத்தியதானப் பூமியின்கீழ்ச் சத்தபாதலங்களையும் அவற்றிற் சில இடங்களில் அக்கட்டளையிற் றவறிய சீவர்களைத் தண்டிக்கும் சிறைச்சாலையாகிய இருபத் தெண்கோடி கும்பிபாக நரகங்களையும் ஆக்கி வைத்தும் இப்பூமியின் மேலுலகங்களில் அக்கட்டளையிற் கூறிய பசு புண்ணியங்களை வழுவாது இயற்றினவர்க்குக் கொடுக்கும் இன்ப பதமாகத் துறக்க உலகத்தையும், அதன் மேலுலகங்களிற் பசு புண்ணியத்தின் மேலான தவநெறி பூண்டு ஒழுகுமவருக்கு இன்ப பதங்களாகச் சனலோக தவலோக சத்திய லோகாதிகளையும், இவற்றிற் கெல்லாம் மேலாகிய அண்ட ஓட்டின் எல்லை யிற் சிவலோக பதத்தையும் ஆக்கி வைத்தும், ஆன்

மாக்களின் கன்மங்களைச் சஞ்சித பிராரத்துவ முறை யாகப் புசிப்பித்து அழித்தே தாமாந் தன்மை தரல் வேண்டுமென்னும் பேரிச்சையோடும் அவற்றைவிட்டுப் பிரியாது உடனாய்நின்று காணுதல் காட்டுதலாகிய இவ்வுபகாரங்களைச் சதாகாலமும் நீக்காது உபகரித்து வருவதும் இச்சிவஞானம் ஒன்றேயாகும். இன்னும் இச்சிவஞான அபர தடத்தமாய்ப் பிரிந்த சிவ வாக்காகிய ஆகம சிவஞான உண்மை நிலையையுணர்ந்து அக்கட்டளையின் வழுவாது ஒழுகுவாராயின் அந்தச் சன்மத்திற்றானே அக்கன்ம சேடம் நுகரப்பட்டு அழிய, உடனே அசத்தின் விலகிச் சத்தாந்தன்மைப் பெருஞ்செல்வத்தை நித்தியமாய் அனுபவிப்பார் என்க.

"ஒருப வத்தினைப் பூமியி னுத்தம குலத்து
மருவி மானத கருமங்கள் புரிந்து சன்மார்க்கத்
திருவ மார்நிலை நின்றுதே சாரு நம்மருளாற்
பொருவி லாதமுத் தியிற்புகு வாருஞ்சிற் சிலரே"

"ஒரு நம்மனுக் கிரகத்தி னுண்மையின்
நேருநற் கருமங்க ணிகழ்த்தி நாடொறும்"

"தொடர்தரு சித்தநற் சுத்தி வாய்ந்து பின்
னடர்சமு சாரமிக் கனுறொன் றெண்ணியே
இடாறு விரத்திமிக் கிணையி லாக்கதி
படரிய விருப்பமென் மேற்ப ரந்தெழ"

"தறைபுகழ் சாந்தியே தாந்தியே முதற்
கறையறு குணத்தொடு கரும மாற்றிடிற்
றுறைகொளப் பவத்தினே தூய மாமறை
அறைசிவ ஞானத்தை யடைகு வாரரோ"

என்று சூதசங்கிதையின் முத்தி காண்டத்திற் கூறப் பட்டபடி, அவ்வருள் நிலையாகிய சாதனத்தைக் கைநழுவ

விட்டு உபகரித்து ஊட்டுவிக்கும் திருவருள் வசத்தையும் மறந்து பிராரத்துவம் புசிக்குந்தோறும் இவை நம்மாலாவன என்றெண்ணும் தற்போத குற்றமே ஆகாமியமாய், அது சஞ்சிதமாய் மறுசென்மத்திற்கு ஊழாய் நிரம்ப, இவ்வாறு எண்ணிலாத சன்மம் எடுத்து உழலுதலாகிய பிறவி யென்னுங் கண்ணியைக் கொண்டு நிகழும் பாலப் பருவத்திலே முன்னர்க் கூறியவாறு விளைந்த குற்றத்தால் அந்த ரௌரவாதி நரகங்களிற் கிடந்து நெடுங்காலம் நரகத் துன்பம் அனுபவித்து அந்நரக வாதனைக்குப் பற்றாது எஞ்சிய பாவங்களை அனுபவிக்கும்படி. மீட்டும் சனன சாகரத்தின் இறங்கி முற்பவத் தொடர்பின் பழக்க வாசனையால் அதன்ம குணங்களே விசேடமாகப் பொருந்திய பலவகைப்பட்ட கீழ்ச்சாதிகளிற் பிறந்து ஒரு சிறிதும் இன்பமின்றித் துன்பமே எஞ்ஞான்றும் அனுபவிக்கும் தேசங்களில் வசித்தும், அந்நரக பாவசேடங் குறைந்த பருவத்தில் இன்ப துன்பமென்னும் இரண்டையும் கூடி அனுபவிக்கும் குணங்களையும் உடலையும் புவனத்தையும் பொருத்தி அந்நல்வினை தீவினைகளின் வசமாய் உலாவியும் இவ்வாறு உழன்று திரியுங் காலத்தில் அபுத்தி பூர்வமாகவும் புத்தி பூர்வமாகவும் செய்த தருமமாகிய நல்வினையின் அதிகபலத்தினால் லௌகிக வைதிக கரும யாகாதி தருமங்களின் வழிதவறாது ஒழுகியவராய், அவற்றின் பயனாகிய சுவர்க்காதி இன்பங்களையே அனுபவித்து அப்போக முடிவில் பின்னரும் பூமியிற் சென்மித்து முற்செய்த தருமத்தால் வரும் சுகம் அனுபவித்த தொடர்பின் பழக்கத்தால் பின்னும் அத்தரு

மத்தையே அதிக பங்காகச் செய்து வருதலால் மனச் சுத்தியுண்டாக ஒருவாறு பாகம் அடைந்தவராய், சிவாஞ் ஞையின் கீழ்ப்படிதலே தமக்குக் கடமையான உறுதிப் பொருளாகுமென்னும் எண்ணம் சுத்தியடைந்த அம் மனதிலுண்டாக, அதன்மேல் அவர் செய்யுந் தருமங்கள் போககாரணமான காமிய தருமமாகாது மலத்தினின்றும் பிரிந்து தாமாந்தன்மை பெறுதற் குரிய உன்முகமான நிட்காமிய தருமமாய் வளர, அதனாலும் ஒருவாறு அறிவு விரியப் பெற்றவராய், அவ்வேதாகம கட்டளைகளின் உண்மையைச் சிந்தித்து நோக்குமிடத்தில் ஓர் விசாரந் தோற்ற, அவ்வப் பிறவி களிற் கருப்பாசயப்பை யுறுத்துதலால் வருந் துயரமும் பூமியிற் செனமித்த பின் அவ்வுடலுக்காய் அமைத்த ஊழின் அனுபவ எல்லைவரையும் அவ்வுலக வாழ்விற் படுந்துயரமும், அவ்வவ்வுடலினின்று அவ்வான்மாப் பிரியும் அந்திய காலத்து ஓர் எறும்பின் கண்ணளவு துவாரத்தினுள்ளே ஒரு பெரிய யானையைச் சொருகி யிழுத்தால் அவ்வியானை எவ்வளவு அவத்தைப்படுமோ அவ்வளவு துயரத்தை இவ்வுயிரும் அனுபவிக்கும் என்பதனையும் உணர்ந்தவராகி, இத்துயரங்களுக் கெல்லாம் ஏதுவான இப்பிரபஞ்ச வாழ்க்கையில் அரு வருப்படைந்து சிவத்தியான பரர்களாய் வருகின்ற நிலை, பிஞ்சாயிருந்த காய் திரண்டு முற்றிய பருவ மாகவும், இருவினையொப்பு மலபரிபாக சத்திநிபாத உரிமையை அடையும் நிலையில் அவ்வருள் முளை பதிந்த நிலையே பிறவியென்னுங் காய் முதிர்ந்து பழமாதற் குரிய பருவமாகவும், இவ்வாறு உடனின்று வெளிவந்த

உணர்வினால் அவ்வுயிர் கீழாலவத்தைப்படச் செல்லும் கன்மார்ச்சிதம் இல்லாது மேலாலவத்தைப்பட நின்று கன்மங்களை நுகர்ந்து கழித்தலால் அச்சிவஞான மூலையாக அவ்வுணர்வினால் தாம் தேடிய கன்ம வினைகளைத் தம்மோடு உடன்நின்று கூட்டுவிப்பவன் சிவனேயெனவும், தாம் புசிக்கும் பிராரத்துவங்கள் சிவசங்கற்ப மூலமே யெனவும் எண்ணுதலால் ஆகாமிய கன்மமேறாது தடைபட்டு நிற்க, சஞ்சித வினைகள் பிராரத்துவ முறையிற் புசித்துத் தொலைய மறுசெனனத்தின் வித்து இல்லையாய் அழிதலினால் இரு வினைக் கொழுந்து படருதற்குக் கொழுகொம்பு இல்லையாய்த் தவற, வினையொப்பு வருதலால் இவ்விந் திரியங்கள் நாமல்லவென்றும், நம்வயத்தன அல்ல வென்றும் தாமென எண்ணியிருந்த தற்போதத்தைத் தமக்கு அன்னியமெனவுங் கண்டு தம்மையும் போதத் தையும் வேறாகப் பிரித்துணருதலே அதன் விடுதலை யாகக் கண்ட தத்துவ தரிசன விடுதலையிலே இவ்விரு வினைக் கயிற்றின் வழி மாயாகாரிய தத்துவங்களைப் பிரேரித்து நின்ற சத்தித் தானமாகிய சிவ தத்துவங் கள் ஐந்தும், தம்செயலற்று நிற்க, அவற்றின் பிரேரகத் தால் இயங்கி நின்ற தத்துவம் முப்பதும் நீங்கி நிற்க, அவற்றின் காரணமான மாயையும் அழிய, இக்கன்ம மாயையாகிய இரண்டிற்கும் மூலமான அநாதி மலமும் தன் சத்தி கெட்டுப் பக்குவமாக, இவைகளைக் காரியப் படுத்தும் பஞ்ச கிருத்திய தலைமையாய் நின்ற சிவசத்தி யான திரோதாயியும், இதுவரையினும் வினைப்போகங் களை யூட்டும்படி கருமறைப்பாய் நின்ற மலகுணத்தை

ஒழித்து உள்ளபடி பொருள்களைக் காட்டும் ஒளிக் குணமுடைய பூரண திருவருளாய் நிற்கும் நிலையிலே இவ்வான்மாக்களும்

"ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யாம்துணை"

**(சிவ. போ. சூத். அ. மொழி.)**

என்றருளியபடி, அத்திருவருளையே ஆதாரமாக நின்று அவன் அருளே நமக்கு நித்திய உபகாரமாதலின் நாமும் அவன் உடைமையென்னும் உறுதியோடு தானுந் தலைவனுமாகிய துவிதநிலையில் நின்று தான் சிவமாதற் குரிய உன்முகமாய் நிற்கும் அருளவத்தையிலே அதி சுத்தமடைகின்ற நின்மல சாக்கிராதி அவத்தைகளிற் பயின்ற தசகாரிய சுத்தராய் முத்தி பஞ்சாக்கர முறைப்படி, சதாகாலம் தவறாது நிலைநிற்கும்படி சிவனடியாரை வணங்கி அவரோடு கூடிச் சிவாலயங்கள் தோறுஞ் சென்று தரிசனஞ் செய்து வணங்கி, மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங்களாலும் அப்பெரு மானது திருவடித் தொண்டுகளையே இடைவிடாது செய்து வரும் சாதனம் முதிர்ந்துழி, அவ்வருள் முளை ஒவ்வோர் கலையாய் வளர்ந்து அவரைப்பற்றிய அநாதி மூலமல சத்திகள் அபர பக்கத்துச் சந்திரனுடைய கலைகள் நாடோறும் ஒவ்வொன்றாகத் தேய்ந்து குறைதல் போல ஒவ்வோர் கலையாகத் தேய்ந்து கெட, பூர்வபக்கச் சந்திரனுடைய ஒற்றைக் கலையோடு மற்றைய கலைகள் முழுவதும் ஒவ்வொன்றாய் வளர்ந்து பூரணமாய் நிரம்பு வதுபோல வளர்ந்து அவ்வெற்றிடத்திலே ஒவ்வோர் கலையாகப் பதிந்து அம்மல சத்திகளினின்றும் நீங்கிய அவ்விடம் முழுதினும் தனது அருளைநிரப்பி இவ் வான்ம வியாபகத்தை மறைத்திருந்த மலசத்திகள் முழுவதையுங் கெடுத்து அவ்வான்ம வியாபகம் பின்னும்

அம்மலத்தினுற் சுருங்காது அவ்வியாபகம் முழு வதிலும் தன்னையே நிரப்பி வேறு பிரியாது தன்னுள் அடக்கி,

"அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க" (சிவ. போத. சூத். கO)

என்றபடி, இவ்வான்ம வியாபக சிவ வியாபகமாகிய இரு வகை ஞானக் கிரியைகளும் இரண்டாதற்கும் ஒன்ரு தற்கும் இடையே ஆன்மஞானந் தன்னுளடங்க, அவ் வான்ம ஞானத்தினுள் அநாதி மலம் அடங்கக் காட்டி, அச்சிவஞானக் கடலாகிய சிவத்தோடு கூடி அத்துவி தானந்த முத்திப் பயப்பதும் இச்சிவ ஞானமேயாம். இனி அநாதியே மலத்தின் மறைந்து மறியலிற் கிடந்த ஆன்மாக்களை அம்மலத்தினின்றும் விடுவித்துச் சுய வியாபகத்தைக் கொடுத்து, பின்னும் அவ்வியாபகஞ் சுருங்காத வண்ணம் அகண்டமாகிய இச்சிவஞானம் தன்னுள்ளடக்கித் தானய் நின்று பேரானந்தச் செல் வத்தையே நித்தியமாய் அனுபவிக்கும்படி நிறுத்தி வைக்குங் கருணையே அன்று முதல் இன்று வரையும் உடன் நின்று தொடர்ந்து திரிந்ததென்பதை நம் போலிய அறிவினர் அறிந்து உய்யுமாறே

"கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்"
(கந்த. வள்ளி திருமணப்படலம் உடு அ)

என்னுந் திருவிருத்தத்தைக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளினு ரென்பதை இங்கே நாமெல்லாம் உய்த்துணர்ந்து கொள்வோமாக.

## கூ. முத்தி இலக்கணம்

"இருதிற னறிவுள திரண்டலா வான்மா"

(சிவ. போ. சூத். எ)

என்பதனுல், அறிவைக் கெடுக்கும் மலமுமாகாது முற்றறிவினையுடைய சிவமுமாகாது அவ்விரண்டனை யும் அறிந்து பற்றும் இயற்கையோடு அதி சூக்கும வியஞ்சக காரண காரிய தூல சித்தான வியாபக முடையதும், பஞ்சேந்திரியங்களின் ஒன்ருகிய கண் தனக்கென ஒளியின்றி உயிரின் வியஞ்சகத்தால் ஒளி பெறுவதாயினும், ஒளிக்குணமும் உடையதாயிருத்தல் போல, தனக்கென அறிவின்றிச் சிவ வியஞ்சக அறி வுடையதாயினும் ஞானக் கிரியைகளைத் தனக்கென உடைய அறிதல் அசைதலை யுடையதுமாகிய ஆன்மா அவ்வறிவு அசைதலால் மலத்தை யறிந்து பற்றி அசத்தாகக் கிடந்து, பின் காரண சூக்கும வியஞ்சக காரியப்படச் சிவத்தை அறிந்துபற்றிச் சத்துப் பொரு ளாகி அவ்வசத்தினின்றுங் கழன்று சத்தினுள்ளடங்கி அவ்வசத்தாகிய பாச விடுதலையான முத்தி நிலையை யடைந்து சிவமுந்தாமும் வேறற அத்துவித சாயுச்சிய நித்தியானந்த சிவமாந்தன்மை பெறுதலையே பரமுத்தி யென்று பெரியோர் கூறுவர்.

அதனைப் பெறும் பொருட்டு முன்னமே சிவ காருண்ணிய ரட்சக சிவபிரான் தம் வாக்கினுற் பிரித்து. வெளிவரச் செய்த வேதாகமாதி சாத்திரங்கள் தம் மறிவாகிய பசு போதத்தால் அளவையிட்டு அறிதற்கு அதீதமாகநின்ற அபரசிவஞானமாய் இருப்பினும் அவற்

றைத் தாமும் வாசித்துக் கேட்டுச் சிந்தித்து உணரு தற்குவேண்டப்பட்டதாகியபிரதான ஆசிரியஉபதேசந் தானும், பஞ்சலக்கண கணித தருக்காதி கருவிநூல் களிற் பயின்று பல சாத்திர இலக்கியங்களையும் கசடறக் கற்றுணர்ந்த சாமர்த்தியமடைந்த ஆசிரியராயுள்ளவர் இடத்தே குருசீடமுறையிற் பெற்றுக்கொள்ளப்படினும் அவர் இயற்கையான பசுபாச ஞானங்களேயன்றி மேற் படப் பெறுதலும் கூடாது. இனி இவ்வித ஆசிரிய சீவர்களில் அச்சிவம் அதிட்டிதமாய் நின்று பண்ணும் உபதேசத்திற்றானும் அவ்வதிட்டானராயுள்ள சீவர் களின் சுதந்திரவீன பசுஞானம் அளவேயன்றி மேற் படப்பெறுதலுங் கூடாவாக, அச்சிவஞான அருட்சத்தி யிற் பிரிந்த காரிய பராசத்தி அதிட்டான சிவதடத்த பதிநிலையின் நீங்கிய சச்சிதானந்த சொரூப நிலைக்குரிய சுதந்திர சிவஞானமாதலின், அச்சொரூபசிவம் தத் துவஞான விசாரத்தால் மலபரிபாகமடைந்த சுத் தான்ம சந்நிதியமே தன்சொரூப அதிட்டானமாகக் கொண்டு

" தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த "

(சிவ. போ. சூத். அ)

என்றபடி, தன்மையிலும் முன்னிலையிலும் வெளிப் பட்டு நின்று உபதேசித்தருளும்.

சிவஞான குரு உபதேச அருள்வழி நின்று ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல் கேட்டல் சிந்தித்த லாதி ஞானபூசையால் அச்சிவஞான முளை அங் குரித்த அளவில் அச்சிவஞான அநுபவ சீவன்முத்த சிவனடியார் கூட்டத்திற் சென்று அவரை வணங்கி அவரோடு பழகிய சிவாலய சேவை சிவசின்ன

தாரணம் சிவலிங்கதரிசனம் சிவதிருப்பணி சிவ சரித்திர பாராயணுதி சிவபுண்ணிய சாதன வலி யினுல் தம்மைப்பற்றிய அநாதி மலசத்திகள் வலி குன்றி அழிதலினுல் மலபாகமடைய, அம்மல மூடத் தால் விளைந்த கன்மமும் அக்கன்மானுபவ காரணமாக வந்த மாயையும் அம்மாயா காரியமும் அதனைப் பிரே ரிக்கும் திரோதாயியுமாகிய ஐம்மலங்களினும் விடுபட் டவராய், கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்ட புட்பங்களாற் சிவார்ச்சனை செய்து வழிபடுதலாகிய சாதனத்தாலுஞ் ஸ்ரீ முத்தி பஞ்சாக்கர தியானத்தா லும் அச்சிவஞானம் சிறிது சிறிதாகப் பெருக உணர்வு விரியப் பெற்றவராய், தத்துவரூப மாயாகாரிய தத்து வங்களையும் தம்மையும் பிரித்து வேருகக் காணும் காட்சியாகிய அத்தத்துவ தரிசன விடுதலையுடையராய், ஆன்மரூப நிலையை அடைந்த தெளிதலினுல் ஆன்மரூப சிவதரிசனம் நிர்விகற்பமாகக் கண்டபின் சவிகற்ப தெளிவுக் காட்சியால் அவ்வான்ம சிவதரி சனத்தில் தத்துவசுத்தி ஆன்மசுத்தியும், நிட்டை கூடுதலாகிய சிவயோகத்தில் ஞாதுரு ஞேயங்களென் னும் இருபிரிப்பு இன்றிய அத்துவிதமும் சிவ போகத்தில் ஆனந்தாதீத சுகமுமாகிய இவற்றைச் சோபான முறைப்படி அடைந்த சீவன் முத்தராயினேர், ஆணவமல சத்தி திருவடி தீட்சை செய்த சிவ பிரானது ஞானசத்தியாலும் ஆகாமிய சஞ்சிதங்கள் கிரியாசத்தியாலும் தகிக்கப்பட்டு, பிராரத்துவ சேடம் ஒன்றுடன் அம்மல வுடலோடு நிற்கும் நிலையிலே

இடையிடையே ஏகதேச தற்போத உணர்வு தாக்கு தலால் அச்சீவன்முத்தி சாதனம் தடுமாறாது உறைத்துநிற்கும்பொருட்டு ஸ்ரீமுத்தி பஞ்சாக்கரத்தை முறைதவறாது நிலைப்படும் சுத்த அறிவினாற் கணித்து உச்சரித்துவரும் பெரும் பத்தியநிலையில் நின்றாராயினும் அப்பக்குவ சீவன்முத்தருக்கும் அம் மலவுடல் வாசனையினால் இங்குளி வாங்குங்கலம் அவ் விங்குளி நாற்றம் மாறாததுபோல ஓரோவழி ஏக தேசத்தில் விருப்பு வெறுப்புக்கள் அறிவற்றம் பார்த்து வருவனவாம் எனவும், அதுவும் அவர் தேடிய வினை யின் பிராரத்துவ நுகர்ச்சிக்காகக் கொடுத்த உடலும், அவ்வுடலிற் பொருந்திய கரணங்களின் வழிநின்று இயக்கும் பஞ்சகிருத்திய முறையினால் வந்த உணர் வாகிய தற்போதமும் பிராரத்துவமுமாகிய மூன்றும் பிரிபடாது வேறற நின்று நுகரும் நுகர்ச்சியிற்றானே ஆகாமியத்தையும் வளர்த்துக் கொண்டு நின்ற தற் போதப் பழக்க வாசனையினால் "வேம்பு தின்ற புழு கரும் பைத் தலைப்பட்டுழியும் நோக்கிற்றை நோக்கி நிற்கு மாறுபோல" அவ்வுடலுக்கு அமைந்தவினை நுகர்ந்து முற்றுப்பெறும் எல்லைவரையில் அச்சிவயோக நிலையிற் பெற்ற அனுபவ சுகத்தையும் மறந்து ஏகதேசத்தில் முன்னிட்டு வருவதேயாமெனவும் உறுதியாயுணர்ந்த மெய்கண்ட சிவாசாரியர் பத்தாஞ் சூத்திரத்தாற் சிவ யோக நிலையையும், பதினோராஞ் சூத்திரத்தாற் சிவா னந்தானுபவ நிலையையுங்கூறி, அதன் இறுதியில்

"கப்பின்றா மீசன் கழல்" (வெண். ரு)

என அபினு விருத்தியுங்கூறி முடித்தாராயினும், ஏக தேசத்தின் அறிவற்றம் பார்த்து வருகின்ற அவ்வுயிர் உணர்வின் முனைப்பைத் தடுக்கும் சாதன காரண மாகப் பன்னிரண்டாஞ் சூத்திரமென ஒன்றுவைத்து அச்சூத்திரத்தில்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

எனக் கூறிய பத்திய சாதனக் கட்டளைகளை நம்போலிய அறிவீன சீவர்கள் யாவரும் உணர்ந்து அனுசரித்து ஈடேறவும், தாம் அருமையாகப் பெற்ற சீவன்முத்த நிலை நழுவாது நிலைநிறுத்தும் சாதனமாகவுங் கொண்டு சமயகுரவர் முதலிய சீவன்முத்த சிவனடியார்கள் யாவரும் அனுசரித்து வந்தவாறுங் காணலாம்.

அவ்வாறாக, இச்சமய குரவர் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பரமுத்தியடைந்த வாறு கூறும் இடத்தில்,

"போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார்"

(செய். கஉருரு)

என்னும் செய்யுளின் அருத்தம் தற்போதநிலை முற்றாய் விடுபட அச்சோதியினுட் புகுந்து அத்துவிதமாய் ஒன்றுபடக் கலந்தாரென, ஒருவர் கூறியதை மற்றொருவர் மறுப்பாராய் அப்பிள்ளையார் மூன்றாம் வயதில் 'அம்மேயப்பா' என்று அலறியபோது தோணி யப்ப சுவாமியும் அம்மையும் வந்து எதிர்நின்று பரஞான அபரஞானப் பாலையூட்டி அழுகை மாற்றிய

அந்நேரமே அவரது பசுபோதம் நீங்கச் சிவபோதம் வந்து சேர்ந்தது. சோதியினுட் புகுந்து கலக்கும் அந்த நேரத்தில் நின்ற சிவபோதத்தையும் நீங்கியே அத்துவித பரமுத்தி அடைந்தாரென்று பொருள் பண்ண வேண்டுமெனக் கூறியதை ஆராய்ந்து தெளியு மிடத்து, இப்பிள்ளையார் நல்லூர்ப் பெருமண மென்னுஞ் சிவாலயத்தினுள்ளே தோன்றி விளங்கிய சோதி யினுட் புகுந்து, சிவஞானமென்று பேசப்படும் திரு வடி நீழலைச் சேர்ந்து நித்தியானந்தானுபவம் அடை யுஞ் சமயத்திற் றம்முளே,

"இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே"

(சேய். கஉசஉ)

எனவும்,

"அலகின் மெய்ஞ்ஞானத்தெல்லை யடைவுறுங் குறிப்பாலங்கண்
உலகிலெம் மருங்கும்நீங்க வுடனணைந் தருளவேண்டி"

(சேய். கஉசங)

எனவுங் காணப்படுகின்ற இவ்விரு செய்யுட்களாலும், அப்பிள்ளையாருக்குத் தற்போத வாசனை சிறிது நின்ற நிலையையும், சேக்கிழார் சுவாமிகள் ஓரிடத்து ஒருங்கு வைத்து உடம்பொடு புணர்த்திக் கூறி வெளிவரச் காட்டி இருத்தலாலும், அப்பர் சுவாமிகள் பரமு யாகிய திருவடி நீழலை அடையுங் காலத்தில்

"நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர சமர்ந்தி

(சே
)

எனக் கூறப்பட்டதனாலும், மாணிக்கவாசக சு சரித்திரத்தில்

"மலமகல் பவரும் புவிமீதே மானுட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரு மலவா தனையென்றே"
**(திருவாத. திருவம்பலச் சருக்கம் செய். உ0)**

எனக் கூறப்பட்டதனாலும், அப்பிள்ளையார் சீகாழிப் பதியிற் சென்மித்த மானுட வடிவத்தின் மூன்றும் வயதில் ஞானப்பாலையுண்டு சிவபோதம் அடைந்தாராயினும், அம்மானுட வடிவம் நீங்கிச் சோதியினுட் புகும் எல்லைவரையினும் அம்மல வாசனையானது முழுவதும் அழியாது ஏகதேசத்தில் நின்றதெனவும், அச் சோதியினுட் புகுந்து அம்மலவடிவம் நீங்கிச் சிவ ஞான வடிவத்தைப் பெற்றபோதே பசுபோதம் முற்றாய் விடுபட, சிவபோதம் முற்றாய் நிரம்பியதென வும், பொருளமைந்து கிடத்தல் தெளிவாகின்றது.

இன்னும் இருதிறன் அறிவுடைய இவ்வான்மாவுக்கு மலஞான சிவஞானமாகிய இவ்விரண்டுமேயன்றி வேறு ஞானங்கள் வேதாகமங்களிற் பேசக் காணப்படாமையால் அவ்விரு போதங்களையும் நீங்கி முத்தியடைந்தாரெனப் பொருள்கொண்டு மறுத்தவரின் கொள்கை, உயிர் கெட்டுச் சிவனடியில் ஒன்றுகுமெனக் கொள்ளும் பரிணமவாத சமயக்கொள்கை ஆகுமேயன்றிச் சற்காரியம் ஆகாது. ஏனெனில், குணமில்லையாகவே குணியும் இல்லையாம் என்றபடி குணமாகிய அவ்விருவகை ஞானங்களும் அழியக் குணியாகிய ஆன்மாவும் இல்லையாய் அழியுமாதலால் அவ்வான்மாக் கெட்டால் ஒன்றமாட்டாதென்னும் அத்துவித பின்னமாய், சற்காரிய முத்தியாகாது பிழைபடுமாதலால், அத்துவித சாயுச்சிய நித்தியானந்தானுபவம் மலஞானத்தாற் பெறுதல்

கூடாமையானும், ஞாதுரு ஞேயமான இருபகுப்புணர்வு உள்ளவரையும் சுட்டுணர்வாகிய மலஞானமாதலால், அதனால் அவ்வனுபவச் செல்வம் பெறுதல் கூடாதாக லானும், அசத்தோடு கூடிய அசத்தாகக் கிடந்த அந் நிலையைவிட்டுச் சத்தோடுகூடிச் சத்தாந்தன்மை முற் றுப் பெற்றவிடம் அதுவாகலானும், அந்நிலையிற்றானே மல வடிவமும் அம்மல வாசனையாகிய தற்போதமும் முற்றாய் விடுபட, முன்னமே அம்மலவுடலோடு நின்று சிவஞானனுபவ சீவன்முத்த நிலையை அடைந்தவராயி னும், பரமுத்தியடையுங் காலம் அச்சிவஞான சொரூப மாயிருந்தே அவ்வனுபவம் நீக்கமின்றி நித்தியமாய் அடைய வேண்டுதலானும்,

"போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார்"

(சேய். கஉ௫௩)

என்புழி அநாதிமல மூடமாகிய தற்போதச் சேட்டை யையும் அதன் நிலைக்களமாகிய அம்மலவுடலையும் நீங்கியபோதே, அச்சிவ சோதியினுள்ளடங்கி அத்து விதமாய் ஒன்றுபடக் கிடந்த பேரானந்தானுபவ நிலைய ரானார் எனப் பொருள் கொள்வதே சித்தாந்த சற்காரிய மாக நிச்சயப் படுகின்றது.

ஆனாற் கருவிகளைக் கொண்டுணரும் காட்சி அனு மானம் உரையெனப்பட்ட அளவை ஞானம் சுட்டுணர் வின் பேதமும், கேட்டற்கண் வருவது சாத்திர விந்து ஞானமும், சிந்தித்துத் தெளிதற்கண் வருவது பாவனை யாகிய பேதஞானமும், மற்றொன்றனையும் பாராது சிவத்தையே காண்பது அனுபவ முதிர்வாஞ் சிவ ஞானமுமாகலால், அச்சிவஞானப் பயனாகிய சற்காரிய முத்திநிலையை, அவ்வநுபவ சிவஞானத்தை யடைந்த

அவர் தாமே கண்டு அநுபவித்துக் கொள்ளுதலே யன்றி, "கண்டவர் விண்டிலரே விண்டவர் கண்டிலரே" என்றபடி, மற்றொருவர் மனத்தினால் மதித்து வாக்கினாற் சொல்லுதல் கூடாதாம். அது நிற்க.

சீவர்கள் மலசகித சுதந்திர உணர்வினராதலால் அவரவர் கன்மானுசார முறைப்படி உணர்த்துபவராகிய சிவம் அவரவர்க்குத் தக்க அறிவைக் கொடுக்க, அவ்வறிவளவிற் றாங்கண்ட அளவையே முத்தியெனக் கருதி உலோகாயத மாயாவாதி முதல் ஐக்கியவாத சைவர் ஈறுகச் சொல்லிய சமயபேதங்களிற் றனித்தனி பிரகிருதி தூலதத்துவ வித்தியா தத்துவங்களாகிய முப்பத்தொரு தத்துவ பதங்களையும் அடைதலே முத்தியெனவும், இம்மாயை கன்மங்கள் இரண்டனையும் நீங்கி ஆணவமலம் ஒன்றுடன் நிற்கும் விஞ்ஞானநிலை அடைந்தவரிற் பக்குவராய் இலயபோக அதிகார சிவ தத்துவ பதங்களில் அதிகார கருத்தராய் இருப்பதே முத்தியெனவும், இவ்வாறு பேசப்பட்ட முப்பத்தாறு தத்துவ பதங்களின் மேலாயுள்ள தத்துவாதீத சித்தாந்த சைவத்தின் பெருந்தவமாகிய சரியை கிரியை யோகம் என்னுந் தவநெறி மூன்றினுக்கும் முத்தித் தானமாகிய சாலோக சாமீப சாரூப பதங்களைப் பெறுதலையே முத்தியெனவும், அச்சித்தாந்த சைவத்தின் மேலான ஞானநெறியினாற் பெறும் சாயுச்சிய முத்தியைக் கொள்ளுஞ் சித்தாந்த சைவபேதங்களில், வழிச்செல்வோர் போயணையும் மாநிழல் போல, முதல்வன் விகாரமின்றி நிற்பப் பரிபாகமடைந்த உயிர் ஞானத்தைப் பெற்றுச் சிவனடியிற் சேருமெனக்

கொள்ளும். ஈசுர அவிகாரவாதியும், உயிர்கெட்டுச் சிவனடியில் ஒன்றுகுமெனக் கொள்ளும் பரிணும வாதியும், நித்திய மங்கள திவ்விய சரீரத்தைப் பெற்றிருக்குமெனக் கொள்ளும் உருவ சிவசமவாதியும், இன்னும் அருவ சிவசமவாதியும், மாயா காரிய கருவி களான தத்துவங்களை யெல்லாங் கழற்றித் தான் அவற்றின் மேல் நிற்றலாகிய ஆதிமுத்தனுதலில், அனுதி முத்தனுகிய சிவனுகுமெனக் கொள்ளுஞ் சிவ சமவாதியும், நீரோடு நீர் சேர்ந்தாற்போல உயிருஞ் சிவமுங்கூடி ஒருபொருளாய் இருக்குமெனக்கொள்ளும் ஐக்கியவாதியுமாகிய இவர்கள் கொண்ட சாயுச்சிய முத்திநிலை யெல்லாம் மலம் நீங்காத பசுஞான சம்பந்த மாதலின் சற்காரிய முத்தி அல்லவாகிச் சிலசில ஏக தேசத்திற் பொருந்த உள்ளனவாம்.

அஃதாவது, இரும்பைக் காந்தந் தன்வசப்படுத்து தலில் விகாரமின்றி நிற்றல்போல, உயிரைத் தன் வசப்படுத்துதலிற் சிவன் நிர்விகாரியாய் நிற்பன். ஆதலால், சென்றணையும் நிழல் போல நில்லாமைபற்றி, சிவன் நிர்விகாரியாய் நிற்றற்குப் பிழையில்லை; இனி அக்கினியானது இரும்பின் முதலைக் கெடாது அவ் விரும்பிற் பற்றிய கறையைக் கெடுப்பது போல, முதல்வனும் உயிரைத் தானுக்குதற்குத் தடையா யிருந்த மலத்தைக் கெடுத்து அவ்வுயிரை நிறுத்தித் தானுக்குதலால் அவ்வுயிர் முதல்கெடாது நின்று சிவத்தோடு அத்துவிதமாய் ஒன்றுபடுதலால், அவ் வுயிர் அழியாது ஒன்றுதற்கு இழுக்கில்லை. இனி நீரோடு சேர்ந்த உப்பின் சுவை முழுவதும் அந்நீரிற்றுனே

செறிந்து அந்நீரைத் தன்னோடு சமமாக்கி நிற்பது போல, அவ்வுயிரோடு சேர்ந்த இறைவனும் தனது வியாபகத்தை அவ்வுயிரிற் பதித்து, தன்னோடு சம மாக்கி நிற்பன். ஆதலால் நீரோடு நீர் சேர்ந்தாற்போல் அல்லாமை பற்றிச் சிவசமமாதற்குப் பிழையில்லை; இனி இரதகுளிகை செம்பை உருக்கித் தன்னோடு சேர்த்துப் பொன்னாகச் செய்தும், அப்பொன்னைக் காட்டாது தன்னுள் அடக்கி வைக்குந் திறம்போல இறைவன் அவ்வுயிரைத் தானாக்கியும் அவ்வுயிர் இயல்பு சிறிதுந் தோற்றாது தன்னுளடக்கி நிற்பனாதலால், அப் பணைந்த உப்பேபோல ஒப்பச்செய்யினும் அச்சிவன் தானே பஞ்சகிருத்திய தலைவனாய் நிற்றலிற் பிழை யில்லை. இனி அவ்விறைவனும் பரமுத்தியில் உயிரோடு கலந்தவழிப் பிரித்தறியப்படாத ஆனந்தசொரூபனாய் நிற்பனாதலால் அவ்வுயிர்தானும் சிவானுபவம் ஒன்றி னுக்கே உரித்தாக நிற்றலிற் பிழையில்லை.

ஆகவே, ஆகம சித்தாந்தங்கள் பேசாமற் பேசி அந்தரங்க ரகசியமாய் வைத்திருந்த முத்தி சற்காரிய நிலை, அரன்திருவடியாகிய சிவஞானஞ் சார்ந்தபோது உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிய, உயிர் அம்மலத்தின் வேறாகப் பிரிந்து நிற்றலே முத்தி யென்று சொல்லப்படும். அவ்வாறு அம்மலத்தின் வேறாக நின்ற உயிர் தன்னியற்கையிற் றனித்து நிற்றல் கூடாமையால் சிவத்தோடு நிற்கப்பெறும். அவ்வாறு நிற்கவே அக்கினியானது இரும்பைத் தன்மயமாக்கினாற் போல முதல்வன் தான் அவ்வுயிரோடு சகசமான அத்துவிதக் கலப்பினாலே தனக்குரிய எண்குணங்

களையும், அவ்வுயிர் சிவானந்தமடையும் பொருட்டு விளங்கக் காட்டுவார். அதனாலே அவ்வுயிர் அரன் திருவடி நீழலாகிய சிவஞானக் கலப்பினால் அகண்ட ஞானாதி எண்குணங்களையும் அடைந்ததாயினும் அச் சிவஞானாதி எண்குணங்களும் பஞ்சகிருத்திய தலைமைகளுக்கு உரித்தாகாது சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்தாக இருப்பனவாம். இதுவே சற்காரிய முத்தி நிலையாகும்.

"தாணுவின்றன் கழலிணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றான்சுத்தனா யிருக்கை முத்தி"
(சித். சூத். கக. செய். ரு)

எனவும்,

"ஆத லானா மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே"
(ஷை எ)

எனவும்,

"தன் னுருவப் பரப்பையெலாங் கொடுபுகுந்து
பதிப்பணிவன் பாலே" (சித். சூத். கூ. செய். கஉ)

எனவும்,

"உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரியன்
உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே"
(ஷை சூத். கக. செய். க௦)

எனவுங் கூறப்பட்டுள்ள பிரமாணங்களைச் சிந்தித்தால் சதசத்தான சார்போதனாகிய சீவன் அசத்தோடு கூடும் வழித் தன் ஞானக்கிரியை சீவியாது சிவஞான மயமாகச் சூக்கும சித்தராகிய சிவத்தினுள் அடங்கித் தோற்றாது கிடந்து அழியாப் பெருஞ் செல்வ நித்தியானந்த அனு

பவம் பெறுதலே சித்தாந்த சற்காரிய முத்தியென் பதனைத் தெளிந்த அனுபவத்திற் காணலாம்.

இனி, தூலகாரியம் சூக்கும காரணத்து அடங்குமென்னும் சற்காரிய முகத்தால் தூலசித்தாகிய உயிர் சூக்கும சிவத்தின் அடங்குமெனக் கூறிய வசனத்தால் சிவன் சீவனென்னும் பொருள் இரண்டாகாது ஒரு பொருளாகுமெனக் கொள்ளும் ஏகான்மவாத மாயா வாதங்களுக்கு அடுக்குமெனச் சந்தேகம் நிகழின், பொருள்வகையாற் சாதியொருமைபற்றி அறிதற் குண முடைய சித்தென்னும் பதத்தைத் தானும் பெற்றுக் கொண்ட 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' ஆனதால், அவ்வுயிரின் வினையாகக் கூறிய அநாதியே மலத்தைப் பற்றுதலான குற்றத்தின் காரணமாகாது, அவ்வுயிரின் தன்னியற்கை அறிதற்குணம் ஒன்றற்கே காரணமாக உள்ளது சூக்கும சித்தாகிய சிவமென்ப தனைச் சித்தென்னும் பொதுமையினின்ற சாதியொரு மையினாலும்,

"சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித்து"
(சித். சூத். ௧௧. செய். ௧௧)

என்பதனாலும், இன்னும் அச்சிவசூக்கும காரிய பிரேரக தூலமுமாதலினாற்றான், இவ்வுயிர் சிவத்தோடு பின்ன மாகாது அபின்ன அத்துவிதமாய் ஒன்றுபட்டு நித்தி யானந்த செல்வத்தை அனுபவிக்கப் பெற்றது ஆதலா லும், தூலம் சூக்குமத்து அடங்குமென்னும் சற்காரிய சமாதானத்தாற் றெளிவுபெறலாம். ஆகவே உயிர் சிவம் இரண்டும் ஒன்றெனக் கொள்ளும் ஏகான்ம மாயா

வாதங்கள் தீண்டாது பொருள் இரண்டேயென்பது பல நியாய முறைகளாற் பெறப்பட்டன. இவைகளேயன்றி இதன்மேலுஞ் சிந்திக்குமிடத்து இவ்வுயிருக்காகக் கூறிய இருதிறன் அறிவுள் இடையே தோன்றி மறையும் பொய்யாகிய பொது இயல்பான தடத்தநிலையில் மலஞானமும் எக்காலத்தும் அழியாத தன்னியற்கையின் மெய்யாகிய சொரூபநிலையிற் சிவஞானமும் உடைமையால் அவ்வுயிர் தடத்தப் பொய்ந்நிலையான மலத்தினின்றும் விடுதலைப்பட்டுச் சொரூப மெய்ந்நிலையாகிய சிவஞானத்தோடு வேறற ஒன்றுபடக் கிடந்த அம்முத்திக்காலத்தும், அதன் முன்னர்ப் பெத்த நிலையாகிய செல்காலத்தும், மற்றும் எதிர்காலத்தும், ஒரே படித் தாய்த் தம்மேற் கருணைகொண்டு காணும் உபகாரம் காட்டும் உபகாரங்களை நீக்கமறச்செய்து பிரியாது உடன் நிற்பதை, அச்சிவஞானத்தால் உணர்ந்து,

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

(சிவ. போ. சூத். கக)

என்றபடி நித்திய உபகார பரமசிவப்பொருளை அயராமையாகிய ஞானமும் அதனால் விளையும் அன்பும் அவ்வன்பினாற் செலுத்தும் கிரியையும், முறையே ஒன்றுக்கொன்று காரண காரியமாகச் செலுத்த அச்சிவத்தின் இடையறாத இச்சை பெருக அவ்விச்சையே பேரானந்தமாக அனுபவிக்குமெனவும், அவ்வனுபவம் சர்க்கரை கற்கண்டு தேன் பால் முப்பழங்கள் ஆகிய இவைகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்த இரசத்தை இவ்வாறென மதிப்பிட்டாலும், இம்முத்தி நிலையை அவ்வனுபவ கருத்தனாலும் மதிக்கப்படாது. அரூபா

ரூபமாகிய யாதுமின்றிய நின்மலாதீத பரமானந்த சொரூபநிலையிற் பிறந்ததாதலால் அதனை அனுபவிக்கும் ஆன்மாவும், அரூப ரூபமாகிய யாதுமின்றி நின்மலமான அகண்ட சிவஞான சொரூபநிலையில் நின்றே அனுபவிக்குமெனவும், அனுபவமென்ற சொல்லின் அருத்தம் உட்கிடையிலே அச்சொரூப நிலையினும் அனுபவித்தல் கிரியையின் செயலாக அறிதலின்றிக் கிரியையாகாமையால் ஞானக்கிரியை உடையனவெனவுந் தெளியக் கிடக்கின்றன.

இனி, இஞ்ஞானக் கிரியைகள் சிவஞான சொரூபமாக நில்லாது அனுபவம் பெறுமெனக் கூறுவாராயின், புத்தர் கூறும் ஆலய விஞ்ஞானம்போலக் குணம் சூனியமாகவே குணியுஞ் சூனியமாமென்றபடி, அனுபவிப்பான் ஒரு வினைமுதல் இல்லையாய் ஒழியும். ஆகவே, இருபொருள் ஒன்றாகுமென்னும் பொருளடங்கிய அத்துவிதமென்ற சொல் பிழைபடும். அவ்வத்துவிதமென்ற சொல்லின் இன்மை அன்மை மறுதலை யென்னும் முப்பொருளின் ஒன்றாகிய இன்மைப் பொருளைக் கொண்டு ஆன்மாக் கெட்டுச் சிவன் ஒன்றேயாய் நிற்குமெனப் பொருள் கொள்ளில் அனுபவமென்னும் சத்தார்த்தம் பிரயோசனம் இல்லாது பிழைபடும். அவ்வனுபவம் தனி முதலாகிய சிவத்துக்கெனக் கூறுவாராயின், தானே தன்னைப் பற்றுதலென்னும் குற்றமாகும். ஆதலால் இவ்வான்மா அனுபவிக்க வேண்டியதெனவே சிவமும் உயிருமாகிய இருபொருளும் வேற்றுமையின்றி அத்துவிதமாய் நிற்கும் அன்மைப் பொருள் கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொள்ளவே, அவ்வுயிருக்குள்ள

இருவகை ஞானங்களிற் சிவஞானமே அவ்வனுபவ நிலையில் நித்தியமாய் இருந்ததென்பது திட சித்தமாய்த் தெளியத் தக்கதாம். இனி அவ்வாறு உயிர் சிவம் ஞானமென்னும் ஞாதிரு ஞானம் ஞேயமாகிய மூன்றும் அவ்வனுபவ நிலையில் உளதாகக் காணப்படுதல் முத்தி சற்காரியம் ஆகாதென ஓர் ஆட்சேபம் உள தாயின் முன்னர்க் கூறியவாறே உயிர்கெட்டால் சிவத்தோடு அத்துவிதமாய் ஒன்றுபடக் கலத்தல் கூடாது. அவ்வுயிர் கெடாத வழி உயிருஞ் சிவமு மென இருபொருளாய் நிற்றலினால் ஒன்றுபடக் கலக்கு மாறு இல்லை. அவ்வுயிர் இல்லையாயின் ஆனந்தாநுபவம் இல்லை. அவ்வான்மபோதம் இருந்தால் அத்துவிதம் இல்லை. இவ்வாறு ஞாதிரு ஞானம் ஞேயம் ஆகியமூன்றும் இல்லாது முத்தியின்பமும் இல்லையென்றாய் விடுமாத லால் பெத்தகாலத்திலே சிவம் உயிரோடு வேறறக் கலந்து இயக்கிநிற்பினும் அச்சிவந் தோன்றாது சீவ போதமே முன்னிட்டு இயங்குதல் போல, இம்முத்தி நிலைத் துரியப்பேறாகியசிவயோக நிலையிலே இவ்வுயிரும் தற்போதஞ் சீவியாது சிவபோதத்தின் உள்ளடங்கித் தன்னைத்தோற்றாது சிவமே முன்னிட்டு இயக்க நிற்கும்.

"அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"

(சிவ. போ. சூத். ௧0)

என்றபடி அவ்வுயிர் நிலையாகிய தற்போதஞ் சீவியாது தன் செயலறச் சிவசெயலாய்ச் சிவஞானக் கிரியை யினுள் தன்ஞானக் கிரியைகள் உள்ளமைந்து

கிடத்தலின், அவ்வுயிர்க் குணமாகிய தற்போதம் நீங்கினமையால் குணியாகிய அவ்வான்மாவை இல்லை யாய்க் காணலாம். அதனால் ஞாதிரு இல்லையாக வும், இனி ஞானமோ வெனின், அது அகண்ட சிவஞான மாதலால் தானெனவும் அவனெனவும், அநு பவம் எனவும் கண்டித்து வேறுபிரித்துச் சுட்டியுணா ராது அகண்டமாகக் காணுதலினாலே தன்னருளாற் பாவிப்பது பரமெனவும்,

"தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை"
(கந்த. சூரன் அமைச்சியற்படலம் கஉஅ)

எனவும்,

"தம்பெருமை தானறியாத் தம்மிறைவர் தமக்கிரங்கி"

எனவும்,

"தம்பெருமை தானறியாத் தன்மையன் காண்சாழலோ"
(திருவாசகம் திருச்சாழல் கக)

எனவுங் கூறியவாற்றால், அச்சிவஞானம் தானெனவும், சிவமெனவுஞ் சுட்டியுணராமையின் இருந்தும் இல்லை யாகவும், ஞேயமோ எனின், கடலின் நீரிற் போய்ச் சேர்ந்த ஆற்றுநீர் அவ்விருநீராக வேறாகப் பிரிக்கப் படாமைபோல,ஞாதிரு எனவும், ஞேயம் எனவும் வேறு பிரிக்கப் படாது அத்துவிதமாய் ஒன்றுபட்டு ஆனந்த பரவசத்தில் அழுந்தி நிற்றலினால், தன்னறிவின் வேறல்லவனாய், அப்பணைந்த உப்பேபோலத் தன்னோடு விரவிக் கலந்து நிற்றலின், அவ்வுயிர் சிவமேயாம் என் பதனால், ஞாதிரு எனவும் ஞேயம் எனவும் பிரிபடாமை யின் இருந்தும் இல்லையாகவும் சமாதானங் காணலாம்.

இன்னும் தாயுமான சுவாமிகள்,

"ஞாதிரு ஞான ஞேயங்கள்
அற்றவர்க் கருத நட்புடைக் கலப்பே"
(சிவன்செயல் அ)

எனக் கூறிய செய்யுளின் சமாதான சற்காரிய சித்தாந்தப் பொருளினாலும், இன்னும் இவை போன்ற பல ஏதுப் பிரமாணங்களாலும் ஞாதிரு ஞேயங்கள் அற்ற இடமே ஆனந்தானுபவமெனப் பொருளமைந்து கிடந்தவாறு கண்டுகொள்க. இவையன்றித் தற்பதம் துவம்பதம் அசிபதம் என்னும் வேதாந்த மகாவாக்கியத்தின் சற்காரியத்தின்படியும் வேறாயிருந்த சிவன் பிரமபாவனை பண்ணுமிடத்து இருபொருளும் வேறற அத்துவிதமாய் ஒரே பிரமமாகி, மதுவுண்ட வண்டு போலத் தன்னினைவு இறந்துநின்ற அநுபவநிலையில், தன்னைத் தோற்றாது தானே பிரமமாய் நிற்றலினால் முன்னமே பேசிய ஞாதிரு ஞானம் ஞேயம் ஆகிய மூன்றுமற நின்றதே வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையாகிய சற்காரிய முத்தியாகும் என்பதை,

"பண்டைமறை களுமதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே"
(சித். சூத். கூ. செய். எ)

என்பதனாற் றெளிவுபெறக் காணலாம்.

"நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்றா
நசித்திலதே லொன்றாவ தில்லை—நசித்துமலம்
அப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்றா மீசன் கழல்"
(சிவ. போ. சூத். கக. வெண். ரு)

என்னும் பிரமாணத்தாற் பேசிய அதிநுட்ப ரகசியப்

பொருளாகிய சைவசித்தாந்த சற்காரிய முத்திநிலையை இத்துணைத்தென அளவையிட்டு யாமா கூற் வல்லமை உடையேம்? அனுபவத்திற் கண்டு கொள்க.

பரப்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
  பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
  மருட்குருவை வழிபடவே யவனிவன்றா னாயே
இரங்கியவா ரணம் யாமை மீனண்டஞ் சினையை
  யியல்பினொடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
  பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.

(சித். சூத். கஉ. செய். எ).

ஒன்றிரண்டாய் நின்றொன்றி லோர்மையதா மொன்றாக
நின்றிரண்டா மென்னி லுயிர் நோராகுந்—துன்றிருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானாகி
ஓங்கியவா றெவ்வா றுரை.

(வினாவெண்பா க0).

## ௬௦. முடிப்புரை

சீவர்களாகிய நாமெல்லோரும் அநாதியே பற்றிய மல மூடத்தால் நித்தியானந்த சுகத்தை யூட்டும் சிவ ஞானத்தை மறந்து கன்மசேட்டம் உடையராய்ப் பிறவிச் சாகர மத்தியிற் கிடந்து உழலுதலால், அக் கடலைக் கடந்து கரையேறி நித்தியானந்தம் பெற விரும்புவோமாயின், அம்மலத்தினின்றுங் கழன்று பரிசுத்தமடையும் பொருட்டு தேவன் கை ஔடதமாக எங்களுக்குத் தந்த இம்மானுட தேகம் உள்ளபோதே இவ்வுடலின் அமைத்த கரணங்களினால் வருவித்த அறிவினால் உணரும்படி தன்னோடு அபின்னமாயிருந்த சிவஞானத்தைப் பிரித்து, அபரஞான வேதாகமங்களாக உபதேசித்த கட்டளை முறையைக் கொண்டு உதய காலத்தில் விழித்தெழுந்தவுடன் அவசிய கருமாதி நித்தியகால வருண அனுட்டான சம்ஸ்காராதிகளும், அவற்றாற் பாகமடைந்த பக்குவ மேல் நிலையிலே சிவ சம்பந்த சைவப் பிரவேச தீட்சா முறைப்படி ஒழுகும் சமய சம்ஸ்காராதிகளுமாகிய கிரியானுட்டானங்களை ஆகமவிதி தவறாது விசுவாசத்தோடு அனுட்டித்து வரவும், அப்பலத்தினால் மலபாகமடைந்த பக்குவத்தால் நல்லறிவு பெற்றுச் சிவனடியாரைத் தேடி அவர் அடித்தொண்டு பூண்டு அவரோடு பழகிய சாதன வளர்ச்சியால் சிவஞான முளையுடைய சற்பாத்திரராகவும், பதார்த்த நிச்சய சற்காரிய நிலைகளை வகைபடப் பிரித்துக் காட்டிய இச்சற்காரிய சைவ சித்தாந்த சங்கிரகத்திற் கூறிய உண்மைப் பொருள்களை நன்றாய்

வாசித்துக் கேட்டுச் சிந்தித்துத் திரிபதார்த்த நிச்சய சற்காரிய முத்தி நிலையைத் தெளிவாயுணர்ந்து எங்கள் சொந்தமாகிய நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தை அநுபவிக்கவும் அருளுமாறு பரம கருணாநிதியைப் போற்றுவேமாக. இச்சங்கிரகத்தை வாசிப்பவர் கேட்பவர் சிந்திப்பவர் யாவராயினும், அனுபவ சிவ ஞான சற்காரிய முத்திநிலையைச் சேரும் வழிச் செல்லுவார்; இதற்கு யாதும் சந்தேகம் இல்லை. இந் நிலையடைந்த சிவனடியார்களும் அவர் அடித்தொண்டு பூண்டவருமாகிய பெரியோர்கள் யாவரும் அழியாச் செல்வ நிலையராய் வாழக்கடவர்.

## கந்த புராணம்

"ஏதந் தீர்சுடர் தன்னையு மெண்ணுமைம்
பூதந் தன்னையும் போதிதன் றன்னையும்
பேதஞ் செய்வர் பிறப்பொழித் தோரவர்
பாதஞ் சேர்தல் பரபதஞ் சேர்வதே."

## சிவஞான சித்தியார்

"மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தவியோ கத்தான்
மணியிரத குளிகையினுன் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்க டிரிகால ஞானம்
அந்தமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா
மடைந்திடுமோ சானருளா லடிசேர் ஞானம்
வந்திடுமற் றொன்றாலும் வாரா தாகு
மற்றவையு மவனருளான் மருவு மன்றே."

## வாழ்த்து

அன்புடையார் மிகவுவப்ப வெளியனேற்
கிதையுளத்தி னறித்தோன் வாழி
நன்குடைய மறைப்பொருளு மாகமத்தி
னலப்பொருளு நயக்க வீந்த
இன்புடைய குரவரெழிற் சந்தான
வாரியர்க ளென்றும் வாழி
என்புடைநூற் குதவினர்கற் பவர்கேட்போர்
யாவருமிங் கினிது வாழி.

திருவாரு மாயக்கைப் பதியிலுறை
யைங்கரனுர் சிறந்து வாழ்க
மருவாரு மவனடியர் மலமகன்று
சிவனடியின் மன்னி வாழ்க
உருவாருந் திருநீறு மைந்தெழுத்துங்
கண்டிகையு முகந்து வாழ்க
கருவாரு முயிர்களெல்லாங் கடைத்தேறி
யானந்தக் களிப்பின் வாழ்க.

**திருச்சிற்றம்பலம்**

# அரும்பொருளகராதி


| பொருள் | பக்கம் |
|---|---|
| அகங்காரம் | ௭௫ |
| அக்கரங்கள் | ௧௬, ௯௬ |
| அசுத்தமாயைஇலக்கணம் | ௮௯ |
| அசுத்தமாயை | ௨௪, ௯௨, ௯௩ |
| அடிமை | ௫ |
| அட்ட புஷ்பம் | ௧௩௯ |
| அட்ட மூர்த்தம் | ௩௬, ௮௮ |
| அணுசதாசிவ சத்திபேதங்கள் உபாங்கங்கள் | ௮௬ |
| அணுபேதங்களின் முப்பது கருவிகள் | ௮௭ |
| அண்டங்களின் விரிவு | ௫௯ |
| அது நான் | ௭௦ |
| அகோரியாமிகா சத்தி | ௯, ௧௧௧ |
| அத்துவிதம் | ௨௦, ௬௬, ௧௭, ௭௦, ௮௨, ௧௩௯ |
| அத்துவிதம் அன்மை இன்மை மறுதலை | ௧௫௧ |
| அத்துவித பின்னம் | ௧௪௩ |
| அத்துவிதமுத்தி | ௧௩௬, ௧௪௨, ௧௪௬, ௧௫௧ |
| அநந்தேசுரர் | ௨௯, ௩௩, ௩௯, ௭௫, ௯௩, ௧௧௫ |
| அநாதி பதார்த்தங்கள் | ௧௨, ௨௦, ௮௯, ௧௦௭ |
| அந்தக்கரணங்கள் | ௯௪ |
| அந்தர்யாக பூசை | ௧௨௧ |
| அபரசிவஞானம் | ௧௨௫, ௧௩௭, ௧௪௧ |
| அபர முத்தர் | ௨௯, ௪௫ |
| அபின்ன அத்துவிதம் | ௧௪௯ |
| அபின்ன சத்தி | ௨௪, ௩௫, ௧௩௬ |
| அபுத்தி பூர்வம் | ௧௩௨ |
| அப்பர்சுவாமிகள்முத்தி | ௧௪௩ |
| அப்புவின் குணம் | ௯௫ |
| அருட்சத்தி | ௪௪ |
| அருளவத்தை | ௧௧, ௧௩௫ |
| அருள்பெண்ணுரு | ௪௦ |
| அருளுருவம் | ௪௦, ௪௭ |
| அவாந்தர அநாதி | ௧௦௨, ௧௦௫ |
| அவாந்தர சர்வசங்காரம் | ௩௭, ௧௦௪ |
| அவையடக்கம் | ௩ |
| ஆகந்துக மலம் | ௧௦௭, ௧௧௪ |
| ஆகந்துக பரிக்கிரகசத்தி | ௧௧௧ |
| ஆகாயத்தின் குணம் | ௫, ௯௫ |
| ஆணவம் | ௬௪, ௬௫, ௭௫, ௭௭, ௧௦௭, ௧௦௮, ௧௧௪ |
| ஆணவத்தின் கொடுமை | ௭௮ |
| ஆணவம்நீங்கும்வழி | ௭௯, ௧௩௯ |
| ஆணவமும் மாயையும் ஒப்பிடப்படுதல் | ௧௧௪ |
| ஆதி சத்தி | ௪௯ |
| ஆதி முத்தர் | ௪௪ |
| ஆதி கூர்ம சிலை | ௧௧௫ |
| ஆலயம் | ௪௭, ௧௪௧ |
| ஆறத்துவா | ௮, ௮௧ |
| ஆன்ம அறிவுவளரும் முறை (மனிதரில்) | ௧௨௯ |
| ஆன்மாக்கள் | ௧௬, ௫௯ |
| ஆன்மா சத், அசத் | ௬௭, ௬௮ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| ஆன்ம சத்தம் | கசு, கூக |
| ஆன்ம சொருபம் | சுO, சுஎ, எஉ, அகூ, அசு |
| ஆன்ம தடத்த நிலை | கூO |
| ஆன்மா அரசகுமாரன் | எக |
| ஆன்ம இலக்கணம் | ருகூ |
| ஆன்ம குற்றம் | சு, அக |
| ஆன்மா தூலசித் | சுரு, சுசு |
| ஆன்ம தரிசனம் | சுசு |
| ஆன்மா (புறச்சமயக் கொள்கைகள்) | சுO, சுக, சுஉ |
| இந்தியாவின் மகிமை | கஉகூ |
| இருவினை யொப்பு | உஅ, எஉ, கூங, கஙங, கஙச |
| உட்கருவி | உஎ |
| உபதேசம் தன்மை முன்னிலை | சசு, கஙஅ |
| உபாங்கங்கள் | அசு |
| உமாதேவியார் | ஙஉ, ஙங |
| உருத்திர மூர்த்தி | உங, உரு |
| உருத்திர பேதம் | அசு |
| உருத்திரர் (பிரமம்) | ககO |
| உன்மனு | ஙஎ, அசு, அஎ |
| எண்குண விளக்கம் | கசஅ |
| ஏகநடன நிலை | கூக, கூஉ |
| ஐம்பத்தாறு சமயங்கள் | கூரு |
| ஐம்மலம் விடுதலை | கஙகூ |
| கண்ணொளி | எO |
| கயிலாயம் | ஙO, ஙக, சக |
| கலாதி நீங்கும் முறை | கOஉ |
| கலை | அ, கஎ, ஙசு, சகூ, ருO, ருங |
| கலை நியாசம் | ககஎ |
| கன்ம இலக்கணம் | அக |
| கன்மம் | ரு, சு, கூ, கஉங |
| கன்ம ஒழிவு | எஉ, அஉ, அச |
| கன்ம சமத்துவம் | கசு |

| பொருள் | பக்கம் |
|---|---|
| கன்மேந்திரியம் | எசு |
| காரணம் மூன்று | அரு |
| காலவரையறை - மனிதர் முதல் | கOகூ |
| கிஞ்சித் அறிவன் | கஉசு |
| கிரியையாளர் | சஎ |
| குடாகாயம் | சுஉ |
| குணதத்துவம் | கூச |
| குணங்கள் (மானுடரில் 358) | கூஅ |
| குணநிலையர் | ஙக |
| கீழாலவத்தை | கஙச |
| சகலநிலை | கூ, கஎ |
| சகலர் | கஎ |
| சகலாவத்தையில் ஆன்ம நிவேதன பூசை முதலியன | கஉக |
| சங்கற்ப மாத்திரை | உரு, ஙஅ, கOஅ |
| சங்காரம் | ஙச |
| சஞ்சிதம் | எ |
| சஞ்சிதம் கெடுதல் | கஙகூ |
| சதசத் | கசு, சுக |
| சதாசிவன் | ருO, ருக, ருஉ |
| சதுட்டய சாதனம் | |
| சத்திநிபாதம் | கஙங |
| சத்தி பேதங்கள் | உO, கஉரு |
| சப்தகோடி மகாமந்திரம் | ருO |
| சமட்டி | சகூ |
| சமட்டிப் பிரணவம் | கஎ |
| சமனு | ஙரு, அசு, அஎ |
| சம்பு பக்கம் | ருங |
| சரியை | சஎ |
| சர்வ சங்காரம் | உஎ, கூஉ, கOஅ, கOகூ |
| சவிகற்ப வியட்டி | கO |
| சனன மரண வேதனை | கஙங |

பொருள் — கக்கம்

சாயுச்சிய முத்தி — சுஅ
சிதாகாசம் — உச
சித்தாந்த முத்தி கசரு, கசஅ, கருங
சிவ உணர்வு — கஙச
சிவசத் — கசு, சுக
சிவசத்தி — கஉரு
சிவஞான சாதன இலக்கணம் — கஉரு
சிவம் — ருகூ
சிவனுருவங்கள் — சங, சஅ
சிவதரிசனம் — கஙகூ
சிவ புண்ணியம் — எஉ
,, சாதனங்கள் — கஙகூ
சிவலோகம் — கஙO
சிவனடியார் — கஙரு
சிவாலயம் — கஙரு
ஸ்ரீகண்ட உருத்திரர் உகூ, ஙO, ஙச, ஙஅ, அஅ
சீவன்முத்தர் — சஎ, கஙகூ
சுத்ததத்துவங்களின் ரூபம் முதலியன — கOO, கOக
சுத்த நிலை — கக
சுத்தப் பிரபஞ்சம் — கூO
சுத்தபுவன சிருட்டி — ஙரு
சுத்த வித்தை — ருO
சுத்தாவஸ்தை ஞானபூசை — கஉக
சூக்கும கிருத்தியம் — எ, சகூ
சூக்கும சித் — கஎ, ருகூ
சூதசங்கிதை சாதனங்கள் — கஙக
சொரூபநிலை கூ, சச, அகூ, கருO
சோகம்பாவனை — கககூ
ஞாதுரு ஞான ஞேயம் கருஉ, கருங, கருச.
ஞானம் ஐவகை — அசு

பொருள் — பக்கம்

ஞானசத்தி — எ
ஞான சாத்திரங்கள் — கஙO
ஞான பூசை — கஙஅ
ஞானேந்திரியம் — எகூ
தசகாரியம் — கOஉ
தடத்தம் சு, கரு சச, அகூ
தத்துவ தரிசனம் — ஙகூ
தத்துவ தூஷணம் — கOO
தத்துவங்கள் விரிவு கூரு, கூசு, கூஎ
தத்துவ ரூபம் — கOO, கOக
தம்பாகாரபீடலிங்கம் கலைககஎ
தற்போதம் — கசச, கருங
தன்மாதன்ம பேதங்கள் — கூகூ
தன்மாத்திரை — எசு, கூரு
தாரகப் பிரமம் — அசு
திருஞான சம்பந்தமூர்த்தி முத்தி — கசக
திரோதாயி — ரு, கரு, கஙச
தினசங்காரம் — கOO
துகளற்ற அரிசி விளக்கம் — ககங
துணைக்காரணம் — அக
துலை யொத்தல் — சு
துவசாரோகண முதற் பதி னொரு விழா — கஉஉ
தூலசித்து கஎ, ககூ, ருகூ, கூO, கஙசு
தேயுவின் குணம் — ரு, கூரு
நடனம் — ஙஅ
நரகங்கள் — கஙO
நவசக்திகள் — கஙசு
நாடிகள் — அஎ
நாதசிவம் — சங
நீ அதுவானாய் — எO
நிட்காமிய தருமம் — கஙங
நிமித்த காரணம் — உச

| பொருள் | பக்கம் |
|---|---|
| நிமித்தோபாதானம் | உங |
| நிருவிகற்ப சமட்டி | க௦ |
| பசுஞானம் | சரு, கஙஎ, கசக, கசங, கசசு |
| பசுபதி | ஙகூ |
| பசுபோதம் | கசங |
| பஞ்சகலை | ஙஎ, ககஎ, ககஅ |
| பஞ்சகிருத்தியம் | ரு, கஉ, கரு, உசு, ருக, சகூ, கஉஎ |
| பஞ்சகிருத்திய பதி | அசு, க௦க |
| பஞ்சசத்தி | கரு, சசு, ருஉ, அசு, கஉரு |
| பஞ்ச சாதாக்கியம் | ருரு |
| பஞ்சபூதத் தோற்றம் | கூரு |
| ,, கர்த்தா | அசு, அஎ |
| ,, சொரூபம் | க௦௦ |
| ,, பழிப்பு | கூகூ, க௦௦ |
| பஞ்சப் பிரமம் | ருக |
| பஞ்சாக்கரம் | கூஎ |
| பஞ்சாக்கரம் கர்த்தா, தியானம் | ககஅ |
| பதம் | அக, கூசு |
| பதமுத்தி | உகூ, சஎ |
| பதார்த்த நிச்சயம் | ரு |
| பதி இலக்கணம் | உங |
| பத்தவஸ்தை | எச |
| பத்தியக் கட்டளை | கசக |
| பரசமய முத்திகள் | கசரு, கசசு |
| பரசாயுச்சியம் | ங௦, ஙகூ, சஎ, கூஉ |
| பரசிவ ஆவாகனம் | ககஅ |
| பரபிராகிருதி | உச |
| பரமுத்தர் | சச |
| பரமுத்தி | கஙசு, கசச |
| பராசத்தி | ருஉ |
| பரிக்கிரக சத்தி | கூ, கச, அஅ, அகூ, க௦ங, கஉஎ |
| பரிக்கிரக விபூதி | கஉ |
| பரிணாமவாதிகொள்கை | கசங |
| பறை | சகூ, ருக |
| பாவம் | ருக |
| பிரணவார்த்தம் | ருச, ருரு |
| பிரணவ பஞ்சாக்கரம் | ககஎ |
| பிரபஞ்சங்கள் | உக, ஙரு, அரு |
| பிரமம் | உரு, ஙரு, சுக, சுஉ, சுங |
| பிரமா | உரு, உசு, ருச |
| பிரளயாகலர் | கஅ, ஙக |
| பிரவாக அநாதி | கூ, கச, கஅ, உக, அக, க௦எ |
| பிராகிருதி | உச |
| பிராரப்தம் | எ |
| ,, ஒழிவு | கூரு |
| பிருதிவி குணம் | ரு, கூரு |
| பின்ன சடசத்தி | உச, ஙரு, அகூ |
| புண்ணிய லோகம் | கங௦ |
| புத்தர்கூறும் முத்தி | கருக |
| புத்தி | எசு, அக |
| புத்தி பூர்வம் | கஙஉ |
| புவனம் | க௦, கூசு |
| புறக்கருவி | உஎ |
| புறச்சமயங்கள் | எஎ |
| பூதம் | எசு |
| பூர்வபக்க நூல்கள் | கங௦ |
| மகேசுவரன் | ரு௦, ருஉ |
| மலபரிபாகம் | கசு, கக௦, ககக, கஙங |
| மல இலக்கணம் | எரு, ககங |
| மலம் | க௦சு, க௦எ, கஉஅ |
| மலசொரூப நிலை | அகூ, ககூஉ |
| மலதடத்த நிலை | கூ௦ |
| மலதடத்த பொய்ந்நிலை | ககஉ |

| பொருள் | பக்கம் |
|---|---|
| மலதடத்த காரிய அழி பொருள் | ௧௨௪ |
| மலரகிதர் | ௪௯ |
| மாணிக்கவாசக சுவாமி முத்தி | ௧௪௩ |
| மான் | ௧௨ |
| மாமாயை இலக்கணம் | ௮௫ |
| மாமாயை | ௫, ௧௪, ௮௬, ௮௮ |
| மாயேயம் | ௬, ௧௦ |
| மாயை | ௧௧, ௧௧௨ |
| முகமனுரை | ௨௫, ௧௧௦ |
| முக்குணம் | ௭௫ |
| முடிப்புரை | ௧௫௬ |
| முத்தி | ௧௭, ௮௩ |
| முத்தி இலக்கணம் | ௧௩௭ |
| முத்தன் பிரிவுகள் | ௪௪, ௪௬ |
| முத்தி பஞ்சாக்கரம் | ௧௩௫, ௧௩௯, ௧௪௦ |
| முத்தி | ௧௫௦ |
| மூவகைக் கன்மம் | ௮௧ |
| மூலகன்மம் | ௭, ௮௩, ௧௦௩ |
| மூலப்பிரகிருதி | ௯௪ |
| மூலமலம் | ள், ௭௭, ௧௨௩ |
| மேலாலவஸ்தை | ௧௩௪ |
| மோகினி | ௧௨ |
| யாதனு சரீரம் | ௯௯ |
| வன்னம் | ௫௧, ௯௬ |
| வஸ்து | ௯௧ |
| வாக்கு | ௮௬ |
| வாதனுமலம் | ௧௪௦ |
| வாயு குணம் | ௫, ௯௫ |
| விசுவரூபம் | ௩௮, ௮௮ |
| விஞ்ஞானகலர் | ௧௭, ௧௮ |
| வித்தியா தத்துவம் | ௧௭, ௮௭, ௯௩, ௧௦௨. |
| வித்தியா தேகம் | ௫௧ |
| விந்து | ௧௨, ௫௧ |
| விந்து ஞானம் | ௧௪௫ |
| வியஞ்சகம் | ௧௯, ௨௬, ௫௯, ௬௬, ௮௯, ௧௦௨, ௧௩௬ |
| வியாச சூத்திரம் | ௨௪ |
| வியாபகம் | ௧௩௬ |
| வேதாந்த மகாவாக்கியம் | ௧௫௪ |
| வைப்புச் சரக்கு | ௧௦ |

ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் பாடிய
சிதம்பர சபாநாத புராணத்துள்ள சந்தான குரவர் முதலிய
சைவ சித்தாந்த பரமாசாரியர் வணக்கம் :—

### திருநந்தி தேவர்

திருக்கயிலை மலையிலருட் கல்லால
நிழலிருந்து தேவ தேவன்
பெருக்கமுடை யாகமத்துட் பிறங்குரௌ
ரவத்தெழுந்த பீடார் ஞானஞ்
சுருக்கமறப் போதிக்க மலவுதீர்ந்
தருளிமுதற் குருவாய்த் தோமில்
அருட்குரியர்க் கதனையளித் தருணந்தி
பெருமானுக் கடிமை செய்வாம்.

### மெய்கண்ட சிவாசாரியர்

மைகண்டர் வகுத்துரைத்த சிவஞான
போதமெனும் வடநூல் தன்னைக்
கைகண்டு தமிழுலக முய்யமொழி
பெயர்த்தருளிக் கலைநூல் காட்டும்
பொய்கண்ட வுளத்தினர்கா ணுதபுனி
தாத்துவிதப் பொலிவு காட்டும்
மெய்கண்ட தேவனடி யகந்தழீஇப்
பணிந்தேத்தி வினையை வெல்வாம்.

### அருணந்தி சிவாசாரியர்

தவமாருந் திருத்துறையூர்ச் சார்ந்தருளிப் பொய்யினைமெய்த்
தவமாகக் கொண்டுழல்முப் புறத்தினருஞ் சாய்ந்திரியச்
சிவஞான போதநூல் தமிழுலகந் தெளிந்துய்யச்
சிவஞான சித்தியருள் தேசிகனைப் பணிகுவாம்.

### மறைஞானசம்பந்த சிவாசாரியர்

பூரண்டட் ரும்புறச் சமய நூல் முழுப்பொயென் றகற்றி
அரண்ட ருஞ்சிவ ஞானநூல் கேட்டினி தாய்ந்து
தெருண்டு நிட்டைசேர் கடந்தையூர்ச் சம்பந்த தேவன்
இரண்டு பாதமும் முடிக்கணிந் திடுக்கண்வே றறுப்பாம்.

### உமாபதி சிவாசாரியர்

பூட்டு மார்க்கமாங் களைகளை யருளினால் முரணிக்
கட்ட ருட்புடை நூல்சிவந் திகழ்தரக் கண்டு
நிட்டை மேவிவீற் றிருந்தரு ளுமாபதி நிமலன்
மட்ட ருவடிக் கமலமென் மனத்தட மலரும்.

### திராவிட மாபாடியகாரர்

சூறியமுனி யருளியமெய் வரத்திற
லவதரித்துக் கோதில் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு வருட்கடலும்
வடமொழிதென் மொழிப்போர்த் தூய
நிறைகடலு முண்டுபுனி தாத்துவித
சித்தாந்தம் நிலவப் பூமேல்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்செந்
தமிழ்வகுத்த யோகி வாழி.

## விற்பனைக்குரிய சைவ நூல்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| திராவிடப் பிரகாசிகை | .... | 3 | 8 | 0 |
| பிரபஞ்ச விசாரம் | .... | 1 | 8 | 0 |
| ஆறுமுக நாவலர் சரித்திரம் (விரிவானது) | | 1 | 0 | 0 |
| ,, (சுருக்கம்) | .... | 0 | 8 | 0 |
| ,, பிரபந்தம் | .... | 2 | 4 | 0 |
| சிவகீதை (கிரந்தமூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும்) | .... | 1 | 0 | 0 |
| சைவ போதம் (சிவபுராணக் கதைகள்) | .... | 0 | 5 | 0 |
| சைவசித்தாந்தச் சுருக்கம் | .... | 0 | 7 | 0 |
| திருவருட்பயன் விளக்கவுரை | .... | 0 | 7 | 0 |
| கந்தபுராண விளக்கம் | ... | 0 | 11 | 0 |
| மகோற்சவ சந்திரிகை | ... | 0 | 5 | 0 |
| சைவப் பிரகாசிகை | .... | 0 | 7 | 0 |
| அப்பர் தேவாரச் சிறப்பு | .... | 0 | 2 | 0 |
| சைவக்கிரியை விளக்கம் | ... | 0 | 5 | 0 |
| கந்தாலங்கார தத்துவார்த்த வுரை | ... | 0 | 10 | 0 |
| பதி பசு பாச விளக்கம் | .... | 0 | 2 | 6 |
| சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (செய்யுள்) | | 0 | 8 | 0 |
| பருளை விநாயகர் பள்ளு | .... | 0 | 5 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை (இலேசான பழைய வுரை) | .... | 0 | 8 | 0 |
| சிவபூசை விளக்கம் | .... | 1 | 8 | 0 |
| அநுஷ்டான விதி | .... | 0 | 1 | 0 |
| அமாவாசைத் தருப்பண விதி | .... | 0 | 1 | 0 |

**கிடைக்கும் இடம்:—**

**சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை,**

20, காரணேசுரர் கோயில் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

T. 2273
Acc. 12722

உ

# முருக மஞ்சரி

*



*

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

ஆறுதலையா ரருள்செய் ஆறுதலையா
எனக் காறுதலையா ருனையலால்
ஐயனே ஈராறுகையனே மெய்யனே
அனைத்தினும் நீ யொருவனே
தேறு பொருளென வேத வேதாந்த மதனிலும்
தீர்க்க மா வாக்கிய மெலாம்
திவ்யதேஜோ மயானந்த
தேவ சிவகுருவே யுனை
வீறுள்ள தேவென்று கூறுவதால் எங்கும்
வேறு மொரு தெய்வ முளதோ
விண்ணவர்கள் சிறைமீள ஆயிரங்
கண்ணுளான் மேலுலகு தன்னையாள
மாறிட்டசூரனை கூறிட்டவேலால்
மனத்துயர் ஒழித்தருள் செய்வோய்
வன்னமயில் வாகன பொன்னேரகப்
பதியில் வளர்சுவாமிநாத குருவே.

உண்டென்னிடத்தினில் பலகுற்ற மாகிலும்
உனையடைந்தே னுதலால்
உவந்தே பொறுத்திடுதல் உன்கடமை யல்லவோ
உண்மையாய் ஒரு விண்ணப்பம்
பண்டுதிரமது சிதற வில்லாலடித்திட்ட
பார்த்திபனைக் கோபியாமல்
பாசுபத மருள் செய்த சிவகுமாரா
நிற்பயந்தவர் செய் பாங்குபோலும்
திண்டு மிண்டுரை செய்த நக்கீரனைக் காத்த
செய்கை போலும் கிருபையால்
சிறியன் மீதே கிருபாகடாக்ஷ மதுசெய
வேணுமிது நல்ல சமயமையா
வண்டு குடி கொண்ட குழல்கெண்டை விழி
கண்டுமொழி வள்ளிமண வாளசரணம்
வன்னமயில் வாகன பொன்னேரகப்
பதியில் வளர்சுவாமி நாதகுருவே.

★

T. 2273

உ

சிவமயம்

# முருக மஞ்சரி

இஃது

பிக்ஷாண்டார் கோயில் பெருநிலக்கிழார்

வைதிக சைவக் கொழுந்து

**கோ. இராசகோபால பிள்ளையவர்கள் F. R. H. S.**

விரும்பியபடி

திருமயிலை

**சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையால்**

தொகுத்து

ஷை செல்வரின் பொருளுதவியால்

பதிப்பிக்கப்பட்டது

**1952**

நந்தன ௵ புரட்டாசி ௴

நாஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை 18.

விலை: அணா 6.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | சரவணபவ தியானம் | |
| 1. | பதிப்புரை | i |
| 2. | கந்த புராண அரும் பாடல்கள் | 1 |
| 3. | சுப்பிரமணியோம் என்னும் மந்திரத்தின் மாட்சி | 26 |
| 4. | தோத்திரப் பாக்கள் | 27 |
| 5. | அஷ்டோத்தர சததாமங்கள் | 39 |
| 6. | முருக வரலாறு | 52 |
| 7. | முருக சத்தி | 52 |
| 8. | பல நாமங்கள் | 53 |
| 9. | முருகனின் சிறப்பைக் கூறும் நூல்கள் | 53 |
| 10. | விரதங்கள் | 54 |
| 11. | முருக தலங்கள் | 54 |
| 12. | முருக மந்திரம் | 54 |
| 13. | சில பரம்பரைக் கதைகள் | 55 |
| 14. | கந்த சுவாமியின் தத்துவார்த்த விளக்கம் | 57 |
| 15. | நாமாவளி விளக்கம் | 59 |
| 16. | அபர சுப்பிரமணியர் | 59 |
| 17. | ஞானோபதேசம் பெற்றவர் | 59 |
| 18. | புராண விவேசனம் | 60 |
| 19. | திருப்புகழ் மணிகள் முதலியன | 62 |

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே

## சரவணபவ த்யானம்

1 சராரண்யோ உத்பவம் ஸ்கந்தம்
சரணாகத பாலகம்
சரணம் த்வாம் ப்ரபன்னஸ்ய
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

2 ராஜ ராஜ சகோத்பூத
ராஜீவாயத லோசக
ரதீச கோடி சௌந்தர்ய
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

3 வலாரி ப்ரமுகைர் வந்த்ய
வல்லீ ந்த்ராணீ சுதா பதே
வரதாஸ்ரித லோகா நாம்
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

4 நாரதாதி முனீந்த்ராத்ய
சித்த கந்தர்வ சேவித
நவ வீரை: பூஜிதாங்க்ரே
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

5 பகவன் பார்வதி சூனோ
ஸ்வாமிந் பக்தார்த்தி பஞ்சன
பவத் பா தாப் யோ பக்திம்
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

6 வசுதான்ய யச: கீர்த்திம்
அவிச் சேதந்த சந்ததிம்
சத்ரு நாசனம் அத்யாசு
தேஹிமே விபுலாம் ஸ்ரியம்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றெ
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசல மமர்ந்த பெருமாளே

## பதிப்புரை

ஆணிப் பொனென்கோ அருளாழி தானென்கோ
மாணிக்கமென்கோ மதியென்கோ—பேணிப்
பணிவார் இருள்போக்கும் பானுவென்கோ போரூர்க்கு
அணியாகுந் தெய்வத்தை யான்.

சென்ற விநாயகர் சதுர்த்தி நன்னாளில் (கர ஆவணி 20) விநாயகர் மஞ்சரி என்னும் சிறு தொகுப்பு நூலைப் பிக்ஷாண்டார் கோயிற் பண்ணையாரும், சைவ சிகாமணியும், எனது ஆப்த நண்பருமாகிய ஸ்ரீமான் கோ. இராசகோபால பிள்ளையவர்களின் விருப்பத்தின்படி அவர்கள் செய்த பொருள் உதவிகொண்டு வெளியிட்டேன். அதைச் சைவ உலகம் பெரிதும் போற்றியதால் முருக மஞ்சரியும் ஒன்று தொகுத்து வெளியிடுதல் ஏற்புடைத்தென்று ஷை சைவ சிரோமணியார் அறிவித்து வேண்டிய பொருளுதவியும் புரிந்தனர். அவர்கள் பணித்தபடி இம்மஞ்சரி வெளிவருகின்றது. கந்த புராணமாகிய பெருங் கடலிற் சிறியேன் மூழ்கிச் சில முத்துக் களையும் பவழங்களையும் சேகரித்தேன். அம்மகா சமுத்திரத்தில் மணிகள் விரவியிருந்தாலும் ஒன்றோடொன்று ஏற்றத்தாழ்வு சிறிதுமில்லாமலிருப்பதாலும் எதை எடுப்பது எதை விடுவது என்னும் குழப்பம் உண்டாயது. அதை ஒருவாறு தேற்றித் தெளிந்து எனது சிற்றறிவுக்கு உகந்ததைத் தேர்ந்தெடுத்துத் தொகுக்கலானேன். என்னையும் ஒரு பொருளாக மதித்து இவ்வரும் பணியை எனக்கிட்ட நண்பருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இப்பணியில் யான் ஈடுபட நேர்ந்தது ஆறுமுகப் பெருமானது திருவருளே எனக் கூறலாம். 1934-ம் ஆண்டில் எனது நண்பர் ஸ்ரீமத் சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய "கந்தபுராண விளக்கம்" என்னும் நூலை அச்சிட நேர்ந்தது. 1935-ம் ஆண்டில் "கதிரை மலைப்பள்ளு" என்னும் நூலைக் காலஞ்சென்ற நண்பர்

தெல்லிப்பழை வ. குமாரசுவாமி அவர்களது துணைகொண்டு வெளியிட்டேன். 1939-ம் ஆண்டில் சுப்பிரமணியர் திருப்பெருவடிவப் பாசுரங்களை நண்பர் சிவபாதசுந்தரப் பெரியார் எழுதிய அரிய உரையோடு பிரசுரித்தேன். இப்போது இம்மஞ்சரியை வெளியிடலானேன்.

மேவரிய பெருந்தவம்யான் முன்புவிளைத் தனவென்னோ
யாவதுமோர் பொருளல்லா என்மனத்து மன்றியே
நாவலர்கா வலர்பெருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு மலர்ந்தனவால்

திருமயிலை
நந்தன விஜயதசமி

சே. வெ. ஜம்புலிங்கம்

1:2273



மயிலையும் அவன்திருக்கை அயிலையும் அவன் கடைக்கண்
இயலையும் நினைந்திருக்க வாருமே.

திருச்சிற்றம்பலம்

# முருக மஞ்சரி

## விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## முருகன் காப்பு

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி.

## வாழ்த்து

1 இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

2 சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடு மெஃக மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

3 காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம்.

9 ஏல வார்குழ லிறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால ஞகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றெக்கும்.

சோமஸ்கந்த மூர்த்த வர்ணனை

10 ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுதலாலே
காங்கெய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவணத்தின்
பாங்கரில் வருத லாலே சரவண பவனென் றானான்.

காங்கேயன், சரவணபவன் என்னும் பெயர்களின் காரணம்.

11 தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருத்த லாலே
ஏயதோர் கார்த்தி கேய னென்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ ஒன்றாய்ச் செய்தாய்
ஆயத ஞலே கந்த னும்எனும் நாமம் பெற்றான்.

கார்த்திகேயன், கந்தன் என்னும் பெயர்களின் காரணம்.

12 ஆதலி னமது சத்தி யறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

சிவபிரானுக்கும் முருகனுக்கும் பேதமில்லை.

13 கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக வாதிநம சோதிநம தற்ப ரமதாம் [தார்
எந்தைநம என்றுமிளை யோய்நம குமாரநம என்று தொழு

பல பெயர்களால் துதிக்கப்படுவது

14 அடிமுதல் முடியின் காறும் அறுமுக னுருவ மெல்லாம்
கடிதவ னருளால் நோக்கிக் கணிப்பிலா அண்ட முற்றும்
முடிவறு முயிர்கள் யாவும் மூவருந் தேவர் யாரும்
வடிவினிலிருப்பக் கண்டுவணங்கியே வழுத்திச் சொல்வார்

15 அம்புவி முதலாம் பல்பே ரண்டமு மங்கங் குள்ள
உம்பரு முயிர்கள் யாவும் உயிரலாப் பொருளு மாலும்
செம்பது மத்தி னோனுஞ் சிவனொடுஞ் செறிதல் கண்டோம்
எம்பெரு மானின் மெய்யோ அகிலமு மிருப்ப தம்மா.

16 அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயே யாகி
உறைதரு தன்மை நீவந் துணர்த்தலி னுணர்ந்தா மன்றே
பிறவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவமன் றிச்
சிறியம்யா முனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்.

17 முண்டக னொருவன் துஞ்ச முராரிபே ருருவாய் நேமிக்
கண்துயி லகந்தை நீங்கக் கண்ணுதற் பகவ னெல்லா
அண்டமு மணிப்பூ ணார மாகவே ஆங்கோர் மேனி [டேம்.
கொண்டன னென்னுந் தன்மை குமரநின் வடிவிற் கண்

18 நாரணன் மலரோன் பன்னாள் நாடவுந் தெரிகின்றாகிப்
பேரழ லுருவாய் நின்ற பிரான்திரு வடிவே போலுன்
சீருரு வுற்ற தம்மா தெளிகில ரவரு மெந்தை
யாரரு ளெய்தி னம்போல் அடிமுடி தெரிந்தி டாரோ

19 அரியொடு கமலத் தேவு மாடல்செய் தகிலந் தன்னை
ஒருவரை யொருவர் நுங்கி உந்தியால் முகத்தால் நல்கி
இருவரு மிகலு மெல்லை எடுத்தபே ருருநீ கொண்ட
திருவுரு விதனுக் காற்றச் சிறியன போலு மன்றே.

20 ஆகையா லெம்பி ரான்நீ யருவுரு வாகி நின்ற
ஏகநா யகனே யாகும்எமதுமா தவத்தா லெங்கள்
சோகமானவற்றை நீக்கிச்சூர்முதல் தடிந்தே எம்மை
நாகமே லிருத்து மாற்றால் நண்ணினை குமரனேபோல்.

*14—20.* முருகன் தேவர்களுக்குக் காட்டிய விசுவரூப தரிசனம் கூறியவாறு.

21 முழுமதி யன்ன வாறு முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியுங் கண்டான் அவன்தவஞ் செப்பற் பாற்றே

தவத்தின் மேன்மையால் தாரகன் முருகனைக் கண்ட காட்சி.

22 தன்னோ டிணையின்றித் தானே தலையான
முன்னோ னருள்புரிந்த முன்னோன் இளவல்வரின்
என்னோ அவனோடு எதிர்ந்தா யிறந்தனையே
அன்னோ விதிவலியை யாரே கடந்தாரே.

'ஊழிற் பெருவலியாவுள' என்னும் திருக்குறள் கருத்து

23 ஆவதோர் காலை யெந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடைநெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள்தேவன் சேயோன் திருவடி வாழ்க என்றான்.

வீரவாகுவின் வாழ்த்து

24 போத நாயகன் பரம்பொருள் நாயகன் பொருவில்
வேத நாயகன் சிவனருள் நாயகன் விண்ணோர்க்கு
ஆதி நாயகன் அறுமுக நாயகன் அமலச்
சோதி நாயக னன்றியார் சூரனைத் தொலைப்பார்

'பூவில் நாயகன் பூமகள் நாயகன்' என்பது திருவிளையாடல்

25 வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிகம்
மாறி லாதவே லபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
ஆறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்

ஆறுமாமுகப்பிரானின் பன்னிரண்டு கைகளில் உள்ள ஆயுதங்கள்

26 தந்தை யில்லதோர் பரமனைத் தாதையா வுடைய
கந்த னேகியே யனையதன் னுருவினைக் காட்ட
இந்தி ரன்மக னுளப்படும் யாக்கையு ளிருந்த
முந்துகண்களாற் கண்டனன் தொழுதனன்மொழிவான்.

'தாயுமிலி தந்தையிலி தான் தனியன்' (திருவாசகம்)

27 ஓங்கார மூலப் பொருளா யுயிர்தோறு மென்றும்
நீங்கா தமருங் குமரேசனை நெஞ்சி னுன்னி
ஆங்கா குவதோ ரவன்மந்திர மன்பி னோதித்
தீங்கா மவுணர்செறி காப்பகஞ் சென்று புக்கான்.

குமரேசன் பிரணவ சொரூபி எனப்படும்

28 தன்னிக ரின்றி மேலாய்த் தற்பர வெளியா யாரும்
உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்க ளாறும்
பன்னிரு புயமுங்கொண்டு பாலகன் போன்று கந்தன்
என்னுமோர் பெயரு மெய்தி யாவருங் காண வந்தான்

'தன்னேரில்லோன் காண்க' (திருவாசகம்)

29 பங்கய முகங்க ளாறும் பன்னிரு புயமுங் கொண்டே
எங்கள்தம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை யென்னிற்
செங்கண்மா லுந்திபூத்தோன் சிறுமையு மகவான் துன்பும்
உங்கள்தஞ் சிறையு நீக்கி உலகெலா மளிப்பக் கண்டாய்.

30 மண்ண ளந்திடு மாயனும் வனசமே லவனும்
எண்ண ரும்பகல் தேடியுங் காண்கிலா திருந்த
பண்ண வன்நுதல் விழியிடைப் பரஞ்சுட ருருவாய்
உண்ணி றைந்தபே ரருளினல் மதலையா யுதித்தான்.

31 முன்ன வர்க்குமுன் னுகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னைநேரிலா தீசனுந் தனிப்பெயர் தாங்கி
இன்னு யிர்க்குயி ராயரு வுருவமா யெவர்க்கும்
அன்னை தாதையா யிருந்திடும் பரமனே யவன்காண்

'ஆதிபகவன் முதற்றே யுலகு' (திருக்குறள்) 'தன் நேரில்லோன் தானே காண்க' (திருவாசகம்)

32 ஈச னேஅவ னுடலான் மதலையா யினன்காண்
ஆசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனெடு பேதக னல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்

சிவபிரானும் முருகனும் வேறல்லர்

33 பூத மைந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்
ஓது கின்றபல் லண்டத்தி னெராயிரத் தெட்டுங்
கோதி லாக்கமும் படைகளு முனக்குமுன் கொடுத்த
ஆதி யீசனே யவனெனின் மாற்றுவ தரிதோ.

எல்லா உலகமுமானாய் நீயே (தேவாரம்)

34 ஏத மில்புவி யண்டங்கள் பெற்றன மென்றே
பேதை தயுன்னிலை சிறிதவன் தன்னருள் பெறுவோர்
பூத மைந்தினு மேனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்ட மெவற்றிற்கும் வேத்தியல் புரிவார்.

35 ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையும் தந்திரப் பன்மையும் வேரு
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா வுருவம்

'யாவையு மானாய் போற்றி' (தேவாரம்)

36 எங் கணும்பணி வதனங் களெங்கணும் விழிகள்
எங் கணும்திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங் கணும்திருக் கழவடி எங்கணும் வடிவம்
எங் கணும்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே

'யாவையும் புணர்ந்தாய் போற்றி ;' 'எண்ணில் பல்கோடி சேவடி முடிகள்'
(திருவிசைப்பா)

37 தாம ரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமு றப்படு மறைக்கெலா மாதிபெற் றியலும்
ஓமெ னப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றுமவன் தன்மையார் வகுப்பார்

38 முக்கண் மூர்த்தியு மாங்கவன் முண்டகா சனனுஞ்
சக்க ரப்படை யண்ண லு மாங்கவன் தானே
திக்குப் பாலருங் கதிர்களு முனிவருஞ் சிறப்பின்
மிக்க தேவரு மாங்கவன் யாவர்க்கு மேலோன்.

39 ஈட்டு மன்னுயி ரெவற்றிற்கு மிருவினைப் பயனைக்
கூட்டு வானவ னுங்கவை துலையெனக் கூடின்
வேட்ட மேனிலைக் கதிபுரி வானவன் மேலாய்க்
காட்டு வான்முதற் றிறமெலா மாங்கவன் கண்டாய்

பஞ்ச கிருத்யாதிபதி

40 சிறுவன்போ லுறுங் குரவனே போலுறுங் கிளையிற்
குறியன்போ லுறு நெடியவ னாகியுங் குறுகு
நெறியி னின்னணம் வேறு பல் லுருக்கொடு நிலவும்
அறிவர் நாடருங் கந்தவே ளாடலா ரறிவார்.

திருவிளையாட்டாகப் பல உருவங் கொள்ளுதல்

41 சிவன தாடலின் வடிவமா யுற்றிடுஞ் செவ்வேள்
அவன தாணையி னன்றியே பெயர்கிலா தணுவும்
எவர வன்தனி யாற்றலைக் கடந்தவ ரிவண்நீ
தவம யங்கினை அவன்தனி மாயையிற் சார்வாய்.

அவனன்றி ஓரணுவும் அசையாது

42 எல்லை யில்லதோர் பொருளெலா மாகுறு மியாவும்
அல்ல னாகியு மிருந்திடும் அருவமு மாகும்
பல்வ கைப்படு முருக்கொளும் புதியரிற் பயிலும்
தொல்லை யாதியாம் அநாதியு மாகியே தோன்றும்.

'தில்லை மூதூர் ஆடிய திருவடி, பல்லுயி ரெல்லாம்பயின் றனனாகி' (திருவாசகம்)

43 வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகள் மான
நேரி லாதமர் குமரவேள் நெடியபே ருருவின்
ஓரு ரோமத்தி னுலப்பிலா வண்டங்க ளுதிக்கும்
ஆர வன்திரு மேனியின் பெருமையை அறிவார்.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப் பருந்தன்மை' (திருவாசகம்)

44 தொலைவி லாவுயிர்த் தொகுதியுந் தொல்லையம் பூதத்து
அலகி லண்டமு மேனவு மாதியங் குமரன்
நிலைகொள் மேனியி னிவர்தரு முரோமத்தி னின்றே
உலவை யின்றிமுன் னுதித்திடு மிறுதிநா ளொடுங்கும்.

'இன்னுழை கதிரின் துன்னணுப் புரைய' (திருவாசகம்)

45 ஆவ தாகிய வடிவத்தி னகிலமுஞ் செறிந்து
மேவு மந்நிலை யனையனே யல்லது வேறிங்கு
ஏவர் கண்டன ரவ்வுரு வியற்கையை எங்கோன்
தேவர்யாவர்க்கும் காட்டிடக் கண்டனர் சிறிது.

'சிறிய வாகப் பெரியோன் தெரியின்' (திருவாசகம்)

46 தண்ட லில்லதோ ரொன்றொரு மயிர்நுனித் தலையின்
அண்ட மெண்ணில கோடிகள் கோவைபட் டசையப்
பண்டு மேருவிற் கந்தவேள் கொண்டதோர் படிவம்
கண்டி லாய்கொலாங் கணிப்பிலாப் பவம்புரி கடியோய்
'விரி பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க' (திருவாசகம்)

47 அன்று கந்தவே ளமைந்ததோர் பெருவடி வதனுள்
ஒன்று ரோமத்தி னிருந்ததற் காற்றிடா துனதாய்த்
துன்று மாயிரத் தெட்டெனு மண்டமாந் தொகையும்
இன்று நீயது தெரிகிலை சிறுவனென் றிசைத்தாய்

48 அளப்ப ருங்குணத் தாதியா மெம்பிரா னமரர்
தளைப்ப டுஞ்சிறை மாற்றவுஞ் சதுர்முகன் முதலோர்
கொளப்ப டுந்துய ரகற்றவுங் கொடியரை யறுத்து
வளப்ப டும்பரி சுலகெலாம் போற்றவும் வந்தான்.

49 வாழி யானகின் னாயுளும் வன்மையும் வரமும்
கேழில் சுற்றமும் படைகளும் வான்தொடக் கிளர்ந்து
பூழி யாலுயர் மால்வரைச் சூழலிற் புகுந்த
ஊழி மாருதம் போலடு மெம்பிரா னொருவேல்
வேலின் மகிமை கூறியது

50 ஆகை யாலிவை யுணர்ந்திலை யிணையிலா தமர்ந்த
ஏக நாயக முதல்வனைப் பாலனென் றிகழ்ந்தாய்
சேகு லாவிய மனமுடைக் கற்பிலாச் சிறியோய்
போக போகயா மிவ்வொரு தவற்றையும் பொறுத்தாம்
பாலனன்று ஏகநாயகனே 30-50 வீரவாகு கண்ட விசுவரூபக் காட்சியின் விளக்கம் கூறப்படுகின்றது.

## சொரூப இலக்கணம்

சிங்கமுகா சூரன் கூற்று

51 செங்கி றத்திரு மேனியுந் திருமுக மாறும்
அன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக
முன்ன வர்க்குமுன் னாகிய பராபர முதல்வன்
தன்னு தற்கணு லொருதனிக் குமரனைத் தந்தான்.

52 மானு டத்தரின் விலங்கினிற் புட்களின் மற்றும்
ஊன முற்றுழல் யாக்கையிற் பிறந்துளா ரொப்ப
நீகி னைக்கலை பரஞ்சுடர் நெற்றியந் தலத்தே
தானு நித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்.

53 சீல மில்லவர்க் குணரவொண் ணாதசிற் பரனைப்
பால னென்றனை யவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே யவதரித் ததுபோல்.

54 அருவு மாகுவ னுருவமு மாகுவ னருவும்
உருவு மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
கரும மாகுவன் நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னுடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.
‘உருவாய் அருவாய் உளதாய் இலதாய்’ (கந்தரனுபூதி)

55 வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற வமலன்.
‘சொற்பதங் கடந்த தொல்லோன்’ (திருவாசகம்)

56 ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்துமென் னிலஃ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை.
‘தம் பெருமை தானறியாத் தன்மையன் காண் சாழலோ’ (திருவாசகம்)

57 தத்த மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலரும்
கத்து புன்சொலை வினவின ரவன்செயல் காணார்
சுத்த வாதுள் முதலிய தந்திரத் தொகுதி
உய்த்து ணர்ந்திடு நீரரே யொருசிறி துணர்வார்.
உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம் (திருவாசகம்)

58 கருவி மெய்ப்புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருளெ னப் படு நான்மையு மைவகைப் பொறியும்
இருதி றத்தியல் வினைகளுங் காலமு மிடனும்
மரபின் முற்றுறு மயனுமாய் நின்றனன் வள்ளல்.
'சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க' (திருவாசகம்)

59 ஞால முள்ளதோர் பரம்பொருள் நாமெனப் புகலும்
மாலும் வேதனும் மாயையாம் வரம்பினுட் பட்டார்
மூல மாகிய தத்துவ முழுவதுங் கடந்து
மேலு யர்ந்திடு தனிமுத லவனன்றி வேறார்?
'பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க' (திருவாசகம்)

60 தூய பார்முத லாகவே குடிலையின் துணையும்
ஏய வண்டமு முயிர்களும் வியன்பொருள் பலவும்
ஆயு நின்றன னல்லனு மாயின னவன்தன்
மாயை யாவரே கடந்தனர் மறைகளும் மயங்கும்.

61 இன்ன தன்மைசேர் முதல்வனைச் சிறுவனென் றிகழ்ந்து
பன்னு கின்றனை யவுணர்தங் கிளையெலாம் படுத்தும்
நின்னை யுந்தடிந் திடுவனே ரிமைப்பினில் நிரப்புக்
தன்ன ருட்டிறங் காட்டுவான் வந்தனன் சமர்மேல்.

62 அன்ன வாகிய அண்டங்க ளனந்தகோ டியையும்
தன்ன தாணையா லோரிமைப் பொழுதினிற் றரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோ ராதியம் பிரான்காண்
உன்னொ டேபொரு மாடலாற் செந்தில்வந் துற்றான்.

63 முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறு மிலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ் சரணமுந் தெரியக்கண்
இரண்டாம் நாள் யுத்தத்தில் சூரன் கண்ட காட்சி [டான்

64 சூரெனு மவுணர் கோமான் தொல்லைநாள் நோற்ற வாறும்
பாரிடை முடிவின் றாகிப் பல்லுக மிருந்த வாறும்
ஆரண மறிதல் தேற்றா ஆறுமா முகத்தெம் மையன்
பேரெழி லுருவ நோக்கிப் பெரும்பயன் கோடற் கேயோ

65 எஞ்சலி லவுணர் செம்ம லிங்ஙன மமர தாற்றித்
துஞ்சிலென் தொலேவுற் ருலென் தூயவா லறிவின் மிக்கோர்
நெஞ்சினு மளத்தற் கொண்ணு நிருமலக் குமர மூர்த்தி
செஞ்சுடர் வடிவங் கண்டு தீவினே நீங்கி யுய்ந்தான்.

66 பூவுல கண்ட மெல்லாம் புரந்திடுஞ் சூரன் தன்னேத்
தீவினே யாள னென்றே செப்புவர் சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல் முன்னர்வந் தெய்தப் பெற்ருன்
ஆவிவன் தவத்திற் கன்றி யறத்திற்கு முதல்வ னன்ருே ?

சூரனது தவப் பெருமை கூறியவாறு.

67 இன்னமு முனிவர் தேவர் யாவரு மினேய னென்றே
உன்னருந் தலேமைத் தாகு மொருதனிக் குமரன் தன்னேத்
தன்னிரு விழியாற் கண்டான் தானவர்க் கிறைவ னென்ருல்
அன்னவன் தவத்தின் பேற்றை யாரறிந் துரைக்கற் பாலார்

தவப் பயன்

63 பொருசமர் விளேப்பான் போலப் பொருக்கெனப் போந்து சூரன்
இருவிழி தன்னிற் காண்பான் எளிதுதன் வடிவங் காட்டி
அருளது புரிந்தா னென்னி னுதியங் குமரன் மாயத்
திருவிளே யாடல் யார்க்குந் தெரிகில போலு மன்றே.

69 சிந்தையா லறிதற் கொண்ணுத் திருவுரு விழியாற் கண்டு
முந்துதா னின்ற சூரன் முழுதுல கடுவா னின்ருேன்
மைந்தனு மிவனென்றுன்னி மனத்தினில் வெகுளி தூண்டக்
கந்தவேள் தன்னேநோக்கி யினேயன கழற லுற்ருன்.

## இரணியன் கூற்று

70 கந்தனே யருள்புரி கடவு ளாணேயைச்
சிந்தையின் மாறுகொள் சிறியர் யாவரும்
அந்தம தடைந்தன ரன்றி வன்மையால்
உய்ந்தன ரிவரென வுரைக்க வல்லமோ.

71 கட்டுசெஞ் சடைமுடிக் கடவுள் காமனைப்
பட்டிட விழித்ததும் பண்டு மூவெயில்
சுட்டது மந்தகன் சுழலச் சூலமேல்
இட்டதுங் கேட்டிலை போலு மெந்தை நீ.

மன்மதனை எரித்தது, திரிபுர தகனம் செய்தது, அந்தகாசுரனைக்கொன்றது

72 காலனை யுதைத்ததுங் கங்கை யென்பவள்
மேல்வரு மகந்தையை வீட்டிக் கொண்டதும்
மாலய னமரர்க ளிரிய வந்ததோர்
ஆலம துண்டது மறிகி லாய்கொலோ.

யமனை உதைத்தது; கங்கையைத் தரித்தது; விடமுண்டது.

73 அண்டரை யோரரி யலைப்ப வன்னது
கண்டகஞ் சுடையவன் கருதி வீரனாற்
றண்டம திழைத்ததுந் தக்கன் வேள்வியை
விண்டிடு வித்ததும் வினவி லாய்கொலோ.

ஆட்டுக்கடாவாக வந்த அசுரனை அடக்கியது; தக்கன் யாகத்தைத் தகர்த்தது.

74 கடிமலர் மேலவ னிகழக் கண்ணுதல்
வடுகனை யேவிவள் ளுகிரி னன்னவன்
முடிகளை வித்தது முகுந்தன் தன்னிடை
அடைதரு வித்தது மறிகி லாய்கோலோ.

பிரமனது தலையைக் கிள்ளியது

75 முக்தொரு மகபதி மொய்ம்பை யட்டதும்
ஐந்திய லரக்கரை யழித்த செய்கையும்
தந்தியை யுழுவையை யுரித்த தன்மையும்
எந்தைநிற் குணர்த்தின ரில்லை போலுமால்.

இந்திரன் தோளை நெரித்தது; யானை உரித்தது; புலித் தோல் போர்த்தது

76 ஏழுற வுலகடு மேனக்கொம்பினை
ஆமையி னோட்டினை யணிந்த தன்மையும்
பூமலர் மிசையவன் முதல புங்கவர்
மாமுடி யணிந்தது மதிக்கி லாய்கொலோ.

பன்றிக் கொம்பையும் ஆமை ஓட்டையும் அணிந்தது

77 கதித்திடு முனிவரர் கடிய வேள்வியில்
உதித்திடு முயலக னெல்லென் றார்த்தெழப்
பதத்தினி லுதைத்தவன் பதைப தைத்திட
மிதித்ததும் பிறவுநீ வினவிற் றில்லையோ.

முயலகனை மிதித்தது

78 ஒன்னலர் தன்மைபூண் டுற்று ளோர்தமைத்
தன்னிக ரில்லவன் தண்டஞ் செய்தன
இன்னமோர் கோடியுண் டிருந்தி யானிவட்
பன்னினு முலப்புறு செல்லும் பல்லுகம்.

79 ஆதலா லீசன் தன்னை யடைந்தவ ருய்வ ரல்லாப்
பேதையர் யாவ ரேனும் பிழைக்கல ரினைய வாய்மை
வேதநூல் பிறவுங் கூறும் விழுப்பொரு ளாகு நீயும்
ஏதமா நெறியி னீங்கி யிப்பொரு ளுணர்தி எந்தாய்.

80 எண்டொகை பெற்ற வண்டம் யாவையும் புவனவைப்பும்
மண்டுபல் வளனு மேனை மன்னுயிர்த் தொகுதி முற்றும்
அண்டரு மூவர் தாமு மனைத்துமா கியதன் மேனி
கண்டிட விமையோர்க் கெல்லாங் காட்டினன் கந்த னென்பர்

81 மறைமுத லவனைமுன்னோர் வைகலின் வல்லி பூட்டிச்
சிறையிடை வைத்துத் தானே திண்புவி யளித்து முக்கண்
இறையவன் வேண்ட விட்டா னென்பரா லினைய வாற்றால்
அறுமுகன் செய்கை கேட்கின் அற்புத மாகுமன்னோ.

பிரமனைச் சிறையிலிட்டது

82 அங்கண்மா ஞாலந் தன்னை மேவினி யகழு மோட்டுச்
செங்கண்மா லேன யாக்கை யெயிற்றையோர் சிறுகை பற்றி
மங்குல்வா னுலகிற் சுற்றி மருப்பொன்று வழுத்த வாங்கித்
தங்கணா யகற்குச் சாத்தச் சண்முக னளிக்கு மென்பர்.

83 நேரலர் புரமூன் றட்ட நிருமலக் கடவுண் மைந்தன்
ஆரினும் வலியோ னென்கை யறைந்திட வேண்டுங் கொல்லோ
பாரினை யளந்தோ னுய்த்த பரிதியை யணியாக் கொண்ட்
தாரகன் தன்னை வெற்பைத் தடிந்தது சான்றே யன்றோ.

84 அறுமுகத் தொருவ னும மலனே யரன்பால் வந்த
சிறுவனென் றிகழல் மன்னு செய்கையாற் பெரியன் கண்டாய்
இறுதிசேர் கற்ப மொன்றி னீறிலா தவன்பாற் றோன்று
மூறுவலி னழலு மன்னோ வுலகெலா முடிப்ப தம்மா.

85 வாசவன் குறையு மந்தண் மலரயன் குறையு மற்றைக்
கேசவன் குறையு நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
ஆசிலோர் குழவி போலா யறுமுகங் கொண்டா னெண்டோள்
ஈசனே யென்ப தல்லாற் பிறிதொன்றை இசைக்க லாமோ.

86 கங்கைதன் புதல்வ னென்றுங் கார்த்திகை மைந்த னென்றுஞ்
செங்கண்மால் மருக னென்றுஞ் சேனையின் செல்வ னென்றும்
பங்கயன் முதலோர் தேறப் பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவுஞ் சொல்வ தேழைமைப் பால தன்றே.

87 பன்னிரு தடந்தோள் வள்ளல் பரிதியம் பகைவன் சூழ்வாற்
றன்னுறு படைஞர் மாய்ந்த தன்மையை வினவித் தாழா
தன்னவர் மீளு மாற்று லளக்கர்மேல் விடுத்த வேலை
இங்கார் தன்னிற் றூண்டின் யாரிவ ணிருத்தற் பாலார்.

82--87—முருகனது வன்மை கூறுவன

88 ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறின னவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினான்.

89 அண்ணலங் குமரனை யகத்துட் கொண்டுழி
எண்ணிய வெண்ணியாங் கெவர்க்கு நல்குவோன்
விண்ணிடை யொல்லையின் விசய னென்பவன்
கண்ணிடைத் தோன்றியே கழறன் மேயினான்.

88--89—விஜயன் என்னும் கணநாதனின் கூற்று. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' (தேவாரம்)

90 கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திர னரசினைக் கனவினும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்.

'வீரவாகுவின் கோரிக்கை. கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' (திருவாசகம்)

91 மூலமு முடிவு மில்லா மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை
ஆலம தானதே யைய வென்மொழி
மேலையின் விதியையார் வெல்லு நீரினர்.

சிங்க முகன் கூற்று

92 மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்ரு திருந்திடு மொருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்ன மெல்லாம்.

சிங்கமுகன் போரில் தேவர் கண்ட காட்சி

93 ஆங்காகு மெல்லை யருமறையுந் தேறரிய
ஓங்கார மூலத்து ணர்வா யுறைபகவன்
நீங்கா நெறியா னிறைபே ரருள் புரியப்
பாங்கா நின்ற பரிசனர்கள் போற்றினரே

பிரணவப்பொருள் சிவபிரான்; என்னுள்ளத்துள்
ஓங்காரமாய் நின்ற மெய்யா (திருவாசகம்)

94 காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி யநாதியாய் நங்கட்கெல்லாம்
மூலமா யிருந்தவள்ளல் மூவிரு முகங்கொண் டுற்ருன்

ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை. (திருவாசகம்)

95 குன்றுதோ ருடல்செய்யுங் குமரவேள் மேருவென்னும்
பொன்திகழ் வெற்பின்வந்து புவனங்கள் முழுதுமங்கட்
சென்றுறை யுயிர்கள்முற்றுந் தேவருந் தன்பாற்காட்டி
அன்றொரு வடிவங்கொண்ட தயர்த்தியோ வறிந்த நீதான்

எல்லா உலகமுமானய் போற்றி (திருவாசகம்)

96 பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவ ளுகி நல்கும்
என்னுரு வாகிக் காக்கு மீசன்போ லிறுதி செய்யும்
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படைபோலுமன்னன்
தன்னுரு மறைக ளாலுஞ் சாற்றுதற் கரிய தன்றே

எழுதரு மறைகள்தேரு இறைவன்

97 பாயிருங் கடலிற்சூழ்ந்த பற்றலர் படையையெல்லாம்
ஏயெனுமுன்னம் வீட்டுஞ் சிறுவனென் றெண்ணலைய
ஆயிரகோடி கொண்ட அண்டத்தி னுயிர்கட் கெல்லாம்
நாயகனவன்காண் நாஞ்செய் நல்வினைப் பயனால்வந்தான்

98 சூரனே முதலோர்தம்மை யிமைப்பினிற் றொலைக்கவுன்னின்
மூரலா லடுவன்கொண்ட முனிவினாலடுவன் வாய்மைச்
சீரினாலடுவன் நாட்டச் செய்கையா லடுவனென்றால்
நேரிலா முதல்வன் வன்மையாவரே நிகழ்த்தற்பாலார்

99 பாரிடர் சேனையோடு படர்ந்தது மிலக்கத்தொன்பான்
வீரர்கள் புடையிற்போற்ற மேயதும் படைகள்பற்றிச்
சூரனையடுவான் வந்தசூழ்ச்சியுந் தூக்கின்மாதோ
வாரணமுதலா மேலோர்க்கனைத்துமோ ராடலேகாண்

100 துய்யதோர் குமரனேபோற் றோன்றிய முதல்வன்சூழ்ந்த
வெய்யதா னவரையெல்லாம் விரைந்துட னறுத்துநீக்கிக்
கையில்வே லதனாற் சூர னாற்றலுங் கடக்கும்யாதும்
ஐயுறேல் காண்டியென்றா னறிதுயி லமர்ந்தபெம்மான்

101 ஓதி யாகியு முணர்த்தவர்க் குணரவு மொண்ணா
நீதி யாகியு நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியுந் தொழுதிடு மெம்மனோர்க் கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவ னறுமுக னன்றோ

102 ஈறி லாதமர் பரமனே குழவியி னியல்பாய்
ஆறு மாமுகங் கொண்டுதித் தானென்ப தல்லால்
வேறு செப்புதற் கியையுமோ மேலவன் தன்மை
தேறி யுந்தெளி கின்றிலவுமதுசிந் தையுமே

**94-102— திருமால் இந்திரனுக்கு உரைத்தவை**

103 பன்னிரு தடந்தோள்கொண்ட பகவனைப் பாலனென்றே
உன்னலை யவன்கைவேலா லொல்லையிற் படுதிகண்டாய்
இன்னுயிர் துறக்கநின்றாய் என்மொழி கேட்பாயன்றே
சென்னியில் விதியை யாவ ராயினுந் தீர்த்தாருண்டோ

**மாயை சூரனுக்குக் கூறியது**

104 உடல்சின மோடு சூர ளொருவனு யங்க ணின்றான்
அடல்வலி கொண்ட வாளி யந்தர நெறியான் மீண்டு
புடையுறு சரங்க ளோடு பொள்ளெனத் தூணி புக்க
சுடர்நெடுந் தனிவே லண்ண லவன்முக நோக்கிச் சொல்வான்

தனி வேல் - ஞான சக்தி

105 வெம்புய லிடையிற் றோன்றி விளிந்திடு மின்னு வென்ன
இம்பரி லெமது முன்ன மெல்லையி லுருவங் கொண்டாய்
அம்பினி லவற்றை யெல்லா மட்டன மழிவி லாத
நம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்றான்

இறைவனது வடிவம் அழிவில்லாதது

106 கூறிமற் றினைய தன்மை குரைகட லுலகந் திக்கு
மாறிலாப் புவன மண்டம் வானவ ருயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளன் மேனியி லமைந்த தன்றி [ன்
வேறிலை யென்ன வாங்கோர் வியன்பெரு வடிவங்கொண்டா

குரு மூர்த்தம்

107 உள்ளடி வரைகள் யாவு மொண்புற வடியி னீத்தம்
வள்ளுகிர் விரல்கண் முற்றும் வானுரு மேறு நாள்கோள்
எள்ளரும் பரடு தன்னி லிரும்புனற் கிறைவன் சோமன்
நள்ளிரு ளனைய மேனி நிருதியோ டரக்கர் நண்ண

வடிவத்தின் அங்கங்களில் பல தேவதைகள் அமைந்திருத்தல்

108 அடிதிரள் கணைக்கால் தன்னி லாரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை வானவ ராதி யானோர்
தொடைதனின் மகவான் மைந்தன் றொடைமுத னடுவன்கா
கடிதடத் தசுரர் பக்கங் கடவுளர் யாரு நிற்ப [லன்

சானு - தட்டையான மலைப் பாகம்

109 இருப்பினி னுகர் கோச வெல்லையின் மருந்தே யுந்திக்
கருப்படு முயிர்கண் மார்பிற் கலைகண்முந் நூலிற் போதம்
அருப்பயி லுரோமத் தண்ட மங்கையி லகில போகந்
திருப்பெருந் தடந்தோள் வைப்பிற் செங்கண்மால்

விரிஞ்சன் மேவ

110 மெல்லித ழனைய செங்கை விரன்மிசை யணங்கினல்லார்
ஒல்லொலி யங்கி கண்ட மொப்பிலா மணிவாய் வேதம்
பல்லிடை யெழுத்து நாவிற் பரமவா கமத்தின் பேதம்
நல்லிதழ் மனுவின் விஞ்சை நாசியிற் பவனன் மன்ன

பவனன் = வாயுதேவன்

111 கருணைகொள் விழியிற்சோமன் கதிரவன்செவியிற்றிக்குத்
திருநுதற் குடிலை வைப்புச் சென்னியிற் பரம வான்மா
மரபினின் மேவித் தோன்ற மாறிலா திருக்குந் தொல்லை
ஒருதன துருவங் காட்டி நிற்றலு மும்பர் கண்டார்

112 செஞ்சுட ரநந்த கோடி செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர் நின்றனர் நிமலமூர்த்தி
அஞ்சன்மி னஞ்சன் மின்னென் றருளின னமைத்த கையான்

நிமல மூர்த்தி - பாசத் தடையில்லாதவர்

113 அண்டர்கள் யாரு மெந்தை யருண்முறை வினவி யுள்ளம்
உண்டிடு விதிர்ப்பு நீங்கி யுவகையாற் றெழுது நின்றார்
தண்டுளி வரைய தென்னத் தணப்பறச் சிதறு மூழிக்
கொண்டலின் றேற்ற நோக்கிக் குலவுறு மஞ்ஞை யேபோல்

114 இறுதியு முதலு மில்லா விப்பெரு வடிவந் தன்னைக்
கறைவிட முறழுஞ் சூரன் கண்டுவிம் மிதத்தி னிற்ப
அறிவரு முணர்த றேற்றா வாறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் லுணர்ச்சி நல்க வினையன செப்ப லுற்றான்

இறுதியும் முதலும் இல்லாவடிவம். ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி. (திருவாசகம்)

115 எண்ணிலா வவுணர் தானை யாவையு மிமைப்பிற் செற்று
விண்ணுலா வண்டந்தோறும் வியன்சம ராற்றியென்பால்
நண்ணினர் தம்மை யெல்லா நாமறத் தடிந்து வீட்டி
வண்ணமான் றேரு மீண்டு வராநெறி தடுத்தான் மன்னோ

நாம்-நாமம் என்பதன் சிதைவு

116 திண்டிற லுடையேன் றூண்டுந் திறற்படை யாவு நீக்கிக்
கொண்டவென் மாய முற்றுங் கொடுஞ்சர மதனுன் மாற்றி
அண்டமும் புவனம் யாவு மமரரும் பிறவுந் தன்பாற்
கண்டிடும் வடிவமொன்று காட்டியென் கண்முனின்றுன்

117 கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவையுணர்ந்திலேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும்யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ

முருகனைப் பரமபதி என்று சூரன் உணர்கின்றுன்

118 ஒற்றென முன்னம் வந்தோனொருதனிவேலோன் றன்னைப்
பற்றிக வின்றி நின்ற பராபர முதல்வ னென்றே [லேனல்
சொற்றனன் சொற்ற வெல்லாந் துணிபெனக் கொண்டி
இற்றையிப் பொழுதி லீசனிவெனெனுந்தன்மைகண்டேன்

119 மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரத மம்மா மற்றியான் பெற்ற வண்டம்
ஆயவை முழுது மற்று மறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்திற் றேன்றியே நிற்கு மன்றே

அண்டங்களெல்லாம் ஆறுமாமுகப் பிரானது ஒரு உரோமத்தில் காணப் படுகின்றன

120 அண்டர்கண் முனிவ ரேனே ரகிலமுங் காட்டி யண்ணல்
கொண்டிடு படிவ முற்றுங் குறித்தியார் தெரிதற் பாலார்
எண்டரு விழிகள் யாக்கை யெங்கணும் படைத்தோர்க்கேனுங்
கண்டிட வநந்த கோடி கற்பமுங் கடக்கு மன்றே

கடவுளின் பெருமை அளவிடற்கரியது

121 சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
ஏர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லாம்
ஆர்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந்தெவிட்டிற் றில்லையின்னுமென்பார்வைதானும்

வடிவம் காணக் காண அற்புதமாயுளது, தெவிட்டாத தெள்ளமுதம்

122 சேரில ளுகி யீண்டே நின்றிடு முதல்வ னீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதுமச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பா ரமரரி லழிவி லாத
சீரிய வரங்கொண் டுள்ளே ளுதலிற் றெரிகின் றேனல்
வரத்தினுல் இக்காட்சி சூரனுக்குக் கிடைத்தது

123 ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன் ருகி
மேயின வெனினுஞ்செவ்வேள் விமலமாஞ் சரணந்தன்னில்
தூயநல் லெழிலுக் காற்ரு தென்றிடி னினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்
சரணு விந்தத்தின் பேரழகு

124 இங்கென துயிர்போ லுற்ற விளவலு மினைய சேயுஞ்
செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென்
றெண்ணல்கண்டாய்
பங்கயன் முதலோர் காணுப் பரமனே யாகு மென்ருர்
அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே யான தன்றே
இளவல்—சிங்கமுகன்—இனையசேய்—இரணியன்—சரதம்—உண்மை

125 அண்ணலார் குமரன் மேனி யடிமுதன் முடியின் காறும்
எண்ணிலா வூழி கால மெத்திற நோக்கி னுலுங்
கண்ணினு லடங்கா துன்னிற் கருத்தினு லடங்கா தென்பால்
நண்ணினு னமருக் கென்கை யருளென நாட்ட லாமே
சூரனை ஆட்கொள்ளவே முருகன் போருக்கு எழுந்தருளியது

126 திருகிய வெகுளி முற்றுந் தீர்ந்தன செருவி னூக்கம்
அருகிய துரோமம் புள்ளியாயின விழியிற் றூநீர்
பெருகிய திவன்பா லன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருகிய தென்பு தானு முலேமெழு காகு மன்றே
மெய்யுணர்வு சூரனுக்கு உண்டாயது

127 போயின வகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளும் கண்ணுங் துடித்தன புவன மெங்கும்
மேயினபொருள்கண் முற்றும்வெளிப்படுகின்றவிண்ணேர்
நாயகன் வடிவங் கண்டே னற்றவப் பயனீதன்ரே
தவப்பயனுல் இப்பேறு சூரனுக்குக் கிடைத்தது

128 சூழுதல் வேண்டுந் தாள்க டொழுதிடல் வேண்டு மங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலு
ஆழுதல் வேண்டுக் தீமை யகன்றுநா ளிவற்கா ளாகி
வாழுதல் வேண்டு நெஞ்சந் தடுத்தது மான மொன்றே

**குமாரக் கடவுளை வணங்க வேண்டும் என்னும் ஆசை உண்டாயது; ஆனால் மானம் தடுத்தது.**

129 ஒன்னலர் பொருட்டா லேகி யுறுசம ரிழைத்த செம்மல்
தன்னுரு வதனைக் காண்கின் முனிவதே தகுதி யாகும் [ருள்
வன்னிகொள் வெண்ணெயேபோல் வலியழிந் துருகிற்றென்
என்னுடை வயத்த வன்றே வுணர்ச்சியு மியாக்கைமுற்றும்

**தரிசனத்தால் பரவசமானது**

130 ஏடவி ழலங்கன் மார்பனென்னுட னிந்நாள்காறும்
நீடிய விகற்போ ராற்றி நீங்கலா னின்ற தெல்லாம்
ஆடலி னியற்கை யென்றே யறிந்தன னஃதான் றன்னுன்
சாடிய வேண்டு மென்னின் யாரது தாங்கற் பாலார்

**குமார மூர்த்தி போருக்கு எழுந்தது ஓர் திருவிளையாடலே.**

131 ஏதமி லமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாந்
தீதென வுரைத்தார் பல்லோ ரன்னதன் செயற்கை யாலே
வேதமு மயனு மேனை விண்ணவர் பலருங் காணு
காதனிங் கனுகப் பெற்றே னன்றதே யான தன்றே

**தேவர்களுக்குத் துன்பஞ் செய்தது நன்மையாக முடிந்தது**

132 ஒன்றொரு முதல் வனுகி யுறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தே னிந்நா ணெஞ்சினித் தளரே னம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனு நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும் மிவ்வுட னிற்ப துண்டோ

**இறைவனொடு போர் புரியும் வன்மையால் பெருமை உண்டாதல்.**

133 வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி யிந்த
ஊனுலா முயிரைப் போற்றி யளியர்போ லுறுவனென்னின்
ஆனதோ வெனக்கி தம்மா வாயிர கோடி யண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றி டாவோ

தேவர்களின் சிறையை நீக்கிப் போரைச் செய்யாமல் விடின் தனக்குப் புகழும் வீரத் தன்மையும் கிடைக்கா என்று சூரன் கவலைப்படுகின்றனன்.

134 என்னவித் தகைய பன்னி நிற்றலு மெவர்க்கு மேலோன்
உன்னருந் தகைத்தாய் நின்ற வொருபெருந் தோற்ற நீத்து
மின்னிவர் கலாப மூர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போத மாற்றித் தொன்மைபோலாகச்செய்தான்

நல்லுணர்ச்சி மாறி பழையபடியாதல்

135 காரண னாகித் தானே கருணையா லெவையு நல்கி
ஆருயிர் முழுது மேவி யனைத்தையு மியற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன் போதக மளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யுஞ் சூழ்ச்சியோ வரிய தன்றே

சூரன் பழையபடி மயங்கிப் போரணியில் நிற்றல்

(104-135 விசுவரூபச் செய்யுட்கள்)

136 நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்

137 தேவர்கள் தேவே யோலஞ் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம்

136 - 137 தேவர்களின் வணக்கம்

138 தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமு னுற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ வடுசம ரிந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்

தீயோரும் புனிதராவர் இறைவன் முன்பு

139 செய்யு மவனும் புலனுஞ் செய்வித்து நிற்போனும்
எய்தவரும் பொருளும் யாவையு நீயே யென்கை
ஐயவடி யேங்க ளறிந்தனமா லன்னதனால்
வெய்ய பவ மகன்று வீடுமினிக் கூடுதுமால்

ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதாரே.

140 கையிலார் கைகள் பெற்றுங் காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்று மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருடரானோர் வாள்விழி பெற்றுஞ் சென்றார்
ஐயன்மே லுள்ளம் வைத்தார்க் கிளையதோ வரிதுமாதோ

முருக வணக்கத்தால் அடையும் பலன்

141 மாயையின் வலியோனாகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோ ரெட் டண்ட மரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தகவின்றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தாள் சென்னிவைப்பாம்

142 மூந்நான்கு தோளு முகங்களோர் மூவிரண்டுங்
கொன்னார் வைவேலுங் குலிசமு மேனைப் படையும்
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள் கண்காண வெளிநின் றனன்விறலோன்

வள்ளியம்மையாருக்கு அளித்த காட்சி

143 கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட்டன்பர்
நல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவுமென்றும்

(இப் பாசுரத்தின் விளக்கம் பின்னால் காணலாம்)

144 ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்

145 புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய ளுக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

146 பாராகி யேனைப் பொருளா யுயிர்ப் பன்மையாகிப்
பேரா வுயிர்கட் குயிராய்ப் பிறவற்று மாகி
நேராகித் தோன்ற லிலதாகி நின்றான் கழற்கே
ஆராத காதலொடு போற்றி யடைது மன்றே

## மந்திரப் பொருள் விளக்கம்

1 எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரமனுக்குமீசனென்ன
தக்கமுதல் பரம்பிரமஞ் சதாசிவனே மெனவேதஞ் சாற்றுமல்
[லால்
முக்கனல்சூழ் வேள்வியிற்சுப் பிரமணிய னேமெனவு
முக்காற்கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்ப தியம்புமின்னே.

(காஞ்சிப் புராணம் குமரகோட்டப்படலம் 16)

சுப்பிரமணியோம் என்னும் மந்திரத்தின் மாட்சி

2 சுப்பிர மணிய னென்று சொலும்பெயர் பதமூன்றுகும்
அப்பதத் திடையுண்டான வரும்பதஞ் சிவனுமீற்றின்
மெய்ப்பதஞ் சிவனையேத்தும் விண்டுவின் வடிவாமுன்னஞ்
செப்புறுபத மிரண்டு பதங்களைச் சேர்ந்து காட்டி

3 ஒப்பரு மைக்கமர்க வுரைத்தலா லுரைக்கவொண்ணு
மைப்படி மிடற்றினு மாலெனு நாமுமாக
முப்புவ னங்க ளேத்த மூலமு முடிவு மில்லாக்
சுப்பிர மணியனைச் சொல்லுநால் வேத மாதோ

சுப்பிரமணியன் என்னுஞ் சொல் விளக்கம்

4 சரவண பவவென் றோதுந் தாவறு பதங்கள் மூன்றிற்
பரவுறு சரமென் றுய பதமது சலமே யாகும்
வருவநம் வாசமிந்த வான் பதமிரண்டும் பார்க்கில்
அரிதுமா தவத்துநாரா யணனெனு மருத்த மாமாம்

(சரவணபவன் என்னுஞ் சொல் நாராயணன் என்றும் சிவன் என்றும் பொருள் படுதலால் முருகன் சிவனும் விஷ்ணுவுமாவான்)

(திருச்செந்தூர்ப் புராணம் மந்திரமகிமை யுரைத்த அத்தியாயம்)

## தோத்திரப் பாக்கள்

### திருவிசைப்பா

1 மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம் வவ்வினன்
மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங் குமரவேள் வள்ளிதன்
மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன் என்னுமென்
மெல்லிய லிவளே

2 இவளைவா ரிளமென் கொங்கை பீர்பொங்க எழில்
கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க் கனகக்குன் றென
வருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா
நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்க ணங்கையா னைக்குங் குழகனல்
லழகனங் கோவே

3 கோவினைப் பவளக் குழமணக் கோலக் குழாங்கள்சூழ்
கோழிவெல் கொடியோன்
காவல்நற் சேனை யென் னக்காப் பவனென் பொன்னை
மேகலை கவர்வானே
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்
கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ் சுப்பிர மண்ணியன் தானே.

4 தானமர் பொருது வானவர் சேனை மடியச்சூர் மார்பினைத்
தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை மறைநிறை
சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலஇளங் களிறென் கொடிக்கிடர்
பயப்பதுங் குணமே.

5 குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை படுமிடர்
குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம் உய்யமற்
றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ்
நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன் கணபதி
பின்னிளங் கிளையே

6 கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட ஆண்டகை கேடில்
வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடையரன் மதலை கார்நிற
மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக் கருளுங்
கொல் முருகவேள் பரிந்தே.

7 பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ பவளத்தின்
குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித்திரளோ சுந்தரத் தரசிது
வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்திருக்குரா
நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொல் மையல்
கொண் டையுறும் வகையே

8 வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை வானமர்
விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த பொன்மலை
வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென் துடியிடை
மடல்தொடங் கினளே.

9 தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கல் புறஇத
ழாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன் மறத்
தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக்கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத் தறுமுகத் தமுதினை
மருண்டே

10 மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப் பொழில்வளர்
மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே விடலையே
எவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக் கண்ணுடைக்
கோமளக் கொழுந்தே

11 கொழுந்திரள் வாயார் தாய்மொழியாகத் தூய்மொழி
அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன் வாய்ந்த
சொல்லிவை சுவாமியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை ஏத்துவார் கேட்பார் இடர்கெடு
மாலுலா மனமே

திருச்சிற்றம்பலம்

## கந்தரநுபூதி

1 செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது (தாயுமானவர்)

2 உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அனகா அபயா அமரா
விதிகா வலசூ ரபயங் கரனே

(பிறப்பிலி இறப்பிலி)

3 ஆனா வமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியஎன் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே

யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் (திருக்குறள்) 'எனதற்றிருக்கும் காட்சி'
(கந்தரலங்காரம்)

4 தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அனுபூ திபிறந் ததுவே

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் (திருக்குறள்)
ஆசை நிகளத்தினை நிர்த்தூளிபடவுதறி (தாயுமானவர்)

5 உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

6. எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

## கந்தரலங்காரம்

1 நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்கு முன் னேவந்து தோன்றிடினே

2 விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே

3 சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே

4 குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாம் துதிக்கும்
அமராவதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண் ட
தமராகி வைகும் தனியான ஞான தபோ தனர்க்கிங்கு
எமராசன் விட்ட கடையேடு வந்தினி என்செயுமே

5 மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னே அந்த நான்முகனே

6 தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத்
தானமென்று
மிடுங்கோ ளிருந்த படியிடுங் கோளெழுபாரு முய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

## திருவகுப்பு

## தேவேந்திரசங்க வகுப்பு

தனதன தனதன தனதன தன்தன
தனதன தன்தன தானந்தன தந்தன
தானந்தன தந்தன

தாணியி லரணிய முரணிர ணியனுட
றனைநக நுதிகொடு, சாடோங்குநெ டுங்குரி
யோடோ ந்துப யங்கரி

தமருக பரிபுர வொலிகொடு நடநவில்
சரணிய சதுர்மறை, தாதாம்புய மந்திர
வேதாந்தப ரம்பரை

சரிவளை விரிசடை யெரிபுரை வடிவினள்
சததள முகுளித, தாமாங்குச மென்றிரு
தாளாந்தர வம்பிகை

தருபதி சுரரொடு சருவிய வசுரர்கள்
தமணி முடிபொடி, தாளம்படி செங்கையில்,
வாள்வாங்கிய சங்கரி

இரணிகி ரணமட மயின்மிர்க மதபுள
கிதவிள முலைபிள, நீர்தாங்கி நுடங்கிய
நூல்போன்ற மருங்கினள்

இறுகிய சிறுபிறை யெயிறுடை யமபட
ரெனதுயிர் கொளவரின், யானேங்குதல் கண்டெதிர்,
தானேன்றுகொ ளுங்குயில்

இடுபலி கொடுதிரி யிரவல ரிடர்கெட
விடுமன கரதல, வேகாம்பரை யிந்திரை
மோகாங்கசு மங்கலை

எழுதிய படமென விருளறு சுடரடி
யிணைதொழு மவுனிக, ளேகாந்தசு கந்தரு
பாசாங்குச சுந்தரி

கரணமு மரணமு மலமொடு முடல்படு
கடுவினை கெடநினை, காலாந்தரி கந்தரி
நீலாஞ்சனி நஞ்சுமிழ்

கனலெரி கணபண குணமணி யணிபணி
கனவளை மரகத, காசாம்பர கஞ்சுளி
தூசாம்படி கொண்டவள்

கனைகழ னிணையல ருயிரவி பயிரவி
கவுரிக மலைகுழை, காதார்ந்தசெ ழுங்கழு
நீர்தோய்ந்தபெ ருந்திரு

கரைபொழி திருமுக கருணையி லுலகெழு
கடனிலை பெறவளர், காவேந்திய பைங்கிளி
மாசாம்பவி தந்தவன்

அரனெடு வடவரை யடியொடு பொடிபட
வலைகடல் கெடவயில், வேல்வாங்கிய செந்தமிழ்,
நூலோன்கும ரன்குகன்

அறுமுக னொருபதொ டிருபுய னபிநவ
னழகிய குறமக, டார்வேய்ந்தபு யன்பகை
யாமாந்தர்க ளந்தகன்

அடன்மிகு கடதட விகடித மதகளி
றனவர தமுமக, லாமாந்தர்கள் சிந்தையில்
வாழ்வாம்படி செந்திலில்

அதிபதி யெனவரு பொருதிறன் முருகனை
யருள்பட மொழிபவ, ராரார்ய்ந்துவ ணங்குவர்
தேவேந்திர சங்கமே

## திருப்புகழ்

1 இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவு தரிசனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவன ருளுமுருக செம்பொற் கழலோனே
கருணை நெறிபுரியு மன்பர்க் கெளியோனே
கனக சபை மருவு கந்தப் பெருமாளே

2 கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள் வாயே
பரப் பற்றுருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே

## முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

1 உலகு குளிர எமது மதியி லொழுகு மமுத கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
அறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே

2 இழுமென் மொழித்தெளி தமிழின் வடித்திடு நவரசமே
இதயவிருட் டற வுணர்விலுதித்திடு சுடரொளியே
கழுவுமணிக்கல னடுவிலிழைத்திடு குலமணியே
கனிதருமுக்கனி யொடுவடிகட்டிய சுவையமுதே
ஒழுகுநறைச்செழு மலர்விரியக்கமழ் புதுமணமே
உருகுமுளத்தருள் பெருகி யுவட்டெழு சலநிதியே
பழமறை கட்கொரு முதல்வன்முழக்குக சிறுபறையே
பருதிபுரிச்சிறு குமரன் முழக்குக சிறுபறையே

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

பூவே பூவிற் பரிமள மேயப் பூநிறை சுவைநறவே
பொங்குங் கடலே கடலிலுதித்தெழு புனிதத் தெள்ளமுதே
காவே காவிற் கொஞ்சும் பஞ்ச வனக்கட வுட்கிளியே
கண்ணே கண்ணுறு பாவாய் பூவாய் கனியே கனிரசமே

தேவே தேவர் சிரோமணி யேயென் சீருயி ரேயுயிரிற்
செம்பொரு ளேஅரு ளேமுழு மணியே மணியிற் றேசிகமே
மூவா மறையே மறையின் பொருளே முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே

2 கருத்தே புகுந்து கதிகாட்டுங் கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக கருணைபொழி காரே வருக ஆனந்தப் [கிளிப்
பெருக்கே வருக யாங்கள்பெறும் பேறே வருக மறைசொல்
பிள்ளாய் வருக பிறங்குதெய்வப் பெருமாள் வருக குறமடக்
தருக்கே வருக மிடியகற்றுந் தருவே வருக மன்பதைக்கோர்[தை
தஞ்சே வருக எமையளிக்குந் தாயே வருக பவப்பிணிக்கு
மருத்தே வருக சமரபுரி வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே

3 விதையாயிருக்கும் ஐந்தெழுத்தும் வேதாகமும் முத்தமிழும்
விளங்குஞ் சரியா திகள்நான்கும் வீறுகியமெய்ச் சிவமதமும்
சுதையா தரிக்குந் திருநீறுஞ் சோதிநயனத் திருமணியும் [யார்
துகள்தீர் பத்திவிதி நெறியின் தொடர்புஞ் செடிதீர்மெய்யடி
இதயாலயத்தைப் பிரியா தங்கிருள்தீர்ஞான மணிவிளக்கும்
இலங்கு மவுனந் துளும்பாத இன்ப வளனுஞ் சந்ததமுஞ்
சிதையா தளிக்கு மோரிறையே சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே

4 எண்ணிய எண்ணிய வாறே சிறியனுக் கீந்தருளும்
புண்ணிய னேநின் மகிமையை யோர்ந்திலன்பொய்யவ
கண்ணுறு மாமணி யேகருத் தூறும் கனிரசமே [னேன்
தண்ணளி மாமுகி லேபோரி மேவிய சண்முகனே

5 தாயாம் எனக்குரிய தாதையாஞ் சற்குருவாம்
தேயாக் கருணைபொழி தெய்வமாம் — மாயப்
பொருள்நீக்கும் அன்பர் புனிதவீ டேற
இருள்நீக்கும் போரூர் இறை.

6 கேட்டதெலாம் பாலிக்குங் கேடிலாத் தாதாவும்
வீட்டுநெறி காட்டும் வியன்குருவும்—நாட்டமென
உள்நின்று நாயேற் கொளிகாட்டுஞ் சிற்பரனும்
எண்ணின்ற போரூ ரிறை

7 ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே — நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறு நீ பேசு

8 குமரா நமவென்று கூறிஞே ரோர்கால்
அமராவதி யாள் வரன்றி — யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்

9 ஆனந்த மாகடலே ஆரா வமுதமே
மோனந் தருஞ்சுடரே முத்திவித்தே — தேனந்து
கஞ்சமலர் வாவிக் கனபோரூர் ஐயா நீ
தஞ்சமெனக் காத்தாள் சரண்

## திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்

1 உருகாமன முஞ்சிவஞான முணராவறிவு முனதுபுகழ்
ஓதாநாவு மோதக்கேட் டுவந்தேயி னியநதிபோலப்
பெருகாவிழியு முடையேனைப் பிறவிக்கடலில் வீழாமற்
பேணியெடுத்திங் கெனதுள்ளம் பிரியாவிரிஞ்சைப் பதிவாழும்
முருகாவருக சதுர்வேத முதல்வாவருக வினைதீர்க்கும்
முனிவாவருக மலராறு முகவாவருக திருமாலின்
மருகாவருக மயிலேறு மன்னுவருக அடியார்கள்
வாழ்வேவருக தெய்வசிகா மணியேவருக வருகவே

2 தேவேவருக திருவிரிஞ்சைச் சேயேவருக தெவிட்டாத
தேனேவருக சுவையமுதத் தெளிவேவருக கதிகொடுக்குங்
காவேவருக பெருங்கருணைக் கடலேவருக கலைபொழியுங்
காரேவருக மரகதத்தின் கண்ணேவருக விண்ணோர்கள்

கோவேவருக பெரியகுணக் குன்றேவருக வுபதேச
குருவேவருக சிவஞானக் கொழுந்தேவருக ஒருகரத்தின்
மாவேலெடுத்த பரப்பிரம வடிவேவருக அடியார்கள்
வாழ்வேவருக தெய்வசிகா மணியே வருகவருகவே

3 பூத்தேயுலகம் புரப்பாளைப் பொய்யர்தமக்குக் கரப்பாளைப்
பொழியுங்கருணை விழியாளைப் பொற்புங்கற்பு மழியாளைக்
கூத்தையுடையா னிடத்தாளைக் குவிமாமுலைமேல் வடத்தாளைக்
குறையாவெண்ணெண் கலையாளைக்குளிர்சேரிமயமலையாளை
மாத்தேவருக்குந் தெளியாளை வணங்குமடியார்க் கெளியாளை
வரையைச் சிலையாவளைத்தானை மறைக்கு முதலாய்முளைத்
[தானை
ஆத்தேஆத்தே யெனுங்குமரா அடியேஞ்சிற்றி லழியேலே
அரசேவிரிஞ்சைப் பதிவாழ்வெ அடியேஞ்சிற்றி லழியேலே

4 பொய்யாவுளத்தி லிருப்பாரைப் பொலியுங் கயிலைப்
பொருப்பாரைப்
பொருமாகரியை யுரிப்பாரைப் புரமூன்றெரிய எரிப்பாரைக்
கையார் மறிமான்மழுவாரைக்கமலாலயன்மால்தொழுவாரைக்
கனகசபையில் நடிப்பாரைக் கங்கைமுடியில் முடிப்பாரை
மையார்மலத்தை யொழிப்பாரை மதவேளெரிய விழிப்பாரை
மறலிநடுங்கப் பொருவாரை வழிக்குத்துணையா வருவாரை
ஐயா ஐயா வெனுங்குமரா அடியேஞ்சிற்றி லழியேலே
அரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே அடியேஞ் சிற்றிலழியேலே

5 இம்மாநிலத்தை அளந்தானை இகல்மாமருதம் பிளந்தானை
இலங்காபுரியைக் கெடுத்தானை இமையோர்க்கமிர்தங்
கொடுத்தானைக்
கைம்மாவிடுக்கண் களைந்தானைக் ககனமளவா வளர்ந்தானைக்
கன்றால்விளவை எறிந்தானைக் கருதாருளத்திற் பிரிந்தானை
மைம்மாசுணத்தி னடித்தானை வருபாரதத்தை முடித்தானை
வையமனைத்து மயின்றானை வடத்தினிலையிற் றுயின்றானை
அம்மான் அம்மா னெனுங்குமரா அடியேஞ்சிற்றி லழியேலே
அரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே அடியேஞ்சிற்றில் அழியேலே

## முத்துக்குமாரசுவாமி திருவருட்பா

1 பொன்னெடுங் குன்றே யனந்தசந் த்ரோதயம் போலவரும்
ஞானவொளியே
பொய்யிருளை நீக்கியிடுமெய்யிரவியுதயமேபூரணானந்தசுகமே
அன்னையினு மன்புமிகு மன்புருவ மேயிருவ ரறிவரிய வொரு
பிரமமே
அருமருந்தே யமுதசலதியே அடியா ரறிந்தகரு கூலமே
யென்று
உன்னையே பாடிநின்று ஆடியிரு கண்ணில் நீரோட ரோமஞ்
சிலிர்ப்ப
உள்ளங் கரைந்துருக அடியனே னானந்த உல்லாசமாவ
தென்றோ
முன்னைவினை தீர்த்தருளு மன்னனே புள்ளூரின் முக்கட்
குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால முத்துக் குமார
குருவே

## திருமுருகாற்றுப்படை

1 உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே

2 அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்

3 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

## தாயுமானவர் பாடல்

அஞ்சுமுகங் காட்டாமல் ஆறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ

39
T.2273

## அஷ்டோத்தரசத நாமங்கள்

ஓம் கந்தாயநம :
ஓம் குகாயநம :
ஓம் ஷண்முகாயநம :
ஓம் பாலநேத்திரசுதாயநம :
ஓம் பிரபவேநம :
ஓம் பிங்களாயநம :
ஓம் கிருத்திகாசூநவேநம :
ஓம் சிகிவாகநாயநம :
ஓம் துவிஷட்புஜாயநம :
ஓம் திரிஷணேத்திராயநம : 10
ஓம் சத்திதராயநம :
ஓம் விகிதாசிவப்பிரபஞ்சாயநம :
ஓம் தாரகாசுரசங்காரிணேநம :
ஓம் ரக்ஷோபலவிமர்த்தநாயநம :
ஓம் மத்தாயநம :
ஓம் பிரமத்தாயநம :
ஓம் உன்மத்தாயநம :
ஓம் சூரசங்க ரக்ஷித்திரேநம :
ஓம் மதுபசேனாபதயேநம :
ஓம் பிராக்ஞாயநம : 20
ஓம் கிருபாளவேநம :
ஓம் பக்தவத்ஸலாயநம :
ஓம் உமாசுதாயநம :
ஓம் குமாராயநம :
ஓம் கிரௌஞ்சதாரணாயநம :
ஓம் சேநாநியேநம :
ஓம் அக்கினிஜன்மனேநம :
ஓம் விசாகாயநம :
ஓம் சங்கராத்மஜாயநம :
ஓம் சிவசுவாமிநேநம : 30

ஓம் கணசுவாமிநேநம :
ஓம் சர்வசுவாமிநேநம :
ஓம் சநாதநாயநம :
ஓம் அநந்தசக்தயேநம :
ஓம் அக்ஷோப்பியாயநம :
ஓம் பார்வதிப்பிரியநந்தநாயநம :
ஓம் கங்காசுதாயநம :
ஓம் சரோத்பூதாயநம :
ஓம் பாவகாத்மஜாயநம :
ஓம் ஆஹுதயேநம : 40
ஓம் ஜிரும்பாயநம :
ஓம் பிரஜிரும்பாயநம :
ஓம் உஜிரும்பாயநக :
ஓம் கமலாசனசந்நுதாயநம :
ஓம் ஏகவர்ண்ணாயநம :
ஓம் துவிவர்ண்ணாயநம :
ஓம் திரிவர்ண்ணாயநம :
ஓம் சதுர்வர்ண்ணாயநம :
ஓம் பஞ்சவர்ண்ணாயநம :
ஓம் பிராஜாபதயேநம : 50
ஓம் அபராயநம :
ஓம் அக்நிகர்ப்பாயநம :
ஓம் சமிகர்ப்பாயநம :
ஓம் விசுவரேதஸேநம :
ஓம் சுராரிக்னேநம :
ஓம் இரணியவர்ண்ணாயநம :
ஓம் சுபகிருதேநம :
ஓம் வசுமதேநம :
ஓம் வடுவேஷத்திருதேநம :
ஓம் பூஷணேநம : 60
ஓம் கபஸ்தயேநம :
ஓம் ககநாயநம :
ஓம் சந்திரவர்ண்ணாயநம :

ஓம் கலாதராயநம :
ஓம் மாயாதராயநம :
ஓம் கைவல்லியாயநம :
ஓம் கலாத்மகாயநம :
ஓம் விசுவயோநயேநம:
ஓம் அமேயாத்மநேநம: 70
ஓம் தேஜோநிதயேநம :
ஓம் அநாமயாயநம :
ஓம் பரமேஷ்டிநேநம :
ஓம் குருவேநம :
ஓம் பிரமணேநம :
ஓம் வேதகர்ப்பாயநம :
ஓம் விரஜஸேநம :
ஓம் வசவேநம :
ஓம் புளிந்தகன்னியாபர்த்திரேநம :
ஓம் மகாசாரசுவதப்பிரதாயநம : 80
ஓம் ஆசிரதாகிலதாத்திரேநம :
ஓம் சோரக்நாயநம :
ஓம் ரோகநாசநாயநம :
ஓம் அநந்தமூர்த்தயேநம :
ஓம் சிகண்டிகிருதகேதநாயநம :
ஓம் டம்பாயநம :
ஓம் பரமடம்பாயநம :
ஓம் மகாடம்பாயநம : 90
ஓம் விருஷாகபயேநம :
ஓம் காரணோபாக்ததேகாயநம :
ஓம் காரணாதீதவிக்ரகாயநம :
ஓம் அநீச்சுவராயநம :
ஓம் பிராணாயநம :
ஓம் பிராணாதாராயநம :
ஓம் பராத்பராயநம :
ஓம் விரத்தபர்த்திரேநம :
ஓம் வீரக்நாயநம :

ஓம் ரக்தாயநம:
ஓம் சாமராயநம: 100
ஓம் பிங்களாயநம:
ஓம் பகுவர்ண்ணாயநம:
ஓம் கோபதேயநம:
ஓம் தக்ஷிணாத்தியபரப்பிரதாயநம:
ஓம் சர்வேசுவராயநம:
ஓம் லோககுரவேநம:
ஓம் அசுராநீகமர்த்தநாயநம: 108
ஓம் ஸ்ரீ சுப்ரமண்யமூர்த்தயேநம:

## கந்தர் சஷ்டி கவசம்

(காப்பு)

1 துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போ நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

2 அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காகக்
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்

பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டி கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயி ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
பழநிப் பதிவாழ் பால குமரா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்

பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையின் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கர ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு வந்தமுத ளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்ற
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

**மயில் நடம் இடுவோய் மலரடி சரணம்**
**சரணஞ் சரணஞ் சரஹண பவஓம்**
**சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்**

---

## (பக்கம் 25) 143-வது பாசுர விளக்கம்

## (கல்லகம் குடைந்த செவ்வேற் கந்தன்)

பல்லுயிர்க்கு அருளைப் பூத்து என்றது அறிவும், தொழிலும், வலியும், குணமுமின்றி அணுத்துவம் பூண்டு ஆணவ மலமென்னும் இருளிற் கிடந்து தடுமாறி இடருழக்கும் பல்வகை உயிர்க்கும் குருடருக்குக் கோல் கொடுத்ததுபோலத் தனுகரணாதிகளைக் கொடுத்து அவ்விருளினின்றும் வெளிவருமாறு அருள்புரியக் கருதிய இச்சையை. இவ்வருள்காய் தோன்றற்குக் காரணமாகிய பூப்போன்று நிற்றலின் பூ என உருவகிக்கப்பட்டது. இதனாற் கேவல நிலையிலே உபகரித்தல் கூறப்பட்டது. கேவலமாவது உளதாந்தன்மை யாகிய தனிநிலை. "கேவலந்தன னுண்மை" (சித்தியார்).

பவநெறி என்றது ஆணவமாகிய அவ்விருளினின்றும் நீக்கி அவ்வுயிர்களுக்குத் தனுகரணாதிகளைக் கொடுத்து மயக்கம் நீக்கு தற்கு இயன்ற வழியாகிய பிறவி வழியை. இது பூவினின்றுந் தோன்றிய காய் போலப் பயன்படல் நோக்கிக் காயென உருவகிக்கப்பட்டது. இதனால் சகலநிலையிலே உபகரித்தல் கூறப்பட்டது. சகலமாவது கலை முதலியவற்றோடு கூடிய நிலை.

அன்பர் என்றது பாச நீக்கமுஞ் சிவத்துவப் பேறும் அடைந்து சுத்த நிலையாளராகிய அயரா அன்பினரை. சுத்தமாவது மலம் நீங்கிய தூயநிலை.

## முருகக் கடவுளின் வரலாறு

முருகக் கடவுள் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு மிகுதியாக வணங்கப்படும் தெய்வ மூர்த்தியாம். இம்மூர்த்தி சிவபிரானது பல மூர்த்தங்களுள் ஒன்று. முருகக் கடவுள் வழிபாடு பண்டைத் தமிழ்ச் சங்க நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. பத்துப் பாட்டின் முதல் நூலாகிய திருமுருகாற்றுப்படை இக்கடவுளை வந்திப்பது. சங்கப் புலவருள் ஒருவராகிய நக்கீரதேவரால் இது பாடப்பட்டது. இவ்வாற்றுப்படை பதினோராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றுகவும் சேர்க்கப்பட்டுள்ளது. அது சிவபிரானுக்கும் முருகக் கடவுளுக்கும் பேதமில்லை என்பதைக் காட்டும். முருகரைச் சிவபிரானது இளைய குமாரர் என்பது உபசாரமேயாம். முருகர் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக் கண்களும், பன்னிரண்டு கைகளும், இரண்டு கால்களும் உடையவர். கொடி, குலிசம், தோட்டி, அஸ்திரம் வேல் என்னும் ஐந்து ஆயுதங்கள் முறையே பொருந்திய கரங்களும் அபய கரமுமே வலக் கரங்களாம். தாமரை, மணி, மழு, தண்டு, வில் என்னும் ஐந்தையும் முறையே கொண்ட கரங்களும் வரத கரமுமே இடக் கரங்களாம்.

### சக்தி

வள்ளி நாயகியார் தெய்வயானை அம்மையார் இவரது சக்தி என்று கூறப்படுவர். சிவபெருமான் மும்மூர்த்தியாய் நின்று முத்தொழிலையும் செய்பவர் தாமென்பதைச் சூலப் படையால் உணர்த்துவது போல இவரும் இச்சா சக்தியாகிய வள்ளி அம்மையாலும் கிரியா சக்தியாகிய தெய்வயானை அம்மையாலும் ஞான சக்தி யாகிய வேலாயுதத்தாலும் உணர்த்துகின்றனர். வேற்படையானது சிவசத்தியே யாகையால் அதைக் குமாரக் கடவுளே என்று தியானித்தல் வேண்டும்.

சிவபெருமான் ஞானசாரியராக எழுந்தருளிய பராசத்தியாகிய ஞானசத்தியைக் கொண்டு உயிர்களின் பாசத்தை ஒழித்துத் திருவடிப் பேற்றைத் தருதல் போல, முருகரும் இச்சா, ஞான, கிரியா சத்திகள் மூவிலை போலக் கிளைத்தெழுந்து பவக் கடலை வற்றச்செய்யும் ஞானசத்தியாகிய வேலைக்கொண்டு

உயிர்களின் பாசத்தை நீக்குவர். சூரபன்மன், சிங்கமுகா சூரன், தாரகன், கிரவுஞ்சமலை முதலியவற்றை வேலினால் அழித்தமை ஞானசத்தி என்பதை மெய்ப்பிக்கும். மற்றையத் திருக்கரங்களில் உள்ள ஆயுங்கள் பதினொரு உருத்திரர்களின் அடையாளமாகும்.

முருகக் கடவுள் ஆணவம், கன்மம், மாயையாகிய சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மூவரையும் அழித்து ஆணவமாகிய மயிலை வாகனமாகக்கொண்டது அடியார்களுடைய ஆணவத்தை அடக்கும் ஆற்றல் தமக்குள்ள தென்பதையும் சேவலைக் கொடியாக ஏற்றியது திருவருளாகிய பரஞானத்தைக் கொடுப்பவர் தாம் என்பதையும் அறிவித்தற் பொருட்டாம். இம்மூர்த்தி தோன்றியது தேவர்களைத் துன்பம் செய்யும் அவுணர்களை ஒழித்து தேவர்களைக் காப்பதற்காம்.

## முருகக் கடவுளின் நாமங்கள்

சுப்பிரமணியன், கார்த்திகேயன், கந்தன், சண்முகன், செவ்வேள், சேய், வேலன், குறிஞ்சிக் கிழவன், சரவணபவன், குகன், கடம்பன், ஆசான், விசாகன், சேந்தன், சிலம்பன், புலவன், கோழிக் கொடியன், மயில் வாகன், வள்ளிகாந்தன், சூர்பயங்கரன் முதலியன. இப்பெயருட் சில வேதங்களில் பேசப்பட்டுள்ளன. ஆகலின் இவர் தமிழ்த் தெய்வமே என்று இக்காலத்திற் சிலர் கூறுவது பொருந்தாது. யசுர் வேத சுலோகம் ஒன்று சுப்பிரமணிய ஓம் என்று மும்முறை கூவி முடிகின்றது. அதர்வசிகம், சுவேதாஸ்வரம் முதலிய உபநிடதங்களில் இவர் பெயர் கந்தன், குமரன் என முறையே காணப்படுகின்றது. ஸ்காந்த மகாபுராணம், குமாரதந்திரம், குமாரசம்பவம் முதலிய வடமொழி நூல்கள் இப்பெருமானின் பிரபாவத்தை மிக விரிவாகக் கூறுகின்றன. இக்கடவுளையே வணங்குபவர் "கௌமாரர்" எனப் படுபவர். கௌமார மதம் முன் காலத்தில் விளக்க முற்றிருந்ததாகக் கூறுப.

### முருகரின் வரலாற்றையும் சிறப்பையும் புகலும் தமிழ் நூல்களாவன:—

கந்த புராணம், உபதேச காண்டம், கந்த புராணச் சுருக்கம், கந்த புராண வெண்பா, திருச்செந்தூர்ப் புராணம், மயூரகிரிப் புராணம், திருத்தணிகைப் புராணம், மயூராசலப் புராணம், பழநிப் புராணம், கதிர்காமப் புராணம், குமாரசாமீயம், கந்த

சஷ்டிப் புராணம், கதிரை மலைப் பள்ளு, சுப்பிரமணிய பராக்கிரமம், திருச்செந்திற் கலம்பகம், கதிர்காமக் கலம்பகம் முதலியன.

### தோத்திர நூல்களாவன:

திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, திருப்போரூர்ச் சந்நிதி முறை, திருத்தணிகைச் சந்நிதிமுறை, கந்தர்கலி வெண்பா, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், கந்தர்சஷ்டிக் கவசம், காசிக்கதிர்காம வேலர் திருவருட்பா, திருச்செந்தூரகவல், சுப்பிரமணியர் திருவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம், முத்துக்குமாரசாமி திருவருட்பா, முருகர் அந்தாதி, திருத்தணிகை ஆற்றுப்படை, கதிரைமலைப் பேரின்பக் காதல் முதலியன.

### முருகரை வழிபட்டு பேறுபெற்ற அடியார்கள்:—

நக்கீரர், கச்சியப்ப சிவாசாரியர், அருணகிரியார், குமர குருபரர், சிதம்பர சுவாமிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், தண்டபாணிச் சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலியோர்.

### இவருடைய விரதங்களாவன:

வெள்ளிக் கிழமை, கார்த்திகை, கந்த சட்டி என்பவை.

### இவரது விசேஷ தலங்கள்

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, அழகர் கோயில், குன்றக்குடி, சிக்கல், வைத்தீசுரன் கோயில், வயலூர், மைலம், திருப்போரூர், கந்தகோட்டம், திருத்தணி, இலஞ்சி, சேயூர், கதிர்காமம், திருச்செங்கோடு, சுவாமி மலை முதலியனவாம்.

### இவரைக் குறித்து செபிக்கும் மந்திரம்

**முருக சரவணபவ சண்முக குக** என்று சிவராத்திரி புராணம் கூறும். சுப்பிரமணியன் என்னும் பெயரின் பொருள் சிவனும் திருமாலும் ஐக்கியமான நிலை என்பதாம். ஆகலின் இருவரும் சேர்ந்த மூர்த்தமே அஃதாம்; சரவணபவ என்னும் சொற்றொடரும் இப்பொருளையே தரும். [சரவணன் - நாராயணன்; பவன் - சிவ பெருமான்] திருச்செந்தூர்ப் புராணம் இவ்வாறு கூறுகின்றது.

## சில பரம்பரைக் கதைகள்:

### நக்கீரர்

கைலாயத்தைத் தரிசிக்க யாத்திரையாகச் சென்ற நக்கீரர் இமயாசலத்திலுள்ள ஓர் தடாகத்தில் நீராடி அதன் கரையிலுள்ள ஆலமரத்தின் கீழ்ப் பூசை புரிந்தார். அச்சமயத்தில் அம்மரத்தின் இலையொன்று பாதி நீரினும் பாதி நிலத்திலுமாக வீழ்ந்தது. நீரில் விழுந்த பாதி மீனாகவும் நிலத்தில் விழுந்த பாதி பறவையாகவும் உருவடைந்து ஒன்றையொன்று இழுக்கலாயின. இவ்வதிசயத்தைக் கண்ட கீரர் புத்தியைச் சிதறவிட்டனர். இங்ஙனம் பூசையில் வழுவினோர் 999பேரைக் குகையில் அடைத்து வைத்து ஆயிரவராக ஆனபின் உண்ணக் கருதியிருந்த ஓர் பூத மானது இவரையும் அக்குகையில் அடைத்துவிட்டு நீராடச் சென்றது. முன்னரே அக் குகையில் அடைபட்டிருந்தவரெல்லாம் நக்கீரரைக் கண்டதும் உம்மால் எல்லாருக்கும் இறுதி வந்தது என்று வருந்தினர். அதைக் கேட்ட நக்கீரர் முருகப்பெருமான் மீது திருமுருகாற்றுப்படையைப் பாடியருளினர். முருகப் பிரான் அங்கே எழுந்தருளி பூதத்தைக் கொன்று யாவரையும் சிறையினின்றும் மீட்டருளினர். இதனை "இன்றென்னைக் கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும் மெய்விடா வீரன் கைவேல்" என்பதனால் அறியலாம்.

### ஔவையார்

ஔவையாரின் கல்விச் செருக்கை அடக்கக் கருதி முருகப் பிரான் ஓர் திருவிளையாடல் புரிந்தார். ஔவையார் காட்டு வழியா கப் போகும் போது, குமரேசன் பசுக்களை மேய்க்கும் சிறுவன் போல் வேடம் பூண்டு நாவல் மரத்திலேறிப் பழம் பறித்துத் தின்பவன் போல நடித்தனர். அம் மார்க்கத்திற் சென்ற ஔவை யார் அச்சிறுவனைக் கூவி அழைத்து சில பழங்களைக் கேட்டனர். சுடுபழம் வேண்டுமோ சுடாப் பழம் வேண்டுமோ என்று சிறுவர் கேட்டனர். ஔவையார் திகைத்தனர். பழங்களில் இதென்ன புதுமை என்று நினைத்து சுடு பழமே வேண்டும் என்றனர்.குமாரக் கடவுள் அளிந்த பழங்களிற் சிலவற்றைப் பறித்து மணலில் எறிந்தனர். அப்பழங்களை ஔவையார் பொறுக்கி எடுத்து அவற்றில் ஒட்டியிருந்த மணல் போகும்படி ஊதினர். அதனைப்

பார்த்த குமரநாயகன், கிழவியே! சுட்டது போலும்! சுட்டது போலும்! என்று கேலி செய்தனர். ஔவையார் அப்போதுதான் சுடுபழம் இன்னதென்பதை அறியலானர். ஒரு சிறுவனல் வெட்கப்பட நேர்ந்ததே என்று துன்பமுற்றூர். அப்போது முருகர் தமது உண்மை உருவத்தைக் காட்டினர். இதனல் முருகனுக்குச் சகலகலாநாதன் என்னும் பெயர் உண்டாயது.

## பொய்யாமொழிப் புலவர்

பாண்டி மண்டல வழியிலே ஒரு பாலைவனத்தருகிலே பொய்யாமொழிப் புலவர் செல்லும் போது முருகவேள் ஒரு வேடனாய் நின்று பயமுறுத்தி "என் பெயர் முட்டை என வைத்து இப்பாலைவனத்தையுஞ் சுட்டி நற்றுயிரங்கலாக ஒரு வெண்பா பாடு" என்றனர். பின்னர் அது சுவையில்லை என்று முருகர் புலவர் பேரை வைத்துப் பாடினர்.

### பொய்யாமொழிப் புலவர் பாடியது.

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே. — மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு

### முருகவேள் பாடியது.

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச் — செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்

இச்சம்பவத்தைத் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் பின்வருமாறு கூறுவதைக் காண்க :—

பொய்யாமொழிப் புலவர் மதுரையிற் சங்கம்புரக்க
எழுநாள் மறவனைப்
புறவுறவளைத் தெனதுபெயர் முட்டை பாடெனப்
பொன்போலு மென்றுபாட
வெய்யான பாலைக்கிதேலாது நும்பெயர் விளம்பென
விளம்ப அவர்மேன்
விழுந்ததுளி யென்றெடுத்துப் பாடியவர் நாவில்
வேல்கொடு பொறித்தசதுரா!

"கையாறி ரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதைகொண்ட பொய்யாமொழி" என்று தொண்டைமண்டல சதகம் கூறும்.

### கந்த சுவாமியின் தத்துவார்த்த விளக்கம்

(ஆறுமுக நாவலர் எழுதிய சுப்பிரபோதத்திற் கண்டது)

முருகக் கடவுள் சரீரங்கொண்டு பிறந்தமையும் தெய்வயானை அம்மையை விவாகஞ் செய்தமையும் கன்னிகையாகிய வள்ளி அம்மை இடத்திற் சென்று அவளைத் தம்மோடு புணர்தற்குடன் படும்படி பிரார்த்தித்து, அவள் உடன்படாமை கண்டு, தமது தமையனாகிய விநாயகக் கடவுளை அழைக்க அவர் யானை வடிவங் கொண்டு வந்தமை கண்டு அஞ்சித் தம்மிடத்தே அடைக்கலம் புகுந்த அவளைப் புணர்ந்தமையும் கந்த புராணத்திற் கூறப்படுவன இழிக்கப்படுவனவன்றோ என்பதை ஆராய்வாம்.

நமது பரமபதியாகிய பரமசிவன் பிரதம மகாசிருஷ்டி ஆரம்பத்திலே அருளிச்செய்த முதல் நூல்கள் காமிகம் முதல் வாதுளம் இறுதியாகிய மூலாகமங்கள் 28-ஆம். அவைகளில் பதியாவார் ஆணவம் மாயை கர்மம் என்னும் மும்மலங்களும் அநாதியே இல்லாதவரென்றும் அவருடைய சரீரம் சத்தியா காரியமன்றி மாயாகாரிய சரீரமன்றென்றும், சத்தியாவது அக்கினியிற் சூடு போலச் சிவனுக்கு அபின்னமாகிய சாமர்த்திய மென்றும் விரித்துணர்த்தப்படும். சத்தி அருள் என்பன ஒரு பொருட் சொற்கள். அவ்வாகமப் பொருளைச் சுருக்கி உணர்த்தும் சிவஞானசித்தியாரிலும் இவ்வாறே "காயமோ மாயையன்று காண்பது சத்தி தன்னால்" என்றும் "ஆரணமாகமங்கள் அருளினு லுருவுகொண்டு, காரணனருளானுகிற் கதிப்பவரில்லையாகும்" என்றும் கூறப்படுதல் காண்க. இவைகளை ஆராயுங்கால் நமது பரமசிவன் பதி இலக்கணங்களிற் சிறிதும் குறைவில்லாதவ ரென்பது ஐயந் திரிபறத் தெள்ளிதில் துணியப்படும். கந்த சுவாமி அச்சிவனுக்கு வேறுகாரென்பதும் அந்நூல்களால் தெளியப்படும். மூலாகமங்களும் அவற்றின் வழி நூல் சார்பு நூல்களும் இவ்வாறே சொல்லுகையால், பரமசிவன் பார்வதியைப் புணர்ந்தாரென்றும், கந்தசுவாமி தெய்வயானை அம்மையை விவாகஞ் செய்து புணர்ந்தார் என்றும், வள்ளி நாயகியை

இச்சித்துக் கூடினரென்றும் கூறப்படுதலாலும் புராணங்களிற் சொல்லப்பட்டவை ஒன்றற்கொன்று மாறுதலைப் படுகின்றன அன்றோவெனில் அன்று. பொருள் செம்பொருள் குறிப்புப் பொருள் என இருவகைப்படுமென இலக்கண நூல்கள் விதித்தலானும் சிவ புராணங்கள் சில இடங்களிற் குறிப்பாகப் பொருள் கொள்ளக் கிடக்குமென்பது மாணிக்கவாசகர் முதலிய சிவாநுபூதிமான்கள் இயற்றிய பல சாத்திரங்களினாலும் குருசம்பிரதாயத்தினாலும் தெள்ளிதில் துணியப்படுதலானும் என்க.

அற்றாயின் சிவன் பார்வதி தேவியைப் புணர்ந்தார் பிரிந்தார் என்பனவற்றிற்கும் கந்தசாமி தெய்வயானை அம்மை, வள்ளி அம்மை என்னும் பெண்கள் இருவரைப் புணர்ந்தாரென்பதற்கும் பொருளென்னையெனிற் கூறுதும். ஆண் பெண் அலி என்னும் மூன்றுமல்லாத அநாதி மலமுத்த பதியாகிய சிவத்தையே சர்வான்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற் படுத்துப் பிதாவெனவும், சூரியனுக்குக் கிரணம் போல் அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியே நிமித்த காரணமாகிய அச்சிவம் அத்தொழில் இயற்றுதற்குத் துணைக்காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்து மாதா எனவும், அச்சிவம் அச்சத்தியோடு கூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலையே அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத் தொழிலாகையால், உகந்து புணர்தலெனவும், அச்சங்கற்பம் இல்லாமையையே பிரிதல் எனவும், சொல்லியதென்றறிக. கந்தபுராணத்தில் உத்தரப் படலம் "தேன் மலர்க் கமலத் தண்ணல் செய் தொழில் முற்று மாற்றால், ஆனதன்னருளை யாங்கோரா யிழையாக நல்கி" எனக் கூறுமாற்றானு முணர்க. இனி அக்கினி சத்தி ஒன்றாய வழியும், சுடப்படுவதும் விளக்கப் படுவதும் அடப்படுவதுமாகிய விஷயத்தில் சுடு விளக்கம் அடுதலாகிய தொழிலினால் பலவாதல் போல, கந்தசுவாமியினது சத்தி ஒன்றாய வழியும் கிருத்திய பேதத்தால் இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி என மூவகைப்படும். அவற்றுள் இச்சாசத்தியாவது ஆன்மாக்களை முத்தியில் அடைவிக்க விரும்புதல்; ஞானசத்தியாவது அவ்வான்மாக்களுடைய கர்மங்களையும் அக்கர்மங்களுக்கு ஈடாகிய தனு கரண புவன போகங்களை உபாதானத் திரயத்தினின்றும் தோற்றுவிக்கும் முறைமை

யையும் அறிதல்; கிரியா சத்தியாவது அவ்வான்மாக்களுக்குக் கர்ம சமத்துவம் பிறப்பிக்கும் பொருட்டுக் கர்மங்களைப் பக்குவா பக்குவமறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தல்.

கந்தசுவாமிக்கு இம்மூன்று சத்திகளுமே புராணங்களில் முறையே வள்ளியம்மை, வேலாயுதம், தெய்வயானையம்மை எனக் கூறப்பட்டன. சைவாகமங்களை ஓதி உணராதார் இவற்றின் உண்மைப் பொருளை உணராது மயங்குவார்கள்.

## முருகக் கடவுளின் நாமாவளி விளக்கம்

1 முருகன் — இளமை வாய்ந்தவன், தெய்வத்தன்மை யுடையவன்
2 கந்தன் — சேர்க்கப்பட்டவன்
3 வேள் — விரும்பப்படுபவன்
4 குகன் — காப்பவன்
5 சேய் — செந்நிறமுடையோன்
6 செட்டி — வைசியனைகப் பிறந்தவன்
7 சரவணபவன் — சரவணவாவியிற் பிறந்தவன்
8 கடம்பன் — கடப்ப மாலை தரித்தவன்
9 ஆசான் — குரு
10 விசாகன் — விசாக நாளிற் பிறந்தவன்
11 சேந்தன் — திருச்செந்தூரை யுடையவன்
12 சிலம்பன் — மலைமகளை உடையவன்
13 புலவன் — அறிவுடையோன்
14 சுப்பிரமணியன் — ஆதியாயும் அநாதியாயுமுள்ள பரம்பொருள்

## சுப்பிரமணிய அம்சமுடையவர்.

திருஞானசம்பந்தரும் உருத்திர சருமரும் அபர சுப்பிரமணியரெனப்படுவர். இவ்விருவரும் சுப்பிரமணிய பதவியை அடைந்த புண்ணிய ஆன்மாக்கள் என்பர்.

## முருகப் பிரானிடம் ஞானேபதேசம் பெற்றவர்

கௌசிகரும் அகத்தியரும் முருகக் கடவுளிடத்தில் ஞானோபதேசம் பெற்றனரென்று ஆன்றோர் கூறுப. பிரமாவுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தனர் என்று கந்த புராணங் கூறும்.

"வேதத்தை ஓதியுணர்ந்தும், மெய்ப்பொருள் துணிவு பெறு தவர்க்கும், வேதத்துக்கு அருகரல்லாதவர்க்கும் பயன்படும் பொருட்டு, முன்னரே சிவபெருமானால் நந்தி தேவருக்கும் நந்தி தேவரால் சனற் குமாரருக்குமாக உபதேசிக்கப்பட்டபுராணங்கள், அதி பரிபக்குவ தசையடைந்தவர் மாத்திரம் ஆகமப் பொருளை ஓதியுணர மற்றையோர்க்கு வேதாகமப் பொருள் குறிப்புப் பொருளாய் உண்மறைந்து சொலிக்கவும், செம்பொருள் பிறி தொன்றாய் வெளி நின்று ஒலிக்கவும், கதா ரூபமாக இயற்றப் பட்டனவாதலின், புராணங்களின் உண்மைப் பொருள்களை அறி யாதார் அவை வெறுங்கதையாமெனக்கொண்டு விபரீத அர்த்தம் செய்து நிந்தித்துத் தீ நரகுறுவராதலின் அவற்றின் பொருள்கள் குரு முகமாகவே அறிதற்பாலனவாம் என்பதை நம்மனோர் உண ரும் பொருட்டே சிவபெருமான் வேதவியாஸரை நோக்கி, "உனக்கு நான்கு வேதங்களும் ஒருவர் உணர்த்தாது நீ ஆராயும் போது அவை உனக்குத்தானே வரும், புராணங்களை மாத் திரம் சனற் குமாரனிடத்திலே கேட்டறிகுதி" என்று அருளிச் செய்தார். புராணங்கள் வேதாகமங்களை அருளிச்செய்த சுத்த சைதன்ய விமலமூர்த்தியாகிய பரமேசுவரன் வாயினின்றே பிறந் தன. ஆதலின் புராணத்திலுள்ள வேதாகம சாரங்கள் அவ் வேதாகம ஆராய்ச்சியுடைய சமயாசாரியர்களால் பரிபக்குவ காலத்துணர்த்தப்பட்டாலன்றி மற்றப்படி புலப்படாவாம். பாலருக்கும் ஞானேதயம் எய்தப்பெறாத மாந்தர்க்கும் அறிவிலாப் பெண்களுக்கும் புராணங்கள் அளிக்கப்பட்டன என்க. விக்ர கத்தின் வெளிரூபமும் அதில் ஆவாகிக்கப்பட்ட ஈசுவரனும் போலவே, புராணங்களின் செம்பொருளும் அவற்றுட் பொதிந்து மறைக்கப்பட்டிருக்கும் குறிப்புப் பொருளுமாம் என்க.

ஒவ்வொரு சாதியாரும் வெவ்வேறு சாத்திர சம்பிரதாயங் களையும் கொள்கைகளையுமுடையார்; ஆகவே அவ்வவர் சாத்திர சம்பிரதாயங்களையும் கொள்கைகளையும் அறியுமுன், அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் பாஷை எப்படிப்பட்டது? அவர் கள் பேசுவது எப்படி? ஒன்றை விளக்குவது எப்படி? என்பன

முதலியவற்றை முந்தி ஆராய்தல் வேண்டும். பரதகண்டவாசி களோ தாம் பேசுவது நினைப்பது விளக்குவது எல்லாம் பெரும் பாலும் உபமான ரூப வருணனை கொண்டேயாம். ஏனெனில் இவை அவர்கள் இலக்கியங்கட்குச் சிறந்த இலக்கணங்களாகக் கொண்டு வழங்கப்படும். ஆதலின் ஆரிய திராவிட கிரந்தங்கள் அணியினுற் பெரிதும் புனையப்பட்டு விளங்கும் என்க. இங்ஙன மாயின் வாக்கிய வடிவங்களாயுள்ள வேதாகமப்பொருளை அநுபவ வடிவில் தந்தால்தான் சமானிய சனங்களாயுள்ளவர் அறிவார் என்றும் அவசியங்கண்ட நமது மூதாதையர், பதிகுருத்யாதி களை அணிகொண்டே விளக்கவேண்டிய அவசியம்கண்ட இடத்து அப்பொருள்களை, வெருளி, வீரம், பயம், சிருங்காரம், இழிவு, புகழ், கருணை, வியப்பு, நகை என்னும் காவியச் சுவை களைப் பொதிந்து அணிகொண்டு அலங்கரித்துப் புராண வடிவில் எமக்குத் தந்தருளினர்.

காணப்படாத பொருளுக்கு உவமை கூறுவோர் காணப் பட்ட பொருளைக்கொண்டு கூறியே அதனை விளக்குவர். ஒரு தலைவி தன் தலைவன் மீது வைக்கும் அன்புக்கு மேற்பட்ட அன்பு பிறிதில்லை என்பது யாவரும் ஒப்பும் முடிபு. அதுபோலவே பெரியோர்கள் எல்லாம் கடவுள் தாம் செலுத்தும் அன்பை ஆன்மாவாகிய தம்மைத் தலைவியராகவும், கடவுளைத் தலைவராக வும் கொண்டு கூறித் துதிப்பர்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தியவ னிருக்கும் வண்ணம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனுள், அன்னையை யும் அத்தனையும் அன்றே நீத்தாள், அகன்றுள், அகலிடத்தார் ஆசாரத்தை, தன்னை மறந்தாள் தன்னுமம் கெட்டாள் தலைப்பட் டாள் நங்கை தலைவன்தாளே" என்று அப்பர் சுவாமிகள், தமது தெய்வக் காதலை நம்மனோர்க்கு எடுத்துக் காட்டுகிறூர்.

மஹா வேதாகம மந்தர மூர்த்தியாகச் சகளீகரித்துள்ள திருவாரூர்த் தியாகேச மூர்த்தி குகன் கந்த மயமான பிரணவப் பொருளுடனும், பாகம் பிரியாளான பராசக்தியுடனும் சோமா

ஸ்கந்த மூர்த்தியாகத் தேவலோகத்திலிருந்து பூலோகத்தின் ஹிருதய தாமரையான கமலாலய க்ஷேத்திரத்தில் பிரதம மகா சிருஷ்டியாரம்பிக்கும் முன்னே வந்திறங்கிப் பக்தர்களுக்கு மாட்சியளிக்கின்ற பங்குனி உத்தரத்தன்று சுப்ரமணிய மகத்துவமும் விளங்கும்படி தமது உருவா அருவத் திருமேனியில் உள்ளடங்கிய ஸ்கந்தப் பெருமானையும் தமது ஆடரவக் கிண்கிணிக் காலையும் சத்திநிபாதத்தையும் மந்தஹாசத்தையும் ஒருங்கே காட்டும் அற்புதம் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. "ஆதலின், நமது சத்தி அறுமுகவனும் யாமும் பேதகமல்லம்" என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய அருமையைப் புராணமும் எடுத்துரைக்கின்றது. கந்தபுராணச் செய்யுட்களிலுள்ள ஒவ்வொரு புகழும் சிறப்பும் வேறு எந்தப் புராணத்திலும் இல்லை என்று சொல்வது மிகவும் பொருத்தமேயாம்.

கலி தோஷத்தினாலே சிவ நிந்தனை குருநிந்தனையுடன் புராண நிந்தனையும் சிற்சில இடங்களில் வியாபிக்கும் இக்காலத்திலும் புராணங்களிலுள்ள தத்துவார்த்தத்தையே துருவியாராய்ந்து தெளியவேண்டும் என்னும் இச்சையும் அறிந்தோர் மாட்டுப் பெருகியும் வருகிறது போற்றற்குரியது.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புர மெரித்தனன் என்பர் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெரித்தவை யாரறிவரோ"

என்று திருமந்திரம் அறுதியிடுவதுபோல, ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் எழுதிய "சுப்பிரமணியம்" என்ற வியாஸத்தில் கந்தபுராணம் அண்டத்தில் நடந்த கதையைச் சொல்லுவதோடு பிண்டத்தில் என்றும் சுருக்கமாக நடக்கும் கதையையும் விளக்குவதென்று கூறியுள்ளார்கள். பக்தர்களுக்கு நல் விருந்து இது. 1899ம் ஆண்டு' பதிப்பாகியுள்ள சுப்ரமணிய பிரபாவம் என்னும் நூலிலும் சைவாகம ரீதியில் தத்துவங்கள் விமரிசிக்கப்பட்டிருக்கின்றன.

அன்பு கனிந்த அருள் உள்ளம் பெற்றவரும் மெய்யுணர்வு படைத்த மேலோரும் தந்திரங்களின் உண்மைப் பொருள்களை உள்ளவாறு எடுத்து உரைக்கும் வளம் பெற்றவருமாகிய

**பிரம்ம ஸ்ரீ N. சுப்பிரமணிய அய்யரவர்கள்** (சென்னை குஹானந்த மண்டலியின் தலைவர்) தாம் இயற்றிய **சுப்ரமண்ய தத்வம்** என்னும் நூலில் ஸ்ரீ ஸ்காந்த புராணம் சங்கர சம்ஹிதையை எடுத்துக் கொண்டு, இச்சங்கிதையின் முதல் ஐந்து காண்டங்களிலுமுள்ள முக்கியமான ஒவ்வொரு கதா பாத்திரத்தையும் நன்கு விமர்சித்து தத்வார்த்தம் நிரூபித்து விரிவாக எழுதியிருக்கிறார்கள். தத்வார்த் தங்களுக்குச் சான்றாக திருப்புகழ், கந்தரலங்காரம், திருவகுப்பு முதலியவற்றையும் வடமொழி சங்கர சங்கிதையையும் எடுத் தாளுகிறார்கள். முருகன் தமிழ்நாட்டின் தனிப்பெருங் கடவுள். திருப்புகழ் இந்நாளில் எங்கும் பரவி வருகின்றது. கலி தோஷத் திற்கு மருந்து உண்மை தெய்வ பக்திதானே. அறுமுகக் கடவுளின் அவதாரம் மகிமை முதலிய கதைகளின் உண்மைப் பொருளை அறிய இது பேருபகாரமாக இருக்கிறது"

முருகா சரணம்

---

## சில திருப்புகழ் மணிகள்

திருத ரார்க்கொரு காலா ஜே ஜெய
சுரர்கள் ஏத்திடு வேலா ஜே ஜெய
நிமலனார்க் கொரு பாலா ஜே ஜெய—விறலான

நெடிய வேற்படை யானே ஜே ஜெய
எனஇராப் பகல் தானே நான்மிக
நினது தாள்தொழு மாறேதானினி—உடனேதான்

தரையினூழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கடலூடே நானுறு
சவலைதீர்த் துனதாளே சூடியுன்—அடியார் வாழ்

சபையினேற்றி யின் ஞான போதமும்
அருளி ஆட்கொளு மாறே தானது
தமியனேற்கு முனே நீ மேவுவ—தொருநாளே

தருவினூட் டரசாள்வான் வேணுவின்
உருவமாய்ப் பல நாளே தானுறு
தவசினாற் சிவனீபோய் வானவர்—சிறை தீரச்

சகல லோக்கிய மேதாள ளூறும்
அசுர பார்த்திவ ஞேடே சேயவர்
தமரை வேற்கொடு நீருயேபட—விழுமோதென் று
அருள ஏற்றம ரோடே போயவர்
உறையு மாக்கிரி யோடே தானையும்
அழிய வீழ்த்தெதிர் சூரோடே யமர்—அடலாகி
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட் டரனர் பால்மேவிய
அதி பராக்கிரம வீரா வானவர்—பெருமாளே.

2 சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி, பவவினையி லேசனித்த
தமியன் மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழு மணமார் கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகு திரு வேரகத்தின் முருகோனே

3 குமர குருபர முருக சரவண
குக சண்முக கரி பிறகான
குழக சிவசுத சிவயநமவென
குரவனருள் குரு மணியே யென்று
அமுத இமையவர் திமிர்த மிடுகடல்
அதென அநுதினம் உனையோதும்

அமலை அடியவர் கொடிய வினைகொடும்
அபய மிடுகுரல் அறியாயோ

திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரார்

சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர் பொரு மயில்வீரா

நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா

நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே

4 பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா !

பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா !

காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே !

கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே !

ஆதி யயனொடு தேவர் சுரர்உல
காளும் வகையுறு சிறைமீளா !

ஆடு மயிலினி லேறி அமரர்கள்
சூழ வரவரும் இளையோனே !

சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே !

சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே !

5 ஆறுமுகம ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்று நாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணை எனது
ஈசஎன மானமுன தென்று மோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னவிலுனை
யேவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீல மயில் வாக ! உமை தந்தவேளே !
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல் வேலா
சீறிவரு மாறவுண னவியுணு மானைமுக
தேவர் துணைவா ! சிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தா ! முருக ! தம்பிரானே!

6 இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே
தத்துவ மெய்ஞ் ஞானக் குருநாதா
சுத்தசொ ரூபா ! புத் தமுதோனே
நித்தியக்ருதா நற் பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே

இறவாமற் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே

குறமாதைப் புணர்வோனே
குகனே! சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமானே

8 கண்ணுலுனது திருவடியைக்
கண்டாதரவு பெருகியிரு
கையாற்றொழுதுன் திருக்கோயில்
காலால்வலஞ்செய் துனதுபுகழ்
பண்ணுலுருகிப் புகழ்ந்துகண்ணீர்
பாயாவெனையுந் தாயாகப்
பரிந்துவளர்க்கும் பெருங்கருணை
படைத்துவிரிஞ்சைப் பதிவாழும்
அண்ணல்வருக உலகமுழு
தாண்டாய்வருக கதிதருமெம்
ஐயாவருக ஆறுமுக
வப்பாவருக விளங்குகதிர்
வண்ணவருக மயிலேறு
மன்னவருக அடியார்கள்
வாழ்வேவருக தெய்வசிகா
மணியேவருக வருகவே

9 வேதன்முடியிற் படுங்கமலம்
விண்ணோர்சிரத்தி லணிபதுமம்
விசயமயின்மே லெழுமுளரி
விமலர்புயஞ்சேர் திருக்கஞ்சம்
சாதமொழிக்கு மம்புயமெந்
தலைமேலிருக்கும் புதுநளினம்
தண்டைசதங்கை கிண்கிணிசேர்
சலசம்புவியிற் படலாமோ

காதம்புதிய மணங்கமழுங்
கடம்பாமுருகா கதிர்வேலா
கந்தாகுமரா பெருங்கருணைக்
கண்ணாவண்ணா கதியருளே
யாதண்களப மணிமார்பா
அடியேஞ்சிற்றி லழியேலே
அரசேவிரிஞ்சைப் பதிவாழ்வே
அடியேஞ்சிற்றி லழியேலே

10 அகநெகிழ்ந்துருகியிரு விழிச்சலம்பொழியவுன
திருதாள் துதிக்க அறியேன்
அனுதினங்கலைமறைகள் நெறிநடந்திடல்வழுவி
யதி பாதகத்தைநினைவேன்
இகபரந்தனையறியுமறி வறிந்திடுமுனிவ
ரிட நாடியுற்றுமருவேன்
எனையுமன்பினர்களுட னடிமைகொண்டருளியெழு
பவவேரொழிக் குமரேச
மகரகுண்டலமசைய முலைசுமந்திடையசைய
மலைபோலிருக்குமுலைமேல்
மணிவடங்களுமசைய களபகுங்கும விரக
மடவார்நிருத்தமிடவாழ்
சிகரமண்டபமருவு திருவிரிஞ்சையின் முருக
சிறுதேருருட்டியருளே
சிவ சிதம்பரநடன மிடுதிகம் பரர்குமர
சிறுதேருருட்டியருளே.

## கந்தர் கலிவெண்பா

.......................................உள்ள முவந்து

1. ஆறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்கு

2. அந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்

3. பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

4. பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையும்—தீதகலா

5. வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை எதிர்த்தாலும்—அவ்விடத்திற்

6. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்ச மகற்று மயில்வேலும்—கச்சைத்

7. திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீராறு
அருள்விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணம்

8. சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண்

9. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்து
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

10. ஆசுமுதல் நாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

11. எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து—ஒழுக்கமுடன்

12. இம்மைப் பிறம்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்

13. தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

14. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்.

## கல்லாடம்

பாய்திரை யுடுத்த ஞாலமுடி வென்ன
முடங்குளை முகத்துப் பஃறோ ளவுணனொடு
மிடையுடு உதிரச் செங்களம் பொருது
ஞாட்பினுள் மறைந்து நடுவறு வரத்தால்
வடவைநெடு நாக்கின் கிளைகள் விரிந்தென்னச்
செந்துகிர் படருந் திரைக்கடற் புக்குக்
கிடந்தெரி வடவையிற் றளிர்முக மீன்று
திரையெறி மலைகளிற் கவடுபல போக்கிக்
கற்செறி பாசியிற் சினைக்குழை பொதுளி
அகல் திரைப் பரப்பிற் சடையலைந் தலையாது
கீழிணர் நின்ற மேற்பகை மாவின்
ஓருட லிரண்டு கூறுபட விடுத்த
அழியாப் பேரளி உமைக்க ணின்று
தற்பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்த
அமையா வென்றி யாத்தநெடு வேலோய்!
கீழ்மே னின்றவக் கொடுந்தொழிற் கொக்கின்
கூறிரண் டாய ஒருபங் கெழுந்து
மாயாப் பெருவரத் தொருமயி லாகிப்
புடவிவைத் தாற்றிய பஃறலைப் பாந்தண்
மண்சிறுக விரித்த மணிப்படந் தூக்கி
விழுங்கிய பல்கதிர் வாய்தொறு முமிழ்ந்தென
மணிநிரை சிந்தி மண்புக அலைப்பக்
கார்விரிந் தோங்கிய மலைத்தலைக் கதிரென
ஓவறப் போகிய சிறைவிரி முதுகிற்
புவனங் காணப் புகழொடு பொலிந்தோய்!

போழ்படக் கிடந்த ஒரு பங்கெழுந்து
மின்னல் மாண்ட கவிரலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை யாகித்
தேவர்மெய் பனிப்புற வான்மிடை யுடுத்திரள்
பொரியிற் கொறிப்பப் புரிந்தபொருள் நாடித்
தாமரை பழித்த கைமருங் கமைத்தோய்
ஒருமையு ளொருங்கி இருகைநெய் வார்த்து
நாரத னோம்பிய செந்தீக் கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்!
முலையென இரண்டு முரட்குவடு மரீஇக்
குழற்காடு சுமந்த யானைமகட் புணர்ந்தோய்!
செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலையோய்!
இமையம் பூத்த சுனைமாண் தொட்டில்
அறிவிற் றங்கி அறுதாய் முலையுண்டு
உழன்மதில் சுட்ட தழல்நகைப் பெருமான்
வணங்கி நின்றேத்தக் குருமொழி வைத்தோய்!
ஓமெனு மெழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்குசிறை வைத்துப்
படைப்புமுதல் மாய வான்முதற் கூடித்
தாதையு மிரப்பத் தளையது விடுத்தோய்!
கூடஞ் சுமந்த நெடுமுடி நேரி
விண்டடை யாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்!
ஆறுதிரு வெழுத்துங் கூறுநிலை கண்டு
நின்தாட் புகழுநர் கண்ணுட் பொலிந்தோய் !
மணிக் காலறிஞர் பெருங்குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறியநீயே யாதலின்
வெட்சிமலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்
குழந்தை யன்பினொடு சென்னிதலைக் கொள்ளுதும்
அறிவுநிலை கூடாச் சின்மொழி கொண்டு

கடவுட் கூறு வுலவா வருத்தியுஞ்
சனனப் பிழையுந் தள்ளாக் காமமுந்
தற்படு துயரமு மடைவுகெட் டிறத்தலுந்
தென்புலக் கோமகன் தீத்தெறு தண்டமும்
நரகொடு துறக்கத் துழல்வரு பிழையும்
நீளா திம்பரின் முடித்து
மீளாக் காட்சி தருதியின் றெனவே.

[ இவ்வாசிரியப் பாவில் முருகனுக்குள்ள வேலாயுதன், தெய்வயானை காந்தன், வள்ளி மணாளன், சூர சங்காரன், மயில் வாகனன், கோழிக் கொடியோன், தகரேறி, சரவணபவன், சாமிநாதன், புலவன் முதலிய பெயர்களின் விளக்கத்தைக் காணலாம். ]

(முருக மஞ்சரி முற்றிற்று)

வேலு மயிலுந் துணை.



ஆறு முகம்வாழி ஆறிரண்டு தோள்வாழி
தேறுபதம் வாழிஇரு தேவிமார்—வீறுபுடை
வாழிவேல் வாழி மயில்வாழி போரூரர்
வாழிசகம் வாழி மகிழ்ந்து.

T. 2273

இந்நூல் விலைக்குக் கிடைக்கும் இடம்:

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
26, காரணேசுரர் கோயில் தெரு
மயிலாப்பூர், சென்னை

NATIONAL ART PRESS MADRAS-18

T. 2274

உ

Acc. 12723





# திருவாமாத்தூர்க்

# கலம்பகம்

ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே
(சம்பந்தர்)

T. 2274

உ

சிவமயம்

# திருவாமாத்தூர்க் கலம்பகம்

இரட்டைப்புலவர்கள் அருளிச்செய்தது

இது

யாழ்ப்பாணத்து நவாலியூர்

க. வேலுப்பிள்ளை அவர்கள்

எழுதுவித்த அரும்பதவுரையுடன்

திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையால்

பதிப்பிக்கப்பட்டது.

விக்ருதி மாசி

அன்பளிப்பு

# பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| முகவுரை | ... | vi |
| திருவாமாத்தூர்க் கலம்பகம் | ... | 1 |
| அரும்பதவுரை | ... | 33 |
| பாட்டு முதற் குறிப்பு | | |



Greeu & Co., Printers, Triplicane, Madras-5.
(1-4-51— 500 Copies)

T. 2274

# பதிப்புரை.

கலம்பகம் 96 தமிழ்ப்பிரபந்தவகைகளுள் ஒன்று. கலம்பகம் பாடுவதிற் பிரசித்திபெற்றவர் இரட்டையர் என்பது "கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" என்னும் பழம் பாடலால் அறியலாம். இரட்டைப் புலவர்கள் பாடிய நூல்கள்:— 1. தில்லைக்கலம்பகம் 2. திருவாமாத்தூர்க் கலம்பகம் 3. ஏகாம்பர நாதருலா என்பவைகளே. இம்மூன்று நூல்களும் பல ஆண்டுகளுக்கு முன் தனித் தனியே அச்சிடப்பட்டன. இப்போது ஒன்றையேனும் காண்பதரிது. இவை இறந்துபடாவண்ணம் காக்கவேண்டியது தமிழ்ச்செல்வர்களின் கடமையன்றோ? இவற்றுள் ஆமாத்தூர்க் கலம்பகத்தின் முதற் பதிப்பு 1883-ம் ஆண்டில் மகாவித்துவான் சபாபதி நாவலரின் மருகரும் மாணவருமாகிய சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதரால் நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

என்னுந் திருக்குறளுக்கு உதாரணமாகவுள்ள நண்பர், **கண்டி க. வேலுப் பிள்ளையவர்கள்** எம்மிடத்திற் கொண்டுள்ள நட்பிற்கு அறிகுறியாக இச்சிறு நூலை அச்சிட ஏற்றுக்கொண்டு வேண்டிய பொருளைச்சேகரித்து உபகரித்ததுமன்றித் தமது தமையனாராகிய செந்தமிழ்ப் பாவலர் நவாலியூர் **க. சோமசுந்தரப் புலவர்** மூலமாக ஓர் குறிப்புரையையும் இயற்றுவித்தார். அவர்களுடைய சைவப் பற்றும் தமிழ்அன்பும் போற்றத்தக்கன.

இந்நூல் மூவர் தேவாரமும் பெற்ற நடுநாட்டுத் தலமாகிய ஆமாத்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முத்தாம்பிகை சமேத அபிராமேசுரர் மேலது. ஆமாத்தூர் விழுப்புரத்திலிருந்து 4 மைல் தூரத்திலுள்ளது இவ்வூரில் "பிரபோத சந்திரோதயம்" என்னும்வேதாந்த நூலின்ஆசிரியராகிய **திருவேங்கடநாதர்**என்பவர் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தார். அவர் வைணவ வேதியர். பணவிடுதூதுஎன்னும்பிரபந்தத்திற்குத்தலைவர். இலக்கண விளக்கம் என்னும் நூலைத்திருவாரூர் **வைத்தியநாத தேசிகர்** மூலமாகச் செய்வித்தவர்.

புலவர் புராண ஆசிரியராகிய தண்டபாணி சுவாமிகள் இத்திருப்பதியிலேயே தமது பிற்காலத்தைக் கழித்துச் சமாதியடைந்தார். இவ்வூர் பசுக்களுக்குத்தாயகமானது. இராமரால் பூசிக்கப்பட்டது. இத்தலத்தைப்பற்றிய வேறு நூல்கள் தண்டபாணி சுவாமிகளது பலபாக்களும், திருப்பாதிரிப் புலியூர் அசலாம்பிகைஅம்மையார் பாடிய திரிபு அந்தாதியுமாம். இவ்வந்தாதி உரையுடன் 1897-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

## இதனை அச்சிடுவதற்குப் பொருளுதவிய நண்பர்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மடக்கம்பறை திருவாளர்:- | | தி. இராமஜெயம் | ரூ. | 50 | 00 |
| கினிக்கத்தன | ,, | S. வேலுப்பிள்ளை | ,, | 25 | 00 |
| கண்டி | ,, | சு. செல்வநாயகம் | ,, | 25 | 00 |
| கண்டி | ,, | C. இராஜேந்திரம் | ,, | 25 | 00 |
| கலகா | ,, | A S. ஐயாச்சாமி | ,, | 10 | 00 |
| கண்டி | ,, | க. வேலுப்பிள்ளை | ,, | 25 | 00 |
| | | | ரூ. | 160 | 00 |

இந்தப் புண்ணிய சீலர்களுக்கு ஆமாத்தூரழகிய நாதன் திருவருள் நிறைவதோடு இவர்கள் மேலும் தமிழ்த் தொண்டைப் பேணும் ஆர்வம் பெருகி ஒல்லும் வகையால் நல்லறம் செய்து சிவநெறிபடர அரோக திடகாத்திர தேகத்தையும் நல்லாயுளையும் நிறைசெல்வத்தையும் அப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

துன்னம்பெய் கோவணமுந் தோலு முடையாடை
பின்னஞ் சடை மேலோர் பிள்ளை மதிசூடி
அன்னஞ்சேர் தண்கானலா மாத்தூ ரம்மான்றன்
பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே

சம்பந்தர்

பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகும முதினை யாமாத்தூர்
சண்ணிப்பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவை யன்னனவன் காண்மினே.

அப்பர்.

காண்டனன் காண்டனன் காரிகை யாடன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூரெம் மடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் [கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே.

சுந்தரர்

சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர் எழுதிய தமிழ்ப்புலவர் சரித்திரத்திற் கண்டபடி இரட்டைப்புலவரின் சரித்திரச் சுருக்கத்தைக் கீழே குறிப்பிடுவாம்:—

"இவரூர் சோழ மண்டலத்திலுள்ள ஆமிலந்துறை என்பர். குலம் செங்குந்தர்குலம். சமயம் சைவம். காலம் வரபதியாட்கொண்டார் என்னுஞ்சேரர்பதி காலம். இவர் இருவர். ஒருவர் முடவர், மற்றவர் குருடர். முடவர் குருடர் முதுகிலிருந்து வழிகாட்டுவர். குருடர் முடவரைச் சுமந்துதிரிவர். இருவரும் ஒருவர்போன்று தோன்றுதலால் இரட்டையர் எனப்பட்டார். இளஞ்சூரியர் முதுசூரியர் எனவும் படுவர். தெய்வத்திருவருளு முடையவர். கவி வகையெல்லாம்கசடறப்பாடுவர். "பண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்" என்னும் பாடற்புகழும் பெற்றவர். வரபதியாட் கொண்டார் என்னும் சேரர் பதியைப் பாடி அவர்மதிப்பும் அடைந்தவர். சிவஸ்தலயாத்திரையிற் சென்று அங்கங்கே வீற்றிருக்கும் கடவுளர் மீதும் பிரபுக்கள் மீதும் கவிகளைப்பாடி பரிசிற் பெற்றவர். முன்னீரடிகளையும் ஒருவர் பாடப் பின்னீரடிகளையும் மற்றவர் பாடி முடிப்பர்."

| | |
|---|---|
| மைலாப்பூர்<br>விக்ருதி<br>மகாசிவராத்திரி | சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை. |



ஓம் சிவமுருகா

# முன்னுரை

—O—

**ஆமாத்தூ ரப்ப னருட்கலம்ப கம்பதிக்க**
**ஓமான மூல முதவி.**

திருவாமாத்தூர்க் கலம்பகம் நடுநாட்டிலே திருவாமாத்தூரிலே யுள்ள திருத்தளியிற் கோயில் கொண்டருளியிருக்கும் அழகிய நாதனாம் பெருமான் மீது பாடப்பெற்ற ஓர் பிரபந்தமாகும்.

"கலம்பகம்" என்பது

"ஒருபோகுவெண்பாவுடன் கலித்துறையிவை
நிரையே முதற்கணின்றுபிற் கலந்தவைம்
பாத்துறை விருத்த மந்தாதிவருமே"

என்றபடிஒருபோகு,அம்மானை, தூது,வண்டு, தழை, ஊசல் முதலிய பதினெட்டுவகை உறுப்புகள் விரவிவர, ஆசிரியப்பா, விருத்தம், கலிப்பாமுதலிய பாக்களால் கடவுளர் பேரிலும், முனிவர், அரசன் மந்திரிமார், வணிகர், வேளாளர் பேரிலுமாகப் பாடப் படுவதோர் பிரபந்தமாகும்.

தமிழ்மொழியிற் றொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உளவென்பர். இந்நூல் சிவபெருமான் மீது பாடப்பெற்றது. நூறு பாடல்களை யுடையது. இந்நூலை ஆக்கிய புலவர்பெருமக்கள் "இரட்டையர்"எனவும்"முதுசூரியர்" "இளஞ்சூரியர்" எனவுமழைக்கப்படுவர். இவர்கள் கவிபாடும் வன்மை மிக்குடையவர்கள். சிறப்பாகக் கலம்பகம் பாடுவதில் ஒப்பாரும் மிக்காருமில்லாதவர்கள் என்பதனைப் "பண்பாய கலம்பகத்திற்கிரட்டையர்" என்ற பழம் பாடல் எடுத்துக்காட்டும்

இந்நூல்சொன்னயம்பொருணயம்மடக்கு சிலேடை முதலியன கொண்டு ஊன்றிப்படிப்போருக்கின்பந் தருவதொன்றாயிருக்கின்றது. இதனை இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன் அச்சிற்பதிப்பித்தவரும் ஒரு யாழ்ப்பாணத் தமிழன்பர் என்பதனை யறிந்து மகிழ்ந்தேன். இப் பழைய பிரதிகள் இன்று கிடைக்கப்பெறா தருகிவிட்டன. அருமையாகப்பெற்ற ஓர் சிதலரித்த பிரதியைத் தமிழ்த்தொண்டே சிவ தொண்டாகக் கருதிச் சலியாத ஊக்கத்தோடு பல தமிழ் நூல்களை வெளிப்படுத்தியும், காலந்தோறும் அரிய சமயக்கட்டுரைகளைத் தமிழ் வெளியீடுகளில் எழுதியும் வருபவரும், எனதருமை நண்பருமான

மைலாப்பூர் திரு. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள் எனக்குத் தந்துதவினார்கள். இதனை அழியவிடாது மீட்டும் அச்சேற்றிப் பாதுகாப்பதேபெருந்தொண்டென இருவரும் எண்ணினோம். இந்நூலிலே சிற்சிலவிடங்களுக்கு அரும்பதவுரையொன்றிருப்பின்சிறப்பாயிருக்குமென நினைந்து,மூத்துத்தளர்ந்து நோயால் வருந்தும் என்னரும் பெறற்றுணைவரும், அடியேனுக்கு ஆங்கிலம் தமிழ் என்னுமிருமொழிகளையும் போதித்த நல்லாசிரியருமாகிய நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களை வேண்டினேன். அன்னையின் தொண்டெனிற்றன்னையும் மறந்து அவள் தொண்டாற்றுமித் தமிழறிசெல்வன் நோயுற்றுப் பாயிற்கிடந்தவாறே தமது கையாலே சில குறிப்புகளை எழுதித்தந்தார்கள். இவ்வாறே நூலும் அரும்பதவுரையுமாக இன்று இக்கலம்பகத்தை வெளிப்படுத்தும் பேறுடையேமாயினேம். இத்தொண்டிற்குப் பொருள்முட்டு தடையாயிராதவாறு செந்தமிழ்ச் செல்வர் பொருளுதவினார்கள். அவர்கள் பெயர்களைப் பதிப்புரையிற் காணலாம்.

இந்த நூலின் பெருமையை எனக்கு எடுத்துக்காட்டி இதனை மீட்டும் அச்சிற் பதிப்பிக்கவுக்கிய நண்பர்திரு. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்களுக்கும், உடல் நலமின்றிய காலத்தும் உளவலிக்குன்றாது அரும்பதவுரையெழுதித் தந்து அன்னையின் திருப்பணிக் கருகணுக்கிய என் எழுமையுந்தொடரு முழுவலன்புடைய துணைவருக்கும் பொருள் உதவிய புண்ணியச்செல்வர்களுக்கும், நூலை ஒப்புநோக்குங் காலத்தெழுந்த காலத்தாழ்வையும் பொருட்படுத்தாது அன்புடன் அழகாக அச்சிட்டுதவிய திரு. கனகராய முதலியார் அவர்களுக்கும் இலங்கையிலிருந்துபாரத நாட்டிற்குப்பணம் அனுப்புங்கட்டுப்பாட்டு முட்டைத் தீர்த்துக்கேட்டவுடன் உத்தரவு தந்துதவிய பணக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் நான் என் அன்பார்ந்தநன்றியைச்செலுத்துங் கடப்பாடுடையேன். இப்புண்ணியச்செல்வர்கள் ஆமாத்தூரழகிய நாதன் திருவருள் பெற்று நீடூழிவாழ்க வெனஅப்பெருமான் பொன்னடிகளைக் கும்பிடுகின்றேன்.

ஒருவ ரொருவற் கிருகண்ணுப் மற்ற
ஒருவ ரொருவற் கிருகாலா யுள்ளார்
மருவியுரைத்த கலம்பகத்துக் குற்ற
ஒருவாக் குறிப்போடளித்தேன் கதிரைக் •

குருவின் பெயரேன் குறித்து.

"திருநிலையம்"
உடுவில் கிழக்கு.
சுன்னாகம்
21-2-51

தமிழன்பர் அடிமை

க. வேலுப்பிள்ளை

உ

கணபதி துணை.

# திருவாமாத்தூர்க் கலம்பகம்.

## காப்பு.

### விருத்தம்

குஞ்சமென் றமரர் கெஞ்சத் தானவ ரதனின் விஞ்ச
வஞ்சவே வருநஞ் சுண்ட வழகரா மாதை யார்க்கு
மஞ்சுசேர் பொழில்சூழ் பம்பை மாறுய ரந்தீர்த் தானைக்
கஞ்சநாண் மலர்சொண் டேத்திக் கலம்பகஞ் செய்வோம்
[யாமே.

---

## நூல்

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

### தரவு. (3)

பூமேவு சதுர்முகத்துப் பொலிமறையோன் சடங்கியற்ற
மாமேவு பசுந்துளவ மாயனுத கம்பொழிய
வீராறு விளக்கெறிப்ப விமையவர்பல் லாண்டிசைப்பப்
பாரேழு பாலிகையுட் பல்லுயிரு மங்குரிப்பக்
குலகிரிகாற் பகிரண்ட கூட நெடுங் காவணத்தே
யுலகனைத்து மீன்றாளை யுயர்மணஞ்செய் தருளினையே

### தாழிசை (6)

அப்போது மணக்கோலத் தபிராமங் கண்டன்றோ
இப்போதும் வானவர்கண் ணிமையாம லிருந்தனரே
பைப்போது புயங்கேசர் பாதாளம் போயுமுய
ரப்போயு மீண்டிருவர் காணு தறிந்திலரே

குறையறுத்த செங்காட்டங் குடியம்மை சட்டுவத்தே
முறையமைத்த கருங்கலத்தே முடித்தொண்டர் பெருங்
[கலத்தே
பறையறுத்த பரிகலத்தே பகிர்ந்தகறி யமுதினைமீண்
டிறையழைக்கச் சொன்னபோ தியமபுர மென்படுமே
மோகமுறு மாயிரமா முககங்கை யொருபாதி
பாகமுறுஞ் செந்துவர்வாய்ப் பசுங்கிள்ளை யொருபாதி
சாகைமறை யொருபாதி தண்டுளவோ னொருபாதி
யாகவகை போயன்றே வருவுருவ மாயினையே.

அராகம் (3)

மிடறரு மொழிசின விடையொரு விடையினை
கடலிடர் படவொரு கணைவிடு கணையினை
மலரயன் வினவுறு மறைதரு மறையினை
அலைபடி அலவுயிர் பறைதரு பறையினை
யொருவரு மிருவர்முன் னொளிசெயு மொளியினை
தருமறை பதமொடு சடையடர் சடையினை

அம்போதரங்கம் (6)

ஆனிழல் வடுப்படினு மாகாயம் வடுப்படுமோ
மாநீழ லிருந்தன்றே வடுப்பட்ட துன்மேனி
இராமனூர் காரணமோ வெரிபொன்மலை வளைத்திளைத்தோ
பராபரமாய் வீற்றிருந்தாய் பம்பைநதிக் கரைதனிலே
ஐவர்க்கும் விஞ்ஞதமுமா யறிவுமறி யாமையுமாய்
வைகைக்கு மண்சுமந்தால் வான்கங்கை யென்செயுமே
அணிப்புலவர் பெருமிதமோ வல்லதுநின் றமிழறிவோ
மணிப்பலகைக் கீழ்நின்றாய் மறைகிடந்து முறையிடவே
அச்சமற்ற விடமன்றே வமுதாய்ப்பின் னமாருக்குண்
ணெச்சிலிட்ட தல்லவோ வேடனெச்சில் விரும்பியதே

செம்பூத மாகியுனைச் சேவிப்ப தருமறையே
யைம்பூதத் திருமேனி யாரோவுன் னளவறிவார்.

### முச்சீர் ஓரடி அம்போதரங்கம் (4)

தேமாத்தூர் பொருந்தினை
தீயாத்தூர் முனிந்தனை
யானுத்தூ ரடங்கினை
யாமாத்தூ ரமர்ந்தனை.

### இருசீர் ஓரடி யம்போதரங்கம். (8)

உலகுயிர்த்தனை
யுலகளித்தனை
யுலகெடுத்தனை
மலைவளைத்தனை
கடல்கொளுத்தினை
மழுவலத்தினை
மானெடுத்தனை
மானிடத்தினை.

எனவாங்கு (தனிச்சொல்.)

### சுரிதகம்

ஆமாத் தையினுறை யழகிய நாதநின்
றேமா மலரடி சிந்தைவைத் திறைஞ்சுதூஉம்
எம்பா வங்கெட விடர்கெட விராப்பகல்
பம்பா நதிப்புனல் படிகுதும் யாமே
ஓடினு மாடினு முறங்கினும் விழிப்பினும்
பாடினுந் திருப்புகழ் பாடிக்
கூடினுந் திருவடி கூட்டுங்கோ வெனவே.

### வெண்பா

எணையளிக்கு மாமாதை யீசர்க் கனங்கா
வுணையழிக்கும் வாணயன மொன்று—பணியின்
செருவழிக்கும் வாணயன மொன்றுசேர் பாத
ருருவழிக்கும் வாணயன மொன்று. (௨)

### கலித்துறை

ஒன்று யிரண்டுரு வாயுயர் மூவர்க்கு முற்பத்தியாய்க்
குன்றுத மாதைப் பரஞ்சுட ரேகொண்ட தண்டமிழ்நூ
னன்றுக வோவெணி னின்றுரை யாப்புன்சொ னன்மை [யென்றால்
பொன்று வெருக்கணிந் தாயது போலுமென் புன்சொ லுமே

### கலிவிருத்தம்

சொல்லாடிய வேதங்க டுதிக்கும்பல பூத
மெல்லாமுறை பலவண்டமு மிடுநூபுர வடியா
ரல்லார்பொழி லாமாதையி லையன்றனி யுறையுங்
கல்லானிழ லெங்கேயது கண்டார்சில ருண்டோ. (௪)

### விருத்தம்

உண்டிலங் துவர்வா யுற்றிலங் திமடோ
ளுறவுயிர்த் திலமா லோதியின் மணமுங்
கண்டிலங் தமியேங் கலவியின் சமயங்
கனிவழங் குவதுங் கனவிலுங் கேளோம்
வண்டினம் புரளுங் கொன்றையந் தொடையார்
மங்கைபங் குடையார் மாதையம் பதியி
லண்டர்பைந் தொடிபா லென்பெறுங் கொடியே
மறிவினெஞ் சகமே யைம்புலன் களுமே. (௫)

### கலித்துறை

புலம்போ னெறிசெலு மீகாம ஞலம் பொறிகலங்கிக்
கலம்போ லுடைந்துமுன் னங்குராஞ் சாய்ந்திடக் காய்ந்தமழு
வலம்போது மாதையைப் பாலித்தநாள் வந்துமாணிக்கப்பூஞ்
சிலம்போடு சேர்த்தனை யோகரைசா ரத்திருக் கண்வைத்தே

### புயவகுப்பு.

### ஆசிரியச்சந்த விருத்தம்

கடல்வாய் தாக்கா முகடுசுடாவெழு
கறுவிய காளக் கடுவைக்கவர்ந்தன
கழுநீ ராற்று விழியுமையாளிரு
கனதன முகிளக் கலவிக்கிசைந்தன
கரையார் நாட்டார் பழுதுபடாதொரு
கடுபடு வலயக் கலையைப்புனைந்தன
கனல்வாய் தோற்று வருமதசீகர
கரமலை யுரியைத் தெரியப்பிளந்தன
படர்பா லாற்று வரிவையரா ருயிர்
பரிவொடு மெலியப் பலியைப்பயின்றன
பறைமோ தாற்று வயிரவராகிய
பரிபுர வரவப் பவனிக்கமைந்தன
படிவாய் கேட்டார் செவிகள்பொறுதொரு
படுகொலை மதலைக் கறியைப்பகிர்ந்தன
பகலே போய்த்தா மதுரையினுவலர்
பலகையி னுறையப் படிபுக்குயர்ந்தன
புடைசூழ் மாத்தூர் முதுகணநாதர்கள் . ✓
புரிகுழல் புகலப் புகழிற்பொலிந்தன
பொடிமீ தூட்டா மறையுணர் தாமரை
புலிபணி பாவப் பொதுவிற்புரிந்தன
புரிநூல் சாற்று வருவிவிடாதிழி
புரையறு பவளக் கிரியிற்றிரண்டன

புரைதீர் வாக்கா லுரைதருமூவர்கள்
புதியன கவிதைத் தொடையிற்புணர்ந்தன
செடைகூர் பாட்டா லுயர்மறை வேதியர்
திருமுக முளரிக் கொளியைப்புரிந்தன
திருமால் காற்று மொருகணையாலெழு
திரிபுர மெரியச் சிலைதொட்டுவென்றன
செக்மேழ் காப்பார் திருமகனார் தலை
திருகிய மகரத் தருகிற்கிடந்தன
திருவா மாத்தூ ரழகியநாயகர்
செறிதரு தவளப் பவளப்புயங்களே. (எ)

## தலைவன்குறை நயந்துரைத்தல்.

## கட்டளைக்கலித்துறை.

புயத்தள வான புயங்கத்த னார்பொற் புயங்கத்தனார்
வயத்தலை மான்மழு வாமாதை நாதர் மலரடிநே
ரியத்தமிழ் வல்லிதன் பால்வந்த கால மெனைவினவ
வயர்த்தன ராயினுஞ் சொல்லுமெல் லீர்களு மன்னங்களே

## தலைவன் வறும்புனங்கண்டுமறுகல்.

## விருத்தம்.

அனத்திற் றிரிவார் காண்பரியா
ராமாத் தூரி லழகியனை
ரினத்தைச் சேரா தவர்போல
வென்னெஞ் சுருகு தென்செய்கேன்
புனத்திற் காணேன் விளையாடும்
பூந்தண் சுனையிற் புறங்காணேன்
வனத்திற் காணேன் வரக்காணேன்
மடமா னெங்கே கடமானே. (கூ)

## கழிக்கரைப்புலம்பல்.

### விருத்தம்.

மானே கிளியே மயிலே குயிலே வரிவண்டே
கானே சுனையே கழியே வழையே கான்யாறே
யானே றுடையா ராமாத் தூர்சென் றடை யார்போ
லூனே வருமே யுயிரோ வெனுமே யுய்யாதே. (கo)

## தலைவி அருந்தவர்வாய்மை வற்புறுத்தல்

### விருத்தம்

உய்யாத விடைகொண்டு தவறாத
மொழிதந் தொளித் தேகினும்
பெய்யாத முகில்கொண்டு வந்தா
ரெமக்சொன் று பேசாதிரார்
மையாடு மொருகண்டர் மகிழ்வாகி
வளர்கின்ற மாமாதைபோ
லையாவுன் மொழிகொண்டு மொழியாய
மொழியான தவர்வாய்மையே! (கக)

### விருத்தம்

வாரண முரிசெய் தாரு மாதையின் வைகி நஞ்சைப்
பாரணம் பண்ணி னாரும் பாப்பலங் காரனாரும்
நாரணன் றேடி னாரு நான்முகன் றேடி னாரு
மாரணம் பாடி னாரு மழகிய நாத னாரே. (கஉ)

## தலைவி புள்ளோடுகிளத்தல்.

### கலிவிருத்தம்.

அழகிய நாயக ராமாதைத்
தழைகெழு சோலைத் தாராவே
பொழிபுய லோடுவர் போனாரோ
விழியக லாதவர் மீள்வாரோ. (கங)

## கலித்துறை.

மீளார் பிறப்பினில் வீழார் நரகினில் வேறொருநால்
கேளா ருயிர்க்கொரு கேடுசெய் யார்கிளர் தீவினையின்
மூளார் திருநுத லீறிக மூர்பின்னை முத்தியல்ல
தாளார்தென் மாதை யழகிய நாத ரடியவரே. (கச)

## பருவங்கண்டுபெருமகள் புலம்பல்
## சந்தவிருத்தம்.

அடியார்ப வங்க ளறநீ றணிந்த வரனூர் முடிந்த பரனூர்
வடிவாய விந்து முடியா ரிருந்த வயன்மாதை தங்கு குயிலே
முடியாத கங்கு லுறவாகி நின்று முதிராத கொண்ட லதிரா
விடியாத கொண்ட னடுவே தகைந்த தினிவேறு தஞ்ச
[மிலையே

## தலைவியாற்றுததன்மைகூறல்.
## தாழிசை.

தஞ்ச மில்லவ ராவி கோலிய சாப மூழ்கிய சாயக
மஞ்சும் வல்லவ ராடு பூசலி னளவு காண வடுக்குமோ
மஞ்சு புல்லிய மாட மாளிகை மாதை மேவிய நாதனார்
நஞ்ச மேயமு தாக வுண்டரு ளுதனார் நுத னயனமே. (கசு)

## விருத்தம்.

நயன நகாயுத ரழகிய நாயகர் நதிபொரு மாதையுளார்
பயனுடை மூவர்தம் மனவிய லாகிய பாவக மாரறிவார்
உயர்நெறி வேரற வுலகமே லோகமொ டொருவெளி யாய்
[விடுநாள்
அயன்முடி மாலைகொடரிமுடி மாலைகொடாடுவர் பாடுவரே.

## மெய்தோட்டுப்பயிறல்.

### வஞ்சிவிருத்தம்.

பாடுவை யாடுவை பணியோதிக்
காடிடை மூழ்குவை களிவண்டே
யாடக வில்லித னமாதைப்
பீடுடை மானிடை பிழைகாணே. (கஅ)

## தலைவன்பிரிவு பாங்கியறிந்து தன்மனத்தழுங்கல்.

### சந்தவிருத்தம்.

பிழைத்த புரங்க ளெருப்பெழ நின்றவா
பெற்றவ ரன்பொடு பேசாதே
யழைத்து விருந்து சமைத்த வுடம்பை
யழைத்தவர் தங்கிய வாமாதைக்
கழைக்குண் மறிந்து குழைக்குளடர்ந்து
கறுத்து மடங்கிரு கண்ணுறு
செழித்து வளர்ந்து சுழித்தெழு நண்பர்
செலுத்துவ ரின்றுயர் திண்டேரே. (கக)

## தலைவி கார்காலங்கண்டிரங்கல்

### தாழிசை.

தேர்வந்தமை கண்டலரெழு திரைவாரிமுழக்கிக்
கார்வந்தமை கண்டலர்நிலை கண்டலர் வரிவண்டலர்
வார்செஞ்சடை முடிபாருறை மாமாதைமருங்கே
யார்வந்தெ னரும்பாவித னளவே யிரவளவே. (உ0)

### விருத்தம்.

அளவி லாதோ ரறிவி னாலு மரியயோகப் பெருமை யாலு
மெளிய ராயு மரிய ராயும் யாரு மெய்யே சேரு வாரே

யொளிகொண் மாதைப் பதியி னூடே யுருவு தங்கு மருவு [தன்னைத்
தெளிவி லாதா ரன்ன மாயும் பன்றியாயுஞ் சேர்கிலாரே. (உக)

## கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தெமை யாளுஞ் செழுநலப் பாகமுஞ் செவ்வியருள்
கூர்ந்தெழு பச்சைத் திருமேனி யுங்கொண்டு குன்றமொன்
வார்ந்தவில் லாக வளைத்தார் விளங்கிய மாதையிலே [றை
போந்தவர் போந்தில ரேலென் படாதெழு பூதலமே. (உஉ)

## கலிவிருத்தம்.

பூண்ட மால்பணி யாய்புகழ் மாதையா
யாண்ட நாயக னேயழ லாடியே
வேண்டு வேனிது வேவிடு காலதூ
நீண்டு போதருள் வாயிது போதுமே. (உ௩)

## தலைவன் மேகமொடுபுலம்பல்.

## தாழிசை.

போதி ரண்டுவிழி யானவெந் தையிறை
புங்கவன் றெரிவை பங்கினன்
மாதை யம்பதியில் வாரி யுண்டுநெடு
வான்வ ளைந்துவரு மஞ்சுகா
ளாத ரம்புதிய வம்பு கொண்டெழுது
மதனின் மையெழுதி யவரையஞ்
சோதி கொண்ட சுரு ளோலையங் கைகொடு
சுரர்விடுக் கவரு தூதரே. (உ௪)

## தலைமகள் சேக்கர் கண்டிரங்கல்.

## கட்டளைக்கலித்துறை.

தூது நெருக்கு மிதழியந் தாரினுந் தோகையர்தங்
காத னெருப்புக்கு நீரல வேகமு காடவிசூழ்

மாதை நகர்ச்சிறந் தாரடி யார்தம் மனத்திருந்தார்
கோதை யிடத்தமர்ந் தார்திரு மேனிக் குடதிசையே. (உரு)

தலைமகள் நிலவுகண்டிரங்கல்.

கலிவிருத்தம்.

குடக்குமீ தொன்று போய்க் குணக்கெ ழாதலா
லடுக்கவா னொன்றுவந் தனலை வீசுமால்
மடக்க லாமஞ்ஞை சேர்மாதை நாதனார்க்
கிடக்கணோன் வலக்கணோ னிரண்டுந் தீக்கணே. (உசு)

கட்டளைக்கலித்துறை

கம்பத் துறையுறை நீலமு மாதைக் கடிநகர்சூழ்
பம்பைத் துறையி லுறையும் பவளமும் பாற்கடல்சூழ்
செம்பொற் சிகரத் திமையத்தி லேவந்து சேர்ந்திலரே
லும்பர்க்கு வாழ்விலை யேயிலை யேபுவிக் குற்பத்தியே. (உஎ)

வலைச்சியார்.

சந்தவிருத்தம்.

பத்திபடு முதுபேய்க டொக்கதிரு நடனாதர்
பச்சைமயி லிடமான பெருமான்
முத்தரழ கியநாத ரத்தருறை புகழ்மாதை
முத்துதிரை வலைவாணர் மகளார்
நெய்த்ததுவ ரிதழூறு புத்தவமு தினைவாரி
நித்தமிவர் கயல்கூறி வரவே
யத்தருல கிதுவாகி யித்தரணி யதுவாகி
யப்பொழுது புவிமாறு படுமே. (உஅ)

தலைவன்வருந்தியமை பாங்கி தலைவிக்குரைத்தல்.

விருத்தம்.

மாறுபட வைகைக்கு மண்சுமந்தார்மாதை
வரிவண்டு பாடச்

சோறுவிரி தாழையிடைச் சுரபுன்னை பந்தரெலாஞ்
சுரிசங் கார்ப்பக்
கூறுபடு காலலவன் பேடையுடன் குழையுமணங்
குறியா தோங்கி
யாறுமழை மின்காட்ட வரையிரவிற்
றடுமாறு மாவி தானே. (உகூ)

### தலைவிகையாறெய்திடுகிளவி.

### சந்தவிருத்தம்.

ஆவி தளர்ந்தாய் மேனி பசந்தா யலரானு
யேவி லுழன்றே நாணு மிழந்தா யென்செய்தாய்
வாவு சடும்போ ரேறு புரிந்தார் மாமாதைக்
காவல ருன்பான் மேவிய துண்டோ கழுநீரே. (ங௦)

### தலைவியை முன்னிலையாக்கல்.

### கலிப்பா

கழுநீர் கண்ணுகிற் றண்ணளி சாணேனே
பழிநீர் விடமாகிப் பாவி பதைப்பேனே
வழிநீர் பிறைநாறு மாமுடி யாமாதைச்
செழுநீர் பொருபம்பைத் திருநதி குடைவீரே. (ஙக)

### தலைவன் குறிப்புவேருக நெறிப்படக்கூறல்.

### சந்தவிருத்தம்.

குடியொரு பாதி யானவர் குறைமதி சூடும் வேணிய
ரடியவ ரேவல் போனவ ரழகிய நாதர் மாதைவாய்
வடகிரி யேறு மாமயில் வரைமட லூரு மோதிமம்
நடைபெறு மாத ரோடெழு நதிபல வோடு மாடுமே. (ஙஉ)

தலைவி வலம்புரிகேட்டுளமகிழ்தல்.
கட்டளைக்கலித்துறை.

ஆடக் கொடியிட்ட தாமரைப் பாத ரழகர்வைகு
மாடக் கொடிமதின் மாதையன் னீர்மல ரிற்பிறந்தாள்
தோடுற்ற வோதி முடித்தசங் கோமலர்த் தோகையுடன்
கூடப் பிறந்தசங் கோவின்று தேர்முன் குறித்தசங்கே. (ருங)

தலைவனீடத்தலைவிவருந்தல்.
சந்தவிருத்தம்.

சங்குதுயில் கின்ற வெண்கமல மொன்று தண்கலை
மடந்தை தருமாதைப்
புங்கவன்வி ளங்கு பம்பைநதி வந்து
புந்திமகிழ் கின்ற புள்ளீரே
எங்களுயி ரென்று முங்களுயிரென்று
மிங்கினியி ரண்டி லெண்ணுரே
செங்கயல்பு ரண்டு வெண்டரள பந்தி சிந்தவும
றந்து சென்றுரே. (ருச)

கட்டளைக்கலித்துறை.

சென்றார் பாவைதன் பாலிருந் தார்திகழ் மாதையிலே
நின்றார் பணிபவர் நெஞ்சகத் தேசைவ நீறணிவார்
மன்று டுவரென்பு சூடுவரேற் றின்வரு வர்நஞ்சை
யொன்றுக வுண்ப ரிவரா மெவரினு முத்தமரே. (ருரு)

பாங்கனேடு தலைவனுற்றதுரைத்தல்.
சந்தவிருத்தம்.

உத்தமன் முத்தா னத்தி னடித்தோ
னுற்பவ மற்றோ னுயர் மாதை
வித்தக னெத்தா னத்தினு நிற்போன்
வெற்பு நெறிக்கே மீள்வாரே

சித்ர முலைக்கே முத்து நகைக்கே
செற்ற முகிற்கே திருவான
பத்தி விழிக்கே நெய்த்த கவிற்கே
பட்ட நுதற்கே பட்டேனே. (௩௬)

விருத்தம்.

பட்ட யானையி னுரிவை யாடையும்
பவள மேனியுந் தவள நூளமு
மெட்டு வாகுவு மிடுபு யங்கமு
மினிது கண்டவர்க் கிமைபொ ருந்துமோ
மட்டு லாவுதண் கொன்றை வேணியார்
மங்கை பங்கனார் மாதை நாதனார்
கட்டு மாசுணப் பாத சூடமுங்
கண்டகண்களே யண்டர் கண்களே. (௩௭)

காமமிக்ககழிபடர்கிளவி.

விருத்தம்.

கண்ண னார்தே டண்ண லாரெங்
கண்ணி னுள்ளார் மண்ணி னுள்ளா
ருண்ணி லாதார் மாதை மூதூ ரோதி
மங்காள் சாதகங்காள்
வண்ண நீல வாவி தோறு
மலையு மாரங் கடலு மாரந்
தண்ணி லாவே வெண்ணி லாவே
தணியி ராவே யினி யிராவே. (௩௮)

தலைவன் தலைவியைப்புகழ்தல்.

வெண்பா.

இருந்தவிட மெல்லா மிளநீர் தருவார்
அருந்து மமுதளிப்பா ரானார்—பரந்தபுன
லாமாதை யையரிடத் தம்மையறச் சாலையின்பம்
வாயா புகுந்தனவோ வந்து. (௩௯)

### தலைவி கலவிநலம் நினைந்துவருந்தல்.

### கட்டளைக்கலித்துறை.

வந்திப் பவர்தம் மனக்கோயில் கொண்டவர் மாதையுள்ளார்
கந்தர்ப்ப னைவென்ற கண்ணு தலார்கை லைக்கருகே
யிந்தச்சு னைமருங் கேயன்பர் வாழ்வித்த வின்பமெல்லாஞ்
சிந்திக்கி னுங்கொண்டல் சாளண்டர் வானமுந் தீப்படுமே. (சo)

### தலைவிகையாறெய்திடுகிளவி.

### சந்தவிருத்தம்.

படமுதுபு யங்க னுடன்மிசை நடஞ்செய்
பதயுக சுயம்பு பயில் மாதைப்
புடைபெருகு பம்பை நதிவளை சொரிந்த
புதுமணல் விழைந்த போதாவே
யிடையனெறி நின்ற மாமென விருந்த
வெமதளவு நொந்து பாராயே
தடமலி குடம்பை மலரணை புகுந்து
தமபெடை மணந்த தாராவே. (சுக)

### கட்டளைக்கலித்துறை.

தாரமன் னுவுடை யார்மாதை மேவிய சங்கரனார்
பேரொளி மேனி பவளமென் பாரெமைப் பேணுமடி
நாரண னாறி யாறி யார்முடி நான்முகனு
ராறி வார்பின்னை யின்னமுந் தேடு மருமறையே. (சுஉ)

### விருத்தம்.

அருமறைகட் கெட்டாத வாதி யார் நம்
மையனு ராமாத்தூ ரழக னார்தந்
திருவடித்தா மரைமலர்கள் சிவக்க வாடுந்
தித்தித்த கூத்திங்கே தில்லை யிங்கே

விரிசடைசேர் பழமுனிகா ளோடி வாரீர்
வியாதனர் மதுச்சுனையின் மிதிக்கின் றீரோ
விருதலைக்கொள் ளியைக்கொண்டே சுள்ளென் றெம்மை
யிட்டவா பாவமெலாங் கெட்ட வாவே. (௪௩)

தலைமகன் இறைமகளாள் திறம்நோக்கி அழுங்கல்
கட்டளைக்கலித்துறை.

கெட்டோ ருறவு கிளையினு மில்லைக் கிளையுருவச்
சுட்டோ ருறவுபின் சொல்லவுண் டோசுரும் போடரும்பி
மட்டோ டவிழ்ந்த விதழியந் தாரையர் மாதைசுற்றும்
நெட்டோடையிலனங் காளுற வாயிங்ங னிற்கின்றதே. (௪௪)

தலைவி மாலைகண்டிரங்கல்.
மட்டுவிருத்தம்.

நின்றுறங்கு முடையாயர் நிரையழைக்குங்
குழலோசை நெடுங்கொம்-போசை
குன்றிருந்த வரிவேங்கை கொலைமறந்து
செவியேற்குங் குறும்புன் மாலை
மன்றுறைந்த நடநாதர் மதிகரந்தை
முடிநாதர் மாதை மூதூர்
அன்றிசென்ற கடுந்திண்டே ரமர்புலத்து
முண்டோகண் டழைக்கு மேதை. (௪௫)

சம்பிரதம்.
கட்டளைக்கலித்துறை

மேலம ரேசரி ஞாய யணரில் விதிகளிற்றங்
காலமெ லாமுடி யுங்கடை நாளிற் களங்கறுக்க
வாலமெ லாமுண்ட வாமாதை யைய ரடியவர்ஙக்ச்
சூலமெ டாதவ ரார்பர வாதிகள் சொல்லுமினே. (௪௬)

### மருட்பா.

சொல்லுமி னென்றுநீர் சொல்லுஞ் சொலிவிடா
நில்லுமின் மானிடங்கா ணில்லுமினோ—தொல்லை
மாதையங் கடவுளுங் கடவுள்
சேதிமங் கெழுமு தேவருஞ் சிலரே. (சஎ)

### போய் பாராட்டல்.

### அகவல்.

சில்லிதழ் மலிந்த தெய்வத் தாமரை
முட்டாட் கடியற வுண்டோ மட்டவிழ்
இதழி யந்தொடை யழகிய நாயகர்
மாதையங் கிரியின் மானோர்
சூதடு கொங்கை சுமந்தநுண் ணுசுப்பே. (சஅ)

### கலிப்பா.

நுண்ணறிவு பறிபோய் நெறிபோய்
நுவல்மதுர மொழிபோய் விழிபோய்
உண்மணிக ளொளிபோய் விடுநாள்
உள்ளபடி விடைமேல் வருவீர்
பெண்ணமுத மிடமா னவரே
பேய்மருவு மிடமா னவரே
வண்ணமதி முடிநா யகரே
மாதையழ கியநா யகரே. (சக)

### தலைவியைப்புகழ்தல்.

### வஞ்சி விருத்தம்.

அழகிய நாயகர்
பழகிய மாதையர்
குழைகெழு சாபமே
மழைகெழு சாபமே. (ஞ0)

### இன்னிசைக்கலிப்பா.

பண்ணி லறுமிரு தாளரே பாவ மறுமிரு தாளரே
கண்ணி லமர்தரு மானரே களிறு குரகத மானரே
எண்ணில் பலவுக பாலரே யாரும் வெருவுக பாலரே
வண்ண மழகிய நாதரே மாதை யழகிய நாதரே. (௫௧)

### தலைவன் புள்ளோடுகிளத்தல்.

### கட்டளைக்கலித்துறை.

நாதர்க்கு நாத ரழகிய நாதர் நயந்துறையு
மாதைப் புரத்து மடவன்றில் காளுங்கள் வஞ்சியஞ்சிற்
கோதைக் கழகுசெய் கோதையெல் லாமென் குரகதத்தின்
பாதைப் பெருவழி யாமழி யாவிடம் பார்த்திருமே (௫௨)

### குறம.

### சந்தவிருத்தம்.

இருந்த குறியினி தெழுந்த கருமம
தியம்பு மொருகுற மென்குறம்
அரந்தை யொடுதவ முயன்ற பொழுதஃ
தறிந்த தொருகுற மம்மைகேள்
மருந்து பிறருண வெழுந்த கடுவிட
மகிழ்ந்து புதிதுணு மாதையார்
பொருந்து தொறுமெனை மகிழ்ந்து நினையிது
பொய்க்கில் மறைமொழி பொய்க்குமே. (௫௩)

### ஆச்சியார்.

### தாழிசை.

பொய்யி டைச்சியே மெய்ம்மு டைச்சியே
புதுவ ளைச்சியே பொதுவர் பாவையே
மெய்வி லைத்திறம் விழியு ரைக்குமே
மென்சொல் கொண்டுநீர் விற்க வேண்டுமோ

மையெ றித்தசெங் கந்த ரத்தனூர் மாது
பாகனூர் மாதை வீதியில்
ஐயர் விற்றுவா வென்று விட்டபா
லமுதி டச்சொனா ரல்ல வல்லியே. (நச)

## தலைவி சிறைப்புறங்கூறல்.
## கட்டளைக்கலித்துறை.

வல்லிக் கிடந்தந்த மாமாதை நாயகர் வண்டின்கையிற் [த்த
கொல்லைப் பசுங்கொன்றைத் தாருந்தந் தாரில்லை கோலிவை
முல்லைக் கொடியையுந் தேமாவை யும்விட்டு மொய்குழலீர்
அல்லிக் கடுக்கையை வைத்தில மேநம் மறிவின்மையே. (நரு)

## மறம்.
## சந்தத்தாழிசை.

வில்ல டுங்கொம்பு பல்லி யங்கொம்பு
வினைய டுங்குன்ற வில்லிகாள்
சொல்ல ழிந்துங்கண் மன்ன வன்பின்பு
சொன்ன சம்பந்த மென்னடா
வல்லி தன்பங்கன் மைபொ ருங்கண்டன்
மாதை யஞ்சம்பு மரபிலெம்
மில்லில் வந்தன்று கொண்ட தொன்றன்றி
யில்லை சம்பந்த மில்லையே. (நசு)

## தலைவனீடத்தலைவிவருந்தல்.
## இன்னிசைவிருத்தம்.

இல்லை யான விருபிறப் பாளனூர்
மல்லன் மாதை மகிழ்நர் பிரிந்தநா
ளெல்லை போகியு மேகா வெனக்கிது
நல்ல காளிற்றை நாளென்ற யாமமே. (நஎ)

வெண்பா.

யாமாழி மாலை யிடபமென வெட்கினீர்
ஆமாதை நாதர்க் கறிவிலிகாள்—தேமாலைப்
போரே றெனுநாமம் பொய்யன்றே நாங்களோ (ருஅ)
நீரோ மொழிந்தீர் நிலத்து.

காமமிக்ககழிபடர்கிளவி

சந்தவிருத்தம்.

நிலவும்பணியுந்தேனிறைகொன்றையுமாறும்நீறும்
பேரென்புநிறைசெஞ்சடையார்தம்
அலையும்பணிலம்போயணிவீதியிலேறு
மாமாதையில் வாழுமாழிப்புள்ளீரே
உலையும்பொங்கழல்போலியானுளம் வெந்தழிகின்றே
னுறவும்பாராதே யிரவுந்தேராதே
மலையுங்கடலும்போய்வைகிப்பெடையோடே
வாருஞ்சிறுகாலேயூருஞ்சிறுகாலே. (ருகூ)

சந்தவிருத்தம்.

காலத்தி னுயிர்கொள்ள வெதிர்கொள்ளும் யமதூதர் கர
[சூலமும்
ஆலித்து வீசுங்கொ டும்பாச மும்மென்னை யமராடுமோ
மாலத்தி மெய்க்கொண்டு மகனத்தி கைக்கொண்ட மாமா
தையார்]
சூலத்தை மாறாத பாசத்தி னூடே யெதிர்த்தாலுமே. (சுo)

கட்டளைக்கலித்துறை.

ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதிங்க ளோதங்கு மாவம் பலபலவாம்
மார்க்கமு மாகிநின் றார்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே*
(சுக)

* இப்பாவால் மாதைநாதர்க்கு இடப்பாகத்திற் போய பம்பை நதி வலப்பாகம் போகப்பெற்றது.

## தலைவன் முறுவற்குறிப்புணர்தல்.
### வெண்பா.

வெங்காள முண்டு விபுதர்க் கமுதீந்த
கங்காளர் மாதைக் கடுக்கைச் சடைமுடியார்
மங்கா விடைமேல் வருவார் திருநகையோ
நங்காவில் வாழ்வார் நகை. (சுஉ)

## இறைவன்றனக்குக்குறைநேர்பாங்கி இறையோற்கண்டமைகூறல்.
### சந்தவிருத்தம்.

நகைய முற்கொடு புரமெ ரித்தவர் நாதர் வித்தகர் மாதையார்
இகல்மு கப்படை யிறைவர் வெற்பினின் யாமிதற்கினி யென்செய்கோ
மகமி முற்றிய கிளிக ளோத்துவ ளளிக ளோட்பெயர் வினவியே
மகநெ ருப்பெழ நெடிது யிர்ப்பொடு வருவ ரிப்பொழு தொருவரே. (சுங)

### கட்டளைக்கலித்துறை.

வருக்கைத் தடம்பொழின் மாமாதை யையர்க்கு மாசொன்றில்லா
முருக்கொத்த மேனி யழகிய நாதர்க்கு மூச்சரவத்
திருக்கைக் கமல வரனார்க் கரிதிருத் தேவியன்றேல்
அரிக்குப் பொருளுரை யீர்கெடு வீர்நும் மறிவின்மையே. (சுச)

### சந்தவிருத்தம்.

அறிவழி யுங்குடி கொண்டநோ யன்னை மருந்தினி லாறுமோ
உறுவது மாதை யிடத்திலே யுறைவது பம்பை மருங்கிலே
புறையுமருந்தொரு பாதியும் பச்சை பழுத்த புறத்திலே
கறுவிய தீக்கொடி கண்ணியே கட்டி விடிவிது பட்டதே. (சுரு)

## வெண்பா.

பம்பா நதிக்கே பழனமா தைப்பதிக்கே
நம்பா விருந்தனையே நாங்காணக்—கொம்பார்
புதுமுகமா யன்னமாய்ப் பொன்முடி-தாள் காணார்
சதுர்முகனார் தந்தையார் தாம். (கக)

## அம்மானை.

தந்தை பிடித்தரியத் தாயா னவள்சமைக்க
வெந்த விடக்குய்ந்து மீண்டதுகா ணம்மானை
வெந்த விடக்குய்ந்து மீண்டதுவே யாமாயின்
மைந்த னுறுப்பு மணத்ததோ வம்மானை
மாதையார் வல்லபத்தான் மணத்ததுகா
ணம்மானை] (கஎ)

ஆரத் தடவயல்சூ ழாமாதை வாழழகர்
தாரொத்த மேனி தழலொத்த தம்மானை
தாரொத்த மேனி தழலொத்த தாமாயின்
ஈரக்கங் காநதியா லிருப்பதே னம்மானை
ஈரம் பெருநெருப்புக் கில்லையே யம்மானை (கஅ)

## தலைவன் முன்னிலையாக்கல்.

## சந்தவிருத்தம்.

அம்மனை பந்தா யரிய கழங்கா யங்கையி லணையேனோ
மென்மலர் வண்டாய் விரிகழு நீராய் மென்குழ லுறையேனோ
கைமறி கொண்டார் கங்கை புனைந்தார் கந்தரம் வந்தாரும்
மைமுகி னஞ்சார் மங்கையொர் பங்கார் மாதையில்
வருவீரே. (கக)

## தலைவன்வறுங்களநாடிவருந்தல்.

## விருத்தம்.

வருங்கடக ளிற்றினையு ரித்தபெரு மான்பழன
மாநகர் வந்தபெருமான்
பொரும்புர நெருப்பெழ நகைத்தபெரு மான்மதன்
பொடிபட விழித்தபெருமான்

பெருங்கணை யாக்கரைய றுத்தகள மோமணி
பிறங்கிய மணிப்பொடிவிடு
வருங்கடு விடம்புதிய துண்டகள மோதினையொ
டரியவவர் சென்றபுலமே. (எ௦)

குறளடிவஞ்சிப்பா.

புலங்குலைந்து மலங்குலைய நவத்துளையுந் தவிர்ந்தொரீஇ
அறிவழிந்து நெறிபாழ்பட் டைமலிந்து மலிந்துகை
மொழித்தமர்கூடி யமராடுங் கழிபிறப்பி ழிகுவெமோ
உழையேந்தி மழவானே றார்திநீ றணிந்தோனு
மாதைமுதலோன் றமரைப்பெருந் தகைத்
திருந்தடியிருந்தநம் மிதையபங்கயத்தே (எக)

தலைவன்நீடத்தலைவிவருந்தல்.

கலிப்பா.

தேவிதிரு மார்பினுறை தேவிமண வாளர்
வாவிபுனன் மாதைதனின் வாவிமலர் காளே
ஆவிசரு காவதுமுன் னாவியரு ளாதோ
பாவிமன யேபெருகு பாவிநிலை பாரீர். (எஉ)

கழிக்கரைப்புலம்பல்.

தாழிசை.

பாராரும்பிடரும்பகுவாயும்பணமும்பலபத்திச்சிகையுங்
குலத்துதித்ததொகையோ
டாராரும்புனைவாராமாதைப்பதிசூழாழித்தண்
புனலுண்டாலிக்குங்காரே
காராரும்பொழிலேபொழில்சூழுங்கழியேகழியோடுங்
கயலேகயலுண்டாராவே
நீராருந்துறையேதுறையாருந்தடமேநிதமாடுங்குருகே
நேயர்செயற்குருகே. * (எஙு)

---

* "தாராவேதுறையேதுறைநீடுந்தடமே தடமாடுங்குருகே யிடமாடுங்குருகே" என்றும் பாட பேதம்

### தலைவிகுருகோடுகையாறெய்திடுகிளவி.

#### சந்தவிருத்தம்.

குருகணை குருகொடு குளிர்சிறை சிறையொடு
குளிர்தலை தலையொடு கூடியே
கருதல கலகொடு கவரடி யடியொடு
கருவிழி விழியொடு மூழ்கியே
வருகரி யுரியவர் மறைகம் முடியினர்
மதிபுனை சடையினர் மாதையார்
ஒருகுரு கெனவுயி ருடல்பிறி திலையென
வுறுபிணி யறிகில ரூரரே. (எச)

#### தாழிசை.

ஊருமாசுண மூர்வபோலுகளொளிசெய் மின்னுட னோடியே
வாரிவாரி விசும்பெலாமிக மஞ்சனஞ்செயு மஞ்செலா
மேருமால்வரை வில்லியாருயர் வேதமாதையி னுதனர்
சேரும்வாள்விழி கடவுதேரவர் சென்றமேதெரொடு சென்றதே. (எரு)

#### வெண்பா.

தேங்கமல நாறுவன தீந்துழாய் நாறுவன
ஓங்கிதழி மாலைதனக் குண்மாலை—பூங்கடுக்கைத்
தெய்வப்பெருமான் திருவாமாத் தூருறையுஞ்
சைவப் பெருமான் சடை. (எசு)

கொற்றியார்.

விருத்தம்.

சடைமௌலி முடிவேந்த ராபி சாரத்
தழலின்வரு கரியுரித்த தம்பி ரானூர்
அடல்மகுடப் புயங்கனூர் திருவா மாத்தூர்
ஆதியா ருருவமா யுருவ மானூர்
விடைபொருத விடைக்கொம்பைத் தோளி லிட்டார்
மெய்யம்பின் கையம்பை விழியிற் கொண்டார்
உடையமுத லடியளந்த விடங்க ளெல்லா
மொற்றியா யிடவந்த கொற்றி யாரே. (எஎ)

வஞ்சிவிருத்தம்.

கொற்ற மாதையிற் கொற்றவ னைத்துழாய்ப்
பெற்ற மூரும் பிரமக பாலியை
உற்ற மூவர்க் கொருவரென் றோதுவார்
மற்ற நாவு மனங்களும் வாழியே. (எஅ)

தலைவிநெஞ்சோடுவருந்தல்.

விருத்தம்.

வாழி தணந்தவர் வாழி கடும்பரி வாழி மறைந்தொளிதேர்
வாழி குறுந்துளி வாழி மதங்கயம் வாழி வளர்ந்தெழுகார்
காழியில் வந்தவர் பாழி யமண்பகை காது
செயும்பெருமான்
ஆழி விடந்தா ராழி யுகம்பயில் மாதை மருங்கருகே (எகூ)

## தலைவன் தலைவியைமுன்னிலையாக்கல்.

### கலித்துறை.

அருங்கா னகத்திற் றிருவுந்தி யோடைகொண் டங்குநின்
கருங்கா வணங்கொண்டு முற்பட்ட வாறென் கடல் [நீர்
கொடுத்த]
வருங்காள மூண்ட பிரான்றிரு மாதையின் வல்லினையேன்
பெருங்காதல் வெள்ளந் தருங்கட லூடு பிறந்தவரே. (௨௦)

## யோகினியார்

### தாழிசை.

பிறப்பி லாதொரு குழகனூர் பேணுமாதையி லழகனூர்
பேயொ டாடிய நாதனூர் பெற்ற மேறிய பெற்றியார்
இறப்பி லாதொரு தலைமையும் யார்கொ லோசிலர் கூறுவார்
இந்த யோகினி பெருமையு மெங்ங னேபிற ரெண்ணுவார்
அறுத்த தாழ்வட வளவெலா மரிய சங்கி லழுந்தவே
அயில்நி றம்புனை கஞ்சுக மமர்ந்த வூதிய மாகவே
வெறுத்த காலர்கள் சூலமே மெய்யில் வைத்தருள் சூலமே
விண்ட கண்ட கபாலமே கொண்ட கொண்ட
கபாலமே. (௨௧)

### கட்டளைக்கலித்துறை.

கொண்ட கபால மய்யனூர் சிரமரிக் கூர மம்விண்ட
சண்ட கபால மணித்திருக் கோலஞ் சதுர்முகனூர்
கண்ட கபாலமெல் லாமெற்றி மாலைக் கழகுசென்னி
அண்ட கபாலம் பெறுந்திரு மாதை யழகருக்கே. (௨௨)

## கலிப்பா.

அழகார் மாதைபுளா ரணியும்நா ராயணரே
குழையும்வா னேர்புடைசூழ் குடியும்நா ராயணரே
கழையுங்கீ ரூர்சடையார் சடையும்நா ராயணரே
விழியின்மே லோர்விழியார் விடையும்நா ராயணரே. (அங)

## வெண்பா.

நாரா யணனறியா நாட்கமல நாங்காண
வாரா தெதிர்நிற்க வல்லீரோ—சீராரும்
பூமாத்தூ ரத்தரே பொற்பணிபூ ரத்தரே
ஆமாத்தூ ரத்தரே யன்று (அச)

## சந்தவிருத்தம்.

அன்றுபே ருழுவைமுன் னாரணம் பாடவே
மன்றுளா டும்பிரான் மாதைவா ழெம்பிரான்
என்றுநீ டும்பத மிடைவிடா தேத்தினல்
ஒன்றுதா னணுகுமோ வுங்கள்பா வங்களே. (அரு)

## வெண்பா.

பாவ வினைக்குறும்பு பற்றறுக்குங் கொற்றத்தாள்
தேவர் கபாடந் திறக்குந்தாள்—ஆவிவிடாப்
பூமாத்தூ ராற்றுப் பொதிசோறுந் தண்ணீரும்
ஆமாத்தூ ரத்த ரடி (அசு)

## காமமிக்ககழிபடர்கிளவி
## மட்டுவிருத்தம்.

அடியி லிந்துவை யமுது செய்திடாப்
கொடிய தென்றலை கொண்டு வாழ்வியாய்
மடிவில் கொன்றையார் மாதை நாதனார்
விடையில் மொய்ம்பனார் வேணி நாகமே. (அஎ)

### சித்து.
### கட்டளைக்கலித்துறை.

மேவணி முடிப்பரன் மாதையப் பாலிந்த வேர்கொளுத்தத்
தாணு வெடுத்த தனுவைப்பொன் னாகத் தநங்குளிகை
காணி புருக்க வொருகோடி செம்பொன் கடுகவொரு
பாணி முதற்கொண்டு வாகொண்டு வாசொன்ன
பச்சிலையே (அஅ)

### இதுவுமது
### விருத்தம்.

பச்சிலை பத்திலொர் பத்ம பதத்தொடு பங்க மெரித்திடவே
இச்சரி கைப்பொதி கற்ப மிருக்கு மெனக்கிது வித்தைகளோ
மைச்செறி பொற்பொழின் மாதை யொருத்தர் மணிப்பவளத்துறையு
மச்ச விடந்தினை மற்றிரு வர்க்கு மருந்தி யிருத்துவனே (அகூ)

### கட்டளைக்கலித்துறை.

இருந்தாய் திருமுடி மேல்வளர்ந் தாயெம் பிராணிடத்தே
மருந்தா யவதரித் தாபொரு மாதிட மாதையையர்
பிரிந்தா ரிருந்தே யரும்பாவி நின்னைப் பிழைத்ததுண்டோ
குருந்தா யெழுந்தவன் றேதழ லாய்நின்ற கோண்மதியே.

### நேரிசை வெண்பா.

கோளரவு கண்டுங் குறையாம் பிறையணிந்த
காளவிட முண்டிருண்ட கண்டனூர்—பாளைகமழ்ந்
தூரும் பொழிலுந் துறையுந் துறைவெண்சங்
கூருந் திருவாமாத் தூர்.

### கலிவிருத்தம்.

ஆமாத் தூரி லழகிய நாயகர்
தேமாத் தூரிற் சிறந்தே வருகிலர்
தாமாத் தூரிற் றழுவக் குழைபவே
வாம பாக மிடைவடு வானதே. (கூஉ)

## தலைவன் மேகமொடுசொல்லல்.
### கலிப்பா.

ஆனை கயவிடை மருவு கமலமு
　　மஞ்ச னக்கமல மளவு கமலமும்
பானன் மூடிய வமுத கமலமும்
　　பரவிப பசலை முகிளித கமலமும்
வானவர் தலைவ ரழகர் மாதைசூழ்
　　மருவிய கமல மனையில் வளர்வதோர்
தானகை திருமுன் முகில்கள் செல்லுமே
　　தாகத விரத வரவு சொல்லுமே. (கூ௩)

## தலைவனுருவெளித்தோற்றங்கண்டுளமறுகல்.
### சந்தவிருத்தம்.

சொல்லுவ போலொரு சொல்லாடீர்
　　தோய்வது போலிரு தோடோயீர்
நல்குவ போலிதழ் நல்கீர்முன்
　　னகுவது போலொரு நகைதாரீர்
மல்விடை யூர்பவன் மழுவாளி
　　மாதையின் வீதியில் வருவீர்நீர்
அல்லகொ லோவய லாமோநீ
　　ரருவழி போயின தறியேனே. (கூ௪)

## காலம்.
### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அபன்மாத்தூ ரழகாங்க ணழலாக் காலம்
ஆமாத்தூ ரழகரங்க ணழலுங் காலம்
மயலாற்றூ ரணிபாங்க மாறுங் காலம்
மனமாத்தூ ரணிபாங்க மாறாக் காலம்

கயலாற்றூர் மணிமுத்தங் கவருங் காலம்
கடலாற்றூர் மணிமுத்தங் கவராக் காலம்
இயன்மாட்டே ரெம்மிறையி னிசைக்குங் காலம்
இயன்மாட்டே ரெம்மிறையி னிசையாக் காலம் (௬௫)

## ஊசல்.

### கட்டளைக்கலிப்பா.

காலன்விழும் படியுதைத்த கழலுங் காலுங்
கண்ணனிடு பலிபெற்ற கையு மோடுஞ்
சாலமதன் படவிழித்த நுதலுங் கண்ணுந்
தடம்புரங்க ளழூட்டு தனுவுந் தோளுஞ்
சேல்கயல்கள் விளையாடும் பம்பை யாறுஞ்
செந்தமிழைத் தடுத்தாண்ட தெய்வ நாடும்
ஆலமயின் றமுதீந்த வழகர் சீரும்
ஆமாத்தூ ரும்பாடி யாட ரூசல் (௬௬)

## மதங்கியார்.

### சந்தவிருத்தம்.

சதந்தரு வங்கென வண்டெழு மாதவி தாதவிழ் மாதையின் [வாழ்
கதஞ்செய் புரங்கள் முனிந்த பெருந்தகை கமல பதம்பரவா
விதங்கொ ணடம்புரி யங்கை சரந்தொறும் வீழ மனங்கசர
மதங்கி தருந்தனு மண்டல மெங்கு மதன்றரு மண்டலமே.

## தழைவிருப்புரைத்தல்.

### கட்டளைக்கலித்துறை.

மேதிக் குலஞ்சொரி பால்கயன் மாந்தும் விரைப்பழன
மாதைக் கடவுள் சடாடவி யோமணிப் பேரணியோ
ஆதித் தனிவிழி யோநகை யோசெங்கை யம்பினம்போ
போர்துற்ற சேவடி யோவைய நீதந்த பூந்தழையே. (௬௭)

### சந்தவிருத்தம்.

துழையுணர்ந் துணர்ந்து தகவழிந் தழிந்து
தனியுழன் றுழன்று சாயல்போய்
வழிமறந் துசென்று விழிகுவிந்
துநின்று மனவிருந் தயின்ற கானலே
அழிவில் மங் கைகொண்க ரரியமங்
கைபங்க ரழக ரன்புகொண்ட மாதையார்
கழிசுரங் கடந்து பழியுடன் படர்ந்த
கனகனன் புகொண்ட காதலே. (௯௯)

### பாண்.

### கோச்சகக்கலிப்பா.

காட்டகந் தொறுந்திரிந்து கண்குழிந்து தடுமாறல்
கேட்டிலையோ விலங்கேசன் கீதத்திற் சவர்ந்தெலாந்
தீட்டியசீ ராமாதைச் சிவலோசன் றிருச்செவிகாண்
பாட்டறிவீர் படைவீடு பலிதிரியும் பாண்மகனே. (௧00)

### விருத்தம்.

மகனுக்கு மாலுக்கு முதலான வையங்கள் பதினாலின்வாய்
அகிலத்தெவ் வுயிருக்கு முயிரான வாமாதை யழகற்குமே
நகமுற்று கடலுங் கடைந்தார்க ளுயர்நஞ்ச முண்டார்களோ
முகமொக்க வமுதாக வுண்டார்கள் முப்பத்து முத்தேவரே
(௧0௧)

# திருவாமாத்தூர்க் கலம்பகம்.

## குறிப்புரை

### காப்பு

விஞ்ச-அஞ்சவே-மிகவும் பயமடைய
மஞ்சு-மேகம்
மால்X துயரம்-திருமால் பொய்க்கரிபோக்கிப் பாம்பாயிருந்த துன்பம். அதனை விநாயகப் பெருமான் தீர்த்தாரென்பதை அனங்தன் சாபம் தீர்த்த சரிதத்தாலறிக

### நூல்

---

1 மாமேவு-திருமகள்பொருந்திய
உதகம்-நீர்
விளக்கு-சூரியர்கள்
பாரேழு பாலிகை-பாரேழாகிய பாலிகை. பாலிகை முளை உண்டாக்கும் வட்டில். உலகமேழும் முளைப்பாலிகையாக உருவகிக்கப்பட்டது. உயிர்கள் முளைகளாக உருவகிக்கப்படும்
காவணம்-பந்தர்
அபிராமம்-அழகு
பைப்போது-படத்தையுடைய
குறை-ஈனமாயபிறவியிற் படுங் குற்றம்
கருங்கலம்-மட்பாண்டம்
பெருங்கலம்-வாழையிலை
பறை-பாவம்
இறை-தெய்வம்; உடனே எனவுங் கொள்ளலாம்
சாகை-கிளைகளையுடைய
மிடல்X தரு-வெற்றியுடைய
சினவிடை-நல்லாற்றிஞெழு
காரைக்காயும்விடையாகியமால்
மறைதரு-இரகசியமான
பலபடி-பலவிதங்களாக
பறைதரு-புகழுகின்ற, சொல்லுகின்ற
பறையினை-அளவினையுடையாய்
பறை-அளவு-அவரவர் அறிவுக்கு அடங்கிய புகழ்ச்சியுடையவர் என்றபடி
"இருவர்முன் ஒருவ அரும் ஒளி என இயைக்க
ஒருவX அரும்-அழியாத
ஒளிசெயும்-மயக்கத்தைத் தெளிவித்த
பதம்-அறுகு
சடை-பின்னல்; அறுகும் சடைப்பின்னலும் • பொருந்திய சடையையுடையவர்

ஆல்xநீழல்-கல்லாலமரநீழல்
ஊடுப்படுதல்-சருகு முதலியன
உதிர்ந்து மாசு படுதல்
மாகாயம்-பெரிய திருமேனி
ஆகாயம் கணச்சிலேடை
வடு- தழும்பு; மாவின் கீழ்ப்
பிஞ்சுஊளாதல் எனச்
[சிலேடை
இராவ:xமன்-இராவுக்ரசனாகிய
[சந்திரன்
பராபரம்-தனியன்
ஐவர்-பிரமன்,மால், உருத்திரன்
மகேசுரன், சாதாசிவன்
மணிப்பலகை-பாணபத்திரனுக்
களித்த பலகை
செம்பூதம்-அக்கினி,
[பஞ்சபூதமுமாயுள்ளவர்
ஓ-எதிர்மறை
தேமாxதூர்-தித்திப்பான
பழங்களையுடைய மாமரத்தடி
தீ-யாத்து-ஊர்-நெருப்பைக்
கொளுத்தி முப்புரங்களை அழித்
தவர் என்றபடி
ஆனு-குறையாத
தூர்-மூலம்-உலகம் ஒடுங்குதற்
கும் விரிதற்கும் மூலமாய் நின்ற
பொருள். அடங்கின என்பத
னல் ஒடுக்கங் கூறியது
மான்-உமாதேவி
2. அனங்கன்-மன்மதன்-உருவ
[மில்லாதவன்
வாள்xநயனம்-ஒளியுடையகண்
(அக்கினி)
செரு-பகைசூரியனைக்குறிக்கும்
மாதர்உரு-அழிக்கும்-பெண்கள்
அழ
கைக் கெடுக்கின்ற கண்-அது
[சந்திரன்
4. சொல்-ஆடிய-சொற்கள்
[விளங்குகின்ற
பூரம்x-உயிர்
நூபுரம்-சிலம்பு
அல்xஆர்-இருள் நிறைந்த
5 துவர்-வாய்-உண்டிலம்-திரள்
தோள் உற்றிலம். ஓதியின்மண
முற உயிர்த்திலம் கலவியின்
சமயம் கனி வழங்குவதும் கண்
டிலம் என்பது பெண்டிர் பால்
ஐம்புலநுகர்ச்சியு மறிந்திலேம்
ஐந்துபூதங்களுக்கு மைம்புல
நுகர்ச்சி. நெஞ்சகம் பரவசப்
பட்டு நிற்குங்கால் ஏனைய இன்
பங்கள் அறியவாரா என்பது
6 இத்திருப்பாட்டு ஓர் சரித்திர
நிகழ்ச்சியைக்கூறுகின்றது-
சரித்திரம் விளங்கவில்லை
7. வலையம்-கடல்
மதசீகர கரமலை—மதத்தைப்
பொழியும்கையையுடையயானை
படர்மால்-பெருகும் மயக்கம்
படி-பூமி
மதலைகறி-சீராளன்
பொடிமீதூட்டா-பூதியை
[மேனியிற்பூசி
புலி-வியாக்கிரபாதர்
பணி-பதஞ்சலி முனிவர்
புரிந்தன-விளங்கின
பவளக்கிரி-திருமேனி
செடை-சடையென்பதன்திரிபு
ஒருவகை இசை
முளரி-ஓமாக்கினி
மகரத்தருகில்-கபோதமாகப்

பிடித்த இணைக்கைக்கு அருகில்
9. கடமான்-காட்டுமான்
10. வழை-புன்னை
11. விடை-மறுமொழி
கை-கருமை நிறம்
மொழியாயமொழி-உண்மை [மொழி
12. வாரணம்-யானை
பாரணம்-உண்ணல்
ஆரணம்-வேதம்
13பொழிபுயலோடு-பெய்கின்ற [மேகத்தோடு
14. கிளர்-கிளைத்துவரும்
ஆளார்-கைக்கொள்ளார்
15 முதிராத கொண்டல்
காலமல்லாக்காலத்துவர்த்த மேகம்
இடியாதகொண்டல்-கூந்தல்
16. சாபம்—வில்லு
சாயகம்-அம்பு
அடுக்குமோ-தகுமோ
17. நயன-நக-ஆயுதர்-நெற்றி
விழிச் சிரிப்பாகிய ஆயுதமுடை [யார்
பாவகம்-இயல்பு
நாள்—சர்வ சங்காரகாலம்
18. இடை-மருங்குல்;கொங்கை
சுமந்திளைத்த மருங்குல்
19. நண்பர்-தலைவர்
20. யார் வந்தென்-ஆர்வந்தா [லென்ன
22. போந்திலரேல்-வாராவிட் டால்.
23. மால்xபணியா-பெரும் [பாம்பாபரணரே
24.போதிரண்டு-பகல்-இரவுசூரி [யன் சந்திரன்
25. தூ தூ-வண்டு
26குடதிசை-திருமேனி
போன்ற மேற்குத்திசை
குடக்கும் ஒன்று-மேற்கே அந்த
மிக்கும் சூரியன்
குணக்கு-கிழக்கே
ஒன்று-சந்திரன்
27 கம்பத்துறைநீலம்-காமாட்சி
பவளம்-சிவபெருமான்
சிவபிரான் உமாதேவியுடன்
இமையத்திலிருந்திராவிட்டால்
உற்பத்தியும் போகமுமில்லை [என்றவாறு
37. அண்டர்கண்கள்-இமை [யாத கண்கள்
40. கந்தர்ப்பன்-காமன்
41. இடைய னெறிகின்றமரம்
பாதிபச்சைபாதி காய்ந்தது
48.மாதையங்கிரிமானார் கடியற வுண்டோ, சுமந்த நுண் நுசுப்புத் துவளும்.
கடி-தேன்
அறவுண்டு-மிகவுமுண்டு
முலைகள் சுமக்கலாற்றாது
துவளு மிடையைக் கள்ளுண்டு
துவளுகின்றதோ என்றது தற் [குறிப்பு
51. பண்ணிலறுமிருதாளரே-
இசைக்குத் தகுந்தபடி ஆடு
கின்ற இரண்டு திருவடிகளை
யுடையவரே
பாவமறும்-பாவத்தையறுக் [கின்ற
மானர்-பெருமையுடையவர்.

குரகதமானர்-குதிரையாக
[வுடையவர்
உகபாலர்-உககாலமு மழியாது
[காப்பவர்
கபாலர்-கபால ஓட்டையுடை
[யவர்
'அழகியநாதர்-அழகிய திருமேனி
[யுடைய தலைவர்
அழகியநாதர்-சுவாமிபெயர்
53. குறம்-குறிசொல்லுதல்.
-அது தவம் முயன்ற பொழு
[தறிந்தகுறம்
மருந்து-அமுதம்
பிறர்-தேவர்
மாதையார்உன்னைவந்துசேரும்
பொழுது இக்குறத்தின் உண்
மையை நேரேயறி என்றவாறு
54. பொய்-இடைச்சி-பொய்யா
கியஅதிநுணுகிய இடையை
[உடையவளே
முடை-பால் நெய் நாற்றம்
மெய்-விலைத்திறம்-உண்மை
யாகிய விலையின் கூறுபாட்டை
(உனது மெய்யை அடைதற்கு
வேண்டும் வகையை)
மைxஎறித்த-விடம் விளங்கிய
ஐயர்-மூத்தோர்[அண்ணன்மார்
விற்றுவா வென்று விட்டதன்
றிப் பாலை ஊட்டிவாவென்று
விடவில்லை]
56. மறம்-குன்றவாணரிடத்துப்
பெண்பேசிப்போகுங்கால்அவர்
கூறும் வார்த்தை
அடுங்கொம்பு-கொல்லுந்
தொழிலையுடைய
கொம்பு-மரக்கொம்பு
கொம்பு-ஓர் வாத்தியம்
குன்றxஇல்லி-குன்றமாகிய
[இடத்தை உடையவர்கள்
57. இல்லையான இருபிறப்பு-இரு
பிறப்பு இல்லையானவர் எனவே
[அநாதிசைவர்
ஆழிமால்- சக்கரத்தையுடைய
[திருமால்
58. ஆர்-ஆத்தி
பேரென்பு-மால் பிரமன் இவர்
[களின் என்பு
பணிலம்-சங்கு
ஆழிப்புள்-சக்கரவாகப்புள்
உறவு-நட்பு
சிறுகாலேவாரும்-வெள்ளென
[வாருங்கள்
சிறுகால்-இளந்தென்றல்
குழை-இலை
61 அருமனை-ஆயர்பாடியிலுள்ள
[அசோதையார் திருமனை
ஆவம்-அம்பறுத்தூணி
62. நங்காவில் வாழ்வார்நகை-
நம் சோலையில் வாழும்
[மங்கையர்களின் சிரிப்பு
63. இகல்-வெற்றி
முகப்படை-கூரிய வேற்படை
மகமிழற்றிய-குழவிகளைப்போல
[மழலைச்சொற்களைப்பேசும்
தூவள் அளிகள்-சுற்றித்திரியும்
[வண்டுகள்
அகம்-வீடு
64. அரனுர்க்கு அரிதிருத்தேவி
அல்லாக்கால்-அரன்-ஆண்பால்
அரி-பெண்பால்
66. கொம்பு ஆர் புதுமுகம்-
[கொம்புபொருந்திய பன்றி

67. விடக்கு-ஊன் பிள்ளைக்கறி
மணத்தது-வந்தடைந்தது
68. ஆரம்-முத்து
தார்-கொன்றைத்தார்; மஞ்சள் [நிறம்
தழலொத்தது-தீவண்ண [மானது
69. அம்மனையாயம், பந்தாயம்,
கழங்காயும் வண்டாயும் கழு [நீராயும்
மை-கறுத்த
முகில்- முகில்நிறமுடைய
கைமொழித்தமர்-கையினாலே
71. குறிகாட்டிம்பேசுப்சுற்றத்
தார்நம்மிதலபங்கையைத்தேஇறை
வன் திருந்தடியிருந்த ஆதலால்
பிறப்பிலே விழுந்தமுந்தோம் [என்றவாறு
73. பாராரும்பிடர்-பூமியைத்
தாங்கும்ஆதிசேடனுடைய
பிடர் துத்தித்தொகை-பாம்புக் [கூட்டம்
ஒடு ஆர் ஆராரும்-அவற்றுடன் [ஆத்திமாலையும் அணிந்த
ஆலிக்கும்-ஒலிக்கும்
கழி- கடற்கரையோரம்
செயற்குருகே-செய்கைக்குருகு [வாயாக
74. குருகணை-இளமையுடைய
குருகு—பறவை
குளிர்சிறையுஞ்சிறையும், குளிர்
தலையுந்தலையும்பொருந்த அலகு
அலகோடு பொருந்த, கவாடி
யடியோடி பொருந்த,விழி விழி
யோடி பொருந்த இங்ஙனம்
ஒன்றுபடக் கலந்து ஒருபறவை
போலஉடல்உயிர்பிறிது இல்லை
என்று சொல்லும்படி யிருந்த
தலைவர் இந்நாள் நான் அடை
யம் பெருவருத்தத்தை அறிகின்
றிலர்
ஊரர்-தலைவர்
75. மாசுணம்-பாம்பு
வாரி.அள்ளி
வாரி-கடல்
மஞ்சனஞ்செய்தல்-நீராட்டுதல்
மஞ்சு-மேகம்
வாள்விழி-சூரியன்
மேகம்மாசுணம்ஊர் வதுபோல்
மின்னுடன் சென்று கடலினி
டத்தே நீரையள்ளி நீராட்டுதல்.
சூரியன் கடவுந்தேரோடு அவர்
தலைவர் தேருஞ்சென்றது இர
வாயிற்று தலைவர் தேர் மீள
மில்லை என்றவாறு
77. ஆபிசாரம்-தாருகாவனத்து
முனிவர்கள் செய்த அபிசார [வேள்வி
புயங்கம்-பாம்பு
புயங்க மகுடர்-பாம்பாகிய மகு [டத்தையுடையவர்
விடைபொருதவிடை-திருமால்
கண்ணனுகவந்த காலத்துஎரு
தழுவியதைக்குறிப்பது.
விடை-இடபம்
கொம்பு-திருமால் வராகமான
பொழுது பறித்தணிந்த ஏனக்
கொம்பு
78. மூவர்க்கொருவர்-மூவரில்

[முதல்வர்
79. தணந்தவர்-விட்டுநீங்கியவர்
கடும்பரி-அவரேறிய தாவிச்செல்லும் பரிமா
மறைந்தொளிதேர்-மறைந்து
[ஒளித்ததேர்
முன்னெல்லாம் பலகால் வருவதாயிருந்ததேர் இன்று வாரா
[தொளித்தது
குறுந்துளி-சிறுபெயல் மழை
மதங்கயம்-மதகரி அல்லது
[பெரிய நீர் நிலை
விடந்தரார்- விடத்தைத்தரித்தவர்; மாதை மருங்கருகேஉள்ள தலைவர் வாழி என்றவாறு
80. திருவுந்தியோடை-உந்தியும்
[ஓடையும் கொண்டு
காவணம்-சோலை
82. கொண்டலை-கயிலே
கொண்ட-அயனார்சிரம்;
கையிலே கொண்ட கபாலம்
அரிக்கூர்மம்-விட்டுணுவாகிய
[ஆமை
விண்ட சண்ட கபாலம்-கழற்
[றிய வலியுற்ற ஓடு
சதுர் முகனார்கண்ட கபாலம்-பிரமன்படைத்த உடம்புகளின் தலைஓடுகள்
அண்டகபாலம்-அண்டகடாகம்
மேலண்டத்தோடு
83. அணியும் நாராயணர்-அணிகின்ற சந்திரனையுடையவர்
நாராயணன்-சந்திரன்
குழையும்-சங்கக்குழையும்
வானோர்புடைசூழ் குடியும்-
தேவர்கள் தொழும் இல்லா
[ரும்
இல்-இல்லாள்
சங்கு-நீரில் வாழ்வது
சடை-நீருக்கு இருப்பிடமானது
விடை-திருமாலாகிய இடபம்
அதுவும் நாராயணரே
84. எதிர் நிற்க-எதிர்த்து நிற்க
பூமாத்தூர்-பூமியிற்பெரியநலம்
பொற்பணியூரத்தர்-பதஞ்சலி
பூசித்த ஊராகிய பொன்னம்
[பலத்திறைவர்
85. பேருழுவை-புலிமுனி;
[வியாக்கிரபாதர்
நீடும்பதம்-அழியாத சேவடிகள்
கொற்றம்-வெற்றி
86. பூXமாத்துXஊர்Xஆறு-
பூமியை விட்டுப்போகும்
ஊருக்கு வழி
பொதிசோறும்தண்ணீரும்-
கட்டுச்சோறும் தண்ணீரும்
[தரும்
தென்றலே கொண்டு-காற்றை
[உணவாகக்கொண்டு
வேணிநாகம்-சடையில் வாழும்
[பாம்பு
88 தாணுவெடுத்ததனு-மேரு
மலை அது பொன்மலை குளிகை
மலையைப் பொன்னாக்கும்
காணி-பரம்பரை உரிமையாகிய
இடம்-கைலைமலை. அதுவெள்ளி
அதை யுருக்கப்பச்சிலை கொண்டு
வா என்றவாறு
89. பச்சிலைபத்து-பத்து வகை
[மூலிகைகள்

கற்பம்-காயகற்பம்
சரிகைப்பொதி-ஆடைக்
கரைச் சரிகை முடிச்சு
மணிப்பவளம்-கருநிறந்தங்கிய
[பவளக்கழுத்து
அச்சவிடம்-பயப்படக்கூடிய
[நஞ்சு
இருவர்-பிரமா விட்டுணு
இருத்துதல்-சாவாமலிருத்து
[தல்
90. மருந்து-அமுதம்
பிரிந்தார்—விட்டு நீங்கினுர்
மதியே! மாதை ஐயருடன் உற
வுடையை ஆதலின் என்னை
வருத்தாதே; யான் ஒரு பிழை
யுஞ் செய்யவில்லை
91. பாளை-கமுகம்பாளை
93. கயலிடைமருவு கமலம்-
[முகம்
கயல்-விழி
அஞ்சனக்கமலம்-குமுதம்-விழி;
மைதீட்டிய விழி யென்றுமாம்
பானல்-ஆம்பல்-வாய்க்குவமை
பசலை முகிளித்தகமலம்-
[கொங்கை
93. கமலமனை-தாமரையாகிய
[வீடு
தூாநகை-வெள்ளிய பற்களை
[யுடைய தலைவி
தூரகரம்xஇரதம்xவாவு-குதிரை
பூட்டிய தேரினது வரவு
94. சொல்லுவபோல-பிறரோடு
[பேசுவதுபோல
நோய்வது-அணைவது
முன்னகுவதுபோல்-முதலிற்
கண்ட ஞான்று சிரித்ததுபோல
மல்-வலிய
நீர்-அல்லகொலோ-நீரல்லீரோ
அயலாமோ-நானுமக்கு எதி
[லாளோ
அருவழி-செல்லுதற்கருமை
[யானவழி
97. சதம்-இலை
தரு-மரங்கள்
மாதவி-மாதவிக்கொடிகள்
கதம்செய்-தீமைசெய்த
சரந்தொறும்-அசையுந்தோறும்
மனம் கசர-மனம் வெறுக்க
99. கனகம்-பொன்

## 98-வது செய்யுளின் விருத்தியுரை
## (முதற்பதிப்பில் கண்டது)

———o———

தழை விருப்புரைத்த என்பது தலைமகளைத் தழை யேற்பித்துத் தலைமகனுழைச் சென்று நீ தந்ததழையை யான் சென்று கொடுத்தேன் அதை எற்றுத்தான் கொண்ட அஞானத்தும் நீங்கினுளெனப் பாங்கி தலைமகனுக்குத் தலைமகளது விருப்பங் கூறுநிற்றல், அது வருமாறு:—

மேதி-பூந்தழையே என்பது; ஐயனே! நீ தலைவியின் பொருட்டாக என்னிடந்தந்த தழை அவளது அருளனைத்தும் நீக்குந் தன்மையால் மாதையின் கணுள்ள கடவுளும் ஆதியாந்தன்மை யுடையோருமாகிய சிவபெருமானது சடையாகிய காடோ? அன்று அழகிய பெருமை பொருந்திய சர்ப்பமாகிய ஆபரணமோ? ஒப்பற்ற அங்கி நேத்திரமோ? சிரிப்போ? செவ்வியகையின்கணுள்ள மாயனுயை பாணத்தின்பாணமோ? தம்மை வழிபடும் அடியார் அர்ச்சிக்கும் மலர்களைப் பொருந்திய செவ்வியபாதமோ? இன்னதென்றறிந்திலேன். குழுமிய எருமைகள் சொரியும் பாலைக் கயல்மீன் மாந்துஞ் சிறப்பு வாய்ந்த வாசனை பொருந்திய வயல்சூழ்ந்த மாதையெனக் கூட்டுக. மாதைக்கடவுளென்பதைப் பிறவற்றோடும் ஒட்டுக. தழைஎன்பது வினைமுதற் பொருளையுணர்த்தும் இகர விகுதிபுணர்ந்து கெட்ட தழைப்ப தென்பது பொருள். சடாடவி என்பது வடமொழிச்சந்தி. முதனிலை. சடையை அடவியென்றார் தழையொற்றுமைநோக்கி. சடை கங்கையின்பெருக்கடக்கியதன்மைபோல் இத்தழை தலைவி கண்ணீர்ப் பெருக்கை மாய்த்த தென்பாள் சடாடவியோ என்றும் சருப்பந் தென்றலைப்பருகுந் தன்மைபோல் இத்தழை தென்றலால் வருந்துன்பத்தை நீக்கிற்று என்பாள் மணிப்பேரணியோ என்றும், நுதல் விழி மதன் உருவழித்த தன்மைபோல் இத்தழை மதனுல் வரும் அருளை நீக்கிய தென்பாள் விழியோ என்றும், நகை முப்புரத்திலடைந்து தம் மாட்டன்புள்ள ஒவ்வொருவரொழிய ஏனைப்பகைவராந்தன்மையுள்ள எல்லோரையும் அழித்த தன்மைபோல் இத்தழைஅலர் தூற்றல் முதலியபகைமையால்வரும்இடுக்கண் அனைத்தையும் நீக்கி நின்மாட்டுள்ள அன்பொன்றையே வளர்த்த தென்பாள் நகையோ என்றும், அம்பின் அம்பு கடலை வருத்திய தன்மை போலித்தழை கடலால் வருந்துன்பத்தை நீக்கிய தென்பாள் அம்பினம்போ என்றும், சேவடி திங்களைத் தேய்த்த தன்மைபோல் இத்தழை திங்களால் வரும் விகாரத்தை நீக்கிய தென்பாள் சேவடியோ என்றுங் கூறினள்.

மேதிக்குலஞ் சொரிபால் கயல் மாந்தும் என்பதனுல் தலைவி விசேடங் கூறிற்று. என்னை? ஆமாத்தூரின் கணுள்ள சிவலிங்கத்தின் மீது ஆபால் சொரிந்தீ தாம் மேம்பட்ட தன்மையையறிந்து எருமைகளும், ஆண்டுள்ள கயல்மீன் மாந்தப் பால்சொரிந்தனென இயைதலால், அன்றி ஆண்டுள்ள கயல் மீன்கள் தாமுண்ணும் இழிந்த உணவுகளை ஒழித்து உயர்ந்த பாலை உண்ணுமென்பதனுல் ஆண்டுவசிப்

போர் மறமைக்கட் பெறுதற்கரிய முத்தியடைதலேயன்றி, இம்மைக்கண் உலகத்திலுள்ள இன்பமனைத்தும் ஆண்டிருந்து அனுபவித்தற்குரிய தலமெனவும் இயையும். சடாடவியோ எனத் தோன்றிய ஐயம் சேவடியோ என முடிதலால் கேசாதிபாத வர்ணனையமாயிற்று. அன்றியும் மாதைநாதரது அங்கச்செயல்களே விதந்து ஐயமாக நிகழ்ந்தமையால் அவரை அடையப் பெற்றோர் தம்மை நெருக்கும் இடுக்கணனைத்தினும் நீங்கிப் பெறுதற்கரிய பேரின்பத்தின் மகிழ்தல் ஒருதலே; அதுபோல் நின்றதை அவளுக்கு அவ்வாறிருத்தலால் தனது அஞரனைத்தினும் நீங்கித் தான்கொண்ட இன்பமடைதல் ஒருதலையென, மகிழ்ந்தாளெனவுமாம். போதுற்ற சேவடி என்பதற்குப் போதின் தன்மைவாய்ந்தசெவ்விய அடியெனவும் இயையும். போதுற்ற சேவடியென்றார் தம்மை வழிபடும் அடியார் அர்ச்சித்த மலரை ஏற்று அவர்க்குக் கிடைதற்கரிய இன்பத்தைக் கொடுக்கும் இயல்பிற்றாய அடி. வழிபாடன்றி மனச்செருக்கோடியற்றிய தக்கன் அவியுண்ண இயைந்த மதியையுடல் தேய்த்து அத்தன்மையை நீக்கித் தம்மை வழிபட இசைத்த செப்பமுடைமை நோக்கி.

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| செய்யுள் | எண் |
|---|---|
| அ. | |
| அடியார் | 15 |
| அடியவிரு | 87 |
| அம்மனைப | 69 |
| அயன்மாத் | 95 |
| அருங்கான | 80 |
| அருமறை | 43 |
| அளவிலா | 28 |
| அழகார்மா | 83 |
| அழகியநாயக | 13 |
| அழகியநா | 50 |
| அறிவழிய | 15 |
| அனத்திற் | 9 |
| அன்றுபேரு | 85 |
| ஆ | |
| ஆடக்கொடி | 33 |

| செய்யுள் | எண் |
|---|---|
| ஆமாத்தூர் | 92 |
| ஆரத்தட | 68 |
| ஆலிதளர்ந் | 30 |
| ஆற்குழையோ | 61 |
| ஆனகாபலி | 93 |
| இ | |
| இருந்தகு | 53 |
| இருந்தவி | 39 |
| இருந்தாய் | 90 |
| இல்லையான | 57 |
| உ | |
| உண்டிலங் | 51 |
| உத்தமன்மு | 36 |
| உய்யாதவி | 11 |
| ஊ | |
| ஊருமாசுண | 65 |

எ

என்னையளி 2

ஒ

ஒன்றுயிர 3

க

கடல்வாய 7
கண்ணனூர் 38
கம்பத்துறை 27
கழுநீர்க 31

கா

காட்டகந் 100
காலத்தினு 60
காலன்வி 96

கு

குடக்குமீ 26
குடியொரு 32
குருகணை 74

கெ

கெட்டோரு 44

கொ

கொண்டக 82
கொற்றமர் 78

கோ

கோளரவு 91

ச

சங்குதுயி 34
சடைமௌலி 77
சதந்தரு 97

சி

சில்லிதழ் 48

செ

சென்றூர்ப 35

சே

சேர்ந்தெ 22

சொ

சொல்லாடி 41
சொல்லுமி 47
சொல்லுவ 94

த

தஞ்சமில்ல 16
தந்தைபிடி 67
தழைபுணர் 99

தா

தாரமன்று 42
தாரொத்த 68

தூ

தூதுநெரு 25

தே

தேங்கமல 76
தேர்வந்த 20
தேவிதிரு 72

ந

நகையழற் 63
நயனக்கா 17

நா

நாதர்க்கு 52
நாராயண 84

நி

நிலவும்பல 69
நின்றுறங் 45

நு

நுண்ணறிவு 49

ப

பச்சிலைபத் 89
படமுதுபு 41
பட்டயானை 37
பண்ணிலவு 51
பத்திபடு 28
பம்பாநதி 66

பா

பாடுவையா 18
பாராரும் 73
பாவவினை 86

பி

பிழைத்தபு 19

பிறப்பிலா 84

பு

புயத்தள 8

புலங்குலே 71

புலம்போ 6

பூ

பூண்டமால் 23

பூமேவுச 1

பொ

பொய்முடை 54

போ

போதிரண்டு 24

ம

மகனுக்கு 101

மா

மாறுபட 29

மானே கிளி 10

மீ

மீளார்பிற 14

மே

மேதிக்குல 98

மேலமரே 46

யா

யாமாழி 58

வ

வந்திப்ப 40

வருக்கை 64

வருங்கட 70

வல்லிக்கி 55

வா

வாரணமுரி 12

வாழிதணங் 79

வி

வில்லோடுங் 56

வெ

வெங்காள 62

வே

வேணிமுடிப் 88

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | | **பதிப்புரை.** | |
| 3 | 15 | பரிசிற் | பரிசில் |
| | | **முன்னுரை.** | |
| | 18 | உளவலிக்குன்றுது | உளவலிகுன்றுது |
| 2 | | **நூல்** | |
| அராகம் (3) | 4 | மலபடி மலவுயர் | பலபடி பலவுயிர் |
| 7 | | | |
| கழிக்கரைப்புலம்பல் (10) | | யானே | ஆனே |
| 8 | | | |
| விருத்தம் (17) | 3 | வுலகமே லோக | உலகமெ லோக |
| 19 | | | |
| கட்டளைக்கலித்துறை (55) | | தாரில்லே கோலிவை | தாரில்லேக்கோலிவை |
| இன்னிசை விருத்தம் (57) | 2 | மசிழ்நர் | மகிழ்நர் |
| 23 | | | |
| தாழிசை. (73) | 2 | குலத்துகித்த தொகையோ | குலதுக்கித்தொகையோ |
| 37 | | **உரை** | |
| 71 (பாட்டுக் குறிப்பு) | | | குறிகாட்டிப் பேசும் சுற்றத்தார் நம்மிதய பங்கயத்தே இறைவன் திருந்தடியிருந்த; ஆதலால் பிறப்பிலே விழுந்தழுந்தோம் என்றவாறு |
| 37 (74) | 1 | விழிவிழியோடி | விழிவிழியோடு |
| 38 (89) | | பத்தாவகை | பத்துவகை |
| 39 (94) | 6 | வலிய | வலிய |
| 40 | 1 | பூந்தைமையே | பூந்தழைமே |
| | 13 | தழைப்பதென் பதூ பொருள் | தழைப்பதென்பது பொருள் |

எவ்வளவு கவனஞ் செலுத்தியும் அச்சுப்பிழைகள் புகுந்தமைக்கு வருந்துகின்றேம்.

பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி

இந்நூல் கிடைக்கும் இடம்:—

(1) ஆ. க. வேலுப் பிள்ளை

13, மலைத் தெரு, (HILL STREET)

கண்டி. (இலங்கை)

(2) சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை

26, காரணேசுரர் கோயில் தெரு,

மயிலாப்பூர்,

சென்னை.